# சிரிக்கும் பெண்ணே

சுபா



ION

## உள்ளே...

1. சிரிக்கும் பெண்ணே... 5

2. பிரியமானவள் 122

# சிரிக்கும் பெண்ணே...

## 1

ஹைதராபாத் சாலைகள் பெரும்பாலும் ஒன்வே ட்ராஃபிக்கை ஆதரிக்கும் சாலைகள். அந்தச் சாலைகளில் அமுக்கான மனித மூட்டைகளைச் சுமந்த ரிக்ஷாக்கள், குண்டான வடக்கத்திப் பெண்கள் பின்னால் புளிமூட்டையாய் உட்கார்ந்திருந்த பான்பீடா போட்ட ஒல்லியான ஆசாமிகள் செலுத்திய பஜாஜ்கள். உருதுவில் சாலையில் போனவர்களையெல்லாம் திட்டிய டிரைவர்களைச் சுமந்த ஆட்டோக்கள். முரட்டுத்தனமாகப் பாய்ந்த முன்னூறு நாள் தூசியைச் சுமந்த பஸ்கள். இவற்றுக்கு இடையே அவன் நிதானமாக நடந்து கொண்டிருந்தான்.

அவன் நிச்சயம் வர்ணிக்கப்பட வேண்டியவன்.

ஐந்தடி பத்தங்குல உயரம் இருந்தான். ஜாக்கித் தொப்பி ஒன்றை அணிந்து அதன் அலகைப் பின்புறம்

இருக்கிற மாதிரி செய்திருந்தான். கண்களில் கூலிங் கிளாஸ். பேண்ட்ரெக்ஸின் ஓவர்கோட் தாடி. அஃஃப்கோர்ஸ் ட்ரிம் செய்யப்பட்டிருந்தது.

அவன் செய்யப் போகும் செயலை அறிந்தால் அவனது நிதானமான தன்னம்பிக்கையுடன் கூடிய நடையைப் பார்த்து ஆச்சரியப்படுவீர்கள். ரெக்ஸின் ஓவர் கோட்டின் உட்புறம் கையைச் செலுத்தித் தொட்டுப் பார்த்துக் கொண்டு, நகரைப் புதிதாக வேடிக்கை பார்க்க வந்த சுற்றுலாப் பயணிபோல் நடந்து கொண்டிருந்தான்.

பதினைந்து நிமிட நடைக்குப் பின் நகரத்தின் சந்தடி சற்று அடங்கிய ஒரு பிரதேசத்தில் நுழைந்தான். தேவராயா ஹோட்டலுக்கு அங்கங்கே போர்டுகள் வழிகாட்டின. அவை வழிகாட்டிய திசையில் நடந்தான்.

தேவராயா ஹோட்டல்.

அது ஐந்து நட்சத்திர அந்தஸ்துகள் அனைத்தையும் கொண்ட ஹோட்டல்.

ஆனால் ஹோட்டலின் மேனேஜ்மென்ட் ஐந்து நட்சத்திரங்களை வாங்கிக் கொள்ளவில்லை. ஐந்து நட்சத்திர அங்கீகாரம் வாங்கிவிட்டால் சில நடைமுறைகளை நிச்சயம் கடைப்பிடித்தே ஆக வேண்டும். கொஞ்சம் தவறினாலும் ஹோட்டலை கோர்ட்டுக்கு இழுத்துவிடுவார்கள். அதனாலோ வேறு எதனாலோ ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் என்று தன்னை தேவராயா ஒரு போதும் பிரகடனப்படுத்திக் கொண்டதே இல்லை.

தேவராயாவின் காம்பவுண்ட் சுவர் கோட்டைச் சுவர் போல் மேலோங்கி இருந்தது. அதன் உட்புறத்தில் சுவரை ஒட்டி கொடிக்கம்பங்கள் நடப்பட்டு வானவில் நிறத்தில் கொடிகள் பறந்தன. துணிகள் ஸாடினால் நெய்யப்பட்



டவை என்பதால் பகலிலும், இரவிலும் சூரிய, சந்திர, மின் விளக்கு வெளிச்சம் பட்டு அந்தக் கொடிகள் பளபளத்தன.

காம்பவுண்ட் கேட் அகலமாகத் திறந்து விடப்பட்டிருந்தது. மூன்று கார்கள் நுழையலாம். மூன்று கார்கள் வெளிப்படலாம். பாதசாரிகளுக்கு என்று தனியாக ஒரு சிறு கேட். கார்கள் ஹோட்டலின் முன்புறம் இருந்த பிரதேசத்தில் நிறுத்த அனுமதி இல்லை. அவை அங்கங்கே இருக்கும் வழிகாட்டிகளால் ஹோட்டலின் பின்புறம் அனுப்பப்பட்டு அவை மாயமாய் மறைந்தன.

அவன் பாதசாரிகளுக்கான பாதையில் நுழைந்தான். யாரும் தடுக்கவில்லை. பப்ளிக் ஹோட்டல். பிச்சைக்காரர்கள் கூட தைரியம் இருந்தால் நுழையலாம்.

ஹோட்டலின் முகப்பில் ஒரு பெரும்புல்தரை இருந்தது. அவற்றில் அங்கங்கே மேஜைகள் இடப்பட்டிருந்தன. நாற்காலிகள். வண்ணக்குடைகள்.

அந்த மேஜைகளில் அங்கங்கே மக்கள் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் தனியாகத் தெரிந்தார். கொஞ்சம் நரை முடி. மிகச் சன்னமான மீசை. பேண்ட். அரைக்கை சட்டை. சுற்றி நடப்பவற்றை வேடிக்கை பார்ப்பவர் போல் அமர்ந்திருந்த அவருக்கு ஐம்பது வயதிருக்கலாம். தனி ஆளாக உட்கார்ந்திருந்தார். விசிறிக் கொண்டைத் தொப்பியுடன் கூடிய ஒரு பேரர். அவர் மேஜையில் ஒரு பீங்கான் கோப்பை, பால், டிகாக்ஷன், சர்க்கரைக் கட்டிகள் என்று அலங்காரமாக வைத்துவிட்டுப் போனான்.

சாய்ந்து உட்கார்ந்த அவர் நிமிர்ந்தார். மேஜை மேல் இருந்த ஒரு சிகரெட் பெட்டியைத் திறந்து ஒரு சிகரெட்டை உருவினார். அருகில் இருந்த லைட்டரை எடுத்தார். க்ளிக். நீலத் திலகமாய் ஜோதி வெளிப்பட்டது.

அவர் சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்ட நேரத்தில் அவன் அவரை நெருங்கினான். தன் சிகரெட்டைப் பற்ற வைத்தான். ஜோதி அணைந்து விடாமல் இருக்க எல்.ஐ.சி. லோகோ போல் தன் கைகளைக் குவித்து அவர் கைகளில் மேல் படிய வைத்து மூடி சிகரெட்டில் நெருப்புப் பற்றியவுடன் விலகிக் கொண்டான். அவர் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

அவன் சிரித்தான். நன்றி தெரிவித்தான். சிரித்த விதத்தில், நன்றி தெரிவித்த விதத்தில் இருந்த கண்ணியம் அவரைக் கோபப்பட வைக்கவில்லை.

பதிலுக்குச் சிரித்து, "யூ ஆர் வெல்கம்" என்றார்.

அவன் அவரிடமிருந்து விலகி நடந்து ஹோட்டலின் உள்ளே நுழைந்தான்.

அவர் காபியை மெதுவாகக் கலந்து ஒவ்வொரு துளியாக ருசித்துக் கொண்டிருந்தார். அரட்டை அடிப்பதற்கு வருவதாகச் சொன்ன ராணி ஜோஸஃபைன் இன்னும் வரவில்லை. ஒருவேளை இன்றைக்கு வேலை அதிகமாய் இருக்கலாம். ராணி வரும் வரைக்கும் காத்திருப்பது என்று அவர் தீர்மானித்த வேளையில்,

காதைச் செவிடாக்கும் அந்தச் சத்தம் கேட்டது -

அதிர்ந்தார். திரும்பினார்.

அவர் கண்ணெதிரே ஹோட்டல் தேவராயா கட்டிடம் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது.

## 2



ஹோட்டல் தேவராயா வெடித்துச் சிதறுவதைப் பார்த்தவுடன் தனது ரிஃப்ளெக்ஸ் காரணமாக அதிவேகமாக அந்த இடத்தைவிட்டு அவர் விலகி வந்தார். அப்படி விலகி வந்த போது ஒரு காலை மட்டும் நன்றாக ஊன்றியும், இன்னொரு காலை லேசாக ஊன்றியும் ஓடினார். அப்படி அவர் ஓடியதைப் பார்க்க கொஞ்சம் வேடிக்கையாகக் கூட இருந்தது. புல்வெளியில் அமர்ந்திருந்த மக்கள் அனைவரும் அவரைப் போல் ஒரே சமயத்தில் வெளியே பாய்ந்தார்கள். அகலமான கேட் என்பதால் மக்கள் திறந்த வெளியில் இருந்து சாலைக்கு வருவது கடினமாக இல்லை.



ஹோட்டலில், நடக்கும் விபத்து அறியாமல் ஹோட்டலுக்குள் நுழையப் பார்த்த கார் ஒன்று மக்கள் கூட்டத்தைக் கண்டு திகைத்துப் போய் சடன்ப்ரேக் அடித்து நின்றது. மக்கள் அந்தக் காரின் பானெட் மேல் ஏறியும் அதன் கண்ணாடிகளைத் தட்டியும், தட்தட் என்று மோதியும் தேனீக்கள் கூட்டம் போல் சூழ்ந்து கடந்தார்கள்.

அவரால் நடந்ததை நம்பமுடியவில்லை. தான் உயிர் பிழைத்திருப்பது கூட அவருக்கு ஆச்சரியமான விஷயமாகத்தான் இருந்தது. மரணத்தின் வெகு அருகில் இருந்து விலகி வந்ததன் அதிர்வு அவர் உடலில் இன்னும் மிச்சமிருந்தது.

வெளியே வந்தவர் சாலையைக் கடந்து நின்றார். ஹோட்டல் கட்டிடத்தில் இருந்து மேல் எழும்பிய புகை மண்டலத்தைப் பார்த்தார்.

அவருக்கு உடனே, உடனே ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்க வேண்டும் போல். இருந்தது. பாக்கெட்டில் கைவிட்டு சிகரெட் பாக்கெட்டையும், லைட்டரையும் எடுத்தார்.

சிகரெட் உதட்டில் பொருத்தி, லைட்டரால் பற்ற வைத்த போது மின்னல் போல் அவரை அந்த நினைவு தாக்கியது.

சற்று நேரத்திற்கு முன், அவரிடம் வந்து கைகுவித்து சிகரெட் பற்ற வைத்துக் கொண்டானே, அவன், அவன்...

அவர் மனமும் உடலும் பரபரத்தது.

அருகில் தொலைபேசி எங்காவது கண்ணில் தென்படுகிறதா என்று சுற்று முற்றும் பார்த்த வேளையில் ஒரு ஆம்புலன்ஸ் வேனும், ஒரு தீயணைப்பு வேனும் தொடர்ந்து ஒரு போலீஸ் ஜீப்பும் ஹோட்டல் இருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தார்.

கூட்டம் நெருக்கி அடித்தது. அந்தப் பக்கம் இரு திசைகளிலும் போக்குவரத்து தடைப்பட்டுவிட்டது. ஆம்புலன்ஸ் வேன் ஹோட்டல் இருந்த திசையை நோக்கி முன்னேறுவதே இயலாத செயலாக இருந்தது. ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர் கையில் பேடும் பென்சிலுமாக கூட்டத்தின் ஊடே புகுந்து புகுந்து செய்தி சேகரித்துக் கொண்டிருக்க, இங்கிருந்தே போட்டோ எடுத்துக் கொண்டு ஒருவன் இடிந்த கட்டிடத்தை நோக்கிக் காமிராவுடன் முன்னேறிக் கொண்டிருந்தான்.

போலீஸ் ஜீப்பில் வந்த இன்ஸ்பெக்டர் ஆகாயம் பார்த்து ஒருமுறை சுட்டார். கூட்டம் மரத்தில் வந்து அமர்ந்த பறவைகளைப் போலச் சிதறி ஓடியது. யாரோ விழுந்தான். யார் யாரோ மிதித்தார்கள்.

கூக்குரல். ஓலங்கள். விழுந்தவன் எழுந்து வாத்து போல் தத்தி தத்தி ஒதுங்கிச் செல்ல, அவர் போலீஸ் ஜீப்பை அடைந்தார்.

''இன்ஸ்பெக்டர்'' என்று அவர் அழைத்த விதத்தில் ஒரு அதிகாரம் இருந்தது.

இன்ஸ்பெக்டர் தன்னை அழைத்தவரைப் பார்த்தார். உடன் மரியாதை தரவேண்டிய முகமாகப்பட்டது.



''யெஸ் சார்.''

''நான் பாரதிகுமார். ரிட்டயர்ட் சி.பி.ஐ. ஆபீஸர். இந்த ஹோட்டலில் நடந்தது விபத்து அல்ல, சதி. வெடிகுண்டு வைக்கப்பட்டு அது வெடித்தது. அந்த வெடிகுண்டை வைத்தவனை எனக்குத் தெரியும். பிரின்ஸ் என்றும் இளவரசன் என்றும், நம்பர் டூ என்றும் வேறு வேறு பெயர்களால் அழைக்கப்படும் வேணுபிரசாத்துதான் அது.''

''வாட்?'' என்ற இன்ஸ்பெக்டர் அதிர்ந்தார். ''வேணு பிரசாத்தா? அவன்தான் என்று எப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள் மிஸ்டர் பாரதிகுமார்.''

''ரிட்டயர்ட் ஆவதற்கு முன் அவன் பைலைப் படித்திருக்கிறேன். அவனது செயல் முறைகளைப் பற்றிப் படித்திருக்கிறேன். அவனது சின்னச்சின்ன அசைவுகளைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறேன். அவன் என்னைப் புரிந்து கொள்ளாமல் என்னிடமே வந்து சிகரெட்டிற்கு நெருப்பு கேட்டான். அவன் கைகுவித்த ஸ்டைலைப் பார்த்தபோதே எனக்குப் புரிந்திருக்க வேண்டும். ஆனால் மிஸ் பண்ணிவிட்டேன். ஹோட்டல் இடிந்த பின்தான் அது வேணுபிரசாத்துதான் என்ற முடிவிற்கு வந்தேன்'' என்றார். பாரதிகுமார் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்ட ரிட்டயர்ட் சி.பி.ஐ. ஆபீஸர்.

''வேணுபிரசாத் இப்போது ஹைதராபாத்தில் இருக்கிறான் என்றால் எங்களுக்கெல்லாம் பெரிய தலைவலி.''

''யெஸ். அவனைத் தேடுங்கள். உடனடியாகக் கண்டு பிடியுங்கள். அவன் வெளியே இருந்தால் அது இந்தத் தேசத்திற்கு அவ்வளவு நல்லதல்ல...''

''புரியுது. என்னால் முடிந்தவரை செய்கிறேன். உடனடியாக நகரத்தின் எல்லா எல்லைகளையும் சீல் செய்யச்

சொல்லிவிடுகிறேன். ஒவ்வொரு பஸ்ஸிலும், ரயிலிலும், விமானத்திலும், லாட்ஜ்களிலும், வீடுகளிலும் ஆட்களை விட்டுத் தேடச் சொல்கிறேன். நான் உங்கள் உதவியைத் தேடி வந்து அடிக்கடி உங்களை டிஸ்டர்ப் செய்வேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''நான் என்னாலான எல்லா உதவிகளையும் செய் கிறேன்'' என்றார் பாரதிகுமார்.

இன்ஸ்பெக்டர் தேவராயா ஹோட்டலின் இடிபாடு களை நோக்கிச் சென்றார்.

# 3



தேவராயா ஹோட்டல் மண்ணோடு, மண்ணாக மாறி ஒரு மாத காலம் இருக்கலாம். போலீஸ் வேணு பிரசாத்தைத் தேடிக் கொண்டிருந்தது. வேணுபிரசாத் சிக்கவில்லை. அவனுக்கு கற்பூரமாகக் கரையும் வித்தை தெரிந்திருந்தது. எல்லா இடங்களையும் சீல் பண்ணிய பின்பும் அவன் அகப்படவில்லை. ஹைதராபாத்திலேயே இருக்கிறானா அல்லது வெளியேறி விட்டானா என்பதும் தெரியவில்லை. வேணுபிரசாத்தின் புகைப்படம் வெவ் வேறு கெட்-அப்களில் போஸ்டர்களாகத் தயாரிக்கப் பட்டன. எல்லா முக்கிய இடங்களிலும் ஒட்டப்பட்டன. அவனுடைய புகைப்படங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக் கப்பட்டன. தொலைக்காட்சிப் பெட்டிகளின் எல்லா சேனல்களிலும் அவன் புகைப்படங்கள் மறுபடி மறுபடி காட்டப்பட்டன. வேணுபிரசாத் அகப்படவில்லை. சிபிஐ அதிகாரிகளும், ஒவ்வொரு மாநில காவல்துறை அதி



காரிகளும், அதிரடிப்படையினரும் தூக்கம் தொலைத்து வேணுபிரசாத்தைத் தேடக் காரணம் வேணுபிரசாத் ஒரு பயங்கரமான தீவிரவாதி.

பல மாநிலங்களில் ஆஸ்பத்திரிகளைத் தகர்த்திருக் கிறான். மசூதிகளை, தேவாலயங்களைச் சிதைத்திருக் கிறான். இந்தியாவின் மிகப்பெரிய ரயில் நிலையம் ஒன்று இன்றைக்கு இருக்கும் இடம் தெரியவில்லை. பெரிய பெரிய ஜின்னிங் பாக்டரிகள், துணிமில்கள் தீ விபத்துக்களைச் சந்தித்திருக்கின்றன. பல ஹோட்டல்கள் தரைமட்டமாகி இருக்கின்றன. இரண்டு பெரும் மதுபான ஆலைகள் தீப்பற்றி எரிந்து புகை எழுந்து ஓசோன் மண்டலத்தைத் தட்டிக் குசலம் விசாரித்திருக்கின்றன.

வேணுபிரசாத் எந்தத் தீவிரவாத அமைப்பைச் சேர்ந் தவன் என்பது தெரியவில்லை. எங்கிருந்து முளைக்கிறான் என்று தெரியவில்லை. அவனுடைய தேவை என்ன என்று புரியவில்லை. பாகிஸ்தானிலிருந்து ஊடுருவியவ னாகவும் தெரியவில்லை. காஷ்மீரைச் சேர்ந்தவனாகவும் இல்லை. தலிபான் அமைப்பு, நக்ஸலைட் அமைப்பு, விடுதலைச் சிறுத்தைகள், விடுதலைப்புலிகள் என்று யாருமே வேணுபிரசாத்தைத் தங்கள் அமைப்பிற்கு உரிய வனாக அறிவிக்கவில்லை.

சகட்டுமேனிக்கு புல்டோசர் போல் கண்ணில் பட் டதையெல்லாம் நாசப்படுத்துக்கிறான். வெடிவைத்து... தீவைத்துக் கொளுத்தி.. ஏன்.. ஒரு முறை அறிவு இல்லாத மக்களுக்குப் புத்தகங்கள் எதற்கு என்று ஒரு மிகப்பெரிய நூலகத்தில் லட்சக்கணக்கான கறையான்களைக் கொண்டு வந்து விட்டு அத்தனை புத்தகங்களையும் நாசமாக்கிய வன் அவன்தான்.

வேணு பிரசாத் பற்றி நிறையவே தெரிந்து கொண்டாகி விட்டது.

இனி அதிகாலைப் பொழுதில் நிகழ்ந்த இன்னொரு சம்பவம்.

பன்ஜிம் என்றும் பனாஜி என்றும் அழைக்கப்படும் கோவாவின் தலைநகர். இந்த நகரத்தில் இருந்துதான் ஜப்பான், ருஷ்யா போன்ற உலக நாடுகளுக்கு இரும்புத் தாது கப்பல் மூலம் ஏற்றுமதியாவது வழக்கம். மாண்டவி நதி வழியாக பெரும் படகுகள் இரும்புத் தாதுக்களை ஏற்றிச் சென்று மர்மகோவா துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிற்கும் கப்பலில் இரும்புத்தாதுப் பொருட்களை மாற்றி அந்தக் கப்பல் நிரம்பியதும் துறைமுகம் விட்டுப் புறப்படும். பனாஜியில் நிகழும் முக்கியத் தொழிலே இதுதான்.

அந்தப் பனாஜி விடிகாலை வேளையில் மிக அமைதியாக இருந்தது. நதியில் நீர் சலனமின்றி அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. பனாஜி முழுக்க இருந்த சின்னச்சின்ன சாலைகள் சுத்தமாக இருந்தன. மக்கள் இன்னும் சாலைக்கு வந்து சேரவில்லை.

மாண்டவி நதியில் ஒரு பெரிய படகு சென்று கொண்டிருந்தது. அகலமான நதியில் அந்தப் படகின் அளவு மிகச்சிறியதாகத் தெரிந்தாலும் அந்தப் படகில் முப்பது டன் எடையுள்ள இரும்புத்தாது குவிக்கப்பட்டிருந்தது. மூன்று லாரி லோட். பார்ஜ் என்று இத்தகைய படகுகளை அழைப்பது வழக்கம். படகைச் செலுத்திக் கொண்டிருந்தவன் கிட்டத்தட்ட உறங்கிக் கொண்டிருந்தான்.

நடுநதியில் சென்ற அந்த பார்ஜை நோக்கிக் கரையின் ஓரத்தில் இருந்த ஒரு சிறு படகு வந்து கொண்டிருந்தது. அந்தப் படகைச் செலுத்தியவன் ஒரு கிழவன். அவனது



கைகள் துடுப்பை மாற்றி மாற்றிப் போட்ட போது இவனா கிழவன் என்று யோசிக்க வைத்தன.

கிழவன் பார்ஜை நெருங்கியதும் பார்ஜ் ஓட்டிக் கொண்டிருந்தவனை அழைத்தான். பார்ஜ் ஓட்டி தூக்கத்தில் இருந்து கண்விழித்து 'என்ன?' என்று கேட்டான்.

"நான் அசோசியேஷனில் இருந்து வருகிறேன். இரும்புத்தாது ஏற்றுமதி அசோசியேஷன். உன் பார்ஜைப் பரிசோதிக்க வேண்டும்."

பார்ஜை ஓட்டியவன் கிழவனைப் பார்த்தான். கிழவன் படு ஸ்மார்ட்டாக இருந்தான். முகங்கள் சுருக்கம் விழுந்த, கை, கால்கள் நடுக்க மெடுத்தக் கிழவன் இல்லை அவன். கட்டம் போட்ட முழுக்கை சட்டை கழுத்துவரை மூடிய பனியன் ஒன்றை வேறு சட்டைக்கு அடியில் அணிந்து கொண்டிருந்தான். அவன் பேண்ட், ஷுக்கள் எல்லாமே அந்த விடிகாலை நேரத்திலும் நேர்த்தியாக, இப்போதுதான் படுக்கையில் இருந்து எழுந்து புதிதாக அணியப்பட்டவை போல் தெரிந்தன.

"வா. படகில் ஏறி வந்து பார்" என்றான் பார்ஜ் ஓட்டி. அவனை அனுமதிக்காது போனால் பின்னால் தகராறு வந்தாலும் வந்துவிடும். கிழவன் துடுப்புப் படகின் ஒரு முனையை பார்ஜில் இருந்து தொங்கிய கயிறு ஒன்றால் பிணைத்தான். பார்ஜைப் பின் தொடர்ந்து அந்தப்படகு வரத்தொடங்கியது. கிழவன் படகில் இருந்து பார்ஜிற்கு மாறினான்.

பார்ஜ் ஓட்டி கிழவனை நெருக்கமாகப் பார்க்கத் தொடங்க, கிழவன் பார்ஜ் ஓட்டி சற்றும் எதிர்பாராத ஒரு தருணத்தில் அவனுடைய கழுத்தில் ஒரு ஜூடோ வெட்டு வெட்டினான். அவ்வளவுதான் மிகச்சரியாக இலக்கைத்

தாக்கிய காரணத்தால் பார்ஜ் ஓட்டி அறுந்த திரைத்துணி போல் சரிந்தான். கிழவன் பார்ஜ் ஓட்டியை பார்ஜின் பிரிட்ஜில்* இருந்த ஒரு ரெக்ஸின் மெத்தையிட்ட பெஞ்ச் படுக்கையில் படுக்க வைத்தான்.

பார்ஜை செலுத்தினான். இரும்புத்தாதை இடம் மாற்ற வேண்டிய கப்பல் வந்ததும் அந்தக் கப்பலில் சுவாதீன மாக ஏறினான். கப்பலில் இருந்தவர்கள் பார்ஜின் இரும்புத் தாதை இடம் மாற்றினார்கள். 'கிழவன் கப்பலில் இன்ஜின் ரூம் வரை சென்று வந்தான். இன்ஜின் ரூமில் இருந்து வெளியேறி கப்பலின் பக்கவாட்டுச் சுவர் அருகே சென்று யாரும் கவனிக்காத தருணத்தில் தன் பேண்ட் பாக்கெட் டில் இருந்து ஒரு சிறு கருவியை எடுத்தான். ஏதோ ஒரு சுவிட்சை அழுத்தினான். அவன் கையிலிருந்த கருவியில் இருந்து ஒளிக்கற்றை போல் ஏதோ ஒரு கதிர் வெளிப் பட்டுப் பாய்ந்தது. அந்த ஒளிக்கற்றையால் கப்பலின் சுவர்களில் அங்கங்கே வட்டம் வட்டமாய் டிசைன்கள் போட்டான். மறுபடியும் மேலே வந்தான். பார்ஜில் இருந்த சரக்கு இடம் மாறியதும் மறுபடியும் பார்ஜில் ஏறி அதைச் செலுத்தத் தொடங்கினான். அவன் படகைச் செலுத்தி வந்த இடம் வந்ததும் பார்ஜில் இருந்து இறங்கி, படகில்

*(பிரிட்ஜ் என்பது பெரிய கப்பலையும், பெரிய பெரிய இயந்திரப் படகுகளையும் செலுத்தும் ஆணைகள் இட வசதியாக இருக்கும் அறை. இந்த அறையில்தான் திசை காட்டும் கருவி, திசை திருப்பும் சுக்கான், கடலின் ஆழத்தை அளக்கும் கருவி, என்ஜின் வேகத்தை அதிகப் படுத்த குறைக்க உதவும் பட்டன்கள் ஆகியவை இருக்கும். கேப்டனும் உதவியாளர்களும் இந்த அறையில் இருந்து தான் கப்பலைச் செலுத்துவார்கள். விமானத்தில் பைலட் காபின் போல, கப்பலில் பிரிட்ஜ்)



ஏறி, தளையை அவிழ்த்துப் படகைச் செலுத்திக் கொண்டு போனான்.

பார்ஜ் நேரான நதியில் தனது மெதுவான பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

இங்கே கப்பலில் அந்தக் கிழவன் புறப்பட்டுச் சென்ற நான்கு மணிநேரத்திற்குப் பின் இன்ஜின் ரூம் அருகே சுவர்களில் திடீரென்று எஃகு உருகியது. கடல் நீர் மகா மகா அழுத்தத்துடன் கப்பலின் வரிசையான வட்டமான ஓட்டைகள் வழியே நுழையத் தொடங்கியது.

விஷயம் தெரிந்து கப்பலின் அபாய மணிகள் அலறத் தொடங்கிய போது மிகத் தாமதம் ஆகிவிட்டது. அறுபது நிமிடங்களில் அந்தக் கப்பல் அப்படியே நீரில் மூழ்கியது.

கப்பலின் கேப்டனும் மற்ற வேலைக்காரர்களும் லைஃப்போர்டிலும், மற்ற படகுகளிலும் ஏறிக் கரையை அடைந்தாலும் அவர்களது துக்கத்தை அவர்களால் மாற்றவே இயல்வில்லை.

கப்பல் மூழ்கியதற்கு மூன்றாவது தினம் அந்தக் கப்பலை மூழ்கடித்தது தானே என்று வேணுபிரசாத் ஒரு அறிக்கையை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்ப, பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக அந்தச் செய்தியை அலற விட்டன.

# 4



திருநாவுக்கரசை அறிமுகம் செய்து கொள்ள வேண் டிய நேரம் வந்துவிட்டது. திருநாவுக்கரசின் முக அமைப்பு,

உடல் அமைப்பு பற்றியெல்லாம் இப்போது சொல்லவே போவதில்லை. காரணம் தானாகத் தெரிய வரும்.

திருநாவுக்கரசு தமிழ்நாட்டில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து பின் சென்னைக்குப் பெற்றோர்களுடன் இடம் பெயர்ந்தவன். சின்ன வயதில் இருந்தே மகா ரசிகன். பூக்களை நேசிப்பவன். கடலை நேசிப்பவன். மழையை நேசிப்பவன். எந்த உயிருக்கும் எந்தத் தீங்கும் இழைக்கக் கூடாது என்பது அவனது வாழ்க்கைச் சத்தியம். சென்னையில் அவன் இருந்த வீட்டைச் சுற்றிச் சின்னதாகத் தோட்டம். அந்த தோட்டத்தில் நிறைய இங்கிலீஷ் பூக்கள் பூத்திருந்தன. மனிதர்களால் தயாரிக்கவே முடியாத சில இயலாத நிறங்களில் மலர்ந்த அந்தப் பூக்கள் மனிதர்களைப் பார்த்து எள்ளி நகையாடுவது போல் இருக்கும்.

அந்தப் பூக்களின் நடுவே திருநாவுக்கரசு இருப்பான். அல்லது ஸீ-ஸ்கவுட்டின் டென்னில் இருப்பான். ஸீ-ஸ்கவுட் என்பது சிறுவர்களுக்கான கடல் சாரண இயக்கம். வெள்ளைச் சட்டை. வெள்ளை அரைக்கால் சட்டை. வெள்ளைத் தொப்பி. படகில் நதிகளில் துடிப்புடன் பயணம். பின் கடலில் பயணம். பின் கப்பலில் பயணம் என்று மாறி மாறி கடல் சாரண இயக்கத்தில் சேர்ந்து அவன் கடலோடு ஒன்றிப் போனான்.

கடல் என் முதல் காதலி என்று அவன் தீர்மானித்ததால் வளர்ந்ததும், விண்ணப்பம் அனுப்பி, கடற்படையில் சேர்ந்தான். தினம் தினம் மழுங்க மழுங்க ஷேவ் செய்த முகம். வெள்ளை ஆடை. அவனுக்கு வாழ்க்கையில் ஒரு நிறைவு வந்துவிட்டது. கடற்படையில் சேர்ந்த உடனேயே.

விசாகப்பட்டினத்தில் அவன் கடற்படையில் வேலை செய்து கொண்டிருந்த போது பூமிகாவைச் சந்தித்தான்.



பூமிகா மிக வினோதமான பெயர். ஆனால் அவள் அபாரமாய் இருந்தாள். ஹைதராபாத்திற்கு வேலை விஷயமாக சென்றிருந்த போது சார்மினார் அருகில் சாலையில் நேருக்கு நேர் மோதிக் கொண்டுவிட்ட ஒரு தற்செயலான சூழ்நிலையில் திருநாவுக்கரசு - பூமிகாவைப் பார்த்தான். அவள் பூமிகா என்று தெரியாமலேயே. அவளும் அப்போதுதான் அவனைப் பார்த்தாள். இருவர் கண்களும் ஒன்றையொன்று விட்டு விலக மனமின்றி சில யுகங்கள் தவமிருந்தன. முதலில் சுதாரித்தவள் பூமிகா "ஐ'ம் வெரி ஸாரி" என்று விலகினாள். திருநாவுக்கரசும் பதிலுக்கு அவரிடம் மன்னிப்பு கேட்டு விலகினான். ஆனால் அவன் மனம் அவளைப் பார்த்த அதே கணத்தில் அவளுடைய அடிமையாய் மாறி விட்டதை உணர்ந்தான். அவள் யாரோ என்னவோ! விசாகப்பட்டினத்தில் வேலை செய்யும் ஒருவன்:, ஹைதராபாத்தில் வந்து தற்செயலாகச் சாலையில் சந்தித்த ஒரு தேவதையிடம் மனதைப் பறி கொடுத்து விட்டுக் காதல் என்று லாஜிக்கே இல்லாமல் சொன்னால் என்ன அர்த்தம்? அவளை வாழ்நாளில் மறுமுறை சந்திக்க முடியுமோ என்னவோ! உதித்த கணத்தில் அந்தக் காதலை சாகடித்தேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் காரணமாக திருநாவுக்கரசு மனம் வருந்தினான்.

ஆனால் விசாகப்பட்டினத்தில் பூமிகா மறுபடி இடறினாள்.

இந்த முறை அவளுக்கும் வியப்பு.

"ஏய்.. யூ.. நான் உன்னை ஹைதராபாத்தில் பார்த்திருக்கிறேன் இல்லை?" என்று ஆச்சரியத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தும் குரலில் அவள் கேட்டாள். ஆமோதித்தான். மறுபடி மறுபடி பார்த்துக் கொண்டார்கள்.

ஒரு தக்க தருணத்தில் அவன் தன் காதலை வெளிப் படுத்தினான். அவள் ஏற்றுக் கொண்டாள். அவனை உடனே முத்தமிட்டாள் வெட்கமின்றி. ஹைதராபாத்தில் அவனைப் பார்த்த முதல் கணத்திலேயே அவளும் அவனிடம் தன் மனதைப் பறிகொடுத்ததைப் பற்றிச் சொன்னாள். ஆச்சரியப்படுத்தினாள்.

கல்யாணம் சில தினங்கள் கழித்து என்று தீர்மானம் ஆனது. பூமிகாவின் பெற்றோர்கள் ஆந்திராவில் ஒரு குக்கிராமத்தில். பூமிகா இங்கே விசாகப்பட்டினத்தில் ஒரு கம்ப்யூட்டர் கம்பெனியில் வேலை செய்பவள். கம்பெனி குவார்ட்டர்ஸ் கொடுத்திருந்தது. அதில் அவள் தனியாக இருந்தாள்.

ஒருமுறை அந்த வீட்டிற்கு அவனை வரச் சொல்லி அழைத்தாள். சினிமா தியேட்டர்களில், பார்க்குகளில் சந்தித்து அலுத்துப்போய் முதன்முதலாக அவள் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்த தருணம் அது.

அந்த ஒரு நாளை மட்டும் இப்போது நினைவு கூர்ந்து விடுவது மிக நல்லது.

ஏனெனில் அப்படி நினைவு கூர்வது திருநாவுக்கரசு விற்கு மிகப் பிடிக்கும். மிக மிகப் பிடிக்கும்.

அன்றைக்குப் புதிதாக ஒரு கார் வாங்கியிருந்தான். திருநாவுக்கரசிற்கு வாழ்க்கையில் மிகப் பிடித்த விஷயங் களில் காரும் ஒன்று. பூமிகாவிடம் காட்ட வேண்டும் போல் இருந்தது. அவளை அருகில் உட்கார வைத்து அவளது தொடையோடு தொடை உரசியபடி ஓட்ட வேண்டும் போல் இருந்தது.

எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.



விசாகப்பட்டினம் நகரின் தெற்கு மூலையில் ஸ்கூல் பஸ்களும், கார்களும் எப்போதாவது ஒரு முறை செல்லும் ஹார்பர் லாரிகளும் ஓடும் ஒரு பிரதான சாலையின் நேரான நேரில் திடீரென்று, சட்டென்று, எதிர்பாராமல் திரும்பும் ஒரு கான்க்ரீட் சாலையில் திரும்பி வலது பக்கம் பார்த்துக் கொண்டே சென்று, ஒன்று, இரண்டு, மூன்று நான்காவது வீடு பூமிகாவின் வீடு.

வீட்டு வாசலில் காரை நிறுத்தினான். ஹாங்க் என்று ஹாரன் சிக்கனமாக அழுத்தமாக ஒலிக்க வைத்தான். பக்கத்து, பக்கத்து, எதிர், எதிர் வீடுகளில் இருந்து ஜன்னல் முகங்கள். உதாசீனப்படுத்தினான்.

பூமிகாதான் கதவைத் திறந்தாள். திருநாவுக்கரசைப் பார்த்ததும் அவளுடைய வீட்டில் இருந்து காம்பவுண் டிற்கு உண்டான தூரத்தினை டிக், டிக், டிக் என்பதற்குள் கடந்து பெரிய இரும்புக் கேட்டைத் திறந்து, காருக்கு வழிகாட்டினான். அவள் விழிகள் ஆச்சரியத்தை வெளிப் படுத்தின. காரைப் பார்வையால் வருடினாள்.

''ஹவ் ஈஸ் ஷீ? இன்று காலையில் தான் எனக்கும் அவ ளுக்கும் கல்யாணம் நடந்தது''என்றான் திருநாவுக்கரசு.

''அப்படியென்றால் இந்தக் கார் உங்களுக்கே உங்களுக்கா?'' என்று நம்ப முடியாமல் கேட்டாள்.

''ம்ஹூம்.''

''பின்னே என்ன?'' என்று கெஞ்சலாகக் கேட்டாள்.

''நமக்கே நமக்கு'' என்றான் அவன். ''கம்மான். காரில் ஏறு. ஒரு ரவுண்ட் போய் வரலாம். பீச், சினிமா, ஹோட்டல். இன்றைக்கு உனக்கும் லீவ். எனக்கும் லீவ்.''

''இன்றைக்குத்தான் இந்த வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். உள்ளே வாருங்கள். நான் டிரஸ் மாற்றிக் கொண்டு வருகிறேன்.''

''என் எதிரிலேயே மாற்ற வேண்டும். சம்மதமா?''

பூமிகா அவனைக் கோபத்துடன் பார்த்தாள். சிரித்தாள். கோபம் பொய் என்று தெரிந்தது. ''சம்மதம்'' என்றாள். ''கம் இன் மை லவர் பாய்'' என்றாள்.

திருநாவுக்கரசு காரை உள்ளே செலுத்தினான். நிறுத்தினான். இறங்கினான்.

சுற்றிலும் கலர் கலரான, நிற நிறமான, வண்ண வண்ணமான பூக்கள். இயற்கையின் மாறா விதிப்படி பச்சை நிறத்தில் இலைகள். அவற்றுக்கு நடுவே லோ-ஹிப்புடன் பூமிகா. அபாரமான, அபாயமான வளைவுகளைக் கொண்ட பூமிகா.

தகித்துக்கொண்டிருந்த விசாகப்பட்டினத்து சூரியன் சட்டென ஜில்லென்று மாறியது எப்படி?

வீசிய அனல் காற்றில் சட்டென்று பனித்துளிகள் கலந்தது எப்படி?

திருநாவுக்கரசு உள்ளே நுழைந்தான். பூமிகா கதவைச் சாத்திவிட்டு, உள்ளே நுழைந்து அவனை நோக்கி ஓடி வந்தாள்.

கண்களில் சிரிப்பு, வரவேற்பு, ஆசை, காதல், பரிவு, கருணை எல்லாம் கலந்திருந்தன.

''இவ்வளவு நாட்களாக ஏன் தொடர்பே கொள்ளவில்லை?'' என்று கேட்டாள் மூச்சிரைத்துக் கொண்டே.

அவள் பேசியது முழுதாக இரண்டு நிமிடங்கள் கழித்து. அந்த இரண்டு நிமிடங்களும், நூற்று இருபது வினாடிகளும் அவன் அணைப்பில் அவள். அவனது உதடுகள் அவளது இதழ்களில் இருந்த தேனை, ஜீவரசத்தை அமிர்தத்தைச் சுவைத்துக் கொண்டேயிருந்தன. முழுவதும் திருப்தி ஏற்படாமல் தான் விலகினான்.



''வேலை பூமிகா'' என்றான்.

''எப்படி இளைத்துப் போயிருக்கிறேன் பாருங்கள்'' என்றாள்.

''அதனால்தான் இவை இரண்டும் அளவுக்கு மீறிப் பெரிதாகத் தெரிகிறதா?'' என்று பார்வையால் காட்டிக் கேட்டான்.

''ச்சீ... நாட்டி... நாட்டி... நாட்டிபாய்'' என்று அவன் கன்னம் கிள்ளினாள். மயிர் அளைந்தாள். காது திருகினாள். கைவிரல் நெரித்தாள். மார்புமுடி சுருட்டினாள்.

''ஏய்...''

''ம்?''

''இவற்றைப் பார்த்ததும் எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வந்தது. சொல்லவா?''

''எவற்றைப் பார்த்ததும்.''

''அளவுக்கு பெரிதாகத் தெரிகிறது என்றேனே... அவற்றைப் பார்த்ததும்தான்.''

''அப்படி என்றால் வேண்டாம். அதில் அனாவசியத்திற்கு செக்ஸ் இருக்கும்.''

''கவிதையில் செக்ஸ் கலக்கும் அளவு இன்னும் கவிஞர்கள் மாறவில்லை.

இந்தக் கவிதை அறையும் உண்மை. 'யாருமற்ற கனவில்'

என்ற தொகுப்பில் படித்தது. கவிப்பித்தன் என்ற ஒரு தமிழ்நாட்டுக் கவிஞன் எழுதியது.''

''ஆந்திராவில் வந்தும் தமிழ்க்கவிதை மறக்கவில்லையா?''

''எப்படி மறக்கும்? உனக்கு எந்த தேசத்திற்குப் போனாலும் அம்மாவை மறந்துவிட முடியுமா? அது போல் தான் எனக்குத் தமிழும்.''

''ச்..ச்..ச்... கவிதையைச் சொல்லுங்கள்.''

''*வா மகளே.*
*நேற்றிரவும் உன் உதடுகள்*
*விரலைச் சூப்பியே*
*வெளுத்துப் போனதா?*
*என் கொங்கைகளை*
*எத்தனை உதடுகள்*
*உறிஞ்சியிருக்கின்றன*
*உனக்கானதென்பதை*
*உணராமலேயே...*
*என் தாய்மை திரவம் கூட*
*காமக்கலைக்கு*
*அவசியமாம்.*
*புதுமுகம் பழகிய முகம்*
*வாடிக்கை முகம்*
*இப்படித்தான் என் பார்வையில்*
*ஆண்கள்.*
*புதுசாய் வந்து*
*நிரந்தரமாகி*
*ஒரு விடியலில்*
*சுவடுகள் துடைத்துப் போன*
*உன் அப்பனும் கூட!*
*சாலையோரக் காத்திருத்தலும்*
*கைகளிலும் பார்வைகளிலுமாய்*
*எத்தனை விதங்களில் பேசுகிறேன்*
*ராஜகுமாரன்களுக்காக*''



என்று அவன் கவிதையை முடித்தான்.

பூமிகா விசும்பினாள்.

''ஏய்..'' என்று அவளை அணைத்துக் கொண்டான். ''ஏன் அழுகிறாய்? கவிதைப் பெண்ணின் சோகத்திற்காகவா? இல்லை, நான் அப்படி உன்னை விட்டுப் போய் விடுவேன் என்ற பயத்தாலா?''

பூமிகா அவனை அடித்தாள். குத்தினாள்.

''நீங்கள் என்னை விட்டுப் போனால் நான் ஒன்றும் அந்தப் பெண்ணைப் போல ஆக மாட்டேன். செத்து விடுவேன். இந்த ஆண்களின் வக்கிரத்தை, ஆதிக்கத்தை அந்தப் பெண்ணின் மேல் காட்டிய விதம் எனக்கு அழுகையை வரவழைத்து விட்டது.''

''ஐ''ம் ஸாரி பூமிகா. உன் மூட் இவ்வளவு கெட்டுப் போகும் எனத் தெரிந்திருந்தால் நான் அந்தக் கவிதையைச் சொல்லியே இருக்க மாட்டேன். உனக்கு ஒன்று தெரியுமா?''

''என்ன?''

''நான் அனுபவங்களுக்கு ஆசைப்படுவேன். அனுபவங்கள் எத்தனை விதமோ அத்தனையையும் உணர்ந்து பார்க்கத் துடிப்பவன். சிகரெட் பிடித்தால் என்ன அனுபவம் என்று நிறைய முறை யோசித்து கடைசியில் சிகரெட் பிடித்தும் பார்த்திருக்கிறேன். ட்ரிங்க் பண்ணினால் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ள விதவிதமாக ட்ரிங்க் பண்ணிப் பார்த்திருக்கிறேன். கஞ்சா புகைத்தால் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஒரு பீடியில் இருக்கும் புகையிலைத்தூளை எடுத்துவிட்டு கஞ்சா பிடித்திருக்கிறேன். பெண் அனுபவமும் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஆசை...''

பூமிகா சட்டென்று அவனிடமிருந்து விலகிப் போய் நின்று நிமிர்ந்து பார்த்தாள்.

"ஐயோ. ஏன் இப்படி விலகுகிறாய்?"

"இல்லை. உங்கள் பெண் அனுபவம் பற்றிச் சொல் லுங்கள்."

"அதை இனிமேல் தான் உணர்ந்து சொல்ல முடியும்."

"ப்ராமிஸ்?"

"ஏய்.. என்ன பூமிகா? என்னைச் சந்தேகப்படுகிறாயா? நான் எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டு வந்தேனே. பெண் அனுபவம் பற்றிச் சொல்வ தற்குள் நீ விலகி விட்டாய். அதற்கு நான் என்ன பண்ண? எனக்குப் பெண் அனுபவம் என்னவென்று தெரிந்து கொள்ள ஆசை இருந்தது. இருக்கிறது. உண்மைதான். கொச்சினில் இருந்தபோதும் சரி, கோவாவில் இருந்த போதும் சரி. நண்பர்கள் என்னை அழைத்தார்கள். வித விதமாய்ப் பெண்களைக் காட்டுவதாக ஆசை காட்டி னார்கள். இஷ்டப்படி அனுபவிக்கச் சொன்னார்கள். நான்தான் மறுத்துவிட்டேன்..."

பூமிகா அவன் மேல் வந்து சாய்ந்தாள்.

"ஏனாம்?" என்றாள் கொஞ்சலாக.

"சிகரெட் என்பது என் ஒருவனோடு போகும். சிகரெட் என்னிடம் கோபிக்காது. பேசாது. சிரிக்காது. அதற்கு உயிரில்லை. அது ஒரு போகப் பொருள். கஞ்சா, மது எல் லாமே அப்படித்தான். ஆனால் பெண் என்பவள் அப்படி அல்லவே. என்னை மாதிரியே இதயம் கொண்டவள். அழுகை, பாசம், நேசம், கண்ணீர் எல்லாம் உடையவள். காசுக்காக வரும் பெண்ணிடம் என்ன அனுபவம்



கிடைத்துவிடப் போகிறது? அவள் இதயம் இடம் மாறாது. என்னை ஒன்றும் ஆசையுடன் அணைக்கப் போவதில்லை. அவள் இந்த நிலைமைக்கு வர நிச்சயம் ஓர் ஆண்தான் காரணமாய் இருப்பான். எனவே ஆண்களைத் திட்டியபடி ஆணிடம் நெருங்கி வரும் அந்தப் பெண்களுடனான அனுபவம் எனக்கு வேண்டவே வேண்டாம் என்று எப்போதோ தீர்மானித்திருக்கிறேன். பெண் அனுபவம் என்றால் அதில் காதல் இருக்க வேண்டும். பரஸ்பரம் விருப்பம் இருக்க வேண்டும். என்னை நெருங்கு பவளுக்கு நான் ஒரு அனுபவமாய் அமைய வேண்டும். வாழ்க்கையில் எப்படியும் இந்த அனுபவம் கிடைக்கப் போகிறது. தவறப் போவதில்லை. அதற்காகக் காத்திருந் தேன். உன் மூலம் எனக்கு அந்த அனுபவம் கிடைக்கத் தான் போகிறது. மேலும் பெண்களை எந்த ஆண் இந்த மாதிரி ஒரு இழி நிலைக்குக் கொண்டு வருகிறானோ அவனை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாது. எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் அப்படிப்பட்ட ஆண்களை நான் சுடுவேன். ஒரு பூவைக் கசக்கியதற்காக, ஒரு பூவிற்குத் தீவைத்ததற்காக..."

பூமிகா திருநாவுக்கரசின் உதடுகளைத் தன் தளிர் விரல்களால் பொத்தினாள். பேசுவதை நிறுத்தினான். அந்த உதடுகளை மெல்ல விரல்களால் வருடினாள்.

"பெண் அனுபவம் எனக்கு இப்போதே கிடைக்கப் போகிறதா?" என்று உதடுகள் அசையாமல் மெல்லக் கேட்டான்.

முத்தமிட்டாள்.

"இது பெண்களின் மேல் நீங்கள் வைத்திருக்கும் மரியாதைக்காக" என்று முத்தமிடப்படி அவளும் பேசி னாள். விலகினாள்.

"இருங்கள் வருகிறேன்" என்று உள்ளே போனாள்.

காத்திருந்தான். திரும்பி வந்த போது ஆம்லெட் வாசனை, ப்ரெட் டோஸ்ட் வாசனை, அவளுடைய பிரத்யேக வாசனை எல்லாம் வந்தது.

கையில் ஒரு பெரிய அகலமான ட்ரான்ஸ்பரன்ட் ட்ரே. ப்ரெட்டோஸ்ட் ஆம்லெட். சாஸ். 555 சிகரெட் பாக்கெட். லைட்டர். ஒரு ஷீவாஸ் ரீகல் பாட்டில். பக்கத்தில் இரு கோப்பைகள் எல்லாம் இருந்தன.

''ஏய்..என்ன இது? ஏற்பாடெல்லாம் பலமாக இருக்கிறது?''

''உங்களுக்கு ட்ரிபிள் ஃபைவ் பிடிக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஷீவாஸ் ரீகல் விஸ்கியின் மேல் தனிப்பிரியம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் முதன் முதலாக இந்த வீட்டிற்கு வரும்போது இந்த அனுபவங்களை உங்களுக்கு அளிக்க வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானித்திருந்தேன். நானும் அந்த அனுபவங்களைப் பெற்றுப் பார்த்தால்தான் என்ன என்று யோசித்து இவற்றையெல்லாம் சேகரித்து வைத்திருந்தேன்.''

''ஸோ. நீயும் என்னுடன் கம்பெனி கொடுக்கப் போகிறாயா?''

"யெஸ்."

அவன் கட்டிலில் இருந்து கீழே நழுவி ஒருமுறை எம்பிக் குதித்தான். விசிலடித்து "ஃபன்டாஸ்டிக்" என்றான்.

பூமிகா சிரிப்பு மாறாமல் ட்ரேயில் இருந்ததை டீப்பாய்க்கு மாற்றினாள். அறையில் இருந்த அலமாரியைத் திறந்து ஒரு சன்னமான துணியாலான நைட்கவுனை எடுத்து திருநாவுக்கரசின் எதிரிலேயே உல்லாசமாக உதறி



ஸாரியிலிருந்து நைட்டிக்கு இயல்பாக மாறினாள். அவன்
அருகில் அமர்ந்தாள். அவன்மேல் வெகு இயல்பாகப்
பட்டுக் கொண்டு ஷீவாஸ் ரீகல் பாட்டில்களை த் திறந்து
அவளது கோப்பையில் ஒரு விரற்கடையும் அவனது கோப்
பையில் இரு விரற்கடைகளும் ஊற்றினாள். பூமிகாவின்
உடல் அவன் மேல் பட்ட இடம் பூமிகாவின் வெகு அந்தரங்
கமான இடம். அவன் உடலில் ரசாயன மாற்றம் ஏற்பட்டு
அவன் உயிரோடு எரியத் தொடங்கினான். உள்ளே விஸ்கி
துளித்துளியாக தேன் துளிபோல், மழைத்துளி போல்,
நெருப்புத்துளி போல் இறங்கியது. ஒரு சிகரெட்டைப்
பற்ற வைத்துக் கொண்டான். அவள் உதட்டில் பொருத்தி
னான். இழுத்தாள். இருமினாள். கண்களில் நீர்த் துளிகள்.

''கருமம். எப்படிப்பா இதைப் பிடிக்கிறீர்கள்? இவ்வளவு மோசமான அனுபவத்திற்கா ஆண்கள் எல்லாம் இப்படி மாய்ந்து மாய்ந்து ஏங்குகிறார்கள்? இதை விடப் பெண் ஒரு அனுபவம் என்று ஏங்கினால் எவ்வளவோ மேல். நாங்களும் ஆண் ஒரு அனுபவம் என்று தான் எதிர்பார்த்து ஏங்குகிறோம்.''

"அனுபவம் வேண்டுமா பூமிகா?"

''ஆம்.''

''எப்போது?''

''இப்போதே.''

''என்னது?''

''பதற வேண்டாம். வெளியே போவோம். ஏதாவது ஒரு கோயில். மாலை மாற்றிக் கொள்வோம். ஒரு தேவாலயத்தில் நீ எனக்கு மோதிரம் மாட்டு. நான் உனக்கு மோதிரம் மாட்டுகிறேன். சாப்பிடுவோம். திரும்பி வருவோம். அனுபவம் பெறுவோம்.''

"ரைட்" என்றான் அவன் எழுந்து.

நிமிடத்தில் அவள் ஆடை மாற்றினாள். பட்டுப் புடவை. அவளது அழகான வளைவுகளை மிக அழகாக அலங்கரித்தன. காரில் போனார்கள். மாலை மாற்றிக் கொண்டார்கள். சாப்பிட்டார்கள்.

வீடு திரும்பினார்கள்.

பூமிகா அனுபவத்திற்காக தயாராக இருந்தாள்.

திருநாவுக்கரசு மறுத்து விட்டான்.

"ஏன் திரு?" எனக் கண்களில் ஏக்கம் பொங்கப் பொங்கக் கேட்டாள்.

"நம் காந்தருவமணம் சரித்திர, இலக்கிய காலத்தில் வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்திருக் கலாம். ஆனால் இப்போது என் மனம் இடம் கொடுக்க வில்லை. உன் அப்பா, அம்மா, என் அப்பா, அம்மா எல் லாம் கூடிப் பேச வேண்டும். சண்டை போட வேண்டும். திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள வேண்டும். ஆயிரம் பேர் கூடியிருக்கும் மண்டபத்தில் நான் உனக்குத் தாலி கட்ட வேண்டும். அதன் பிறகுதான் நம் அனுபவங்கள் தொடங்க வேண்டும். அதில்தான் குற்ற உணர்வே இருக்காது. என்ன சொல்கிறாய்?"

"யூ ஆர் கிரேட்" என்று பூமிகா விடை கொடுத்தாள்.



# 5

ஒரு மாதம் கழித்து அவர்களின் திருமணம் சென்னை யில் நடந்தது. கடற்படை நண்பர்களுக்காக என்று அவன் ஒரு தனி லாட்ஜை ஒதுக்கி வைத்திருந்தான்.



நண்பர்கள், உறவுக்காரர்கள், தெரிந்தவர்கள் - பூமிகா விற்கு, அவனுக்கு என்று இருந்தவர்கள் அத்தனை பேரும் அந்த மகத்தான திருமணத்தில் கலந்து கொண்டு மகிழ்ச்சி யுடன் சிரித்தார்கள். சத்தம் போட்டுப் பேசினார்கள். குடித்தார்கள். நாதசுரம், பாண்டு வாத்தியம், குதிரை மேல் ஊர்வலம், காரில் ஊர்வலம் அப்புறம் அவளுடன் இன்னொரு கார் ஊர்வலம் என வழக்கத்தில் இல்லாததை எல்லாம் அரங்கேற்றினார்கள்.

கல்யாணம் முடிந்து அனைவரும் ஊருக்குப் போனார்கள். அவளும் அவனும் தேனிலவிற்குக் கிளம்பி போனார்கள். தேனிலவு அந்தமானில். அனைவரும் புருவம் உயர்த்தினார்கள். போயும் போயும் தேனிலவு அந்த மானிலா என்று. அவன் பிடிவாதமாக இருந்தான். அந்த மான் மற்றவர்கள் பார்த்ததில்லை. அவன் பார்த்திருந்தான்.

போகும் போது கப்பலில் அவர்கள் இரண்டே இரண்டு பேருக்கு என்று ஒரு தனி அறையை எடுத்துக் கொண்டு போனார்கள். கப்பல் அந்தமானைச் சென்றடைய எழுபத்திரண்டு மணி நேரம் பிடித்தது. எழுபத்திரண்டு மணி நேரமும் அனுபவம்தான். விதவிதமான அனுபவம். கப்பலின் தளத்தில் அமர்ந்து ஒருவர் கையை ஒருவர் பற்றி அமர்ந்து நீர்ப்பரப்பைப் பார்ப்பது ஒரு அனுபவமாய் இருந்தது. கப்பலில் இருந்த பாரில் இருந்து விஸ்கி வாங்கி வந்து ரூமில் இருவருமாக சியர்ஸ் சொல்லிக் குடித்து பூமிக்குச் சற்று மேலேயே மிதந்து என்ன பேசு கிறோம் என்பது தெரியாமலேயே பேசி, தூங்கிக் கண் விழித்த போது தாங்கள் இருவரும் இருந்த நிலை கண்டு வெட்கப்பட்டு, பின் வெட்கம் களைந்து சந்தோஷப் பட்டு, ஒருவரை ஒருவர் மேலும் மேலும் அறிய ஆசைப் பட்டு முழுவதும் முடியாமல் அந்தமான் அடைந்து

ஹாவ்லாக் தீவில் காட்டேஜ் எடுத்து கடற்கரைக்குச் சென்று காலை முதல் பசிக்கும் வரை தண்ணீரிலேயே நின்று விளையாடி, பசிக்காக வெளியே வந்து உண்டு மறுபடி நீருக்குச் சென்று...

உண்மையிலே பெண் அனுபவம் என்பது மகத்தானது தான் என்று உணர்ந்தான் திருநாவுக்கரசு. அதுவும் பூமிகா அனுபவம் என்பது ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாத மகத்தான அனுபவம் என்று அவனுக்குத் தோன்றியது.

திரும்பி வந்தார்கள்.

அதே விசாகப்பட்டினத்தில் வேலை.

பூமிகாவின் வீடு இப்போது அவனுடைய வீடு. அம்மா, அப்பா எல்லோரும் தத்தம் வேலைகளுக்குத் திரும்பி விட்டார்கள்.

வாழ்க்கை மிக மிக சந்தோஷமாகப் போய்க் கொண் டிருந்தது. உலகிலேயே தன்னை விட அதிர்ஷ்டசாலி யாருமே இருக்க முடியாது என்று அவன் நினைத்துக் கொண்டான்.

வாழ்நாள் முழுவதுமாக திருநாவுக்கரசு எவ்வளவு ஆனந்தப்பட வேண்டுமோ, எவ்வளவு சந்தோஷப்பட வேண்டுமோ அந்த சந்தோஷமனைத்தையும் பூமிகாவைக் கரம் பிடித்து வாழ ஆரம்பித்தவுடன் பட்டு விட்டான்.

அதனால்தான் அந்த வாழ்க்கை அப்படித் தடம் புரண்டதோ என்னவோ!

திருநாவுக்கரசின் வாழ்க்கையில் நிகழ்ந்த அந்த நிகழ்வை விரிவாகச் சொல்வது அனாவசியமாக உங்கள் மனங்களில் பாரத்தை ஏற்றும். அவனும் பூமிகாவும் சந் தோஷமாக இருந்த தருணங்களை எவ்வளவு வேண்டு



மானாலும் விவரித்துச் சொல்லலாம். அது உங்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும். ஆனால் இது வேண்டாம்.

ஒரு முன்னிரவு. நிலவு துண்டாக இருந்தது. சோகை யான வெளிச்சத்தைத் தந்து கொண்டிருந்தது. திருநாவுக் கரசு களைத்திருந்தான். வீட்டிற்கு வந்த பின்தான் தெரிந்தது அன்றைக்கு அவனுடைய பிறந்த நாள் என்று. பூமிகா அவனை வரவேற்று முத்தமிட்டாள். கேக் வெட்டச் செய் தாள். நீண்ட நாட்களாக அவன் ஆசைப்பட்டுக் கொண் டிருந்த ஒரு கிடாரை வாங்கி அவனுக்குப் பரிசாகக் கொடுப்பதற்காக வைத்திருந்தாள்.

அந்த கிடாரைப் பரிசாக அளித்தாள்.

அந்தப் பரிசைப் பார்த்ததும் நெகிழ்ச்சியில் திருநாவுக் கரசுவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. பூமிகாவின் கண்களிலும் கண்ணீர். துக்கமற்ற நிலையில், ஆனந்தத் தின் சிகரத்தில் இருந்த இரு உயிர்களின் நன்றியறிவிப்பு. ஒருவர் மற்றொருவரால் பெற்ற அனுபவத்திற்கான நன்றி யறிதல். அது ஒரு நன்றியறிதல் என உணராமலேயே இருவர் கண்களிலும் கண்ணீர் மிகுந்தது.

கிடாரை பூமிகா கையில் எடுத்து 'ஹாப்பி பர்த்டே டு யூ' என்று மீட்டினாள். திருநாவுக்கரசு கிடாரை அவள் கையி லிருந்து பெற்று 'ட்வின்க்கிள், ட்வின்க்கிள் லிட்டில் ஸ்டார்' என்று அவளை விளித்தான்.

"ஏய்.. பூமிகா.."

"ம்."

"எங்காவது வெளியே போகலாமா?"

"எங்கே?"

"எங்கேயாவது. பீச்சிற்குப் போகலாம். மணற்பரப்பு முழுவதையும் நிலவு பார்த்துக் கொண்டிருக்கும். அதில் நாம் அமர்வோம். நான் கிடார் வாசிக்கிறேன். நீ கேள்."

"சரி" என்று ஏற்றுக் கொண்டாள்.

கடற்கரைக்கு அவனுக்கு விருப்பமான ஷீவாஸ் ரீகலையும், ட்ரிபிள் ஃபைவ் சிகரெட்டையும் எடுத்து வந்திருந்தாள். மிடறு மிடறாக அவள் ஊற்றிக் கொடுக்க, ஊற்றிக் கொடுக்க அவன் குடித்தான். பூமிகா மறுத்து விட்டாள்.

பசித்தது. புறப்பட்டார்கள்.

காரை நோக்கி நடக்கும்போது பூமிகா அந்தக் கேள் வியைக் கேட்டாள்.

"திரு. திடீரென்று நான் செத்துப்போய் விட்டால் நீ என்ன செய்வாய் திரு?"

"ஏய்.. என்ன உளறல் இது?"

"இல்லை. காதலுடன் கூடிய பெண் அனுபவத்திற்காக ஏங்கினாய். நான் உன்னிடம் சிக்கினேன். அனுபவம் தந்தேன். அனுபவம் பெற்றேன். இந்த அனுபவம் நிரந் தரம் அல்ல. நானோ, நீயோ பிரிய வேண்டி வரும். அப்போது இன்னொரு அனுபவம் வேண்டும் என்று தேடப் போவதில்லையா?"

"யூ பிட்ச். பர்வர்ட்டட் கூஸ். இந்த அனுபவம் ஒன்று போதும் என் வாழ்நாளுக்கு. இன்னொரு வார்த்தை இப் படிப் பேசினால் எனக்குக் கோபம் வரும். மஹா கோபம்."

"ஈஸி நேவி மேன். ஈஸி நான் பிராக்டிகலாகப் பேசு கிறேன். பசி என்பது உடல் தேவைகளுள் ஒன்று. சிகரெட் உடல் தேவை இல்லை. ட்ரிங்க்ஸ் உடல் தேவை இல்லை. பசி உடல் தேவை. செக்ஸூம் உடல் தேவைதான். அதனால் தான் கேட்டேன்."

"என் தேவையை நான் நசுக்கிக் கொன்று விடுவேன்" என்றான் திருநாவுக்கரசு.



பூமிகா கண்ணீர் உகுத்தாள்.

"என்ன பூமிகா? ஏன்.. எதற்காக இந்த அழுகை?"

காருக்கு வரும்வரை விசும்பல் தொடர்ந்தது. காருக்கு வந்த பின்பும் அவள் சீட்டின் ஓரத்தில் உட்கார்ந்து விசும்பத் தொடங்கினாள்.

"ஏய்.. என்ன ஆயிற்று?"

"நீங்கள் எனக்கொரு ப்ராமிஸ் பண்ணுங்கள்."

"என்னவென்று?"

"ஒருவேளை என் மரணம் முன்னால் நிகழ்ந்தால் நீங்கள் இன்னொரு அனுபவத்தை நாடுவேன் என்று."

"பூமிகா திஸ் ஈஸ் அப்சார்ட்."

"பிராமிஸ் பண்ணுங்களேன். பிராமிஸ் பண்ணுங் களேன். ப்ளீஸ் ப்ராமிஸ் மீ."

அவளை வினோதமாகப் பார்த்து "பிராமிஸ்" என்றான்.

"அப்படியானால் நான் இப்போது ஒரு உண்மையைச் சொல்லப் போகிறேன். எனக்கு லங் கேன்ஸர். அட் வான்ஸ்ட் ஸ்டேஜில் இருக்கிறது. நான் இன்னும் ஆறு மாதம் கூட உயிர் வாழ முடியாது என்று இரண்டு மூன்று டாக்டர்களிடம் இருந்து ரிப்போர்ட் வந்திருக்கிறது. இந்த லங் கேன்ஸர் விவகாரமே எனக்கு ஒரு வாரத்திற்கு முன்னால்தான் தெரியும்."

இடி. இடி மேல் இடி.

திருநாவுக்கரசு காரில் அப்படியே உறைந்து போய் உட்கார்ந்து விட்டான்.

"பூமிகா நீ பொய் சொல்லுகிறாய்."

"இல்லை திரு. பொய்யாக இருக்க வேண்டுமென்று தான் நானும் ஆசைப்பட்டேன். ஆனால் உண்மை."

"பூமிகா. இது நமக்கு நிகழவில்லை. இது எல்லாம் கனவு. கெட்ட கனவு..."

"இல்லை திரு. உண்மையை நாம் ஒருநாள் எதிர் கொண்டுதான் ஆக வேண்டும். இது கனவு இல்லை. நனவு."

திருநாவுக்கரசுவிடம் இருந்த மதுவின் ஆதிக்கம் சட்டென்று விடைபெற்றுப் போய்விட்டது. ஐயோ. இந்த பூமிகா என்ன சொல்கிறாள். என்னை விட்டுப் போய் விட போகிறாளா? விடமாட்டேன். அவளைப் போக விட மாட்டேன்.

இறுக்கமான, மவுனமான சூழ்நிலையில் திருநாவுக்கரசு காரை ஸ்டார்ட் செய்தான்.

அவன் கார் ஓட்டிய வேகத்தைப் பார்த்து பூமிகா அச்சப்பட்டாள்.

"திரு. கொஞ்சம் மெதுவாகப் போங்களேன்."

"நீ சொன்னது உண்மைதானே பூமிகா?"

"ஆம்."

"சத்தியம் தானே பூமிகா?"

"ஆம். ஆம். ஆம்."

"அப்படியானால் உனக்கில்லாத இந்த பூமி வாழ்க்கை எனக்கும் வேண்டாம்."

"ஐயோ.. திரு.." என்று அவள் அலறுவதற்குள் அந்தக் கார் ஒரு நூறு வருட புளியமரத்தை மோதியது.

# 6

மூன்று மாதங்களுக்குப் பின்தான் திருநாவுக்கரசுவிற்கு சுயநினைவு வந்தது. முதலில் தான் எங்கிருக்கிறோம் என்றே அவனுக்குப் புரியவில்லை. என்ன இடம் இது? மேலே ஃபேன் சுற்றுகிறது. சுற்றிலும் வெண்மை பிரதானமாக இருக்கிறது. மூக்கில் பினாயில் நெடி. அடிக்கடி பார்வையில் படும் வெள்ளைத் துணி விசிறிக் கொண்டையுடன் கூடிய தேவதைகள்.



தேவதைகளா?

"ச்சே. நர்ஸ்கள்.

அப்படியெனில் இது ஆஸ்பத்திரி.

ஆஸ்பத்திரி.. ஆஸ்பத்திரி.. இங்கே எப்படி வந்து சேர்ந்தேன்.

என் பூமிகா எங்கே? பூமிகா.. பூமிகா...

கரெக்ட் இப்போதுதான் நினைவிற்கு வருகிறது. இது என்ன... பகல் வெளிச்சமா? அப்படி என்றால் நேற்று இரவு தான் பூமிகாவுடன் கடற்கரையின் தனிமையில் அந்த மகத்தான விருந்து. அதன் முடிவில்தான் பூமிகா தனக்கு நேர இருக்கும் மரணம் பற்றிச் சொன்னாள். நான் நம்பவில்லை. சத்தியம் என்றாள். நம்பினேன். அவளுக்கு வர இருக்கும் மரணம், சாவு, நான் எக்ஸிஸ்டென்ஸ் எனக்கும் சேர்த்து வரட்டும் என்று காரை வேகமாக ஓட்டி...

ஓநோ..

வேர் ஈஸ் மை பூமிகா?

அவன் திரும்பியது கண்டு அவனுக்கருகில் உட்கார்ந்திருந்த அம்மாவின் முகத்தில் ஓரளவு மலர்ச்சி. அம்மாவை உடனே அடையாளம் தெரிந்தது.

"அம்மா" என்றான்.

"என்ன அரசு? பசிக்கிறதா?"

இந்த அம்மாக்கள்....

"பூமிகா எங்கே?"

"ஏதாவது சாப்பிடுகிறாயா அரசு?"

"பூமிகா எங்கே?"

"ஏதாவது சூடாகக் குடிக்கிறாயா? உடலில் கொஞ்சம் தெம்பு வரும்."

"ஐயோ.. என் பூமிகா எங்கே?"

அம்மா முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதாள்.

அவனுடைய சத்தம் கேட்டு நர்ஸ் ஓடி வந்தாள். டாக்டர் ஓடி வந்தார். டாக்டருக்கு நரைத்த தலை. தடிமனான லென்ஸ் பொருத்தப்பட்ட மூக்குக் கண்ணாடி. அவன் தோளைத் தொட்டார்.

"காம் டவுன் மை ப்ரண்ட்" என்றார் அமைதியான குரலில்.

"நோ. நோ டாக்டர். என்னால் அமைதியாக இருக்க முடியாது. என் அம்மா எப்படி இங்கே வந்து சேர்ந்தாள்? என் பூமிகா எங்கே? டெல் மீ வேர் ஈஸ் மை ஏஞ்ஜல்? என் தேவதை எங்கே? அதைச் சொல்லுங்கள். நான் அவளைப் பார்க்க வேண்டும். ஒரு வார்த்தை பேச வேண்டும். ஸாரி சொல்ல வேண்டும். கமான். வேர் ஈஸ் ஷீ?"

டாக்டர் அவனை உற்றுப் பார்த்தார். அமைதியான அவர் முகத்தில் கண்களில் பாப்பாக்கள் மட்டும் லேசான சலனத்துடன் இப்படியும் அப்படியும் லேசாக நடுங்கின. அவர் முகத்தில் ஒரு உறைந்த சிரிப்பு. அது விரக்தியாலா இல்லை பிரபஞ்ச உண்மையை உணர்ந்து தெளிந்து விட்ட தன்மையாலா எதுவும் புரியவில்லை.



"டாக்டர் வேர் ஈஸ் மை பூமிகா?" என்று கெஞ்சும் குரலில் கேட்டான் திருநாவுக்கரசு.

"சன் என்றைக்கிருந்தாலும் உன்னிடம் உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும். உண்மை எவ்வளவு விரும்பத்தகாததாக இருந்தாலும் கூட உண்மை உண்மை தான். உன் இதயம் இந்த உண்மையைத் தாங்குமா என்று தெரியவில்லை. ஆனால் மனதைத் திடப்படுத்திக் கொள். உன் மனைவி பூமிகா இறந்துவிட்டாள்..."

"காட்... காட்...."

"ஸாரி. ஆனால் அதுதான் உண்மை. ஒரு விதத்தில் நீ கடவுளுக்கு நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும். உன் கார் புளியமரம் ஒன்றில் மோதியது. மோதிய அந்தக் கணத்திலேயே உன் மனைவி பூமிகா இறந்திருக்கிறாள். எந்த வலியும் இல்லை. ரத்த சேதம் இல்லை. அடி இல்லை. ஜஸ்ட் உட்கார்ந்தபடி தூங்குபவளைப் போல் இறந்திருந்தாள். அந்த மரணம் அவளுக்கு ஒரு வரம். ஏன் தெரியுமா? நாம் எல்லோரும் சாகத்தான் போகிறோம். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள். வலியே இன்றி சாவது ஒருவகை. நிறைய வேதனைகளைத் தாங்கிக் கொண்டு, தாங்கமுடியாமல், சாவுக்காக ஏங்கி, ஏங்கி, ஏங்கி வலியின் கடைசிச் சொட்டுவரை அனுபவித்துவிட்டுச் சாவது ஒரு வகை. சாவு என்றால் என்ன? நம் உடலின் இயக்கம் நின்று போவது என்று அர்த்தம். நம் உடலை இயக்கிக் கொண்டிருந்து ஏதோ ஒன்று உடலில் இருந்து விலகி விட்டது என்று அர்த்தம். அந்த ஏதோ ஒன்றைத்தான் நாம் உயிர் என்கிறோம். நம் உயிர் போவதை முன்பே அறிந்து, அந்த உயிர் நம் உடலில் இருந்து பிரியும்வரை விழிப் புடன் இருந்தால், அதைவிட ஆனந்தமான, பரவசமான

நிலையை மனிதன் எய்த முடியாது என்று ராமகிருஷ்ணர், ரமணர், ராகவேந்திரர் வரை சொல்லியிருக்கிறார்கள். உன் மனைவி பூமிகா கடைசிக்கணம்வரை அப்படி இருந்து தான் உயிரை விட்டிருக்கிறாள். உலகில் இருக்கும் சந்தோஷங்களிலேயே உன்னதமான ஒரு சந்தோஷத்தை உன் மனைவி பெற்று இருக்கிறாள். எனவே வருத்தப் படாதே'' என்று கூறி டாக்டர் நிறுத்தினார்.

திருநாவுக்கரசு நிமிர்ந்தான்.

''யெஸ். பூமிகாவின் உடலை போஸ்ட் மார்ட்டம் செய்த போது ஒரு விஷயம் தெரிந்தது. ஷீ காட் லங் கான்ஸர். நுரையீரல் புற்றுநோய். முற்றிப் போய் இருந்தது. நோ கம் பேக் ஸ்டேஜ். பூமிகா சாவை நோக்கி வேக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாள். அவளது வலி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும். அவள் உயிர் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் துடித்துப் போயிருப்பாள். வலியைத் தாங்க முடியாமல் ஏதாவது விஷம் சாப்பிட்டு விட்டுக்கூட செத்துப் போயிருப்பாள். அத்தகைய ஒரு கொடுமையான வலியை உன் மனைவி அனுபவிக்காதது ஒரு பெரிய ஆறுதல் இல்லையா?''

அவன் வெறுமையாகத் தலை அசைத்தான்.

''கம் ஆன் கெட் அப். நீ மூன்று மாதகாலம் கோமாவில் கிடந்தாய். பூமிகா இருந்திருந்தால் கூட இந்நேரம் இறந் திருப்பாள். இந்த மூன்று மாதமும் நீ கண்மூடிக் கிடந்தாய். உயிரோடு இருக்கின்றோம் என்பதை உணராமலேயே. உன் அம்மாவின், அப்பாவின் பிரார்த்தனை தான் உனக்கு மீண்டும் ஒரு வாழ்க்கையை அளித்திருக்கிறது. அது அப்படிபட்டதொரு மோசமான விபத்து. இப்படிப்பட்ட விபத்து நடந்தும் உனக்கும் உன் நினைவுகள் எல்லாம்



சேதமடையாமல் கிடைத்ததற்காக சந்தோஷப்பட வேண்டும்....''

''என்ன சந்தோஷம் டாக்டர்? என்ன சந்தோஷம்?

பழைய நினைவுகள் இனி என்னை வாழ்நாள் முழுக்கத் துரத்தப் போகின்றன. அது ஒரு சந்தோஷமா? என் பூமிகா என்னை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட பிரிவின் வலி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகப்போகிறது. இது ஒரு சந்தோஷமா? இதைவிட நான் பைத்தியமாகி இருக்கலாம். என் நினைவுகள் தொலைந்து போயிருக்கும். நினைவுகளும், சிந்தனைகளும் இல்லாத சந்தோஷ வாழ்க்கை எனக்குச் சொந்தமாகியிருக்கும். இல்லாவிட் டால் செத்துப் போயிருக்கலாம்... யாவற்றையும் விட அது மேல். மை காட் மூன்று மாதங்களாகவா நான் நினைவு திரும்பாமல் இருந்திருக்கிறேன்...?''

''யெஸ். மூன்று மாதங்களாக நீ நிறைய டாக்டர்களுக்கு வேலை வைத்துவிட்டாய். விபத்தில் உன் முகம் சிதைந்து விட்டது. உன் பழைய முகம் உனக்குக் கிடைக்கப் போவ தில்லை என்பதில் டாக்டர்கள் தீர்மானமாக இருந்தார்கள். பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணினார்கள். உன் முகம் அட்லீஸ்ட் இப்போது திருத்தமாக இருக்கிறது. ஆனால் உன் பழைய அடையாளங்களைத் தொலைத்து விட்டது. நர்ஸ் இவருக்கு ஒரு கண்ணாடியைக் கொண்டு வந்து கொடு..''

கண்ணாடி கொண்டு வரப்பட்டு திருநாவுக்கரசு பார்த் தான். அவனால் அவன் முகத்தையே நம்ப முடியவில்லை. அது முழுவதும் மாறி இருந்தது. மழு மழுவென்று இருந் தாலும் கூட பூமிகா பார்த்தவுடன் தன்னைப் பறிகொடுத்த முகம் இதுவல்ல. அந்த முகத்தில் இருந்த குழந்தை தன்மை, குறும்பு எல்லாம் காலி. இது கொடூரமான முகம்.

யாரையும் எதிரியாய் பார்க்கும் கண்கள். ரத்தக் காட்டேரிப் படங்களில் ரத்தக் காட்டேரி வேஷம் தாங்கியவருக்கு இருப்பது போல் முக்கோண வடிவில் முகம்.

திருநாவுக்கரசு தன் மாறிப் போன முகத்தைத் தன்னால் பார்த்துக் கொள்ள முடியாமல் கண்ணாடியை எறிந்தான்.

அம்மா. நீ உயிர் கொடுத்த போது இல்லாத இந்த முகத்தை எப்படி உன் மகனின் முகம் என்று ஏற்றுக் கொண்டாய்?

டாக்டர் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

''திருநாவுக்கரசு. எல்லாம் நல்லதிற்கு நடப்பதாக நினைத்துக் கொள். உன் உயிர் போக வேண்டும் என இருந்திருந்தால் எப்போதோ போயிருக்கும். ஒரு டாக்டர் கள் குழுவே சேர்ந்து முனைந்திருந்தாலும் கூட உன் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது. ஆனால் எல்லா வற்றையும் கடந்து நீ உயிருடன் இருக்கிறாய் என்றால் அதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும்... கம் ஆன்.. டேக் தீஸ் திங்க்ஸ்'' என்று டாக்டர் அவனிடம் ஒரு ரெக்ஸின் பையைக் கொடுத்தார்.

''என்ன டாக்டர் இருக்கின்றன?''

''பூமிகா கடைசியாக அணிந்திருந்த ஆடைகள். அவளது கழுத்தில் நீ கட்டிய தாலி. கை வளையல்கள். தோடுகள். ஏன் அவள் நெற்றியில் வைத்திருந்த ஸ்டிக்கர் பொட்டு கூட இதில் இருக்கிறது. கூடவே விபத்தின் போது நீ அணிந்திருந்த ஆடைகளும் இதில் இருக்கின்றன. அவற்றில் உன் ஐடென்டிடி கார்ட். எல்லாம் ஸம் சென்டி மென்ட்ஸ். உனக்கும் அந்த சென்டிமென்ட் இருக்கும் என்று தோன்றியது. அதனால்தான் கொடுக்கிறேன்.''



திருநாவுக்கரசு அந்த ரெக்ஸின் பையை குரங்கு தேங் காயை ஒரு பக்தையின் கையிலிருந்து பறிப்பது போல் பிடுங்கினான். திறந்து பார்த்துக் கண்ணீர் விட்டான்.

நினைவுகள் திரும்பியதற்காக சந்தோஷப்படும் டாக்டர். பூமிகாவை நினைவுபடுத்தும் பொருட்கள். இதயத்தில் ரத்தம் கசிந்து கொண்டே இருப்பது போல் ஓர் உணர்வு. எத்தனை நாட்கள் இந்த நிலையிலேயே இருக்க முடியும்?

இன்னும் வாழப் போகிற வருடங்கள் எத்தனை என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் வாழப் போகும் நாட்களின் கடைசி வினாடி வரை இப்படி வெறும் நினைவுகளோடு நிழல் வாழ்க்கை வாழ்வது உலகிலேயே மிகப் பெரும் கொடுமையாக அவனுக்கு தோன்றியது.

இதைவிட செத்துப் போகலாம்.

இந்த முறை எந்தத் தப்பும் நேரக் கூடாது. திரும்பவும் பிழைத்து விடக் கூடாது.

அது ஒரு பிற்பகல் நேரம்.

இரவெல்லாம் கண்விழித்த அம்மா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். நர்ஸ்கள் சாப்பாட்டிற்குப் பிறகு உண்டான களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக ஒவ்வொரு காரிடாரிலும் உட்கார்ந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

திருநாவுக்கரசு எழுந்தான்.

அம்மாவைப் பார்த்தான். எட்டிப் பார்க்க முனைந்த கண்ணீரைத் துடைத்தான். அவனால் விட்டுப் பிரியவே முடியாத அவனுடைய பூமிகாவை தன்னுள் புதைத்து வைத்துக் கொண்டிருந்த ரெக்ஸின் பையை எடுத்துக் கொண்டான்.

அந்த அறையை விட்டு மெல்ல நழுவித் தன் சாவை நோக்கி நடந்தான்.

# 7



திருநாவுக்கரசு சுதந்திரக்காற்றில் காலை வைத்தான். பினாயில் நெடி. மருந்துகள் அம்மா. அப்பா... அழுகை. சென்டிமென்டுகள்... யாவற்றில் இருந்தும் விடுதலை.

பரபரவென்று நடந்தான்.

எதிரில் ஓர் இருபதடி தூரத்தில் இருந்து ஒரு வாட்ச் மேன் அவனை நோக்கி வந்தான். திருநாவுக்கரசைத் தடுத்து நிறுத்தினான்.

"ஏய்.. யார் நீ? எங்கே போகிறாய்?"

திருநாவுக்கரசு யோசிக்காமல் கையில் இருந்த ரெக்ஸின் பேகை வீசினான். வாட்ச்மேன் முகத்தில் அது மோதியது. அவன் தடுமாறி விழுந்தான்.

திருநாவுக்கரசு ரெக்ஸின் பேக்கை மார்போடு அணைத்துக் கொண்டு மெயின் கேட்டை நோக்கி ஓடினான்.

வாட்ச்மேன் இரவு நேர ஆந்தை போல் அலறத் தொடங்கினான்.

"பகடோ... சோர். சோர். பகடோ..."

"பிடி.. திருடன்.. திருடன்.. பிடி..."

ஆஸ்பத்திரி வளாகத்தில் இருந்த பலர் திரும்பினார்கள். திருநாவுக்கரசு ஓடுவதைப் பார்த்தார்கள்.

அதே சமயத்தில் ஆஸ்பத்திரியின் அவுட்-பேஷன்ட். டிபார்ட்மென்ட் வாசலில் ஐந்து சி.பி.ஐ. அதிகாரிகள் வெளிப்பட்டார்கள். அவர்கள் கைது செய்த கைதி ஒருவனுக்கு மருத்துவ வசதி அளிக்க ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.



தாங்கள் நிறுத்தியிருந்த ஜீப்பை நோக்கி அவர்கள் நடந்தபோது வாட்ச்மேனின் குரல் அவர்கள் காதுகளையும் எட்டியது.

சடாரென்று திரும்பி திருநாவுக்கரசு ஓடுவதைப் பார்த்தார்கள்.

ஓடிக் கொண்டேயிருந்த திருநாவுக்கரசுத் தனக்குப் பின்னால் ஆட்கள் யாராவது தன்னைப் பின் தொடருகிறார்களா என்று அறிந்து கொள்வதற்காகப் பின் நோக்கித் திரும்பினான்.

மாலைச் சூரியனின் வெளிச்சம் அவன் முகத்தில் பிரகாசமாகப் படர்ந்தது.

அந்த முகத்தைப் பார்த்த சி.பி.ஐ. அதிகாரிகள் தங்கள் முகத்திற்கு நேர் எதிரே ஒரு ராஜநாகம் படமெடுத்து நிற்பது போல் உணர்ந்து அதிர்ச்சியைக் காட்டினார்கள்.

"அது?" என்றார் ஒரு சி.பி.ஐ. அதிகாரி.

"அவனேதான். இவன் முகம் என் மனைவியின் முகத்தைவிட எனக்குப் பரிச்சயம். சந்தேகமேயில்லை... அவனேதான்."

"அவனைப் பிடிக்க வேண்டும். இன்னொரு சான்ஸ் கிடைக்கவே கிடைக்காது."

"ஆம். பிடிக்கவேண்டும். உயிருடனோ, பிணமாகவோ..."

"கம்மான்... ஸ்டார்ட் தி ஜீப்..."

அவர்கள் ஐவரும் சட்சட்டென்று தங்களது ரிவால்வர்களை உருவிக் கொண்டார்கள். ஜீப்பில் பாய்ந்தார்கள்.

டிரைவர் அவர்கள் ஆணைக்காகக் காத்திராமல் ஜீப்பை உடனடியாகக் கிளப்பினான். ஜீப் கான்கிரீட் மெழுகலில் கொஞ்சம் சறுக்கி விட்டு சீறிக் கிளம்பியது.

"முட்டாள்..." என்றார் டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந் திருந்த ஒரு சி.பி.ஐ. அதிகாரி. "பொதுமக்கள் நடமாடும் இடம். இவ்வளவு வேகமாகப் போகாதே. நாம் ஜீப்பில் அவன் நடந்து. பொதுமக்களுக்கு நாம் அனாவசியமாக பீதி கொடுக்கக் கூடாது."

ஜீப் கான்க்ரீட் பாதையின் முடிவுக்கு வரும் வரை திருநாவுக்கரசு சிக்கவில்லை.

ஆஸ்பத்திரி காம்பவுண்டிற்கு வெளியே பாய்ந்தான் திருநாவுக்கரசு. தனக்குப் பின்னால் ஒரு ஜீப்பும் ஜீப்பில் உருவிய துப்பாக்கிகளுடன் ஐந்து பேரும் இருப்பதைப் பார்த்து விட்டான்.

முதலில் அவனுக்கு ஒரு விஷயம் புரிபடவில்லை. துப்பாக்கிகள் எதற்கு?

அவர்கள் முகங்களில் இருந்த தீவிரம் அவனுக்கு எதனால் என்று தெரியவில்லை.

காம்பவுண்ட் விட்டு வெளிப்பட்டான். நகருக்கு வெளிப்புறத்தில் எல்லையில் ஆஸ்பத்திரி அமைந் திருந்தது புரிந்தது. பக்கத்தில் தென்னைகள். மணல் பரப்பு சற்று தூரத்தில் தெரிந்த கடல். கடலோரத்தில் இருந்த மீன்பிடித் துறைமுகம்.

அவனுக்குச் சட்டென்று ஜீப்பில் துரத்துபவர்கள் யார் என்று புரிந்துவிட்டது. மீன்பிடித்துறைமுகம் அருகே கடத்தல் வேலைகள் எல்லாம் நிகழ்வது சர்வசாதாரணம். ஒரு குரூப்பிற்கும் இன்னொரு குரூப்பிற்கும் இடையே



மோதல் நிகழ்வது அதைவிட சர்வசாதாரணம். ஏதோ ஒரு குழு யாரையோ தேடி வந்திருக்கிறது. ஆஸ்பத்திரியில் இருந்து ஓடும் அவனைப் பார்த்ததும், அவன்தான் தாங்கள் தேடும் ஆள் என்று துரத்தத் தொடங்கி இருக்கிறார்கள். அவன் கையில் மார்போடு அணைத்தபடி புத்தம் புது ரெக்ஸின் பேக் வேறு. அதில் இருக்கும் அவனது சொத்து. விலை மதிக்க முடியாத பூமிகாவின் ஆடைகள். தாலி. வளையல்கள். தோடுகள்.

அந்தக் குழுவிடம் நின்று நியாயம் பேசினால் எடுபடாது என்று திருநாவுக்கரசுவிற்கு தெரியும். அவர்கள் பேசமாட்டார்கள். அவர்களுடைய துப்பாக்கிதான் பேசும். துப்பாக்கி நியாயம் தான் தெரியும் அவர்களுக்கு. ஒரு வேளை அவர்கள் தப்பான ஆளையே தேடி வந்துவிட் டார்கள் என்பதைப் புரிந்து கொண்டாலுங் கூட அந்தத் தாலி, வளையல்கள், தோடுகள்ஆகியவற்றைப் பறித்துக் கொண்டு விடுவார்கள். பூமிகா உபயோகித்த எதையும் யாரும் தொட்டு விடக்கூடாது. அவை புனிதமாக இருக்க வேண்டியவை. மாசு படியக்கூடாதவை. அவனோடு சேர்ந்து மடிய வேண்டியவை.

திருநாவுக்கரசு தப்பிப்பது என்று தீர்மானித்தான்.

தென்னை மரத்தின மறைவில் நின்றிருந்த அவன் படகுத் துறைமுகத்தை நோக்கி மணற்பரப்பில் ஓடத் தொடங்கினான்.

ஜீப்பில் வந்த அதிகாரிகள் அவனைப் பார்த்து விட்டார்கள்.

"அதோ.. தேர் ஹீ ஈஸ்.." என்று ஒரு துடிப்பான இளை ஞன் துப்பாக்கியை உயர்த்தினான்.

"முட்டாள். சுடாதே. சப்தம் அத்தனை முகங்களையும் திரும்பிப் பார்க்க சொல்லும். துப்பாக்கிகளை விட்டு

விட்டுத் துரத்தி மற்றவர்களுக்கு சந்தேகம் வராமல் அழுத்திப் பிடியுங்கள்! கமான்... ஜீப்பிலிருந்து குதியுங்கள்.."

"சார். அவன் அந்த ரெக்ஸின் பைக்குள் ஹாண்ட் கிரனேடுகளை வைத்திருக்கலாம்..." ஜீப்பிலிருந்து உதிர்ந்தபடி ஒருவன் சொன்னான்.

"நோ. இருந்தாலும் தான் என்ன? அவனைப் பிடித்தே ஆக வேண்டும். துப்பாக்கிகளை அவசியம் நேர்ந்தால் உபயோகிக்கலாம். இப்போது ஒரே நோக்கம் அவனைத் துரத்துவது. கம்-ஆன், சேஸ் ஹிம்..."

அவர்களில் ஒருவன் திருநாவுக்கரசைத் துரத்திக் கொண்டே மூச்சிரைக்கப் பேசினான். மணலில் கால்கள் புதையப் புதைய ஓடுவது கஷ்டமாக இருந்தது.

"எக்ஸ்க்யூஸ் மீ சார். அவன் ஆஸ்பத்திரியில் இருந்து ஓடி வந்து கொண்டிருந்தான். எனவே ஆஸ்பத்திரியில் டைம் பாம் அது இது என ஏதாவது செட் பண்ணி வைத்திருக்கலாம். இட் மே கோ ஆஃப் அட் எனி மொமன்ட்..."

"யூ ஆர் கரெக்ட். விசு சொல்வது சரி. நந்து. கான்டாக் தி பாம் ஸ்க்வாட் இம்மீடியட்லி. அலெர்ட் தெம். உடனே ஆஸ்பத்திரிக்கு வந்து ஏதாவது பாம் இருக்கிறதா என்று சோதிக்கச் சொல்."

நந்து என்னும் அதிகாரி ஓடியபடி பாக்கெட்டில் இருந்த கையடக்கமான ஸ்பெஷல் வாக்கி-டாக்கியை எடுத்து பாம்-ஸ்க்வாடை அழைத்தார். சிக்கனமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஆஸ்பத்திரியில் வெடி குண்டு வைத்திருக்கப்படலாம் என்ற தனது மேலதி காரியின் சந்தேகத்தை தெரிவித்தார். உடன் ஒரு பட் டாலியனை அனுப்பி ஆஸ்பத்திரியில் வெடிகுண்டுகள் ஏதாவது வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கச் சொல்லி உத்தரவிட்டார்.



பாம்-ஸ்க்வாட் அலுவலகத்தில் அடுத்த இரண் டாவது நிமிடம் ஒரு வேன் புறப்பட்டது. ஆட்கள். நாய்கள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கும் சென்ஸார் கருவி என்று எல்லா முன்னேற் பாடுகளும் அந்த வேனில் இடம் பெற்றிருந்தன.

திருநாவுக்கரசு அவர்கள் ஜீப்பில் இருந்து உதிர்வதைப் பார்த்தான். மணல் வெளியில் ஜீப்பை வைத்து சமாளிக்க முடியவில்லையோ என்னவோ!

கடற்கரையருகே மீன்பிடி படகுகள் அசைந்து அசைந்து நின்று கொண்டிருந்தன. சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தான்.

சில படகுகள் மீன் பிடித்துவிட்டுக் கரை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. சில படகுகள் புறப்படுவ தற்குத் தயாராக இருந்தன.

மக்கள் வலைகளை இழுத்தார்கள். படகில் ஏறினார்கள். தளைகளை இழுத்துக் கட்டினார்கள். இருள் மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டிருக்க, படகுகளில் விளக்குகள் சின்னச் சின்னத் தீபங்களாய்த் தெரிந்தன.

வேலை செய்த மக்கள் எல்லோரும் சில்-ஹவுட் உருவங்களாகத் தெரிந்தார்கள்.

திருநாவுக்கரசு ஓடினான்.

வேகம். வேகம் வேகம் முக்கியம். மூச்சிரைத்தது. ரெக்ஸின் பேகைச் சுமந்து ஓடுவது மேலும் சிரமமாக இருந்தது. இருந்தும் ஓடியாக வேண்டும். தன்னைத் துரத்துபவர்களிடம் இருந்து தப்பித்தாக வேண்டும்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது.

அவனுடைய வலதுகால் ஆடு சதையில் ஏதோ கூர்மையாகப் பாய குப்புற அடித்து விழுந்தான். ரெக்ஸின் பேக் கையில் இருந்து எகிறியது.

உடன் எழுந்தான். ரெக்ஸின் பையை அள்ளிக் கொண்டான். நெருப்புப் பந்தத்தைக் காலில் செருகி விட்ட மாதிரி உணர்ந்தான். வலது கால் முழுக்க எரிச்சல் அலைகள்.

படகுகளில் ஒன்றின் அருகே மீன் இறக்கிக் கொண்டிருக்க கூட்டம் முழுவதும் அந்தப் படகில் வந்த சரக்கைக் கவனிப்பதிலேயே ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தது.

திருநாவுக்கரசு திரும்பிப் பார்த்தான். அவர்கள் ஐந்து பேர்கள். இனித் தப்பிக்க முடியாது.

ஒரே ஒரு வழிதான் இருந்தது.

கடல் வழி!

திருநாவுக்கரசு படகுத்துறையின் இருபதடி சிமெண்ட் தளத்தை சிறுத்தை போல் கடந்தான். கடல் நீருக்குள் பாய்ந்தான்.

# 8

திருநாவுக்கரசு சற்று தூரம் கடலடியில் இறங்கினான். நீச்சல் தெரிந்த மீன்குட்டி அவன். எவ்வளவு தூரம் தண்ணீர் உள்வாங்கினாலும் மேல் மட்டத்திற்குத் தூக்கி விடும் என்று அவனுக்குத் தெரியும்.

தூக்கி விட்டது. நீர்மட்டத்திற்கு வருவதற்கு முன்பே அவன் கைகளில் ஒரு டயர் தட்டுப்பட்டது. மீன் பிடிப்படகு ஒன்றின் பக்கவாட்டில் பொருத்தப்பட்டிருந்த டயர். துறைமுகத்தின் சிமெண்ட்டும் கல்லும் கலந்த கான்க்ரீட் சுவரில் படகு மோதிப் பாழாகாமல் இருக்க அமைக்கப்பட்டிருந்த குஷன். அந்த டயரைப் பற்றினான்.



அதன் வளையத்தில் தன் கால்களை மடக்கிப் போட்டுக் கொண்டான். தண்ணீர் மட்டத்திற்கு மேலே தலையைத் தூக்கவில்லை. இப்போது தலையைத் தூக்கினால் நிச்சயம் மாட்டிக் கொள்வோம் என்று அவனுக்குத் தோன்றியது.

திருநாவுக்கரசின் தலை வெளியே எட்டிப் பார்க்கும் என்று அந்த சி.பி.ஐ. அதிகாரிகள் கரையோரம் காத்திருந்தார்கள். திருநாவுக்கரசின் தலை வெளிப்படவில்லை.

"அதிக நேரம் அவனால் தண்ணீருக்கடியில் இருக்க முடியாது" என்றார் ஒரு சி.பி.ஐ. அதிகாரி.

"அவனுக்கு ஒருவேளை நீந்தத் தெரிந்திருந்தால்..?"

"நீந்தத் தெரிந்திருந்தால் மட்டும் என்ன? எவ்வளவு தூரம் போய்விட முடியும்? அதுவும் வெளியே தலை நீட்டாமல்?" என்று இன்னொரு சி.பி.ஐ. அதிகாரி கேட்டார்.

"நான் கடலில் இறங்கித் தேடட்டுமா?"

"வேண்டாம். அவன் பயங்கரமானவன். அனாவசியமாக ஒரு நல்ல ஆபீசரை இழக்க நாங்கள் தயாராக இல்லை. மேலும் அவனால் தண்ணீரில் அதிக நேரம் நீந்த முடியாது. ஏனென்றால் அவன் காலில் குண்டு பாய்ந்திருக்கிறது..."

"அவனை எப்படியாவது பிடித்தாக வேண்டும். அவனால் ஏற்கனவே ஏற்பட்ட சேதங்களே கணக்கில் அடங்காதவை. கணக்கிட முடியாதவை. அவனை நாம் தப்ப விடக்கூடாது. இருட்டு இப்போது அவனுக்கு அனுகூலமாய் இருக்கிறது."

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"லெட் அஸ் வெயிட்."

அவர்கள் கரையில் காத்திருந்தார்கள்.

அதே நேரம் திருநாவுக்கரசு தொற்றிக் கொண்டிருந்த படகு தன் அடிமைத் தளைகளை விலக்கிக் கொண்டு மீன் பிடிப்பதற்காகக் கடலின் உள்ளே சொல்லத் தொடங்கியது.

திருநாவுக்கரசு தத்தளித்தான். வெகுநேரம் நீரில் அமிழ்ந்த கைகள் கொஞ்சம் கொஞ்சமாக மரத்துப் போக ஆரம்பித்தன. வலது காலில் நூறாயிரம் வண்டுகள் துளைத்துக் குடையும் வலி. கரைக்குப் போனதும் முதலில் தோட்டாவை வெளியே எடுக்க வேண்டும். அதற்கெல்லாம் முன்னதாக.

முதலில் மூச்சு விட வேண்டும்!

படகு சற்று தூரம் சென்றதும் திருநாவுக்கரசு மழைப் பட்சி போல் தலையை சிலுப்பிக் கொண்டு நீர்ப்பரப்பிற்கு வெளியே வந்தான். மூச்சு விட்டான். மூச்சு வாங்கினான்.

ப்ஹா... ப்ஹா... ப்ஹா.. ப்ஹா.. மறுபடி நீரில் அமுந்தினான். கரையில் நின்றிருந்த ஐவரில் ஒருவன் திருநாவுக்கரசுவின் தலை நீர்மட்டத்திற்கு மேல் உயர்ந்து மறுபடி நீரில் அமுந்தியதைப் பார்த்து விட்டான்.

''அதோ.. அதோ... அந்தப் படகோடு சேர்ந்து அவன் மிதந்து போகிறான்'' என்று பரபரப்பாகக் கூவினான்.

மற்ற நால்வர் கண்களில் திருநாவுக்கரசுவின் தலை தெரியவில்லை.

''நந்து. நீ ஒன்று செய். இன்னொரு படகை நீ அமர்த்திக் கொள். அஷோக்கை அழைத்துக் கொள். நீங்கள் இருவரும் அந்தப் படகைத் தொடர்ந்து செல்லுங்கள். ஆஸ்க் தி அதர் போட் டு ரிடர்ன் டு தி ஷோர். நாங்கள் இங்கே கரையில் ஒரு கண் வைத்துக் காத்திருக்கிறோம்...''



''ஓ.கே.'' என்று நந்து அங்கிருந்த படகுக்காரர்களில் ஒருவனை அழைத்து தன் ஐடென்டியைக் காட்டி, துப்பாக் கியைக் காட்டி படகை உடனே எடுக்கச் சொன்னான்.

படகு நகர ஆரம்பித்தது. நந்துவுடன் அஷோக் தாவிக் குதித்து படகில் சேர்ந்து கொண்டான்.

தண்ணீரில் ஏற்கனவே சென்று கொண்டிருந்த படகை நந்து ஏறிய படகு துரத்தத் தொடங்கியது.

திருநாவுக்கரசு தலை தூக்கிப்பார்த்த போது இன்னொரு படகு தான் பற்றியிருந்த படகு நோக்கி வருவதைப் பார்த்தான்.

அந்தப் படகின் விளிம்பில் நின்றிருந்த இருவரையும் பார்த்தான்.

அடிவயிற்றில் ஒரு பந்து உருண்டது. இவ்வளவு பிடிவாதமாக அவர்கள் ஏன் துரத்த வேண்டும்?

டக்கென்று மறுபடி நீரில் அமுந்தினான்.

நந்து வந்த படகு தண்ணீரில் போய்க் கொண்டிருந்த படகை நெருங்கியது. நந்து தன் படகில் இருந்து அடுத்த படகிற்குத் தாவினான். அதை கரைக்குத் திரும்பச் சொன்னான்.

அந்தப் படகு வேறு வழியின்றி கரைக்குத் திரும்பத் தொடங்கியது.

மறுபடி மீன் பிடித்துறைமுகம் அருகே போனால் படகைப் பற்றி இருக்கும் ஆள் மற்ற படகுகளுக்கிடையே மறைந்து மறைந்து தப்பித்து விடுவான் என்று தோன்றிய தால் நந்து அந்தப் படகை அருகில் இருந்த இன்னொரு சிறிய மீன்பிடித் துறைமுகம் நோக்கித் திருப்பச் சொன்னான்.

படகு கரையை நெருங்கத் தொடங்கியதும், திருநாவுக் கரசு தன்னை படகின் டயரில் இருந்து தன்னை விடு வித்துக் கொண்டான். உள் நீச்சலாக அடித்தான்.

கால்களில் ஒன்று இன்னும் எரிந்தது. ரத்தம் வீணாகிக் கொண்டிருந்ததால் அவன் மிகுந்த களைப்புடன் இருந் தான். இவர்களிடம் இருந்து தப்பிக்க முடியும் என்று தோன்றவில்லை. ஆனால் தப்பித்துத்தான் ஆகவேண்டும்.

அவன் சட்டென்று வேக வேகமாக நீந்தி காலுக்குக் கீழே மணல் தட்டுப்பட்டதும் எழுந்து ஓடத் தொடங்கினான்.

தளராதே. ஓடு. ஓடு. வெளியேறு. ஏதாவது ஆட்டோ, இல்லை கார் ஏதோ ஒன்று பிடித்து தப்பித்து போலீசுக்கு ஓடு!

அவன் ஓடியதை நந்துவும், அஷோக்கும் பார்த்து விட்டார்கள்.

படகு துறையைத் தொட்டும் தொடாமலும் இருந்த போதே சட்டென்று குதித்தார்கள். திருநாவுக்கரசைத் துரத்திக் கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.

திருநாவுக்கரசு சட்டென்று கடற்கரையை ஒட்டிச் சென்ற அந்த சாலையைக் கடந்தான்.

நந்துவும் அஷோக்கும் சாலையைக் கடக்க இருந்த சமயம் குறுக்கே ஒரு பஸ் வந்தது. அவர்கள் இருவரும் அந்த பஸ்ஸைத் திட்டினார்கள்.

பஸ் விலகிய போது திருநாவுக்கரசைக் காணவில்லை.

நந்துவும், அஷோக்கும் தாமதிக்கவில்லை. எதிரே இருந்த சந்தைத் தவிர வேறெங்கும் போயிருக்க முடியாது.

அந்தச் சந்திற்குள் நுழைந்தார்கள்.

திருநாவுக்கரசு, தான் திரட்டிய சக்தி எல்லாம் எங்கோ பூமிக்குள் வழிவது போல் உணர்ந்தான். வலது காலில் இருக்கும் குண்டு இன்னும் அப்படியே இருக்கிறதா, இல்லை தண்ணீருக்குள் விழுந்து விட்டதா?



உடம்பெங்கும் நீர் சொட்டச் சொட்ட வலது கால் கொஞ்சம் கொஞ்சமாகத் தனியே செத்துப் போவது போல் ஓர் உணர்வு.

அவன் அந்தச் சந்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு லாரியின் அடியில் தன்னை நுழைத்துக் கொண்டான்.

யார் நிறுத்திப் போன லாரியோ அது. எந்த வினாடி கிளப்பப்படும் என்று புரியாத நிலை. இருந்தும் திருநாவுக் கரசுவிற்கு வேறு வழி தோன்றவில்லை.

நந்துவும், அஷோக்கும் அந்தச் சந்திற்கும் நுழைந் தார்கள். இருவரும் துப்பாக்கிகளைத் தழைத்துப் பிடித் திருந்தார்கள். நந்துவின் கையில் ஒரு லென்சின் டார்ச் முளைத்திருந்தது.

அந்த டார்ச்சின் கதிர் சந்தின் ஒவ்வொரு சதுர சென்டி மீட்டரையும் ஆராயத் தொடங்கியது.

திருநாவுக்கரசை அச்சம் பற்றிக் கொண்டது.

அந்த இடம் பாதுகாப்பான இடமல்ல.

அதைவிட வேறொரு இடத்தில் ஒளிய வேண்டும்.

மெல்ல நகர்ந்து லாரியின் மறுபக்கம் போய் அங்கிருந்து தப்பித்து ஓடுவதுதான் ஒரே வழி என்று தோன்றியது அவனுக்கு.

மெல்ல அசைந்தான்.

அதே கணத்தில் நந்து லாரியின் பெரிய டயர்களை ஒட்டி அந்த அசைவைக் கவனித்தான். துப்பாக்கியின் ஸேஃப்டி காட்சை ரிலீஸ் செய்தான்.

பூனைப்பாதங்கள் வைத்து லாரியை நெருங்கினான்.

"வேணு பிரசாத். உன் ஆட்டம் ஓவர். லாரிக்கடியில் இருந்து எழுந்து வந்து விடு. இல்லாவிட்டால் நாயை சுடுற மாதிரி சுடுவோம்."

'வேணுபிரசாத்தா? அப்படியானால் அது நிச்சயம் ஆள் மாறாட்டம்தான்.' திருநாவுக்கரசிற்கு 'ஹப்பாடா' என்றிருந்தது.

"ஐ'ம் நாட் வேணுபிரசாத். ஐ'ம் திருநாவுக்கரசு. நேவி ஆபீஸர்." என்று கத்தியபடி லாரியின் சக்கரத்திற்கு அடியில் இருந்து வெளிப்பட்டான் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி.

நந்து எந்த சான்ஸையும் எதிரிக்குக் கொடுக்க விரும்பவில்லை. வேணுபிரசாத் இல்லையென்று அவன் சொல்வதே வேணுபிரசாத்தின் மாஸ்டர் ட்ரிக்கில் ஒன்றாக இருக்கும். விறைத்தான்.

இரண்டு கைகளையும் உயர்த்திய நிலையில் வந்த திருநாவுக்கரசைப் பார்த்தான். துப்பாக்கியால் சுட்டான்.

திருநாவுக்கரசின் இன்னொரு கால் முட்டியைப் பெயர்த்தது அந்தக் குண்டு.

திருநாவுக்கரசு 'ஐயோ' என ஓலமிட்டுக் கொண்டே மயங்கி விழுந்தான்.

## 9



திருநாவுக்கரசுவிற்கு விழிப்பு வந்த போது சூழ்நிலையே புரியவில்லை. ஒரு அறையில் இருந்தான். சாத்தப்பட்ட அறை. கம்பிக் கதவுகள். லாக்கப்போல. இல்லை ஒரு வேளை லாக்கப்தானா?

அவனிடம் இருந்து அந்த ரெக்ஸின் பையை அபகரித்துப் போகும் எண்ணத்துடன் ஐந்து பேர் ஜீப்பிலும்,



பீச்சிலும், படகிலுமாகத் துரத்தியது நினைவிற்கு வந்தது. பறித்துக் கொண்டுவிடப் போகிறார்களேயென்று ஓடியதும், மாட்டியதும் நினைவிற்கு வந்தது. சுட்டது நினைவிற்கு வந்தது. சாகடிக்காமல் விட்டு விட்டார்களே ஏன்? ரெக்ஸின் பை அவனருகிலேயே இருந்தது. திறந்து பார்த்தான். பூமிகாவின் எல்லாம் இருந்தது. ஏன் இந்தப் பை அப்படியே இருக்கிறது?

"கம்பிக்கதவு. வெளியே தெரிந்த காவி நிறம். போலீஸ் ஸ்டேஷனா? போலீஸ் ஸ்டேஷன் என்றால் ஒன்றும் பிரச்சனையில்லை. ரெக்ஸின் பையில் ஐடென்டி கார்டும் இருந்தது. எனவே அதைக் காட்டிப் பேசலாம். நம்பிக்கை இருந்தது.

தன்னை முழுவதுமாகப் பார்த்துக் கொண்டான். அவன் பேண்ட் பாதி கிழிந்திருந்தது. முழங்காலில் குண்டடிப்பட்ட இடத்தில். கட்டு போடப்பட்டிருந்தது. பேண்ட் அந்த இடத்தில் கத்தரித்து விடப்பட்டிருந்தது. இன்னொரு காலிலும் ஆடுசதையுடன் பேண்ட் காலி. அங்கேயும் கட்டு. குண்டுகளை எல்லாம் நீக்கியிருந்தார்கள். வலி இல்லை. ஒரு வேளை செடேடிவ் ஏதாவது கொடுத்திருந்தார்களோ என்னவோ! எத்தனை நாட்களாக இல்லை எத்தனை மணிநேரமாக இந்த 'செல்'லில் நான் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறேன்.' இந்த இடம் எங்கே இருக்கிறது? விசாகப்பட்டினத்தின் அவுட்டரா? இல்லை விசாகப்பட்டினத்தின் உள்ளேயே எங்காவது ஓரிடமா?

திடீரென்று கம்பிக் கதவிற்கு வெளியே காலடிச் சத்தங்கள் கேட்டன. ஷூக்கால்கள் மணலை மிதித்துத் தேய்த்து நர நரவென்ற ஒலியுடன் கூடிய க்ரீய்ச்-டக், க்ரீய்ச்-டக்.

திருநாவுக்கரசு நிமிர்ந்தான்.

அவர்கள் ஐந்து பேரும் வெளியே நின்றார்கள். ஒரு காக்கிச்சட்டைக் கதவைத் திறந்தான். அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். கண்களில் வன்மம், கைகளில் நீட்டிய துப்பாக்கிகள்.

திருநாவுக்கரசு வாய் பிளந்து பார்த்தான்.

ஒவ்வொருத்தராக உள்ளே நுழைந்து கதவோரமாக நின்று கொண்டார்கள்.

"யெஸ். பேசு" என்றான் அவர்களில் ஒருவன்.

திருநாவுக்கரசு "என்ன பேச வேண்டும்?" என்று கேட்டான்.

"உண்மைகளை. உன் வாக்குமூலத்தை. நீ செய்திருக்கும் குற்றங்களுக்கு நீ எவ்வளவு பிறவிகள் எடுத்தாலும் அவ்வளவு பிறவிகளிலும் உன்னை நாயைச் சுடுகிற மாதிரி சுட்டுக் கொல்லலாம். உண்மைகளை சொல்."

"ஆபீசர். நீ ஒரு ஆபீசராகத்தான் இருக்க வேண்டும். என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு என்னை இங்கே கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கிறீர்கள். என் பெயர் திருநாவுக்கரசு. சொந்த ஊர் சிங்காநல்லூர். என் அம்மா அப்பாவுடன் சின்ன வயதிலேயே ஆந்திரா பக்கம் வந்துவிட்டேன். நான் ஒரு நேவி ஆபீசர். என் மனைவி பெயர் பூமிகா. அவள் லங் கேன்ஸரில் இறந்து போக வேண்டியவள். அதற்கு முன்பே ஓர் விபத்தில் செத்துப் போய்விட்டாள். அவள் இறந்த பின் உயிர் வாழக்கூடாது என்றுதான் நான் சாகப் போனேன். என்னை நீங்கள் துரத்தினீர்கள்" என்றான் திருநாவுக்கரசு.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். முதலில் சீரியஸாக, பின் புன்னகையுடன். பின் சிரித்தார்கள்.



அவர்களில் ஒருவன் திருநாவுக்கரசுவின் அருகில் வந்தான்.

"பையா, உன் பெயர் என்ன என்று சொன்னாய்?"

"திருநாவுக்கரசு."

சொல்லி முடிப்பதற்குள் திருநாவுக்கரசுவின் வலது காதுக்கு மேல் தலையின் பக்கவாட்டில் ஏதோ ஒன்று மோதியது. நட்சத்திரங்கள் சிதறின. இருட்டும், கண்கூசும் வெளிச்சமுமாய் கொஞ்ச நேரம் மாறி மாறி ஏதோ ஒரு விஷயம் அவன் மண்டைக்குள் நிகழ்ந்தது. அடிபட்ட இடத்தில் இருந்து ஒரு வலி புறப்பட்டு உடலின் அத்தனை பாகங்களுக்கும் கன்னாபின்னா என்று ஓடியது. கண்களை மூடிக் கொண்டான். கண்ணில் அவனுடைய முயற்சி எதுவுமே இன்றி நீர் சுரந்தது. கண்களைத் திறந்தான். பார்வையே மழுப்பலாகத் தெரிந்தது.

எதிரே இருந்தவனின் கை ஒன்று அவனுடைய முகத்திற்கு நேரே இருந்தது. அந்த கைவிரல்களில் கருப்பாக, மொத்தமான ரப்பரால் ஆன வளையம் ஒன்றை மாட்டியிருந்தான்.

"எப்படி இருந்தது என் அடியின் சாம்பிள். இது வெறும் சாம்பிள் தான். பார்த்தியா? திக் ரப்பர். இதால் அடித்தால் உன்னை அடித்த சுவடே இருக்காது. ஆனால் உன் நரம்பு மண்டலம் அத்தனையும் சிதைக்க இதனால் முடியும். ஸோ.. உண்மையைப் பேசு."

"ஆபீஸர்..." என்றான் திருநாவுக்கரசு மூச்சிரைக்க. "நான் திருநாவுக்கரசுதான். ஒரு நேவி ஆபீஸர். இதோ இருக்கும் ரெக்ஸின் பேகில் என் அடையாளங்கள் இருக்கின்றன. ஐடென்டி கார்ட். அந்தக் கார்டு சொல்லும் நான் யார் என்பதை..." என்றான் திருநாவுக்கரசு திணறித் திணறி.

"உன் பெயர் என்ன?"

"திருநாவுக்கரசு" என்றான் திருநாவுக்கரசு மறுபடியும்.

எதிரில் இருந்தவன் மறுபடியும் அடித்தான். மறுபடி அதே வலி...

"நீ உண்மையைச் சொல்லும் வரைக்கும் இதே போல் தான் அடிபட்டுக் கொண்டிருக்கப் போகிறாய். உண்மையைச் சொல். உன் பெயர் என்ன?"

"ஆபீஸர். வேண்டாம். என்னை இப்படி நீங்கள் துன்புறுத்துவது அரசாங்கத்திற்குத் தெரிந்தால் அப்புறம் நீங்கள் எல்லோருமே வருத்தப்பட வேண்டி இருக்கும். நான் ஒரு ஸர்வீஸ்மேன். என் அடையாள கார்டை நீங்கள் பார்க்கலாம். வெரிஃபை பண்ணலாம். என்னை வேறு யாரோ எனத் தப்பாக நினைத்துப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள்..."

"டேய். உன் அடையாள அட்டை பிஸினஸ் எல்லாம் எங்களுக்குத் தெரியாது என நினைத்துக் கொண்டிருக்கிறாயா? இந்த மாதிரி எத்தனை அடையாள அட்டைகளைத் தயாரித்துக் காண்பித்து எத்தனை முறை நீ போலீஸ்காரர்களிடம் இருந்தும், எங்களைப் போன்ற சி.பி.ஐ. ஆபீசர்களிடம் இருந்தும் தப்பித்து இருக்கிறாய்? சொல். விசாகப்பட்டினம் ஆஸ்பத்திரியில் இருந்து எங்களைப் பார்த்ததும் தப்பி ஓடி வந்தாயே. அங்கே நீ பாம் எதுவும் வைக்கவில்லை என்று பாம் ஸ்க்வாட் சோதித்ததில் தெரிந்து விட்டது. வேறு என்ன காரணத்திற்காக அந்த ஆஸ்பத்திரிக்குப் போனாய்? அங்கே என்ன குற்றம் செய்திருக்கிறாய்? ஆஸ்பத்திரி லாபில் ஏதாவது கிருமிகளைக் கலந்து விட்டு வந்திருக்கிறாயா? ஆஸ்பத்திரி ப்ளட் பேங்க்கில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ரத்தத்தில் எய்ட்ஸ் கிருமிகளைக் கலந்து இருக்கிறாயா? என்ன செய்துவிட்டு வந்திருக்கிறாய் சொல்..."



திருநாவுக்கரசுவிற்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. இவர்கள் தன்னை வேறு யாரோ என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேறு யாரோவைப் பிடிப்பதற்குப் பதில் தன்னைப் பிடித்திருக்கிறார்கள் என்று மட்டும் தெரிந்தது. அவர்கள் தன்னைச் சாகவிடப்போவதில்லை. சித்ரவதை செய்து கொண்டே இருப்பார்கள். அம்மா, அப்பாவிற்கு தான் எங்கே இருக்கிறோம் என்று கூடத் தகவல் தெரிவிக்க இயலாது.

திருநாவுக்கரசு திரும்பவும் தன்னைப் பற்றிச் சொன்னான். பூமிகா பற்றி சொன்னான். கார் விபத்து பற்றிச் சொன்னான். பூமிகா இறந்தது, தான் பிழைத்தது, தன் முகத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி சிகிச்சை நடத்தப்பட்டது. தான் சாக விரும்பியது என அனைத்தையும் சொன்னான்.

அவர்கள் நம்பவில்லை. அவன்தான் வேணுபிரசாத் என்றார்கள். தீவிரவாதி என்றார்கள். இந்தியா முழுக்கத் தேடப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அவன்தான் ஆஸ்பத்திரிகளில், கோயில்களில் குண்டு வெடித்ததாகச் சொன்னார்கள். ஹோட்டல்கள், கப்பல்கள் ஆகியவற்றை நாசமாக்கியதாகச் சொன்னார்கள்.

திருநாவுக்கரசுத் திரும்பத் திரும்ப மறுத்தான். தான் சொன்னதையே சொன்னான். அவன் முறுக்க மறுக்க சி.பி.ஐ. அதிகாரிகளின் கோபம் அதிகரித்தது. அவனது உடலைப் பலவித சித்திரவதைகளுக்கு ஆளாக்கினார்கள். அவனது ஆசன துவாரத்தில் மிளகாய்ப் பொடியைச் செலுத்தினார்கள். அத்தனை நகங்களிலும் ஊசி ஏற்றினார்கள். அவன் நகங்கள் எல்லாம் நீலம் பாரித்தன. தூக்கம் வந்த போதெல்லாம் தூக்கம் வரவிடாமல் செய்து முகத்தில் உப்பு நீரைச் சுள்ளென்று அடித்துக் கேள்விகள்

கேட்டார்கள். சைக்கிள் டியூபில் மணலை நிரப்பி அடித்தார்கள். அவன் மயங்கினான்.

திருநாவுக்கரசுவிற்கு ஒரு எல்லைக்கு மேல் விரக்தி வந்து விட்டது. இது எங்கே இருக்கிறது என்றே புரிபடாத ஒரு இடம். வக்கீல். டாக்டர் என்று வெளியாட்கள் யாரும் கண்ணில் படாத ஒரு செல். உயிருடன் வெளியே அனுப்புவதாகத் தெரியவில்லை. உயிர் போக வேண்டும் என்பதுதானே தனது விருப்பமும். போகட்டும். அந்த உயிர் இவ்வளவு சித்திரவதைப் பட்டுத்தான் போக வேண்டும் என்று இருந்தால் அதை எப்படி யாரால் தடுத்து விட முடியும்?

''கில் மீ பாஸ்டார்ட்ஸ்.. கீல்.. மீ..'' என்று அவன் கத்திய கத்தலைக் கேட்டு அவனை ஆழமாகப் பார்த்த அஷோக், ''உன் ரேகையை இதில் பதி'' என்று ஸ்டாம்ப் பேடையும், பேப்பரையும் நீட்டினான்.

திருநாவுக்கரசு தனது பத்து விரல் ரேகைகளையும் அதில் பதித்தான்.

அன்று மாலை அந்த ஐந்து சி.பி.ஐ. அதிகாரிகளும் வந்து திருநாவுக்கரசுவின் கால்களில் விழுந்தார்கள்.

''மிஸ்டர் திருநாவுக்கரசு.. எங்களை மன்னியுங்கள். மோசமான தப்பு ஒன்றை நாங்கள் செய்து விட்டோம்'' என்றார்கள்.

# 10

திருநாவுக்கரசுவின் காலில் விழுந்து கெஞ்சியதுடன் அல்லாமல், அஷோக், நந்து உட்பட ஐந்து சி.பி.ஐ.



அதிகாரிகளும் திருநாவுக்கரசு கொடுக்கும் எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள்.

திருநாவுக்கரசு அத்தனை ஆத்திரமும் ஒன்று சேர அவர்களைப் பார்த்தான். அடிப்பதா? அடித்தால் தனக்கு நிகழ்ந்த அவலங்களை எல்லாம் நேராக்கிவிட முடியுமா? அவன் ஒருவன் ரத்தம் சிந்தியது போக இன்னும் ஐந்து பேர் ரத்தம் சிந்தி ஆகப்போவது என்ன? அவனுக்குப் பொதுவாகவே வன்முறையில் நம்பிக்கை இல்லை. யாரையும் அடித்ததில்லை. ஈ, கொசு, மூட்டைப்பூச்சி என எதிர்க்கவே எதிர்க்காத எந்த ஜந்துக்களையும் கொன்றதில்லை. இவர்களை அடித்தோ, கொன்றோ அடித்துக் கொன்றோ என்ன ஆகப்போகிறது?

''லீவ் மீ பாஸ்டார்ட்ஸ்'' என்று இரைந்தான்.

அவனுடைய கைரேகைதான் அவனைக் காப்பாற்றியது என்று சொன்னார்கள். அந்தத் தீவிரவாதி வேணு பிரசாத்தின் கைரேகையோடு இவனுடைய கைரேகை ஒத்துப் போகவில்லை என்று தெரிந்தவுடன் அவசரம் அவசரமாக விசாகப்பட்டினம் நேவல் யூனிட்டுடன் தொடர்பு கொண்டு, திருநாவுக்கரசு, பூமிகா, விபத்து, கடற்படை ஆபீசர், பிளாஸ்டிக் ஸர்ஜரி எல்லாமே சத்தியம் என்று அறிந்து இப்போது அவனை விடுதலை செய்ய வந்திருக்கிறார்கள்.

அது மெட்ராஸ் என்று அடைந்திருந்த ஜெயிலை விட்டு வெளியே வந்தபிறகுதான் தெரிந்தது. அம்மாவும், அப்பாவும் காத்திருந்தார்கள். அம்மா அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள். அப்பா திருநாவுக்கரசை மறுபடி முழுதாகப் பார்த்த மகிழ்ச்சி தாங்காமல் மயக்கம் போட்டு விழுந்தார்.

"அரசு... நாம் இந்த கெட்ட மனிதர்களுக்கிடையே இருக்க வேண்டாம். வா. என் தம்பி செஞ்சேரி மலையடிப் பாளையத்தில் நிலம் வைத்திருக்கிறான். நடுவில் பெரிய பண்ணை வீடு கட்டியிருக்கிறான். நம்மையெல்லாம் அங்கே வரச்சொல்லி வம்பு பண்ணிக் கொண்டிருக் கிறான். போய்விடுவோம். நீ ஏர் உழு. நான் நாற்று நடு கிறேன். சேற்றில் இறங்கி வேலை செய்வது இந்த மயிர் பிடுங்கி வேலைகளை எல்லாம் விட எவ்வளவோ மேல்" என்று மயக்கம் தெளிந்து எழுந்த அப்பா சொன்னார்.

"சரிப்பா" என்றான்.

அவர்களை ஏ.ஸி.காரில் கருப்புக் கண்ணாடி ஜன்னல் களை ஏற்றி உட்காரவைத்து அனுப்பினார்கள்.

திருநாவுக்கரசு செஞ்சேரி மலையடிப்பாளையம் சென்று தலைப்பாகை கட்டிக் கொண்டு, வேஷ்டியை கிராமத்து விவசாயி போல் கட்டிக் கொண்டு சேற்றில் இறங்கினான். காலையில் பழைய சாதக் கரைசல், பிற்பகலில் கேழ்வரகுக் களி, இரவில் சுடச்சுட சோறு என்று வாழ்க்கையே தலைகீழாக மாறிப் போனது.

ஆனாலும் அதில் ஓர் அமைதி இருந்தது.

அவன் செஞ்சேரி மலையடிப்பாளையம் போய் ஒரு மாதம் இருக்கும்.

ஒரு முன்னிரவு நேரம். வீட்டுவாசலில் கயிற்றுக் கட்டில் போட்டுக் கொண்டு அவன் அமர்ந்திருந்தான். மேலே நிலா. காற்றில் குளிர். நீர் பாயும் பம்புசெட்டின் லேசான சளசளப்பு. அவ்வப்போது போன கார் அல்லது லாரி அல்லது பஸ்ஸின் இயந்திர முணுமுணுப்பு. அப் படியே கட்டிலில் சாய்ந்து கண்களை மூடினான்.



திருநாவுக்கரசு நிலவைப் பார்த்து மல்லாந்திருந்தான். நிலவில் அவனுக்கான படம் ஓடிக்கொண்டிருந்தது. அந்த படத்தில் அவனுடைய பூமிகா இருந்தாள்.அவனோடு சிரித்தாள். பாடினாள். முத்தமிட்டாள். ரசித்தாள். விசித் தாள். அவன் மேல் பூமாலையாய் விழுந்தாள். அவன் விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் இன்பம் நுகர அனுமதித்தாள்.

திருநாவுக்கரசுவிற்கு வாழ்க்கை படு திருப்தியாக இருந்தது. கோயமுத்தூர் போவது வருவது போன்ற வெளி வேலைகளை எல்லாம் அப்பா கவனித்துக் கொண்டார். ஏறக்குறைய அஞ்ஞாத வாழ்க்கைதான் அவனுடையது.

அப்படி அவன் மல்லாந்திருந்த அந்தப் பொழுதில் தான் பிரதான சாலையில் இருந்து ஒரு ஜீப் திரும்பியது. அவனிருந்த இடத்தை நோக்கிப் பல்லாக்கு போல் ஆடி ஆடி வந்தது. ஹெட்-லாம்ப் வெளிச்சம் ஜீப்பின் குலுக் கல்களுக்கு ஏற்ற மாதிரி ஒளி நடனத்தை அமைத்துக் கொண்டு வந்தது.

வருவது ஜீப் என்று அறிந்தவுடன் அதிர்ந்தான். சடக்கென எழுந்து உட்கார்ந்தான். கடற்படைக்காரர்கள் யாராவது வருகிறார்களா? அவனைத் திரும்பவும் வேலை யில் சேரச் சொல்லி வற்புறுத்தலா?

யாராக இருந்தாலும் இனிமே மனிதர்கள் வாழும் உல கில் நுழையக் கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

ஜீப் இருபதடி தூரத்தில் நின்றது. அதிலிருந்து இறங் கியவரை அடையாளம் காணமுடியவில்லை. ஹெட் - லாம்ப் வெளிச்சத்தில் கண்கள் கூசின.

அவனை நோக்கி நடந்து வந்த அந்த நடையில் ஒரு வித்தியாசம் புலப்பட்டது. ஒரு காலை அழுத்தமாகவும்,

ஒரு காலை லேசாகவும் ஊன்றி விந்தி விந்தி நடந்து வந்தார்.

"அருகில் உட்காரலாமா? என் கால்களில் ஒன்று மரக்கால். ஒரிஜினலை தேசத்திற்காக இழந்துவிட்டேன்" என்ற சிரித்தபடி பேசினார்.

திருநாவுக்கரசு பதறிப்போய் எழுந்தான்.

"ப்ளீஸ்" என்று கட்டிலைக் காட்டினான்.

உட்கார்ந்தான். நட்பை நாடி கையை நீட்டினார்.

"ஐ'ம் பாரதிகுமார். ரிட்டயர்ட் சி.பி.ஐ. ஆபீசர்" என்றார்.

# 11

"ஐ'ம் பாரதிகுமார். ரிட்டயர்ட் சி.பி.ஐ. ஆபீசர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவரைக் கூர்ந்து பார்த்தான் திருநாவுக்கரசு. முகத்தில் முதுமை தெரிந்தாலும் வாழ்க்கையின் சாகசங்களில் இன்னும் நிறைய ஈடுபாடு உடையவர் போல் அவர் தெரிந்தார்.

"யெஸ். நான் உங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவ முடியுமா?" என்று கேட்டான் திருநாவுக்கரசு.

"ஆம்"

"என்ன வகையில்?"

"மிஸ்டர் திருநாவுக்கரசு. உங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் பிறந்தது, வளர்ந்தது, கடற்படையில் சேர்ந்தது. பூமிகாவைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டது. விபத்து, ஆஸ்பத்திரி அதன் பின் உங்களைச் சில சி.பி.ஐ. அதிகாரிகள் கொண்டு போய்



ஜெயிலில் வைத்துச் சித்திரவதை செய்தது எனச் சகலமும் தெரியும்."

"அதனால் என்ன?"

"உங்களை அவ்வளவு தூரம் அவர்கள் சித்திரவதை செய்வதற்குக் காரணம் என்ன தெரியுமா? போலீசிலும், சி.பி.ஐ.யிடமும் சிக்காமல் நழுவி நழுவிப் போய்க் கொண்டிருக்கும் தீவிரவாதி வேணுபிரசாத்தைப் போல் உங்கள் முகம் அமைந்திருப்பதுதான். உங்கள் முகத்தில் அந்த பிளாஸ்டிக் சர்ஜரி உங்கள் முக அடையாளத்தை இவ்வளவு வினோதமாக மாற்றி இருக்கிறது. உங்களுடைய துர் அதிர்ஷ்டம் அது. அதனால்தான் உங்களை வேணுபிரசாத் என்று நினைத்து அந்த அடி அடித்தார்கள். அவ்வளவு சித்திரவதை செய்தார்கள். வேணுபிரசாத் மூலம் மற்ற தீவிரவாதிகளையும் கண்டுபிடித்து ஜெயிலில் அடைப்பது தான் சி.பி.ஐயின் நோக்கம். ஆனால் நீங்கள் திருநாவுக்கரசு. வேணுபிரசாத் இல்லையே. அதனால்தான் வேணுபிரசாத் கூட்டாளிகள் பற்றி எல்லாம் தகவல் கொடுக்க முடியவில்லை. அந்த வேணுபிரசாத் இன்னும் சி.பி.ஐ. வசம் சிக்கவில்லை. அவனைப் பிடிக்க வேண்டும். அதனால் தான் உங்கள் உதவியை நாடி நான் வந்திருக்கிறேன்" என்றார் பாரதிகுமார்.

"நானா? நான் என்ன செய்ய முடியும்?"

"வேணுபிரசாத் பற்றி நாங்கள் பல செய்திகளை சேகரித்து வைத்திருக்கிறோம். அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். யவனா என்று பெயர். சென்னையில் இருக்கிறாள். தனியாகத்தான் இருக்கிறாள். அவளைத் தேடி இந்த வேணுபிரசாத் வருவது வழக்கம். ஆனால் அவன் அவளைத் தேடி எப்போது வருகிறான், எப்படி வருகிறான்

என்று எங்கள் யாருக்குமே புரியவில்லை. ஆனால் சந்திக்கிறான். நீ வேணுபிரசாத்தாய் யவனாவைப் போய்ச் சந்திக்க வேண்டும். வேணுபிரசாத் பற்றித் தெரிந்து வரவேண்டும். அவன் எங்கே இருப்பான். எப்படி எந்தக் கோலத்தில் இருப்பான். அவனுடைய அடுத்த திட்டம் என்ன, யாரைக் கொல்லப் போகிறான். எதை வெடி வைத்துத் தகர்க்கப் போகிறான்... ஏதாவது ஒரு செய்தி. ஒரே ஒரு நூல் நுனியைத் தேடிப்பிடித்துக் கொண்டுவா. வேணுபிரசாத் மடக்கியவுடன் நீ மறுபடி இந்த வாழ்க் கைக்கு வந்து விடலாம்'' என்றார் பாரதிகுமார்.

திருநாவுக்கரசு சிரித்தான். ''நீங்கள் ஜோக் அடிக் கிறீர்கள்'' என்றான்.

பாரதிகுமாரின் முகம் சீரியஸாக மாறியது. ''ஐ'ம் நாட் ஜோக்கிங். சீரியஸாகத்தான் பேசுகிறேன்.''

''அப்படியானால் உங்களுக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்க வேண்டும். நான் ஒரு கடல் படை ஆசாமி. தேச விசுவாசி. என்னைப் போய் ஒரு தீவிரவாதியாக, தேசத்துரோகியாக மாறச் சொல்கிறீர்கள்.''

''நடிப்புதானே? ஒரு உன்னதமான காரணம் இருக் கிறது இல்லையா?''

''நடிப்பு என்றால்? நடிப்பு என்றால்.... என்ன சொல் கிறீர்கள் நீங்கள்? ஆக்ஷன், கட் இருக்காது. துப்பாக்கிகள், குண்டுகள் எல்லாம் உண்மையாக இருக்கும். உண்மை யான ரத்தம் இருக்கும். கடற்படையில் நான் இதுவரை ரத்தம் பார்த்ததே இல்லை. நான் சண்டையில் பங்கேற்று துப்பாக்கிச் சுட்டது இல்லை. யாரையும் கொன்றது இல்லை. வன்முறை எனக்கு பிடிக்காத ஒன்று. வேணு பிரசாத்தாய் வேஷம் போட்டால் துப்பாக்கி தூக்க வேண்



டும். சுட வேண்டும். நோ. இம்பாஸிபிள் முடியாது. நான் பூமிகாவோடு வாழ்ந்தவன். நான் போய் யவனாவைக் காதலிப்பதா? அதில் போலித்தனம் தான் இருக்கும். அவள் உடனே என்னைக் கண்டுபிடித்து விடுவாள்.. யூ ப்ளீஸ் கெட் அவுட் ஆஃப் திஸ் ப்ளேஸ்...''

பாரதிகுமார் சிரித்தார்.

''திருநாவுக்கரசு. எனக்கு நேர்ந்த அவலங்கள் பற்றித் தெரியுமா உனக்கு? நான் ஒரு நல்ல சி.பி.ஐ. ஆபீசராக இருந்தேன். அரசியல் குறுக்கீடுகளுக்கு அஞ்சாதவனாக இருந்தேன். என் மனைவி என் கண்ணெதிரில் கற்பழிக் கப்பட்டு கொல்லப்பட்டாள். என் ஒரே மகன் மூளை சிதறிச் செத்தான். அவன் தலையில் குண்டு பாய்ந்து வெளிப்பட்டதை இரண்டடி தூரத்தில் இருந்து நான் பார்த்தேன். என் கால்களில் ஒன்று வெட்டப்பட்டன. நான் ராஜநாகமாம். என் விஷப்பற்களை எல்லாம் பிடுங்குகிறார் களாம். இதை எல்லாம் நிகழ்த்தியது யார் தெரியுமா? ஒரு தீவிரவாதிதான். கேரளாக்காரன், உன்னி. உன்னி என்று அழைக்கப்பட்டார்கள் அவனை. நான் அந்த உன்னியை அதன் பிறகும் விடவில்லை. தேடிப்பிடித்து அரெஸ்ட் பண்ணினேன். நான் அடித்த அடியில் அவன் நரம்புகள் எல்லாம் நாசமாகி விட்டன. ஒரு கையைத் தூக்கக் கூட அவன் மற்றவர் உதவியை நாட வேண்டும். பேச்சு இருக்கிறது இன்னும். மெட்ராஸ் ஜெயிலில்தான் இருக் கிறான். போ. கேட்டுப் பார். சொல்வான். ஒரு பெண் டாட்டி செத்தால் ஒரு மனிதனால் அவள் நினைவுடன் உயிர் வாழ முடியும். ஒரு மகன் இறந்தால் வேறு ஒரு மகனைத் தத்தெடுக்க முடியும். ஆனால் ஒரு தீவிரவாதி வாழ்ந்தால் இந்த பூமி எவ்வளவு தூரம் நாசமாகும் என்று உனக்குத் தெரியாது. எவ்வளவு குடும்பங்கள் வாழ்விழக்

கும் என்று உனக்குத் தெரியாது. இவ்வளவு நடந்தும்,
ரிட்டயர்ட் ஆகியும் வேணுபிரசாத்தைப் பிடிக்கத் துடிக்
கிறேன். ஏன்? அவன் ஒரு பயங்கரவாதி. எவ்வளவு
பெண்கள் அவரவர் கணவர்கள் எதிரில் கற்பழிக்கப்படு
வார்களோ.. எத்தனை சிபிஐ ஆபீசர்கள் கை இழப்பார்
களோ தெரியாது. அவனுடைய காதலியை நெருங்க நீ
உன் இறந்து போன மனைவிக்காக தயங்குகிறாய். ப்ளடி
சென்டிமென்ட்ஸ். இந்தா... இந்த பைலில் வேணுபிர
சாத் என்னென்ன செய்திருக்கிறான் என்ற விவரங்கள்
எல்லாம் இருக்கிறது. படித்துப்பார். எத்தனை குடும்பங்
களைக் கொன்று குவித்திருக்கிறான். எத்தனை ஹோட்
டல்கள், கப்பல்கள், ஆஸ்பத்திரிகள், சர்ச்சுகள் யாவற்
றையும் நாசமாக்கி இருக்கிறான்? எத்தனை பேர் உயிரை
எடுத்திருக்கிறான்? சகலமும் இதில் இருக்கிறது. படித்துப்
பார். இரவு முழுவதும் படிக்கலாம். அவ்வளவு குற்றம்.
ஹிட்லராவது பரவாயில்லை. யூதர்களை மட்டும்
கொன்றான். வேணுபிரசாத்திற்கு சாதிப்பாகுபாடு எல்லாம்
இல்லவே இல்லை. சகட்டுமேனிக்கு அத்தனை பேரை
யும் கொன்றிருக்கிறான். உனக்கும் அவனுக்கும் தற்செய
லாக அமைந்த உருவ ஒற்றுமைதான் எனக்கு இப்படி ஒரு
யோசனையையே அளித்தது. நான் சில நாட்களுக்கு
முன்னால் ஹைதராபாத்தில் தேவராயா ஹோட்டல்
வாசலில் அவனை என் கையிடுக்கு வழியே நழுவ விட்
டேன். அவன் முகத்தை அப்போது என்னால் அடை
யாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த ஹோட்
டலில் குண்டு வெடித்தது. ஹோட்டலில் ஒரு முக்கிய
மான கான்பரன்ஸ் நடந்து கொண்டிருந்தது. சுமார் நூற்று
ஐம்பது வி.ஐ.பி.க்கள். அந்த ஹோட்டல் சொந்தக்காரன்
பல்ராம் ஏற்பாடு செய்த கான்பரன்ஸ். அவரும் சேர்ந்து



காலி. இன்னொரு பார்ட்னர் அச்சுதன் என்று பெயர்.
வி.வி.ஐ.பி. அவர் அன்றைக்குப் பார்த்து சிங்கப்பூர்
போயிருந்தார். அதனால் தப்பித்தார். இல்லாவிட்டால்
அவரும் போயிருக்க வேண்டியது. இவ்வளவு வி.ஐ.பி.
கள் ஒரே நேரத்தில் இப்படிக் கொல்லப்பட்டது அதுதான்
முதல் முறை. ஷேர் மார்க்கெட்டே ஆடிப் போயிற்று. சில
பாரின் இன்வெஸ்டர்கள் எல்லாம் வியாபாரமும் வேண்டாம்
ஒன்றும் வேண்டாம் என்று திரும்பிப் போய் விட்டார்கள்.
இந்தியப் பொருளாதாரம் சரிந்து விட்டது. இது ஒரு
தடவை அவன் செய்த இந்தக் குற்றத்தால். இதுபோல்
எவ்வளவோ குற்றங்களைச் செய்திருக்கிறான். அவனது
குற்றங்கள் நிற்க வேண்டும். அவனைப் பிடிக்க வேண்
டும். அவனைக் கண்டவுடன் சுட உத்தரவு தந்திருக்க
வேண்டியது. உன்னை நான் இறுதி முயற்சியாக நம்பி
வந்திருக்கிறேன். வேணுபிரசாத்தைக் கண்டவுடன்
சுடுவதற்கான உத்தரவை இந்த அரசாங்கம் பிறப்பிக்கு
முன் அவனைப் பிடிக்க உதவி செய். அந்தப் பைத்தியக்
காரன் ஏன் இப்படிச் செய்கிறான். பின்னணியில் யார்
அல்லது எந்த நாடு இருக்கிறது என்ற கேள்விக்கெல்லாம்
விடை கிடைத்தால் நம நாட்டிற்குப் பெரும் உதவியாக
இருக்கும். அவன் சார்ந்திருக்கும் அமைப்பை நிர்மூலமாக்க
ஒரு வாய்ப்பு கிடைக்கும். வெல். இவ்வளவு சொல்லி
விட்டேன். இந்தத் தேசத்திற்காக உதவ கடவுள் உனக்குக்
கொடுத்திருக்கும் இந்த வாய்ப்பை நீ பயன்படுத்த
மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால்...'' பாரதிகுமார்
அவரது வாக்கியத்தைமுடியவில்லை. அவன் கையில் ஒரு
பைலைத் திணித்தார். சரேலென்று விலகினார்.

ஜீப் கமறிப் புறப்பட்டு பிரதான சாலையை நோக்கிச்
சென்றது.

# 12



திருநாவுக்கரசு அன்று இரவு முழுவதும் வேணுபிர சாத் பற்றிய பைலைப் படித்ததோ, அவன் முகத்தை போட்டோவில் பார்த்து தன் முகத்தை அந்த முகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஆச்சரியப்பட்டதோ, அவனால் ஏற்பட்ட இழப்புகளுக்காக மனம் வருந்தியதோ, அப்பா வுடன் விவாதித்து சி.பி.ஐ.க்காகவும் இந்தத் தேசத்திற் காகவும் திருநாவுக்கரசு வேணுபிரசாத் போல் நடந்து கொள்ள முடிவு செய்ததோ இந்த இடத்தில் விவரித்துச் சொல்லப்பட வேண்டிய செய்தி அல்லது செய்திகள் அல்ல.

என்ன முக்கியம் எனில்,

நடந்த நிகழ்ச்சிகள். தொடர்பாக எழுந்த விளைவுகள். அவைதாம் முக்கியம்.

பாரதிகுமார் அவன் முடிவை அறிந்து சந்தோஷப் பட்டார். ஒரு மூடப்பட்ட வண்டியில் பாரதிகுமாரோடு அவன் சென்னை நோக்கிப் புறப்பட்டான்.

"திருநாவுக்கரசு. ஐ'ம் வெரி ஸாரி. ஆரம்பத்திலேயே உனக்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்பு கிறேன் நீ வேணுபிரசாத்தாக நடிக்க இப்பதே அந்த வேணு பிரசாதைப் பிடிக்கத்தான். எனவே இந்தச் செய்தியை எங் களால் பகிரங்கமாக அறிவிக்க முடியாது. நீ வேணுபிரசாத் தாக நடிக்க இருப்பது எனக்கும் என்னைத் தவிர டிபார்ட் மென்டில் சிலருக்குமே தெரியும். நீ போலீஸ்காரர்களிடம் எல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கும்.



ஏற்கனவே சி.பி.ஐ. ஆபீசர்கள் ஏமந்து போய் உன்னைத் துரத்தியது போல் போலீஸ்காரர்களும் துரத்தக் கூடும். நீ அவர்களிடம் இருந்து தப்பிக்க வேண்டும். உன்னை விலங்கு போட்டு பூட்டினால் நான் உன்னை மறுபடி விடுதலை செய்ய முடியும். ஆனால் உணர்ச்சிவசப்பட்ட போலீஸ்காரன் அல்லது சி.பி.ஐ. ஆபீஸர் சுட்டால் நீதான் உன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நீ உன் துப்பாக்கியை உபயோகிக்கலாம். சுடலாம். தப்பித் தவறி ஏதாவது போலீஸ்காரன் சாக நேர்ந்தால் கவலைப்படாதே. இந்த தேசத்திற்காக அவன் உயிர் நீத்தான் என்று எண்ணு. சுடத்தயங்காதே. வேணுபிரசாத்தைப் பிடிக்க வேண்டு மானால் நீ உயிரோடு இருக்க வேண்டும். அது முக்கியம் புரிந்ததா?"

"யெஸ் சார்" என்றான் அரசு.

"குட். இப்போது ஒரு வீடியோ ஷோ. அந்த வேணு பிரசாத் ஏற்கனவே ஒரு முறை ஜெயிலில் இருந்தபோது படம் பிடிக்கப்பட்டான். அவனுக்குத் தெரியாமலேயே. அந்தப் படத்தைப் பார். கோர்ட்டிற்குப் போகும் வழியில் தப்பித்து விட்டான். அவனுடைய ஒரு நண்பனின் உதவி யால். அந்த நண்பனின் புகைப்படமும் இருக்கிறது. அதையும் பார்த்துக் கொள்."

பார்த்தான். வேணுபிரசாத்தின் நடையில் ஒரு அகம் பாவம் இருந்தது. ஜெயிலில் இருந்த போது கூட இடை விடாமல் சூயிங்-கம் மென்றான். பாக்கெட்டில் இருந்து ஒரு பாரின் சூயிங்கம் டப்பியை எடுத்துத் திறந்து வாயில் போட்டு மென்று மென்று அதில் இருந்த இரும் புக்கம்பி ஜன்னலைக் குறி பார்த்துத் துப்பிக் கொண் டிருந்தான். தன் அறையைச் சுத்தமாக வைத்திருந்தான்.

தலைமுடி பின்னோக்கி வாரப்பட்டிருக்க அதில் அவ்வப்போது விரல் கொடுத்து அளைந்தான். திருநாவுக்கரசு அத்தனையையும் பார்த்து மனதில் பதிய வைத்துக் கொண்டான். அவன் நண்பனது முகத்தைப் பார்த்தான். அவன் பெயர் வினோதமாக இருந்தது.

நீமூ.

நீமூ என்று ஒரு பெயரா? போட்டோவில் தெரிந்த ஆள் அயல்நாட்டுக்காரனாகத் தெரியவில்லை. இந்த தேசத்தவனாகத்தான் தெரிந்தான். பின் என்ன அந்த நீமூ. பாரின் ஆளாக இருந்தால் அப்படி ஒரு பெயர் இருப்பதற்கு ஏதோ ஒரு அயல்நாட்டு மொழி காரணமாக இருக்கலாம். இந்தியனைப் போலத் தெரியும் இந்த ஆளுக்கு எதற்கு இந்த வினோதப் பெயர்?

அப்புறம் அந்த யவனா.

யவனா தீவிரவாதி இல்லையென்பதால் அவளை வெகு சுதந்திரமாக வீடியோவில் பதிவு செய்திருந்தார்கள். ஒரு திருமண வரவேற்பில் ஒரு பார்ட்டியில். ஒரு நீச்சல் குளத்தில்.

அவள் அபாரமான அழகியாக இருந்தாள். மேலுதட்டின் இடது ஓரத்தில் ஒரு கடுகளவு மச்சம் இருந்தது. நல்ல திருத்தமான முழு உதடுகள். ஓவியங்களில் வரையப்படும் முழு உதடுகள் போல் இயற்கையிலேயே அமைந்திருந்த அவை பார்த்தவுடன் முத்தமிடத்தூண்டின. அவள் அணிந்திருந்த சிங்கிள் பீஸ் நீச்சலுடையில் பின் பக்கம் அகலமான திறப்பு இருந்தது. அவளது தண்டு வடம் கீழே துவங்கும் இடத்தில் இன்னொரு மச்சம் இருந்தது.

ஒரு பெண்ணுக்கு இவ்வளவு கவர்ச்சியாக மச்சங்கள் அமைய முடியுமா? அல்லது வெகு சாதாரண மச்சங்கள்



ஒரு பெண்ணின் உடலில் இவ்வளவு கவர்ச்சியாகக் காணப்படக் கூடுமா?

மீன் போல் நீந்தினாள். கரையேறித் துடைத்துக் கொண்டாள்.

அவளது எல்லாச் செயல்களிலும் ஒரு நாசூக்கு இருப்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

யவனா மயிலாப்பூரில் ஒரு சிக்கலான அலமேலு மங்காபுரத்தில் இருந்தாள். ஸ்ட்ரீட் ஹவுஸ்தான் என்றாலும் அந்த வீட்டின் முன்பகுதியில் இருந்த பத்தடி நிலத்தில் சில ரோஜாக்கள் பூத்திருந்தன. பவழமல்லி மரம் குடை விரித்து பவழ மல்லிகளைத் தரையெங்கும் மலர விட்டிருந்தது. ஒரு குல்மொஹர் மரம் நெருப்பு நிறத்தில் பூக்களை தினம் தினம் பிரசவித்துக் கொண்டிருந்தது. அந்த வீட்டையும் வீடியோவில்தான் பார்த்தான் திருநாவுக்கரசு.

யவனா ஒரு டிராவல்ஸில் ரிசப்ஷனிஸ்டாக இருந்தாள். பாஸ்போர்ட், விசா ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளும் இண்டர்நேஷனல் டிராவல்ஸ் கம்பெனி. இந்தியன் ரெயில்வே டிக்கெட்டுகள் வேண்டும் என்று போனால் கூர்க்காவே வாசலோடு திருப்பி அனுப்பி விடுவான். ஈஸ்ட் அண்ட் வெஸ்ட் என்று பெயர் கொண்டிருந்த அந்த டிராவல் ஆபீஸ் அண்ணாசாலையின் 'நடு சென்டரில்' அமைந்திருந்தது. முற்றிலும் ஏஸி. உள்ளே நுழைந்தால் கொஞ்சம் கூட வியர்க்காமல் அலங்காரம் கலையாமல் வெளியே வரலாம்.

யவனா அந்த ஆபீஸிற்குத் தான் காலை எட்டு மணிக்குப் புறப்பட்டு இரண்டு மணிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். அல்லது, இரண்டு மணிக்குப் புறப்பட்டு இரவு எட்டு மணிக்கு திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

திருநாவுக்கரசு எல்லாவிதங்களிலும் தயார் ஆகி விட்டான். வியாழக் கிழமையன்று அவன் யவனாவைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

வியாழக்கிழமைக்காக அவன் திக், திக் இதயத்துடன் காத்துக் கொண்டிருந்தான். அந்த வியாழக்கிழமை வருவதற்குள் நடுவில் அவன் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தேறிவிட்டது.

திருநாவுக்கரசு அண்ணா நகரில் ஒரு ப்ளாட் சிஸ்டத்தின் மூன்றாவது மாடியில் இருந்த ஒரு அபார்ட்மென்டில் தங்கியிருந்தான். அவனுக்கு உதவ என்று ஒரு ஆர்டர்லி இருந்தான். ஆர்டர்லி படிக்காதவன். கிராமத்திலிருந்து வரவழைக்கப்பட்டவன். இந்த மாதிரி சமையல் மற்றும் எடுபிடி வேலைகளைச் செய்வதற்காகவே சேர்த்துக் கொள்ளப்பட்டவன். அந்த ஆர்டலிதான் திருநாவுக்கரசுவின் சகல தேவைகளையும் கவனித்துக் கொண்டான்.

திருநாவுக்கரசு அந்த வீட்டில் ஒரு சர்தார்ஜியாகத் தன்னை மாற்றிக் கொண்டிருந்தான். தலைப்பாகை. முகத்தை முழுக்க மூடிய தாடி மற்றும் மீசை. தலைப்பாகை இல்லாத சமயத்தில் தலையில் ஒரு மயிர்க்கொண்டை காணப்படும். ஒரு முன்ஜாக்கிரதைதான். வீட்டு வாசலில் பிளாஸ்டிக் எனாமல் போர்டில் 'ஷைலேந்திர சிங், ஜர்னலிஸ்ட்' என்ற போர்டு பொருத்தப்பட்டிருந்தது.

பிளாட் சிஸ்டத்தின் இரண்டாவது மாடியில் ஒரு ஆர்.டி.3 ஆபீஸர் இருந்தார். காலைகளில் மொட்டை மாடிக்குச் செல்லும் போது இரண்டொரு முறை திருநாவுக்கரசை அவனுடைய தலைப்பாகை இன்றி பார்க்க நேரிட்டது.

மொட்டைமாடியில் உடற்பயிற்சி செய்யும் போது, திருநாவுக்கரசுவின் முகம் அடிக்கடி இடறியது. இந்த முகத்தை எங்கோ பார்த்திருக்கிறேனே. எங்கே?



திடீரென்று ஒரு காலையில் அவருக்கு நினைவு வந்துவிட்டது. எக்ஸர்சைஸ் வியர்வையுடன் மேலும் குப்பென்று வியர்வை பொங்கியது.

அந்த ஆளைப் பார்த்தால் வேணுபிரசாத் போல் தெரியவில்லை? இந்தியா முழுவதிலும் தேடப்பட்டு வரும் தீவிரவாதி.

அவசரம் அவசரமாகக் கீழே இறங்கினார்.

அது ஒரு செவ்வாய்க்கிழமை காலை நேரம். கீழே இறங்கும்போது ஷைலேந்திர சிங்கின் வீட்டுப் பக்கம் பார்வையைத் திருப்பினார். மூடி இருந்தது.

கதவு திறந்திருந்தால் கீழே இறங்கியே இருக்கமாட்டாரோ என்னவோ! கடந்தார். வீட்டுக்குப் போனவுடன் முதல் வேலையாக தனது செல்போனை எடுத்துக் கொண்டு அதே அரைடிராயர் பனியனுடன் கீழே இறங்கி அவருடைய ஜீப்பை எடுத்துக்கொண்டு போய் அண்ணா நகரில் ஒரு பூங்கா ஓரமாக நிறுத்தினார்.

சுற்றிலும் பார்த்துக் கொண்டார். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு செல்போனில் நம்பர் தட்டினார்.

மறுமுனையில் ட்ரிங், ட்ரிங் போய்க் கொண்டே இரந்தது.

'எடேன்.. எடேன்..'

எடுக்கப்பட்டது.

"எஸ்.பி. சாரா?" என்று கேட்டார்.

"ஆமா. என்ன ஷண்முகம் இவ்வளவு காலையில்?"

"சார். ஒரு முக்கியமான விஷயம். நீங்கள் என் ஆபீஸ் ரூமுக்கு வந்து ஒரு போட்டோவைக் காட்டினீர்களே."

"வேணுபிரசாத் படம்."

"யெஸ். அதேதான். அந்த ஆளுக்கு வேறு வேறு கெட்டப்பில் மேக்கப் போட்டால் எப்படியிருக்கும் என்று கம்ப்யூட்டரில் வரைந்து என்னிடம் பிரிண்ட் போட்டுக் கொடுத்தீர்கள். நினைவிருக்கிறதா?

"கம் டு தி பாயிண்ட் ஷண்முகம்."

"அந்த மாதிரி எந்த முகத்தையாவது பார்த்தால் உங்களிடம் தகவல் தெரிவிக்கச் சொன்னீர்களே.."

"அதற்கென்ன இப்போது?"

"அந்த வேணுபிரசாத் இப்போது நான் குடியிருக்கும் அபார்ட்மென்ட்டில் என் தலைக்கு மேல் இருக்கும் ப்ளாட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறான். ஷைலேந்தர் சிங் என்ற பெயரில்."

"வாட்?"

"யெஸ் சார். சத்தியம். நூறு சதவீதம் உண்மை நான் சொல்வது! நான் இப்போது வீட்டில் இருந்து கூட போன் பண்ணவில்லை. வெளியே ஒரு பார்க்கிற்கு வந்து பண்ணுகிறேன்."

எஸ்.பி.யிடம் இருந்து சிறிது நேரத்திற்குப் பதில் வரவே இல்லை.

"சார். எஸ்.பி. சார்."

"நீங்கள் சொல்வது உண்மையா ஷண்முகம்?" என்று எஸ்.பி.யின் குரல் செல்போனில் கேட்டது. அதில் லேசான நடுக்கமும் இருந்தது.

"ஆமாம் சார். ஷ்யூர் சார்."

"ஓ.கே. நீங்கள் ஒன்று செய்யுங்கள். உங்கள் வீட்டிற்குப் போங்கள் ஒரு சத்யநாராயணா பூஜைக்கு ஏற்பாடு



செய்யுங்கள். அந்தப் பூஜை செய்ய நான் என் ஆட்களுடன் வந்து சேர்கிறேன்... மற்ற விவரங்களை நேரில் வந்து சொல்கிறேன்..."

"ஓ.கே.. ஓ.கே..." என்று நடுங்கும் குரலில் சொல்லி விட்டு போன் லைனைத் துண்டித்தார் ஷண்முகம்.

காலை பதினோரு மணிக்கு சத்யநாராயணா பூஜை செய்வதற்காக மஞ்சள் வேட்டியை தார்ப்பாய்ச்சு ஸ்டைலில் கட்டிக் கொண்டு. மேலே மஞ்சள் துணியைப் போர்த்திக் கொண்டு முழுக்க முழுக்க மொட்டையடித்து சந்தனம் பூசிய எஸ்.பி.யும் அவரது ஆட்களும் வந்து சேர்ந்தார்கள். சத்யநாராயணா பூஜைக்காக அந்த பிளாட் சிஸ்டத்தில் இருந்த பதினாறு வீடுகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. ஒவ்வொரு ப்ளாட்டில் இருந்தும் ஆட்கள் வந்தனர். ஷைலேந்தர் சிங்கின் வீட்டிற்கும் ஒரு பட்டுப்பாவாடை கட்டிய பெண் குழந்தை போய் அழைத்தது. 'ஷைலேந்தர் மாமாவிற்கு என்னவோ அவசர வேலையாம். அதனால் அவர் வரமுடியவில்லை என்பதற்காக ஸாரி சொல்லச் சொன்னார்' என்று அந்த பட்டுப் பாவாடைக் குட்டி திரும்பி வந்து குழப்பமாக ஒரு பதில் சொல்லியது.

எஸ்.பி., ஷைலேந்தர் சிங் என்னும் வேணுபிரசாத் வரமாட்டான் என்று தான் எதிர்பார்த்தார்.

மற்ற ப்ளாட்களின் குடும்பத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பிரசாதம் தருவதாக ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்று எஸ்.பி. தன்னுடைய ஐடென்டிடி கார்டைக் காட்டினார்.

"நான் எஸ்.பி. மோகன சுந்தரம். நீங்கள் போலீசுக்காகவும், இந்தத் தேசத்திற்காகவும் ஒரு உதவி செய்ய

வேண்டும். இந்த ப்ளாட் ஸிஸ்டத்தை வெடிகுண்டு வைத்து வெடிக்கப்போவதாக ஒரு நியூர் வந்திருக்கிறது. அதனால் நீங்கள் இன்று ஒரு நாள் மட்டும் வீட்டை விட்டு வெளியே போய்விடுங்கள். உங்கள் குடும்பத்தார் யாரும் இருக்கக்கூடாது. ஒரு விஷயம் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வெளியே போய் உங்கள் குடும்பத்தார் யாரிடமும் இந்த ப்ளாட் சிஸ்டத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லக்கூடாது. நியூஸ் வெளியே வந்தால் இந்த ஏரியாவே பாதிக்கப்பட்டு விடும். அனாவசியக் குழப்பம் பீதி. வெடிகுண்டு என்று யாராவது ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் சொன்னாலும் சரி, மொத்தக் குடும்பத்தையும் அரெஸ்ட் பண்ணி உள்ளே வைத்து விடுவேன். தடா சட்டம், குண்டாஸ் ஆக்ட் என்று ஏதாவது புக் பண்ணி ஒரு வருஷம் வரைக்கும் ஜெயிலேயே வைத்திருக்க என்னால் முடியும். ஜெயிலில் என்ன மாதிரி ட்ரீட்மெண்ட் எல்லாம் இருக்கும் என்று நீங்கள் சினிமாக்களில் எல்லாம் பார்த்திருப்பீர்கள். ஸோ. பீ கேர்ஃபுல். மூச்சு விடக்கூடாது. என்ன?''

ஒவ்வொரு குடும்பத் தலைவன் முகத்திலும் உடனடியாக பீதி.

''ச்...ச்.. இந்த மாதிரி முகத்தை வைத்துக் கொண்டால் உங்கள் முகத்தைப் பார்த்தே என்னவோ விபரீதம் என்று மற்றவர்கள் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவார்கள் எனவே முகத்தை நார்மலாக வைத்திருங்கள். இன்றைக்கு ஒரு நாள் ராத்திரி மட்டும் நீங்கள் வெளியே போய் இருங்கள். வீட்டுக் கதவுகளைப் பூட்டாதீர்கள். இந்த ப்ளாட் சிஸ்டம் முழுக்க வீட்டைப் பூட்டி விட்டு வெளியேறி இருக்கிறது என வெளி ஆளுக்குத் தெரிந்தாலும் சந்தேகம் வரும். உங்கள் வீட்டுக்குள் இருக்கும்



பீரோக்களைப் பூட்டிக் கொள்ளுங்கள். ரொம்ப விலை மதிப்பான பொருள் என்றால் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். வெளியே யாரும் உறவுக்காரர்கள் இல்லையெனில் என்னிடம் இப்போதே சொல்லி விடுங்கள். ஹோட்டல் ரூம் ஏற்பாடு செய்து தங்க வைக்கிறேன்.''

எல்லாரும் ஒத்துக் கொண்டார்கள். சந்தேகம் வராத வகையில் ஒவ்வொரு குடும்பமாக அந்த ப்ளாட் சிஸ்டத்தை விட்டு வெளியேறியது.



# 13

இரவு நேரம். திருநாவுக்கரசு பால்கனி அருகே வந்து சேர்ந்தான். நின்றான். காற்றில் என்னவோ ஒரு நாற்றம். எட்டிப் பார்த்தான். பால்கனிக்கு நேர் கீழே ஒரு பெரும் குட்டை இருந்தது. சாக்கடை நீர் வந்து சேரும் குட்டை. நாற்றத்திற்கு அதுதான் காரணம். பிளாட்டில் இருக்கும் மற்ற அனைவருக்கும் நாற்றம் பழகியிருக்கக் கூடும். யாருக்கும் அது ஒரு இடையூறாகவே இருக்காது என்று தோன்றியது. மேலே நட்சத்திரங்கள். நிலா. தர்பார் நடந்து கொண்டிருந்த மாதிரி இருந்தது. அல்லாது போனால் வானக் கடலில் நிலா நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருக்க, நட்சத்திர சேடிப் பெண்கள் காவலுக்கு நிற்பது போலவும் பட்டது. மனம்தானே. எதையும். எப்படியும் சிந்தித்துப் பார்க்க அதனால் முடியும்.

யவனாவிடம் எப்படி நடந்து கொள்ளப் போகிறோம் என்று யோசித்தான். வியாழக்கிழமை தான் யவனா சிங்கப்பூரில் இருந்து திரும்பி வரப் போகிறாள்.

ரிசப்ஷனிஸ்டாக மட்டுமன்றி அவள் ஒரு கைடாகவும் வேலை பார்ப்பதால் சிங்கப்பூர் ட்ரீப். சிங்கப்பூரில் கைடாக வேலை செய்த நேரம் போக தீவிரவாதியின் காதலியாக என்ன செய்து கொண்டிருக்கிறாளோ!

ஏறக்குறைய அதே நேரத்தில் எஸ்.பி. மோகன சுந்தரம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். தன்னுடன் வந்திருந்தவர்களை எல்லாம் தெருவில் அங்கங்கே நிற்கச் செய்தார். அவர்களுடைய வேஷ்டிகளின் மடிப்பு மறைவில் துப்பாக்கி, சுலபமாக எடுத்துச் சுடும் வகையில் அவை வைக்கப்பட்டிருந்தன. தன்னோடு இருவரை அழைத்துக் கொண்டார். ஷைலேந்தர் சிங்கை எப்படி அணுக வேண்டும். எப்படி மடக்க வேண்டும் என்ற சகல விவரங்களையும் அவர் அளித்திருந்தார். அவர்களும் துப்பாக்கிகளின் ஸேஃப்டி காட்ச்களை ரிலீஸ் செய்து விட்டு ஒவ்வொரு படியாக மேலேறத் தொடங்கினார்கள்.

திருநாவுக்கரசு இன்னும் பால்கனியை விட்டு அசைய வில்லை. மேலே நிலவைக் காணவில்லை. கருப்பாய் ஒரு மேகம் தெரிந்தது. நிலா ஆடைமாற்றிக் கொண்டிருக் கலாம். தூரத்தில் தெரிந்த சாலையில் ஒரு நாய் ஓடியது. மரங்கள் அசையவில்லை. வெகு திடீரென்றுதான் அந்த அமைதி அவனுக்கு உறுத்தலாய் இருந்தது. அவனிருந்த பிளாட் சிஸ்டத்தில் அத்தனை பேரும் டி.வி. வைத் திருப்பவர்கள். மாலையானால் ஒவ்வொரு ப்ளாட் ஜன்னலில் இருந்தும் விதம் விதமான தொலைக்காட்சி சானல்களில் ஒலிகள் தப்பித்து வருவது வழக்கம்.

இன்றைக்கு ஏன் எந்த டி.வி.யின் சத்தமும் கேட்க வில்லை? ஸம்திங் ஸினிஸ்டர். கீழே எட்டிப் பார்த்தான். ஒன்றிரண்டு ப்ளாட்களில் இருந்து மின் விளக்கின் வெளிச்சம் வெளியே வருவது தெரிந்தாலும் அந்த



வெளிச்சத்தின் பின்னணியில் இருந்த மவுனமான மவுனம் உறுத்தியது. என்னவோ நடக்கப் போகிறது!

திருநாவுக்கரசு ப்ளாட்டின் மறுமுனைக்குச் சென்று அங்கிருந்து கீழே தெரிந்த சாலையைப் பார்த்தான். இருட்டில் ஒரு மொட்டைத்தலை தெரிந்தது. கொஞ்சம் கூர்ந்து பார்த்ததில் இன்னொரு மொட்டைத் தலை. அதோ அங்கே. இதோ இங்கே. சட்சட்டென்று அவனால் ஏழு மொட்டைத் தலைகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவர்கள் புத்திசாலித்தனம் குறைந்தவர்களாக இருந்தார் கள். அவ்வப்போது அவர்கள் முகம் திருப்பி திருநாவுக் கரசுவின் ப்ளாட் இருந்த திசையில் ஒருமுறை பார்த்துக் கொண்டார்கள். அந்த மொட்டைத் தலைகள் எல்லாம் தனக்காகத்தான் காத்திருக்கின்றன என்று தோன்றியது. டெலிவிஷன்கள் மவுனம் சாதிப்பது தன்னால்தான் என்று தோன்றியது.

எப்படியோ போலீஸ் டிபார்ட்மெண்ட் ஆசாமிகள் தன்னை வேணு பிரசாத்தாக நினைத்து விட்டிருக்கிறார்கள். தன்னைப் பிடிப்பதற்காக வலை விரித்திருக்கறிார்கள்.

என்ன செய்யலாம் என யோசிப்பதற்குள் காலிங் பெல்லின் விர் கேட்டது.

உள்ளே பாய்ந்தான். தனது ரிவால்வரை எடுத்துக் கொண்டான். ஸேஃப்டி காட்சை ரிலீஸ் செய்தான். தயார் நிலையில் வைத்துக் கொண்டான். அந்த ப்ளாட்டில் அலங்காரத்திற்காக ஒரு ஹைதராபாத்தின் நிஜாம் வீரன் சிலை ஒன்று இருந்தது. அதை இடது கையில் எடுத்துக் கொண்டான்.

''யார் அது?'' என்று ஹிந்தியில் அதட்டலாகக் கேட் டான்.

''சத்யநாராயணா பூஜா பிரஸாத் ஸாப்'' என்று வெளியில் இருந்து குரல் வந்தது.

அவன் தப்பிக்க வேண்டுமெனில் எப்படியும் கதவு திறந்துதான் வெளியேற வேண்டும். கதவைத் திறந்து அவர்களைத் தெரிந்து கொள்ளாதது போல் நடித்து தப்பிப்பது தவிர வேறு வழியில்லை.

கதவைத் திறப்பது என்று தீர்மானித்தான்.

கதவின் தாழ்ப்பாளை சத்தமின்றி நீக்கினான். நைட் லாட்ச் என்பதால் கொஞ்சம் கூட சத்தம் இல்லை.

''கதவு திறந்து இருக்கிறது. உள்ளே வரலாம்'' என்றான் ஹிந்தியில்.

அவர்கள் கதவைத் தள்ளித் திறந்தார்கள். மூன்று மொட்டைகள். ஒருவர் கையில் துப்பாக்கி இருந்தது. அவர் தான் தலைவராக இருக்கவேண்டும். மற்றவர்களிடம் துப்பாக்கி வெளிப்படையாகத் தெரியவில்லை.

''வேணுபிரசாத் யூ ஆர் அண்டர் அரெஸ்ட்'' என்றார் அந்த ஆசாமி.

திருநாவுக்கரசு சற்று நேரம் ஹிந்தியில் பேசினான். நான் சாதாரணமானவன் பத்திரிகைக்காரன். அமிர்தசரஸ் காரன். சத்யநாராயணா பூஜை பிரசாதம் என்று சொல்லிக் கதவைத் திறக்க வைத்து துப்பாக்கி நீட்டுவது என்ன நியாயம் என்று சரளமாகக் கேட்டான்.

அவனது ஹிந்தி புரியாமல் அவர்கள் தடுமாறிய நேரத் தில் திருநாவுக்கரசு சட்டென்று குனிந்து கீழே கிடந்த கார்ப்பெட்டை வாரி விட்டான். இருவர் விழுந்தார்கள். அதில் துப்பாக்கி வைத்திருந்தவரும் ஒருவர். திருநாவுக் கரசு துப்பாக்கியைத் தட்டிவிட்டான். அவர்கள் புரண்



டார்கள். திருநாவுக்கரசின் ஆர்டர்லி சமையல் அறையில் இருந்து எட்டிப் பார்த்துவிட்டு அந்த ரகளையைக்கண்டு, திருநாவுக்கரசின் கையில் இருந்த சிலையைப் பிடுங்கி, உருண்டு, எழப்பார்த்தவன் மண்டையில் ஓரடி அடிக்க மறுபடி கீழே விழுந்து ப்ளாக்-அவுட் ஆனான். இன் னொருவன் வேஷ்டியின் மடிப்பிலிருந்து துப்பாக்கி எடுக்க முயன்றதை ஆர்டர்லி பார்த்துவிட்டான். அவசர அவசரமாக அணுகி அவன் தலையிலும் ஒன்று போட் டான். அவனும் மயங்கினான். மிச்சம் இருந்தது ஒரே ஆள். சற்று வயதான ஆள். துப்பாக்கியைத் தவற விட்டவர். அவர் கீழே விழுந்து சுதாரித்து எழுவதற்குள் திருநாவுக் கரசும், ஆர்ட்லியும் போட்டு அவரை மிதித்தார்கள்.

ஆர்டர்லி ஓரளவு பயிற்சி பெற்றவனாக இருந்தான். இந்த மாதிரியான தருணத்தை எதிர்நோக்க வேண்டி யிருக்கும் என தயாராக இருந்தது போல் இருந்தான்.

ஆர்டர்லி சிலையால் அவரை அடித்தான். திருநாவுக் கரசு துப்பாக்கியின் பின் பக்கத்தால் ஓரடி அடித்தான். அவ்வளவுதான். அந்த ஆளும் மயங்கி விழுந்தார்.

திருநாவுக்கரசு தன் ப்ளாட்டை ஒருமுறை சர்வே செய்தான். இனி இங்கே வசிக்க முடியாது என்ற வரைக் கும் அவனுக்குத் தெரிந்திருந்தது.

மெதுவாகக் கதவை மேலும் திறந்து மெல்ல எட்டிப் பார்த்தான். லிப்டின் கம்பிக்கதவுகளை மூடிவிட்டு ஒரு மொட்டை இந்த ப்ளாட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது.

''இன்னொரு ஆள் வருகிறான். கமான். கதவோரம் ஒதுங்கு.''

ஆர்டர்லி ஒதுங்கினான்.

இருவரும் கதவுகளுக்கு இரு புறங்களிலும் காத்திருக்க அவர்களை நோக்கி வந்த காலடிச் சத்தம் டெஸிபல் மாறியது. அதிகரித்தது. பின் தயங்கியது. நின்றது.

திறந்திருந்த கதவு. மவுனமான வரவேற்பு. என்ன நடந்தது என்ற சந்தேகம் வந்திருக்கலாம்.

''எஸ்.பி.சார்'' என்று அழைத்தான்.

''ஓ... கீழே விழுந்து கிடப்பவர் சூப்பிரன்டென்டன்ட் ஆஃப் போலீசா? பாவம். பின்னால் விவரம் தெரிந்து திருநாவுக்கரசின் கருணையற்ற தாக்குதல்களுக்காக மன்னிக்கட்டும்.'

வெளியே இருந்தவன் தபதபவென ஓடும் சத்தம் கேட்டது.

திருநாவுக்கரசு வெளியில் வந்து ஓடுபவனின் முழங்காலைக் குறிவைத்துச் சுட்டான். அவன் திடீரென ஒரு துள்ளு துள்ளி விழுந்தான். உருண்டான்.

திருநாவுக்கரசு திறந்திருந்த லிப்டில் நுழைந்தான். ஆர்டர்லி பாய்ந்தான். கதவை இழுத்துச் சாத்திவிட்டு கிரவுண்ட் ப்ளோருக்கு இறங்க, கம்பிகளின் ஊடே மூன்று பேர் லிப்ட்டை நோக்கி ஓடி வருவது தெரிந்தது.

திருநாவுக்கரசு கதவைத் திறக்காமல் லிப்டின் பட்டனைத் தட்டினான். லிப்ட் முதல் மாடிக்குச் சென்று நின்றது. இருவர் லிப்ட் அருகில். மறுபடியும் கிரவுண்ட் ப்ளோர் பட்டன் அழுத்திக் கீழிறங்க கீழே இருந்த இருவர் மேலேறிக் கொண்டிருந்தார்கள் - படிகளின் வழியே.

இன்னும் இருவர் லிப்ட் திறக்கக் காத்திருந்தார்கள்.

'கடவுளே, என்னை மன்னியும்.'



திருநாவுக்கரசு யோசிக்காமல் சுட்டான். முதல் குண்டு ஒருவனின் விரல்களைத் தொட்டு அவனிடம் இருந்து துப்பாக்கியை எகிற வைத்தது. இன்னொரு குண்டு காற்றைக் கிழித்தது. துப்பாக்கி வைத்திருந்த இன்னொருவன் ட்ரிக்கரை அழுத்தினான்.

க்ளிக். க்ளிக். க்ளிக்.

குண்டு வெளிப்படவில்லை. லோட் செய்யாத அல்லது குண்டை நிரப்ப மறந்து விடப்பட்ட துப்பாக்கி. திருநாவுக்கரசுவிற்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது.

துப்பாக்கி இயங்க மறுத்ததால் அவன் நிச்சயம் பயந்துவிட்டான்.

''ஐ'ல் ஷூட் யூ... பாஸ்டர்ட்.' திருநாவுக்கரசு மறுபடி சுட்டான்.

அவர்கள் இருவரும் திறந்திருந்த இரண்டு ப்ளாட்களில் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்கள்.

அவர்களுடைய குடும்ப நினைவு வந்திருக்கும். வேணுபிரசாத்தா, குடும்பமா என்று தங்களுக்குள் கேட்டு, குடும்பம்தான் என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்திருந்தார்கள்.

திருநாவுக்கரசு ஓடினான். வாசலில் அவனுக்கென இருந்த கார் நின்றது. ஆர்டர்லி அவனுக்கு முன் அதில் பாய்ந்து ஸ்டார்ட் செய்திருந்தான். அவனது டிராயரில் எப்போதுமே கார்ச்சாவி வைத்திருப்பான். திருநாவுக்கரசு பாய்ந்தான்.

கார் காம்பவுண்ட் கேட்டை இடித்தது. அது திறந்து பைத்தியக்காரத்தனமாக சாலையில் ஊஞ்சலாடி மறுபடி திரும்புவதற்குள் கார் சாலைக்கு வந்துவிட்டது.

ஆர்டர்லி ஆக்ஸிலேட்டரை மிதித்தான்.

காருக்குப் பின்னால் சில துப்பாக்கிகள் ஒப்புக்குச் சப்பாணியாய் வெடித்தன.

# 14

''ஐ'ம் ஸாரி'' என்றார் பாரதிகுமார். ''ஆனால் இது போல் நடக்கும் என்று எதிர்பார்த்ததுதான். வேணுபிரசாத் போலீஸ்காரர்களுக்கிடையே அவ்வளவு பிரசித்தம். போலீஸ்காரர்களே உன்னை வேணுபிரசாத் என்று நம்புகிறார்களே... ஐ'ம் ஹாப்பி.''

''ஐயோ. ஐயோ. நான் ஒரு போலீஸ்காரனின் முழங்கால் சில்லைப் பெயர்த்திருக்கிறேன். இன்னொரு போலீஸ்கார னின் விரல்கள் சிதறியிருக்கின்றன. எனக்கு இந்த வன் முறை பிடிக்கவில்லை. நான் யாரையும் கொல்ல விரும்ப வில்லை.''

''திரு. அதுதான் ஸாரி சொன்னேனே. வேணுபிரசாத் பிடிபடுவதற்குள் ஒன்றிரண்டு போலீஸ்காரர்களோ, சிபிஐ ஆட்களோ, இறந்தால் பரவாயில்லை என்று தானே சொன்னேன். அவன் பிடிபடாவிட்டால் எத்தனை அப் பாவி மக்கள் இறந்து போகிறார்கள் என்று யோசித்துப்பார். தேசமா, டிபார்ட்மென்டா? உனக்கு வேறு ஒரு இடம் ஒதுக்கியாகி விட்டது. பழைய வீடு பற்றி கவலைப் படாதே. நீ வியாழக்கிழமை சிங்கத்தின் வாயில் நுழையப் போகிறாய். அதற்கு நீ உன்னைத் தயார்ப்படுத்திக் கொள்.''

''பெண் சிங்கத்தின் வாயில்.''



அதில் இருந்த மெல்லிய ஹாஸ்யத்தை உணர்ந்து பாரதிகுமார் அட்டகாசமாகச் சிரித்தார். ''பெஸ்ட் ஆஃப் லக்'' என்றார். விலகிவிட்டார்.

வியாழக்கிழமை. திருநாவுக்கரசு அதே சர்தார்ஜியின் வேடத்தில் இருந்தான். யவனா சிங்கப்பூரில் இருந்து வந்துவிட்டாள் என்ற தகவல் கசிந்து விட்டது. அவனுக் கென்று கொடுக்கப்பட்டிருந்த காரில், அவன் யவனாவின் அலுவலகமான ஈஸ்ட் அண்ட் வெஸ்டின் முகப்பு வாயில் கண்களுக்குத் தெரியும் ஓரிடத்தில் இருந்து, கவனித்துக் கொண்டிருந்தான். யவனாவிற்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதாஎன முதலில் தெரிய வேண்டும்.

யவனா அவளது அலுவலகத்தில் இருந்து வெளிப்பட் டாள். பூனை நடை என்பது அவளது இயல்பாக இருந்தது. அனாயாசமான யாரையும் மயக்கும் ஒரு நடை நடந்தாள். கார் பார்க்கிங்கில் தேடினாள். அவளது மாருதியை அடை யாளம் கண்டு புன்னகை ததும்ப காரின் கதவைத் திறந் தாள். ஏறினாள். ரிவார்ஸில் வந்து, கியர் மாற்றி, சக்கென்று ஒரு அம்பு போல் புறப்பட்டு அவுட் - கேட் வழியாக வெளிப்பட்டு போக்குவரத்தின் மூச்சுத்திணறலில் மிக இயல்பாகக் கலந்தாள். எந்தக் காரும் அவள் காரைப் பின் தொடரவில்லை. அவன் காரைக் கிளப்பினான். மாருதி அவனைக் கடந்தபோது சட்டென்று அதன் வாலைப் பிடித் துக் கொண்டான். முன்புறம் சென்ற மாருதியில் அவளைத் தவிர யாருமில்லை. கார் கடக்கும் போது, மாருதியில் இருந்து இசை சிதறியது. ஏதோ ஒரு காதல் ஆல்பம். அந்த இசையைக் கேட்டபடி அவள் காரைச் செலுத்தினாள்.

அவன் சாவதானமாக அவள் காரைப் பின் தொடர்ந் தான். போகும் வழியில் மாருதி ஒரு சூப்பர் டிபார்ட்

மென்ட் ஸ்டோர் வாசலில் நின்றது. இறங்கி உள்ளே போனாள். அந்த டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸிற்கு இன்னொரு வாசல் இல்லை. அவள் இந்த வழியாகத்தான் வரவேண்டும். இருந்தும் உள்ளே அவள் என்ன வாங்குகிறாள் என்பதைப் பார்க்க ஆவலாக இருந்தது. உள்ளே போனான்.

அவள் ஒரு ஸானிடரி நாப்கினைப் பொறுக்கினாள். ச்சே. அதன்பின் உடனடியாகத் தயாராகக் கூடிய இரண்டு ரெடிமேட் ஃபுட் பாக்கெட்டுகளை எடுத்துக் கொண்டாள். அகர்பத்தி வாங்கின்னாள். கேரள ஸாண்டல்வுட்.

பில் போட்டாள். கிரெடிட் கார்டு நீட்டுவாள் என்று எதிர்பார்த்தான். இல்லை. ஹாட் - கேஷ். புத்திசாலி. கிரெடிட் கார்டு இருந்தால் நிச்சயம் ஏதாவது ஒரு கணக்கில் தன்னைப் பற்றிய செய்திகளை இடம் பெறச் செய்ய வேண்டும். தவிர்க்கிறாள்.

வெளியே வந்தாள். காரைக் கிளப்பினாள்.

அலமேலு மங்காபுரத்தில் நுழையும் பிரதான சாலை வரை காரில் பின் தொடர்ந்தான். அதற்கு மேல் பின் தொடர்ந்தால் நிச்சயம் தெரிந்துவிடும். காரை மெயின் ரோடில் ஒரு குல்மொஹர் மரத்தின் கீழ் நிறுத்தினான்.

சுற்றுமுற்றும் பார்த்தான். இருள் கவிழ்ந்து கொண் டிருந்தது. மக்கள் எல்லாம் சில் - ஹவுட் உருவங்களாகத் தெரிந்தார்கள். எனவே அவன் அந்த நேரத்தில் இறங்கி னால் யாரும் அவனை அடையாளம் காண முடியாது. இறங்கினான்.

நடந்தான். யவனாவின் வீட்டிற்குப் போகுமுன் என் னென்ன செய்யவேண்டும் என்று யோசித்து, பாக்கெட் டில் இருந்து ஒரு சூயிங்கம் பாக்கெட்டை எடுத்துப்



பிரித்து சூயிங்கம் ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு மெல்லத் தொடங்கினான். தலைமுடியைக் கோதி விடும் மானரிசம் அவள் வீட்டுக்குப் போன பின் தலைப் பாகையைக் கழற்றிய பின் செயல்படுத்த வேண்டிய ஒன்று.

வீடுகளில் விளக்குகள் ஒளிரத் தொடங்கி இருந்தன.
தமிழ் சீரியல்களில் பெண்கள் அழத் தொடங்கி இருந்
தார்கள். சில வீடுகளில் இருந்து ஊதுவத்தி வாசனை.

யவனாவின் வீட்டு வாசல் அருகே போனான். யோசித்து
காம்பவுண்ட் கேட்டின் கொக்கியை நீக்கிச் சத்தம் போடா
மல் திறந்தான். உள்ளே நுழைந்தான். கார் அப்போதுதான்
வந்திருந்தது என்பதற்கு அடையாளமாக சூடாக
இருந்தது.

வாசல் கதவில் ஒரு பூட்டு தொங்கியது. அப்படி
யானால் அவள் இன்னும் வீட்டிற்குள் நுழையவில்லையா?
சட்டென்று அவன் பதுங்கி அமர்ந்தான். பக்கத்தில்
எங்கேயோ தான் போயிருக்க வேண்டும். எங்கே? எங்கே
என்றாலும் இப்போது வந்து விடக் கூடும். பதுங்கியவுடன்
அவளைப் பார்த்தான். சாலையில் இடது பக்கத்திலிருந்து
வந்தாள். ஸாரிதான் அணிந்திருந்தாள். நிதானமாக, பதற்ற
மில்லாமல், அழகாக, ஒயிலாக நடந்து வந்து கொண்டிருந்
தாள். அவள் மட்டும் அதுதான் இப்போது மிக முக்கியம்.
அவளும் கொக்கி நீக்கி. செடிகளுக்கிடையில் நடந்து
அவன் இருப்பதை உணராமல் கதவைத் திறந்தாள்.
பூட்டைப் பூட்டி வெளியிலேயே மாட்டினாள். உள்ளே
நுழைந்தாள். கதவைச் சார்த்தினாள்.

அவன் எழுந்தான். வாசலை அடைந்தான். நின்று
கவனித்தான். உள்ளே இருந்து வேறு எந்தப் பேச்சுக்

குரலும் கேட்கவில்லை. ஏதோ ஒரு பாட்டின் வரிகள் ஒலித்தன. கர்நாடக சங்கீதம் ஏதோ ஒரு பாட்டின் வரிகள் ஒலித்தன. கர்நாடக சங்கீதம். பாட்டு மலையாளத்தில் எழுதப்பட்ட சாத்தியம் போல் தோன்றியது.

கதவைத் தட்டினான்.

''கதவு திறந்திருக்கிறது'' என்று பதில் வந்தது.

கதவைத் தள்ளித் திறந்தான்.

யவனா டிரஸ்ஸிங் டேபிள் அருகில் அமர்ந்து இமை களைத் தீற்றிக் கொண்டிருந்தாள். அவள் மேக்கப்பைக் கலைத்துக் கொண்டிருந்தாள். கண்ணாடி வழியாகத் திறந்த கதவையும், வந்து நின்ற சர்தார்ஜி திருநாவுக் கரசையும் பார்த்தாள்.

''ஹூ இஸ் இட்?'' என்றாள்.

திருநாவுக்கரசு கதவைக் காலால் தள்ளி மூடினான்.

''என்னை உனக்குத் தெரியும். மிக நன்றாகத் தெரியும். அங்குலம் அங்குலமாகத் தெரியும்'' என்றான்.

யவனா உடலைத் திருப்பவில்லை. கண்ணாடியி லேயே திருநாவுக்கரசின் முகத்தைப் பார்த்தாள். திருநாவுக் கரசை வேணுபிரசாத் என்று நினைத்தாளா அல்லது திருநாவுக்கரசை என்று நினைத்தாளா என்று அவனுக்குத் தெரியவில்லை. திருநாவுக்கரசு என எப்படி நினைக்க முடியும்? சர்தார்ஜி யாரோ என்றுதான் அதிக பட்சம் யோசிக்க முடியும்.

அவன் கதவைத் தாள் போட்டான்.

''ஏன் கதவை சாத்துகிறீர்கள்?''

அவன் அருகே சென்றான். ''யவனா. உன் உடம்பு அபாரமான வளைவுகள் கொண்ட அற்புதமான படைப்பு.



அதை நான் துன்புறுத்த வேண்டிய அவசியம் ஏற்படக் கூடாது'' என்றான்.

''வாட்ஸ் ஆல் திஸ்?'' என்றாள். குரலில் பயம் இல்லை. நன்கு பயிற்சி பெற்றவள்.

''ஷ். நோ சவுண்ட் நத்திங். மெதுவாகப் பேசு. உன்னை இப்போதே இங்கேயே கொன்று போட முடியும். சொல். உன் ஆள் எங்கே?''

''என் ஆளா? வாட் டூ யூ மீன்?'' அவள் கண்களில் நிச்சயம் ஒரு மின்னல் தெரிந்தது. திருநாவுக்கரசு சூயிங்கம் மெல்லுவதை நிறுத்தாமல், சட்டென்று அவள் தலை முடியைப் பற்றினான்.

''வேணுபிரசாத்? எங்கே சொல்? எவ்வளவு நாள் ஒளிய முடியும். நீ இல்லாவிட்டால் இன்றைக்கு உன் உடல் ஆயிரம் ஊசிகளால் குத்தப்பட்டு லட்சம் ரத்தத்துளிகளை உறிஞ்சி எடுக்கும்...''

''எனக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே புரியவில்லை'' என்றாள்.

அவளது ஒரு கையைப் பிடித்து வளைத்தான். அவளது இன்னொரு கையை தனது இரு கால்களுக்கிடையே இருக்கமாகப் பிடித்தான். அவள் அவ்வளவு அண்மையில் மெத் என்று இருந்தாள். நல்ல இங்கிலீஷ் வாசனையுடன் இருந்தாள்.

''சொல். எங்கே வேணுபிரசாத்?''

அவள் ''சொல்கிறேன்'' என்றாள். ''கொஞ்சம் சுதந்திர மாக விட்டால்தானே பேச முடியும். என் கையை முறுக்கிக் கொண்டிருப்பதில் எனக்கு எவ்வளவு வலிக்கிறது தெரியுமா?'' என்று கொஞ்சலாகப் பேசினாள்.

அவள் கையை லேசாக விடுவித்தான்.

அவள் சட்டென்று அவனது தலைப்பாகையைத் தட்டி விட்டாள். விட்டவள் அவன் முகம் பார்த்ததும் சிரித்தாள்.

"ச்சீ... கையை விடுங்கள். எனக்குத் தெரியாதா. நீங்கள் யாரென்று?" என்றாள்.

திருநாவுக்கரசு விலகிச் சென்று அமர்ந்து தன் தலை முடியைக் கோதிக் கொண்டான்.

"கண்டு பிடித்து விட்டாயா?"

"பின்னே? என்னை இவ்வளவு முரட்டுத்தனமாகக் கையாளுவதற்கு உங்களை விட்டால் வேறு யாராம்? எதற்காக இவ்வளவு ரிஸ்க் எடுத்து வந்தீர்கள். மெசேஜ் கொடுத்திருந்தால் சேர மண்டலத்திற்கு வந்திருப்பேன் இல்லை?" என்றாள்.

சேரமண்டலம் வாஹ்றே வாஹ்! அங்கே வேணு பிரசாத் வருவான். வருகிறான். அல்லது வேணுபிரசாத்தின் இடம் அதுவாக இருக்க வேண்டும்.

திருநாவுக்கரசு தன் சந்தோஷத்தை வெளியில் காட்டிக் கொண்டால், காதலியைப் பார்த்த காதலனின் சிரிப்பு என்றுதான் யவனா நினைப்பாள்.

வெளிப்படையாக சந்தோஷத்தைக் காண்பித்தான்.

"உன்னைப் பார்த்து நாளாகி விட்டதல்லவா? மேலும் என் கண்மணியைக் கொஞ்சி ரொம்ப நாளாகி விட்டதல்லவா?"

"மை டியர் சார். உங்கள் தவிப்பு எனக்குப் புரிகிறது. ஆனால் இன்றைக்கு எதற்கும் சான்ஸ் இல்லை. ஸோ, மூன்று நாள் கழித்து அதாவது ஞாயிறு நான் சேர மண்டலம் வருகிறேன். நானே சமைக்கிறேன். அன்றைக்குத் தான் எதுவும்" என்றாள். "நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். உடனே புறப்படுங்கள். என்ன சர்தார்ஜி வேஷம் போட்டாலும் என்ன இருட்டென்றாலும், உங்களை யாராவது கண்டு பிடித்து விடுவார்களோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள்.



"ஓகே. நீ சொல்கிறபடி..." என்று அவன் வாசலைப் பார்த்து நடந்தான்.

"ஒன் மினிட்" என்று அவள் குரல் பின்னால் கேட்டது.

திரும்பினான். அதிர்ந்தான்.

காரணம், அவள் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. அது அவனைக் குறி வைத்துக் கொண்டிருந்தது. யவனா அதன் ஸேஃப்டி காட்சை ரிலீஸ் செய்தாள்.

"ஏய்... என்ன இது?" என அதிர்ந்து போய்க் கேட்டான்.

"துப்பாக்கி. நீமூவிடம் கேட்டிருந்தீர்களாமே. அவன் தான் உங்களிடம் கொடுக்கச் சொன்னான்" என்று அவள் துப்பாக்கியை வீசினாள். அவன் அதைப் பற்றினான்.

"குட் நைட்" என்றான்.

"வேணு. இந்த சர்தார்ஜி வேஷம் உங்களுக்கு நன்றாகவே இல்லை. வழக்கம் போல் சிலுவை மாலையுடன், ஜீசஸ் க்ரைஸ்டின் விசுவாசியான பாதிரியார் போலவே இருங்கள். அந்த டிரஸ்ஸில்தான் நான் உங்களை இன்னும் நெருக்கமாக டீல் பண்ணுகிறேன்" என்றாள்.

"ஓகே டியர்" என்றான் திருநாவுக்கரசு.

சரேல் என அந்த வீட்டில் இருந்து வெளியேறினான்.

# 15



ஞாயிற்றுக்கிழமை அன்று யவனா வேணு பிர சாத்தைச் சந்திக்க சேரமண்டலத்திற்கு வரப்போகிறான் என்ற செய்தி பாரதிகுமாருக்கு மஹா ஆனந்தத்தை அளித்தது. ஞாயிறு வரை காத்திருந்து மறுபடி யவனா வின் முகத்தில் விழிப்பதில் அர்த்தம் இல்லை. சேர மண்டலத்தில் பாதிரியார் வேஷத்தில் வேணுபிரசாத் தங்கியிருந்தால் உடனே அவனைச் சுற்றி வளைத்துப் பிடித்து விடலாம் என்பது அவர் திட்டம்.

அன்றைக்கு இரவே சேரமண்டலத்திற்கு ஒரு படையோடு போவது என்று பாரதிகுமார் தீர்மானித்தார். திருநாவுக்கரசு குறுக்கிட்டான்.

"நான் ஒன்று சொல்லலாமா சார்?"

"கமான் ஷூட்."

"நீங்கள் ரிட்டயர்ட் சி.பி.ஐ. ஆபீசர்! பதவியில் இல்லாதவர். உங்கள் திட்டங்களை அசோக்கும், நந்துவும் உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தால் அதில் நியாயமே இல்லை. அவர்கள் வேறு விதமாகத் திட்டம் போடக்கூடும். அஷோக்கிடமும், நந்துவிடமும் இந்த விஷயத்தைச் சொன்னால் அது யார் மூலமாவது கசிந்து வேணுபிரசாத்தை எட்டி அவன் தப்பித்துப் போய் விடவும் சான்ஸ் இருக்கிறது. எனவே அங்கே படையோடு போக வேண்டாம். நான் முதலில் போகிறேன். சேரமண்டலத்தில் அவன் இருக்கும் இடத்தை ரகசியமாகக் கண்காணிக்கிறேன். வேணுபிரசாத் அங்கே



பதுங்கி இருந்தால் நான் உங்களுக்கு செல்போனில் தகவல் கொடுக்கிறேன். யாருக்கும் யோசிக்கக்கூட அவகாசம் கொடுக்காமல் உடனடியாகப் படையோடு புறப்பட்டு வந்து நீங்கள் அவனைக் கைது செய்யலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று தன் யோசனையைச் சொன்னான் திருநாவுக்கரசு.

பாரதிகுமார் சிந்தித்தார். தலையசைத்தார்.

அன்று இரவு. திருநாவுக்கரசு பாதிரியார் வேஷம் போட்டுக் கொள்ள அவனுக்கு சகல பொருட்களையும் கொண்டு வந்து கொடுத்தான் ஆர்டர்லி. சேரமண்டலம் என்பது ஸ்ரீபெரும்புதூர் தாண்டி, சுங்குவார் சத்திரம் போகும் வழியில் இடது பக்கம் இருக்கும் ஒரு சின்னக் கிராமம் என்பது ஏற்கனவே பல பத்திரிகைகளில் வெளி யான செய்தி. கேரளாவின் கைவினைக் கலைஞர்களும், கதகளி நாட்டியக்காரர்களும் ஓவியர்களும் ஒன்று சேர்ந்து உருவாக்கிய ஒரு கிராமம். அவர்கள் அங்கே வந்து சின்னச் சின்ன அழகான வீடுகள் குறைந்த செலவில் அமைத்து ஒரு மாதிரி கேரள கிராமத்தை உருவாக்கி இருந்தார்கள். அவர்கள் வீடுகளில் ஓடுகளும், மரங்களும் அதிகம் பங்கேற்று இருந்தன.

அந்தக் கிராமத்திற்கு நுழைய ஓர் அலங்கார நுழை வாயில் இருக்க அந்த நுழைவாயில் அருகே நான் ஒரு காரில் இருந்து உதிர்த்து விடப்பட்டேன். செல்போன் துப்பாக்கி எல்லாம் அங்கியில் இரண்டு பாக்கெட்டுகளில் இருந்தது அல்லது இருந்தன.

கிராமம்தான். சின்னதாக சளசள சத்தத்துடன் செயற்கை ஓடை ஒன்று நிலா வெளிச்சத்தில் பாய்ந்து கொண் டிருந்தது. தூரத்தில் ஒரு மேடையமைத்துக் கதகளி

நாட்டிய நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்க, அவன் அங்கங்கே இறைத்து விட்டவை போல் இருந்த சின்னச் சின்ன வீடுகளைப் பார்த்தான்.

இவற்றில் எங்கே அந்த வேணுபிரசாத் தங்கியிருக்கக் கூடும்?

என்ன முட்டாள்தனம் இது? யவனாவிடமே இன்னும் கொஞ்சம் பேசி எந்த வீட்டில் காத்திருக்க வேண்டும் என்பதையும் தெரிந்து வந்திருக்கலாம்.

எதிரில் திடீரென்று அய்யனார் போல் ஒருவன் முளைத்தான். அபார உயரம். திருநாவுக்கரசுவிற்குச் சட்டென்று மாட்டிக் கொண்ட ஓர் உணர்வு வந்தது. சட்டென்று பாக்கெட்டில் கை நுழைத்துத் துப்பாக்கியைப் பற்றினான்.

வந்தவன் ''குட் ஈவினிங் ஃபாதர்'' என்றான். பேச்சில் மலையாள வாசனை, ''என்ன இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள்?'' நீங்கள் வரப் போவதாக எப்போதும் தகவல் கொடுப்பது போல் கொடுத்திருந்தால் நான் உங்களுடைய வீட்டை சுத்தம் செய்து கொண்டிருப்பேனே?'' என்றான்.

வேணுபிரசாத்திற்கு மலையாளம் தெரியும்.

திருநாவுக்கரசு கடற்படையில் இருந்ததால் அவனுக்கும் மலையாளம் தெரியும்.

''அது பரவாயில்லை ஜீஸஸ்'' என்றான் திருநாவுக்கரசு.

''ஐயோ ஃபாதர். என் பேர் ஜீஸஸ் இல்லை. மாதவன். திடீரென்று என்னை ஜீஸஸ் ஆக்கி விட்டீர்களே. ஃபாதர்.''

''மாதவன் உனக்கு என்ன பெயராக வேண்டுமாகவும் இருக்கட்டும். ஆனால் எல்லோருமே கடவுளர்கள் தான்.



அதனால் உன்னை ஜீஸஸ் என்று சொல்லிவிட்டேன். ஒரு சின்ன உதவி மாதவன். காலில் சரியான அடி ஒன்று பட்டுக் கொண்டு விட்டேன். நான் விந்தி விந்தி வந்ததை இருட்டில் நீ கவனித்திருக்க மாட்டாய். என் இடம் வரைக்கும் கொஞ்சம் தாங்கிக் கூட்டிப் போய் விட்டு விடு. டிராமா பார்ப்பவர்கள் யாரையும் கூப்பிட்டு தொந்தரவு செய்யாதே. உன் தோளைப் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான்.

மாதவன் பதறினான். அடிபட்ட இடத்தைப் பார்த்து சிகிச்சை செய்ய வேண்டும் என்றான். வெறும் ரத்தக் கட்டுதான் என்றதற்கு மசாஜ் செய்யும் சில பெண்களை வீட்டுக்கு அனுப்புகிறேன் என்றான். ஃபாதர் வீட்டிற்குப் பெண்கள், அதுவும் மசாஜ் செய்ய, திருநாவுக்கரசுவிற்கு சிரிப்பாக இருந்தது.

''நான் சமாளித்துக் கொள்வேன். என்னைக் கொண்டு போய் விட்டு விடு போதும்'' என்றான்.

வடக்கு மூலையில் ஓடையின் துவக்கத்தை அடுத்து இருந்த ஒரு வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்துக் கதவைத் திறந்து உள்ளே அனுப்பி விட்டு விலகினான் மாதவன்.

திருநாவுக்கரசு அவன் போனதும் கதவைச் சாத்தினான். குட்டு வெளிப்படவில்லை என்பது ஆறுதலாக இருந்தது. அதே நேரம் இதயத்தில் ஒரு பக், பக்கும் இருந்தது. வேணுபிரசாத் இங்கே வருவான். இப்போது வரவில்லை. ஞாயிறு அவன் வருவான் என எதிர்பார்த்து யவனா வரக்கூடும். வேணுபிரசாத் இங்கே இப்போதும் இல்லை. ஞாயிறு அன்று வரப்போவதில்லை. அப்படியானால் அவன் எப்போது வருவான் என்று பாரதி குமாரிடம் சொல்வது. பாதிரியார் வேஷத்தில் இங்கே

வருவான் என்பதால் அவன் வரும்போது அவனைப் பிடிக்க பாரதிகுமாரின் ஆட்கள் இங்கே கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். இது சாத்தியமா? யாருக்கும் தெரியாமல் இந்த அந்நிய மாநில கிராமத்தில் தமிழ் முகங்கள் நுழைந்து தங்குவது முடியுமா?

திருநாவுக்கரசு தான் இருந்த இடத்தை மெல்ல ஆராயத் தொடங்கினான். அந்த அறை எளிமையாக இருந்தது. சிமெண்ட், கல் எல்லாம் வைத்துக் கட்டப்படாமல் மண், சின்னச் சின்ன செங்கற்கள் என கட்டப்பட்டிருந்தது. ஜன்னலுக்கு மரத்தாலான கிரில்கள், மேலே ஓடு. கப்-போர்டு எல்லாம் கூட மண்ணால் கட்டப்பட்டு மெழுகப்பட்டு மரப்பலகைகள் செருகப்பட்டு இருந்தன. தேங்காய் நார் மிதியடிகள், தேங்காய் நார் பொம்மைகள் என்று அந்த வீட்டின் பெரும்பாலான பொருட்கள் தென்னை மரத்தின் மிச்சங்களைக் கொண்டு செய்யப்பட் டிருந்தன. கரண்டிகள் எல்லாம் மூங்கில் பட்டைகளில் செருகப்பட்ட கொட்டாங்குச்சிகள். மண் சட்டிகள். மண் குடம் அந்த இடத்தின் எளிமை திருநாவுக்கரசுவிற்குத் திகைப்பைக் கொடுத்தது. சிபிஐயின் கண்களில் விரலை விட்டு ஆட்டும். அகில இந்தியாவையும் நடுங்க வைக் கும் தீவிரவாதியான வேணுபிரசாத் வந்து தங்கியிருக்கும் இடமா இது? அவனிடம் இருப்பதாகச் சொல்லப்படும் பணம் எத்தனை கோடி ரூபாய். அவ்வப்போது பெரிய பெரிய ஆட்களைப் பணயமாகப் பிடித்துப் போய் திரட்டிய பணம் எத்தனை கோடி? ஆச்சரியமாக இருந்தது. இந்த சேரமண்டலத்தில் பாதிரியார் வேஷம் போடுவதால் ஒருவேளை இப்படி ஏழை போல் தன்னைக் காட்டிக் கொள்கிறானோ என்று தோன்றியது.



அங்கிருந்த பெட்டிகளை எல்லாம் திறந்து மூடியதில் அவனுக்கு ஒரு தென்னை ஓலைப் பெட்டியில் பல பழைய கந்தல் துணிகளுக்கு இடையே ஒளித்து வைக்கப்பட்டது போல் மறைந்திருந்த அந்த புகைப்படம் கண்ணில் பட்டது.

அந்த புகைப்படத்தைக் கையில் எடுத்தான் திருநாவுக் கரசு.

வினோதமான புகைப்படம் அது. கயிறு திரிக்கும் மெஷினைக் கையில் பிடித்தபடி ஓர் ஆள். அந்த ஆளின் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைத்தபடி இரு சிறுவர்கள். அந்தச் சிறுவர்கள் இருவரையும் எங்கேயோ பார்த்தது போல் இருந்தது திருநாவுக்கரசுவிற்கு. யார் இந்த ஆள். கயிறு திரிக்கும் மெஷின் எங்கிருந்து வந்தது? அந்தச் சிறுவர்கள் இருவரும் யாராக இருக்க முடியும்? வேணு பிரசாத்தின் இருப்பிடத்தில் இந்த புகைப்படங் களுக்கு என்ன வேலை?

அவன் மேலே யோசிப்பதற்குள் அந்தக் குடிசையில் ஏதோ நிழல் அசைந்த மாதிரி இருந்தது. திருநாவுக்கரசு திடுக்கிட்டான்.

சட்டென்று அப்படியே தரையில் விழுந்து உருளவும் ஒரு துப்பாக்கி குண்டு வெடிக்கவும் சரியாக இருந்தது. குண்டு திருநாவுக்கரசு இத்தனை நேரம் நின்றிருந்த இடத்தில் பாய்ந்தது.

திருநாவுக்கரசு புரண்டு பார்த்தான். நிழலில் அவன் நின்றிருந்தான். கதகளி நாடகத்தில் அடிக்கப்பட்ட திடீர் விளக்கு வெளிச்சத்தில் அவன் முகம் தெரிந்தது.

நீமூ!

வேணுபிரசாத்தின் கூட்டாளி. இன்னொரு தீவிரவாதி.

திருநாவுக்கரசு சட்டென்று துப்பாக்கியை உருவினான். நீமூ அடுத்த குண்டை அதற்குள் அவனை நோக்கிச் செலுத்தினான். திருநாவுக்கரசின் ரிஃப்ளெக்ஸ் அபாரமாக இருந்தது. நீமூ சுடுவான் என்று எதிர்பார்த்திருந்ததால் அவன் ஏற்கனவே உருண்டிருந்தான். துப்பாக்கியால் அவன் சுட்டான். குண்டு நீமூவைத் தாக்கவில்லை. பதிலாக அந்த வீட்டின் ஓட்டைத் தகர்த்தது.

அதற்குள் இன்னொரு குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது.

நீமூவின் தலைமுடிக்கு மேல் அந்த குண்டு பாய்ந்தது என்பது அவன் தலைக்கு அருகில் இருந்த ஒரு கண்ணாடிச் சட்டம் சிதறியதில் இருந்து தெரிந்தது.

நீமூ தன்னை நோக்கி சுடப்பட்ட குண்டு வந்த திசையில் சுட்டான்.

குண்டு 'தட்' என்று எதன் மீதோ மோதும் சத்தம். தொடர்ந்து, 'ஹம்மா' என்ற முனகல்.

திருநாவுக்கரசு தாமதிக்கவில்லை. சுட்டான். அவனது குண்டு இந்த முறையும் தவறியது. நீமூ சுட்ட அடுத்த குண்டு திருநாவுக்கரசு பற்றியிருந்த துப்பாக்கியில் பட்டு துப்பாக்கி எகிறியது.

துப்பாக்கி எகிறியதைப் பார்த்தவுடன், நீமூவின் முகத்தில் ஒரு புன்னகை வெளிப்பட்டது. இரண்டே எட்டில் திருநாவுக்கரசை நெருங்கினான்.

அவன் தலையில் ஓங்கி அடித்தான். நட்சத்திரங்கள் சிதறின.

வலி. வலி. வலி. வலி. வலி!

"நீ வேணு இல்லை என்று தெரியும் யார் நீ? ஏஸின் ஆளா? சொல். சொல். சொல்லுடா நாயுண்ட மகனே"



என்று இன்னொரு முறை துப்பாக்கியால் திருநாவுக்கரசின் மண்டையில் மோதினான்.

திருநாவுக்கரசு திணறினான். தடுமாறினான். வலியில் அவன் உயிர் போவது போல் இருந்தது. உயிர் போய் விட்டால் பரவாயில்லை என்று தோன்றியது.

"கில் மீ பாஸ்டர்ட் கொல் என்னை" என்று நீமூவைப் பார்த்துக் கத்தினான்.

"ஹோ. நீ யார் என்று சொல்லும் வரை உன்னைக் கொல்ல மாட்டேன் யார் நீ? ஏஸின் ஆள்தானே?"

"ஏஸ் யார்?" என்று திணறிக் கேட்டான் திருநாவுக்கரசு.

"இப்படி எல்லாம் கேட்டால் நீ சொல்ல மாட்டாய். உன்னைக் கேட்கிற விதத்தில் தான் கேட்க வேண்டும்" என்று சொல்லி துப்பாக்கியை இடுப்பில் செருகி, திருநாவுக்கரசின் தலைமுடியை அப்படியே கொத்தாகப் பற்றி அவன் இழுத்துக் கொண்டு போக முற்பட்ட நேரத்தில் மேலும் ஒரு குண்டு வெடித்தது.

குண்டு நீமூவின் தோள் பட்டையில் பாய்ந்தது.

"பாஸ்டர்ட்ஸ்" என்று கத்தினான். அவன் பிடி தளர்ந்தது.

திருநாவுக்கரசுவிற்கு வெளியில் இருந்து அவனுக்குத் துணை வந்து விட்டது எனத் தெரிந்தவுடன் தைரியம் வந்து விட்டது.

சக்தி அத்தனையும் திரட்டி காலால் நீமூவை உதைத்தான்.

மிகச் சரியான உதை. மிகச் சரியான இடம்.

"அம்மே" என்று அலறியபடி நீமூ அடிபட்ட இடத்தைப் பொத்திக் கொண்டான். கீழே விழுந்தான். உருண்டான்.

வெளியே ஷூக் கால்களின் சத்தம் கேட்டன.

நீமூ திடீரென்று எழுந்து அந்த வீட்டின் சுவரை ஒரு மோது மோதினான். செங்கற்கள் உடைந்தன. திருநாவுக் கரசின் மேல் விழுந்தன. தூசிப்புயல் பரவியது. நீமூ அந்த புழுதிப் படலத்தில் பாய்ந்தான்.

''கேட்ச் ஹிம்... கேட்ச் ஹிம்'' என்று திருநாவுக்கரசு கத்தினான்.

அவன் குரல் எழும்பவில்லை.

அதற்கு மேல் கத்துவதற்கு சக்தியில்லை அவன் மயக்க மடைந்து விழுந்தபோது, அவனைச் சுற்றி ஷூக்கால்கள் சூழ்ந்தன.

''சார். வேணுபிரசாத் இங்கே இருக்கிறான் சார். மயக்க மாகிக் கொண்டிருக்கிறான். இவன்தான் பாரதிகுமாரைச் சுட்டு படுகாயப்படுத்தியிருப்பவன். இவனை இங்கேயே சுட்டு விடவா சார்?'' என்று குரல் கேட்டது.

''சுடு அவன் மூளையைச் சிதறடி. உயிரோடு விட்டால் மறுபடி எப்படியாவது தப்பித்துக் கொள்வான். ஷூட் ஹிம்'' என்று இன்னொரு குரல் உத்தரவிட்டது.

திருநாவுக்கரசால் எதிர்த்துப் பேச முடியவில்லை. கைகளை அசைக்க முடியவில்லை. அவன் நெற்றிப் பொட்டில் ஒரு துப்பாக்கியின் முனை பதிந்தது.

அது அழுந்தியது.

# 16



அந்தத் தருணத்தில் மட்டும் இன்னும் கொஞ்சம் நினைவு மிச்சமிருந்த பாரதிகுமார் தன் சக்தி அத்தனையும் திரட்டி ''சுடாதீர்கள்... ப்ளீஸ் டோன்ட் ஷூட்'' என்று கத்தியிருக்கா விட்டால் திருநாவுக்கரசுவின் கதை அப்போதே முடிந்திருக்கும்.



திருநாவுக்கரசுவின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்து அழுத்தி இருந்தவன் தயங்கினான். துப்பாக்கியை எடுத்தான்.

ஆம்புலன்ஸின் சைரன் ஒலி கேட்டது.

மருத்துவமனையின் கதவுகள் அகலமாகத் திறந்தன.

பாரதிகுமார், திருநாவுக்கரசு மற்றும் அந்தத் துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்திருந்த இன்னொரு போலீஸ் அதிகாரி ஆகியோர் அனுமதிக்கப்பட்டனர்.

யாருக்கும் மரண காயம் இல்லை. பாரதிகுமாரின் விலாவில் ஒரு குண்டு பாய்ந்திருந்தது. திருநாவுக்கரசு விற்குத் துப்பாக்கிக் குண்டு காயம் இல்லை. துப் பாக்கியின் பின்புறத்தால் மோதப்பட்டதால் ஏற்பட்ட காயம். செங்கற்கள் மோதி விழுந்த அடி என்று ஊமை காயங்கள். இரண்டே தினங்களில் திருநாவுக்கரசு எழுந்து விட்டான்.

பாரதிகுமார் திருநாவுக்கரசுவைப் பாதுகாப்பதற்காக அவன் அறியாமல் ஒவ்வொரு முறையும் பின் தொடர்ந்து கொண்டிருந்தார். மேலும் வேணுபிரசாத்தை இன்னொரு முறை தன் கையிடுக்கு வழியாகத் தவறவிட அவர் தயாராக இல்லை.

சேரமண்டலத்திற்கும் பாரதிகுமார் திருநாவுக்கரசைத் தொடர்ந்து வந்தார். அங்கே அவர் நீமூவை எதிர்பார்க்க வில்லை. வேணு பிரசாதையும் எதிர்பார்க்கவில்லை.

வேணுபிரசாத்தின் இருப்பிடம் பற்றி ஏதேனும் தகவல்கள் சேகரித்து விட முடியும் என்ற நம்பிக்கையுடன் துப்பாக்கி சகிதம் தனியாக வந்து சேர்ந்து விட்டார். நீமூவை எதிர்பாராத விதமாய்ப் பார்த்து விட்டதில் உதவிக்கு ஆட்களை வரச் சொன்னார். அவர்கள் வந்து சேரும்போது பாரதிகுமார் குண்டடிபட்டு விட்டதால் குழப்பம் ஏற்பட்டு அவருடைய உதவிக்கு வந்த போலீஸ்காரர்கள் திருநாவுக் கரசுவை வேணுபிரசாத் என்று நம்பி,

பாரதிகுமார் பெருமூச்சு விட்டார். நல்லவேளை கடைசி தருணத்தில் அவரால் குரல் கொடுக்க முடிந்து விட்டது.

திருநாவுக்கரசு தான் கவர்ந்து வந்திருந்த புகைப் படத்தை பாரதிகுமாரிடம் கொடுத்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பெரிதாக பிரிண்ட் போடச் சொன்னான். போட்டோ பெரிதாக்கப்பட்டது. நல்ல விளக்கு வெளிச் சத்தில் அதைப் பார்த்தான். அந்த இரண்டு சிறுவர்களும் இப்போது யார் என்று தெரிந்து விட்டது. ஒரு சிறுவன் வேணுபிரசாத். இன்னொரு சிறுவன் நீமூ. பெரியவர் யார் என்று தெரியவில்லை. மூவருக்கும் பின்னால் கடல் இருந்தது. இப்போதுதான் தெரிந்தது. போட்டோவின் இடது ஓரத்தில் ஒரு மீன் வலை தெரிந்தது. அந்த மீன் வலைக்கு சைனீஸ் நெட் என்று பெயர். அது கடல் நீரில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருந்தது. அந்த சைனீஸ் நெட்டைப் பார்த்தவுடன் திருநாவுக்கரசுவின் முகம் பிரகாசமாகி விட்டது. அந்த மாதிரியான சீன மீன் பிடி வலைகள் கொச்சினில் மட்டும்தான் உபயோகப்படுத் தப்படுகின்றன. கயிறு திரிக்கும் மெஷின். சேர மண்டலத்தில் வேணுபிரசாத்தின் வீட்டில் பார்த்த கயிற்று மிதியடிகள் எல்லாம் எங்கே இருக்கின்றன என்பதும்



பளிச் என்று புரிந்து விட்டது. கொச்சியை அடுத்திருக்கும் ஒரு சிறு தீவில் இருக்கும் மக்களுக்கு தேங்காய் நாரில் கயிறு திரிப்பதும், மிதியடிகள் செய்வதும், படுக்கைகள் செய்வதும் விதவிதமான யானை, குதிரை, மனித பொம்மைகள் செய்வதுதான் தொழில் போட்டோவில் இருப்பது அந்தத் தீவுதான். வேணுபிரசாத் இந்தத் தீவைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க வேண்டும் ஏன் தற்சமயம் வேணுபிரசாத் அந்தத் தீவிலேயே கூட ஒளிந்து இருக்க லாம். யார் பார்வையிலும் படவே படாத கயிறு திரிக்கும் ஏழை மக்கள் இருக்கும் ஒரு தீவில். இந்தியாவையே நடுங்க வைக்கும் ஒரு தீவிரவாதி இருக்கக் கூடும் என்று யார்தான் எதிர்பார்க்கக் கூடும்?

அந்த புகைப்படம் வேறு யாரிடம் சிக்கியிருந்தாலும் அதை வைத்துக் கொண்டு ஒருவராலும் ஒன்றும் அறிய முடியாது. திருநாவுக்கரசு, தன்னுடைய அதிர்ஷ்டம் காரணமாகத்தான் அந்த புகைப்படம் தன் கண்களுக்குத் தெரிந்திருக்கிறது என்று நம்பினான். அவன் கடற்படை யில் இருந்ததால் கொச்சியில் அவன் சில வருடங்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. அப்போது அருகில் இருந்த எல்லா இடங்களையும் அவன் படகிலேயே சுற்றி யிருக்கிறான். இந்தத் தீவைக்கூட அவன் அப்படித்தான் சுற்றிப் பார்த்திருந்தான். சந்தேகமேயில்லை. அதே தீவு தான் இது.

வேணுபிரசாத் பற்றி ஏதாவது தெரிய வேண்டுமெனில் அது இந்தத் தீவில்தான் தெரியும்.

திருநாவுக்கரசு அந்தத் தீவிற்குப் போவது என்று தீர் மானித்தான்.

தனது யூகத்தை பாரதிகுமாரிடம் சொன்னால் அவர் ஒரு படையைத் திரட்டிக் கொண்டு வந்து விடக் கூடும். கள்ளம் கபடமற்ற அந்தச் சிறுவர்களின் சிரிப்பு. அந்தப் பெரியவருக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கும் பாசப்பிணைப்பு, யாவும் சேர்ந்து வேணுபிரசாத்தின் தீவிரவாதத்திற்குப் பின்னால் ஓர் வலுவான காரணம் இருக்க வேண்டும் என அவனுக்குத் தோன்றியது.

படையோடு சென்றால் காரியம் கெட்டு விடும். உண்மைகள் என்ன என்று வெளி உலகிற்குத் தெரியாமலே போய்விடக்கூடும்.

திருநாவுக்கரசு யாரிடமும் எதுவும் தெரிவிக்காமல் கொச்சி நோக்கித் தனியாகப் புறப்பட்டான். அதாவது அப்படி நினைத்துக் கொண்டான்.

திருநாவுக்கரசின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மிக உன்னிப்பாக, ரகசியமாகக் கண்காணித்துக் கொண்டிருந்த ஓர் உருவம் அவன் ரகசியமாகப் புறப்படுவதைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டது.

# 17



கொச்சி நகரம் திருநாவுக்கரசு கேரள முஸ்லீம் போல் தன்னை மாற்றிக் கொண்டிருந்தான். தலையில் ஒரு நீளமான தொப்பி அதில் ஓர் குதிரைவால். தாடி, மீசைக்குள் முகம் மறைந்திருந்தது. நெற்றியில் தொழுகை வடு. முழங்காலுக்குச் சற்றுக் கீழே நின்று விட்ட கட்டம் போட்ட கைலி, பச்சை நிறத்தில் ஒரு ஜிப்பா. வாயின் ஓரத்தில் ஒரு பீடி வைத்திருந்தான். கண்களில் லேசாக மை இட்டுக் கொண்டிருந்தான். அதனால் அவன் கண்கள் தங்களின் அடையாளங்களை இழந்திருந்தன. புருவங்களைத் திருத்தியிருந்தான். அவனுடைய உருவ மாற்றம் வெகு இயற்கையாய் இருந்தது.



கொச்சி, ரயில் நிலையத்தில் நேரடியாக வந்து இறங்கினான். அந்த ஊர் அவனுக்கு மிக மிகப் பரிச்சயமான ஊர். யூதர்கள் வாழும் பகுதி மிக அமைதியாக இருக்கும். ஆடம்பரமற்று இருக்கும். அங்கே இருந்த ஒரு லாட்ஜில் அறை எடுத்தான். அறை எடுப்பதற்கு முன்பே லாட்ஜில் இருந்து வெளியேறும் போது யார் பார்வையிலும் படாமல், வெளியேற வசதி இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு தான் அறை எடுத்தான்.

காலையில் இருந்து இரவு தொடங்கும் வரை தூங்கினான். விளக்கு வைத்த பின் எழுந்து குளித்து, பையனை வரவழைத்து டிபனுக்கு ஆர்டர் கொடுத்தான். துப்பாக்கியை எடுத்துப் பார்த்தான். லோட் ஆகியிருந்தது. எதற்கும் இருக்கட்டும் என்று ஸ்பேராகக் குண்டுகளை எடுத்துக் கொண்டான். பாண்ட் - ஷர்ட் இருட்டில் அவனது நடமாட்டத்தை வெளிக்காட்டாத மாதிரி. நல்ல அடர்த்தியான நிறத்தில் இருந்தன.

லாட்ஜை விட்டு வெளியேறினான்.

கடற்கரைக்குச் சென்றான். படகுத்துறை படகுகள் நீரில் ஆடி ஆடி நின்று கொண்டிருந்தன. மீனவர்கள் சிலர் அவனை நெருங்கினார்கள். படகு ஒன்றை வாடகைக்குக் கேட்டான். கயிறு தயாரிக்கும் தீவிற்குப் போக வேண்டும் என்றான். அவனது குரலில் இருந்த நேர்மை அவனுக்கு உதவியது. ஒரு மீனவன் படகை செலுத்திக் கொண்டு

வந்து அவன் தீவிலிருந்து திரும்பும் வரை காத்திருப்ப தாகச் சத்தியம் செய்தான்.

திருநாவுக்கரசு அந்தப் படகில் ஏறினான்.

சுற்றுப்புற சூழல் வெகு அழகாய் இருந்தது. ரசிக்கலாம் போல் இருந்தது. தண்ணீரில் அங்கங்கே மீன் விளை யாட்டுத் துள்ளல்கள், நிலா, மேகம் என்று கவிதை முயற்சிக்க வைக்கும் சூழ்நிலை. திருநாவுக்கரசு அவற்றை அப்புறம் கவனிக்கலாம் என்று நினைத்துக் கொண்டான்.

அரை மணி நேரப் பயணத்தின் முடிவில் தீவின் கரையோரம் படகு ஒதுங்கியது. இருட்டாய் இருந்தது. திருநாவுக்கரசு தண்ணீரில் இறங்கினான். முழங்கால் அளவு தண்ணீர் சத்தமின்றி நடந்தான். மணல் வெளியில் கால் பதித்தான். மெல்ல நடந்தான்.

தீவில் மின்சாரம் இருந்தது. குடிசைகளில் மின்சாரம் இருந்தது. ஒரு சின்னப் பெண் அவனை நோக்கி ஓடிவந்தாள்.

"மா... மா... எங்கள் வீட்டுக்கு வாருங்கள் மாமா. இந்தத் தீவில் தங்கத்தானே வந்திருக்கிறீர்கள். கட்டில் இருக் கிறது. கடலோரம் இருக்கிறது. சோறு இருக்கிறது. சாராயம் இன்னும் என்னென்ன வேண்டுமோ எல்லாம் இருக்கிறது. எங்கள் வீட்டிற்கு வாருங்கள் மாமா..." என்று அவன் கையைப் பிடித்து இழுத்தாள்.

இன்னொரு சிறுமி ஓடி வந்து அவன் கையைப் பற்றி அதே வார்த்தைகளைச் சொன்னாள். இன்னொரு சிறுமி ஓடி வந்தாள். அவளும் அவன் கையைப் பற்றி இழுத்தாள். முதல் சிறுமி அந்த இரண்டு சிறுமிகளையும் விரட்டி னாள்.



"இந்த மாமா எங்கள் வீட்டு விருந்தாளி. பரசுக் குட்டன் தான் கூட்டி வரச் சொன்னது" என்றாள்.

"ஓ பரசுக் குட்டன் விருந்தாளியா? அப்படி என்றால் சரி..." என்று அந்த இரண்டு பெண்களும் விலகி ஓடி னார்கள்.

"பரசுக் குட்டன் யார்?" என்று வியப்புடன் கேட்டான் திருநாவுக்கரசு."

"என் அண்ணா."

"இங்கே இந்த மாதிரி ராத்திரி நேரத்தில் தங்கிப் போக நிறைய பேர் வருவார்களா?"

"ஓ..." என்றாள் சிறுமி.

திருநாவுக்கரசு சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு போட்டோவை எடுத்துக் கட்டினான். "இந்த போட்டோ வில் இருப்பவர்களை உனக்குத் தெரியுமா?"

அந்தச் சிறுமி ஆர்வத்துடன் புகைப்படத்தை வாங்கிப் பார்த்தாள்.

உதட்டைப் பிதுக்கினாள்.

"ம்ஹூம். ஆனால் பரசுக்குட்டனுக்குத் தெரிந்திருக் கும்" என்றாள்.

ஏதாவது ஓரிடத்தில் தன் வேட்டையைத் தொடங்கித் தான் ஆக வேண்டும். அது ஏன் இந்தச் சிறுமி சொல்லும் பரசுக்குட்டனிடம் ஆரம்பிக்கக் கூடாது.

"உன் பெயர் என்ன?" என்று நடந்தபடி கேட்டான் திரு நாவுக்கரசு.

"சுனந்தை" என்றாள் அந்தச் சிறுமி.

அந்தச் சிறுமி கூட்டிக் கொண்டு போன குடிசை வீடு தீவின் மறுபக்கம் இருந்தது. கடலையொட்டி இருந்தது.

திருநாவுக்கரசு அந்தப் பெரிய குடிசையின் ஓர் அறையி உட்கார வைக்கப்பட்டான். அங்கிருந்து கடலும், அ களும் தெரிந்தன. யுகம், யுகமாக ஒரே சத்தத்தை எழுப் கொண்டிருக்கும் அலைகள்.

அந்த அறையில் அவன் உட்கார்ந்திருந்தான்.

''வெல்கம் திருநாவுக்கரசு'' என்ற குரல் திடீரென் கேட்டது.

அவன் திடுக்கிட்டுப் பார்த்தான்.

வேணுபிரசாத் நின்றிருந்தான். அவன் கையில் ஒ துப்பாக்கி. அது அவனை முறைத்தது. முகத்தில் புன்னகை

திருநாவுக்கரசு அசையப் பார்த்தான்.

''நோ'' என்று கத்தினான் வேணுபிரசாத் ''கொஞ்ச அசைந்தாலும் சுட்டு விடுவேன்'' என்றான் வேணுபி சாத்.

திருநாவுக்கரசு அப்படியே உறைந்துப் போய் உட்கார் திருந்தான்.

''நீமூ... கம். நம் விருந்தாளியை செக் பண்ணு. கையில் ராட் (துப்பாக்கி) கீட் வைத்திருக்கப் போகிறார்.''

திருநாவுக்கரசு நீமூ என்ற அழைப்பைக் கேட்டு ஆச்சரியப் பட்டான். அடுத்த கணம் அறையில் நுழைந்த நீமூவைப் பார்த்து ஆச்சரியம் அதிகரித்தது. சேர மண்டலத்தில் துப் பாக்கியால் சுடப்பட்ட அதே நீமூதான். துப்பாக்கி குண்டு பாய்ந்த இடத்தில் கட்டு போடப்பட்டிருந்தது. நீமூவும் அதே புன்னகையுடன் திருநாவுக்கரசுவை நெருங்கினான். பரிசோதித்தான். அவனிடம் இருந்த துப்பாக்கியை எடுத்தான். அதிலிருந்த குண்டுகளைக் காலி செய்தான்.

''வெரிகுட் சுனந்தை...'' என்றான் வேணுபிரசாத்.



''என்னண்ணா?''

''நம் விருந்தாளிக்கு நேந்திரம் பழம், புட்டு, சாயா எல்லாம் கொண்டு வா.''

''சரிண்ணா.''

அடுத்த வினாடி அவை வந்து சேர்ந்தன.

அவனுக்கு எதிரில் வேணு பிரசாத்தும் நீமூவும் அமர்ந் தார்கள்.

''சாப்பிடுங்கள் திருநாவுக்கரசு. நீங்கள் எங்களுடைய விரோதியில்லை. நண்பர். அதனால் ஒரு நண்பனின் வீட்டிற்கு வந்திருப்பது போல நினைத்துச் சாப்பிடுங்கள். நானே எப்படியும் உங்களைச் சந்திக்க நினைத்திருந்தேன். நீங்கள் மட்டும் இங்கே வராமல், இருந்திருந்தால் உங் களை எப்படியும் என் ஆட்கள் மூலம் இங்கே அழைத்து வருவதாகத்தான் இருந்தேன்.''

''கடத்தி வருவதாக இருந்தாய் என்று சொல்'' என்றான் திருநாவுக்கரசு குரலில் கையாலாகாத்தனமும், கோபமும் போட்டி போட.

வேணுபிரசாத் சிரித்தான். அடக்க முடியாமல் பெரிதாய் எந்தவித கள்ளமும் இன்றிச் சிரித்தான்.

''முதலில் அப்படித்தான் தோன்றும். நான் சொல்ல நினைப்பதை உங்களிடம் சொல்லி முடித்த பின் உங் களுக்கு அப்படித் தோன்றாது. இது சத்தியம்'' என்றான் வேணுபிரசாத் சீரியஸாக. அவன் குரலில் இருந்த சீரியஸ்னஸ் திருநாவுக்கரசை நிமிர்ந்து உட்கார வைத்தது.

''கேட்கிற மூடில் இருக்கிறீர்களா? இல்லை சாராயம், விஸ்கி என்று ஏதாவது வேண்டுமா?''

''எனக்கு ஒன்றும் வேண்டாம். கோ அஹெட்'' என்றான் திருநாவுக்கரசு.

வேணுபிரசாத் தொண்டையைச் செருமிக் கொண்டு செல்லத் தொடங்கினான்.

# 18



''மைடியர் திரு... உன்னை நான் திரு என்றே அழைக்கிறேன். முதலில் ஒன்றே ஒன்றை மனதில் வைத்துக் கொள். மீடியாவில் சொல்கிற மாதிரி. பேப்பர்களில் பயமுறுத்துகிற மாதிரி எல்லாம் நான் பயங்கரமான தீவிரவாதி இல்லை. வெகு சாதாரணமான ஆள். கொஞ்சம் தைரியமானவன். அவ்வளவுதான்.''

''இவன் என் ஆரம்ப கால நண்பன். பரசுராம் என்று பெயர். நாங்கள் இருவரும் இந்தத் தீவைச் சேர்ந்தவர்கள். இயற்கையின் மடியில் வளர்ந்தவர்கள். போட்டோ ஒன்று பார்த்தாலே ஒரு பெரியவர். அவர் தான் யவனாவின் அப்பா. எங்கள் இருவரையும் சின்ன வயதில் இருந்தே வளர்த்தவர். யவனாவுக்கு சின்ன வயதில் இருந்தே என் மேல் பிரியம் அதிகம். நாங்கள் மிக அமைதியாக சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

''எங்கள் வாழ்க்கையில் அச்சுதன் என்னும் கருநாகம் நுழைந்தது. அவன் ஒரு மோசமான ஆள். போக்கிரி இந்தத் தீவை அவன் கள்ளக் கடத்தல் விவகாரங்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருந்தான். யவனாவின் அப்பா அவனுடைய காசைக் கண்டு ஏமாந்து விட்டார்.



மீன் பிடிக்கும் வேலையை விட்டு அவனிடம் வேலைக்குச் சேர்ந்து விட்டார். நாங்கள் இன்னதென்று புரியாமலேயே அச்சுதனுக்கு நிறைய கள்ளக் கடத்தல் வேலைகளில் உதவி விட்டோம். விவரம் தெரிந்த பின் எங்களால் அதிலிருந்து மீள முடியவில்லை. அச்சுதனுக்கு அடுத்தபடி அவன் கும்பலில் எனக்குத்தான் மரியாதை. நம்பர் டூ என்று அழைக்கப்பட்டேன். அச்சுதனுக்கு நான்தான் தொழில் வாரிசு என்று அறிவிக்கப்பட்டு பிரின்ஸ் என்றும் இளவரசன் என்றும் பெயர் வாங்கினேன். எல்லாம் ரொம்ப நாட்களுக்கு முன்பு. அச்சுதன் கடத்தாத பொருளில்லை. சின்ன லெவலில் ஆரம்பித்தான். வியாபாரத்தைப் பெருக்கப் பணம் வேண்டியிருந்தது. இந்தத் தீவின் மேல் ஒரு கண் வைத்தான். இந்தத் தீவில் இருக்கும் பெண்கள் எல்லாம் ஒரே நாளில் அவனது ஆட்கள் பாழாக்கினார்கள். நாசமாக்கினார்கள்.''

''ஆண்களுக்குச் சாராயமும் பணமும் கொடுத்துப் பெண்களைப் பணிய வைத்தார்கள். அப்படி நாசமான பெண்களை வைத்து இந்தத் தீவையே அவன் ஒரு குட்டி விபச்சாரத் தீவாக மாற்றி விட்டான். நிறைய பாரின் டூரிஸ்ட்கள். அவர்களுக்கு இங்கே பெண்கள் சுகம் கிடைத்தது. நிறைய பணம் பெண்கள் தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் இந்தத் தீவை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை. என் யவனாவும் பாழாக்கப்பட்டாள். அதுவும் அச்சுதனாலேயே. இதெல்லாம் முடிந்த பின் தான் எனக்குத் தகவல் தெரிந்தது. யவனாவை போதைக்கு அடிமையான தகப்பனே விற்று விட்டான்.''

''யவனா மூலம் தான் எங்களுக்கு அத்தனையும் தெரிய வந்தது. அச்சுதனிடம் கேட்டதற்கு என்ன சொன்னான்

தெரியுமா? பெண்கள் எல்லாம் இதற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்றான். இனி ஒரு யவனாவோடு நீ நிறுத்திக் கொள்ள வேண்டாமே. இந்தத் தீவில் இருக்கும் அழகான பெண்கள் அத்தனை பேரும் உன் ஆசை நாயகிகள்தான். அனுபவி. உனக்கு எல்லாமே ஃப்ரீ. எந்நேரமும் எங்கேயும் போகலாம் வரலாம் என்றான். சொல் திருநாவுக்கரசு, இதெல்லாம் நியாயமா?''

'நீ குறுக்கே பேசாதே. நான் பேசி விடுகிறேன். நேற்று வரை என்னை அண்ணா என்றும் தம்பி என்றும் அழைத்துச் சொந்தம் கொண்டாடிய பெண்கள் எல்லாம் எனக்குப் பயந்து என்னிடம் தங்களை இழக்கத் தயாரானார்கள். அதே அண்ணர் உறவு முறைதான். அதே தம்பி முறைதான். மனிதனால் சகிக்க முடியுமா? நாயா நான்?''

''என் கோபம் எல்லை மீறியது. அச்சுதனை ஒழிக்க வேண்டும் என்று அப்போதுதான் தீர்மானித்தேன். அவனிடமிருந்து நானும் பரசுவும் தப்பித்தோம். யவனாவை துணை சேர்த்துக் கொண்டோம். யவனா என் காதலி. அவளை இழக்க மனம் இல்லை. அவள் வரமாட்டேன் என்றாள். அசுத்தமானவள் என்றாள். ஏற்கவில்லை. அழைத்துப் போய் விட்டேன். அச்சுதனை அழிப்பதுதான் என் ஒரே லட்சியமாக மாறியது. என் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து என்னோடு சேர்ந்த ஆட்கள் தான் சேர மண்டலத்தை உருவாக்கியவர்கள். நிறைய பேர் என் பொருட்டு செத்தும் போயிருக்கிறார்கள்.''

''அச்சுதனை நேரடியாக அணுக முடியவில்லை. அவ்வளவு பாதுகாப்புடன் இருக்கிறான் அவன். காரணம் அவன் பணம். அந்தப் பணத்திற்காக அவனைக் காவல் காக்கும் எலும்புத் துண்டு பொறுக்கும் நாய்களுக்கு என்



நியாயம் ஒத்துக் கொள்ள இயலாத ஒரு விஷயம். அச்சுதனின் வியாபாரம் அத்தனையும் அழிய வேண்டும். அவனது தொழில்கள் எல்லாம் நாசமாக வேண்டும். அவன் பண பலம் இழந்தால் படைபலம் இழப்பான். அப்புறம் அவனைக் கொல்வது எளிது என்று நினைத்துத் தான் அவனுடைய வியாபார சாம்ராஜ்யத்தைத் துண்டாடத் தொடங்கினேன். இது எனக்கும் அவனுக்கும் நடக்கும் குருக்ஷேத்திரம் என நான் நினைத்தேன். ஹைதராபாத் தேவராயா ஹோட்டல் அவனுடையதுதான். இந்தியப் பொறுக்கிகள் எல்லாரையும் வி.ஐ.பி.கள் என்ற போர்வையில் ஒன்று சேர்த்து இந்தியாவை எப்படி விற்கலாம் என அவன் திட்டம் போடக் குறித்த நாளன்று அந்த ஹோட்டலில் குண்டு வைத்தேன். கணிசமான பொறுக்கிகள் செத்துப் போனார்கள். ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக அவன் தப்பித்து விட்டான். கோவாவில் அவனுக்கு இருந்த ஒரு கப்பலை மூழ்கடித்தேன். அவனுடைய விஷப்பற்கள் ஒவ்வொன்றாகப் பிடுங்கப்படுவது தெரிந்தவுடன் அந்தக் குள்ள நரி வேறு விதமாகத் திட்டம் போட்டு விட்டான். ஆஸ்பத்திரிகளில், மசூதிகளில் எல்லாம் கண்டு வைத்து வெடித்து என் பெயரைப் பரப்பினான். நான்தான் செய்கிறேன் என்று செய்தி பரப்பினான்.... என் பெயரில் அக்கிரமங்களை நிகழ்த்தி இப்போது அவன் வெளிநாட்டுப் பணம் சம்பாதிக்கத் தொடங்கி இருக்கிறான்...''

''போலீஸ், சிபிஐ எல்லாம் என்னைப் பயங்கரத் தீவிரவாதியாக்கி விட்டது. என்னைத் துரத்துகிறது. அச்சுதனின் எல்லா வியாபாரங்களும் ஓரளவு காலியாகி விட்டன. இன்னும் மிச்சமிருப்பவற்றை உனக்குப் பரசு சொல்வான். அவற்றை நீ அழித்தால் அச்சுதன் தனியாகி

விடுவான். அவன் படை இழந்து தனியாளாகி விட்டால் பரசு அவனைக் கொல்வான். அல்லது நீயும் பரசுவும் சேர்ந்து அவனைக் கொன்று விடலாம். இது எல்லாம் சத்தியம்.''

''நானா?'' என்றான் திருநாவுக்கரசு, ''ஏன்?'

''ஏனென்றால் நான் சாகப் போகிறேன். என் உடம்பு கான்ஸரில் காலி. அது யாருக்கும் தெரியாது. நான் செத்து விட்டால் யவனாவும் செத்துப் போவாள். இந்த நிலையில் உன்னைப் பற்றி தெரிந்தது. என்னை மாதிரியே நீ இருப் பது தெரிந்தது. உன்னை ஏஸின், அதுதான் அச்சுதன், அவன் பெயர்தான் ஏஸ். அந்த ஏஸின் ஆள் என்று பரசு நினைத்து விட்டான். அதுதான் உன்னைக் கொல்லப் பார்த்தான். தப்பித்தாய். பின் உன்னைப் பற்றி நீமூ விசாரித்தான். பூமிகா பற்றித் தெரிந்தது. சொல் திரு... ஒரு பெண்ணுக்கு அவமானம் ஏற்படலாமா? காதலில் பெண்ணை ஜெயிப்பதில் கிடைக்கும் சந்தோஷம் ஆனந்தம். அனுபவம் எல்லாம் வன்முறையில், காமத்தில் கிடைக்காது என்று நீயும் என்னைப் போலவே நம்புவாய் என்று எனக்குத் தோன்றியது. காரணம் பூமிகாவும் நீயும் வாழ்ந்த வாழ்க்கை பற்றி நான் அறிந்து கொண்டதால் தான். பரசுவிற்கு நீமூ என்று ஏன் பெயர் தெரியுமா? அவன் சின்னதாய் ஒரு நீர்மூழ்கிக் கப்பலைத் தயாரித்திருக் கிறான். மரங்களை வைத்தே அதை அவன் கட்டியிருக் கிறான். தண்ணீருக்கடியிலேயே எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் அவனால் வாழ முடியும். நான் அங்கேதான் ஒளிந்திருப்பேன். அவனும் அங்கேதான் இருப்பான். நீரில் மூழ்கியிருப்பவன் என்பதைச் சுருக்க மாக நீமூ என்று அழைத்து அதுவே அவன் பெயராகி விட்டது. 'இப்போது யவனா அந்த நீர்மூழ்கிப் படகில் தான் காத்திருக்கிறாள். எனக்காக அதாவது என் வடிவில் போகப்



போகும் உனக்காக நீ தேசபக்தி நிறைந்தவன். இந்தத் தேசத்தைக் காப்பாற்ற அச்சுதனை அழிக்க வேண்டும். நான் இறந்த பின் நீ முழுமையான வேணுபிரசாத்தாக மாற வேண்டும். உண்மைதான் வெல்லும் வேறு வேறு வடிவங்களில் உண்மையின் முந்தைய வடிவம் நான். இப்போதைய வடிவம் நீ. எனக்கு உதவுவாயா? இந்த அச்சுதனை எவ்வளவு சீக்கிரம் அழிக்கிறாயோ அவ்வளவு சீக்கிரம் நாட்டைக் காப்பாற்ற முடியும். உன்னிடம் இந்த வேலையைக் கொடுப்பதற்காகத் தான் நீ இந்தத் தீவை நோக்கி வருகிறாய் என்பது தெரிந்து காத்திருந்தேன். உன் பின்னால் பாரதிகுமார் ஒரு படையுடன் வந்திருக்கிறார். உனக்குத் தெரியாமல். அவர் இந்தத் தீவை மிதித்து விட்டார். அவர் ஒரு போரைத் துவக்கப் போகிறார் தன் ஆட்களுடன் அந்தப் போரில் நான் சாகப் போகிறேன். குண்டு பட்டு... ஆனால் சாகும் போது திருநாவுக்கரசு தான் பாரதிகுமாரால் சுடப்பட்டு செத்தாற்போல ஒரு நாடகம் ஆடிவிடுவேன். நீ தீவிரவாதியாகப் பயணத்தைத் தொடரப் போகிறாய் - என் யவனாவைக் காப்பாற்ற வேண்டி...'' என்று முடித்தான் வேணுபிரசாத்.

''உனக்குத் தண்டனை எதுவுமின்றி நான் காப்பாற்று கிறேன் வேணு'' என்றான் திருநாவுக்கரசு பிரமித்துப் போன குரலில்.

''உன்னால் முடியாது. அச்சுதன் அரசாங்கத்தை விலைக்கு வாங்கக் கூடியவன். அரசாங்கம் என்பது பேராசைக்காரர்களின் கூடாரம். அங்கே தர்மங்கள், நியாயங்கள் எல்லாம் அந்நிய மொழி வார்த்தைகள். அர்த்தமற்றவை. உனக்கு வேணுபிரசாத்தாக மாறுவதைத் தவிர வேறு வழியில்லை. நான் நிச்சயம் சாவேன். அது உறுதி. குண்டடி பட்டு செத்து உன் வடிவில் உயிர்

வாழ்கிறேனே. என் பணியை நீ செய். பரசு துணை புரிவான். யவனாவிடம் எதுவும் சொல்லாதே. அவளுக் குத் தெரியாது. சர்தார்ஜி வேஷத்தில் வந்தது நான்தான் என்று நம்பும் அப்பாவி அவள்... என்ன?''

திருநாவுக்கரசுவிற்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.

''புறப்படு திரு. பரசு உன்னைத் தன் நீர்மூழ்கிப் படகிற்குக் கூட்டிப் போவான். அங்கே யவனாவுடன் இரு. அவளை சந்தோஷப்படுத்து. இது என் கட்டளை. பூமிகா இருந்திருந்தாலும் அதையே தான் சொல்லியிருப்பாள். அச்சுதன் ஒழிந்த பின் உலகம் நடந்ததை அறிந்த பின் நீ யவனாவுடன் வெளி உலகிற்கு வந்து வாழ்க்கை நடத்த லாம். இந்தத் தீவிலேயே கூட இருக்கலாம். உனக்கு வேறு வழியே இல்லை. புறப்படு...'' என்று அவள் சொல்லி முடித்த நேரம் வெளியே துப்பாக்கி குண்டுகள் வெடிக்கும் ஓசை கேட்டது.

''பாரதிகுமார் வந்து விட்டார். பரசு... டேக் கேர். திரு. வெளியே வந்து உளறி விடப் போகிறான்'' என்று சொல்லிவிட்டு வெளியே பாய்ந்தான்.

துப்பாக்கிகள் பேசின. திடீரென்று வேணுபிரசாத்தின் அலறல் கேட்டது.

''ஐயோ... வேணுபிரசாத் என்று நினைத்து என்னைச் சுட்டு விட்டீர்களே சார். நான் உங்கள் திருநாவுக்கரசு சார்...''

தடதடவென்று காலச் சத்தம்.

வேணுபிரசாத் உள்ளே ஓடி வந்தான். அவன் மார்பில் குண்டு துளைத்த இடத்தில் இருந்து ரத்தம் பெருகியது.

''பரசு... கமான். சீக்கிரம். என் கைகள் இரண்டையும் வெட்டு. என் கால்களை வெட்டு. இல்லாவிட்டால்



ரேகைகளை வைத்து நான் வேணுபிரசாத் என்று அவர்கள் தெரிந்து கொண்டு விடுவார்கள்... கமான்.''

பரசுராம் தயங்கவே இல்லை. அவன் கண்களில் கண்ணீர் இல்லை. வருத்தம் இல்லை. ஜெய் ஹிந்த் என்று முணுமுணுத்தபடி அவன் வேணுபிரசாத்தின் இடது கையில் ஒரு வெட்டு வெட்டினார். மணிக்கட்டோடு துண்டான கையைக் கடலில் வீசினான். இன்னொரு கையை வெட்டினான். கடலில் வீசினான். கால்கள் இரண்டையும் வெட்டினான். கடலில் வீசினான்.

''சுறாக்களுக்கு நல்ல வேட்டை பரசு'' என்று முணு முணுத்தான் வேணுபிரசாத்.

பரசுராம் தன் துப்பாக்கியால் அவன் நெற்றிப் பொட்டில் சுட்டான். வேணுபிரசாத் உடனடியாக இறந்து சரிந்தான்.

பரசுராம் திருநாவுக்கரசை இழுத்துப் போய்க் கடலில் பாய்ந்தான். கீழே கீழே இறங்கினார்கள். யவனாவை நோக்கி திருநாவுக்கரசு வேணுபிரசாத்தாகப் போய்க் கொண்டிருந்தான்.

கனவுதான். கண் விழித்தவுடன் எல்லாம் சரியாகி விடும் என்று எண்ணியபடி பிரமை பிடித்த நிலையி லேயே திருநாவுக்கரசு யவனாவை நோக்கிப் போனான். அவனது முகத்தில் சட்டென்று ஒரு ஆக்ஸிஜன் மாஸ்க் பொருத்தப்பட்டது. மூச்சுத் திணறலுக்குப் பின் அவன் சுவாசிக்கத் தொடங்கினான்.

அன்றைக்கு ஒரு வாரம் கழித்து இறந்து போனது திருநாவுக்கரசுதான் என்று அரசாங்கம் தீர்மானித்து, வேணுபிரசாத் எங்கே எப்படி தென்பட்டாலும் கண்ட வுடன் சுடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

இருப்பினும் வாய்மையே வெல்லும்.

★

# பிரியமானவள்



## 1

மிக நெருக்கமானவர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பப் பட்டிருந்தது...

அழைக்கப்பட்டிருந்தவர்கள் அத்தனை பேரும் வந்திருந்தார்கள்...

அது ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் விருந்துக் கூடம். அதன் ஒரு ஓரத்தில் நீளமான மேஜை போடப் பட்டு மேஜையின் மேல் பர்னர் ஸ்டவ்கள் மெலிதான நீல ஜ்வாலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. மேலே ட்ரேக்களில் உணவு வகைகள் மசாலா வாசனையுடன் சூடு தணியாமல் மெலிதான உணவு ஆவியை வெளிப் படுத்திக் கொண்டிருந்தன. சூப் வகைகள். வெஜி டேரியன், நான்-வெஜிடேரியன் வகைகள்.



இன்னொரு மூலையில் ட்ரிங்க்ஸ் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. ஒயின், ஜின், ஒயிட் ரம், ஸ்காட், விஸ்கி, பழரசம். அவரவருக்குத் தேவையானவற்றை அவரவர் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் பெரும்பாலும் கோட் அணிந்திருந்தார்கள். கோட் அணியாதவர்கள் டிஸைன் சட்டை, அணிந்திருந் தார்கள். பெண்கள் ஜீன்ஸ் பேண்ட், சட்டை என்றும் லோ ஹிப் புடவை, ஸ்லீவ்லெஸ் ஜாக்கெட் என்றும் மிடி, டாப்ஸ் என்றும் உடுத்தியிருந்தார்கள்.

கேரளாவில் இருந்து வந்திருந்த பெண்கள் பாவாடை, சட்டை மற்ற எல்லா உடைகளையும் விட பாவாடை சட்டையில் கவர்ச்சி அதிகமாக இருந்தது. அவர்கள் ஆண் களுக்குப் பக்கமாக நடந்தபோதெல்லாம் ஆண்களிடம் இருந்து பெருமூச்சு வெளிப்படுவதை உணர முடிந்தது.

ஆண்கள் பெரும்பாலும் ஒயிட் ரம்மும், ஸ்காட்சும் விரும்பி எடுத்துக் கொண்டார்கள். பெண்கள் ஒயினும், ஜின்னும். நடிகைகளுடன் கூட வந்திருந்த அம்மாக்கள் ஒன்றிரண்டு பேர் பழரச கிளாஸை எடுத்துக் கொண்டு பரிதாபமாகத் தோற்றமளித்தார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் லேசான தள்ளாட்டத்துடன் உரத்த சிரிப்புடன், கிறங்கிய கண்களுடன் விருந்தினர் களிடையே புகுந்து புகுந்து நடந்தார்கள். வேண்டப்பட்ட இன்னொரு பெண்ணைப் பார்த்தால் கட்டிப் பிடித்துக் கன்னத்தில் முத்தம். சில ஆண்கள் தங்களுக்கு ஏற் கெனவே அறிமுகமான பெண்களைப் பார்த்து, விழிகளை அகல விரித்து, ஆரவாரமாகச் சிரித்து அந்தப் பெண்களின் இடுப்புப் பிரதேசங்களில் கை வைத்து வளைத்து ரோமியோ - ஜூலியட், ஆதாம் - ஏவாள், லைலா - மஜ்னு

போஸ் கொடுத்து கோப்பையின் மதுவில் இருந்து ஒரு துளி கட சிந்தாதவாறு எச்சரிக்கையுடன் இருந்து கொண்டு தாம் வளைத்த பெண்களின் உதடுகளில் முத்தமிட்டார்கள். பெண்கள் அந்த முத்தங்களை வெட்கமின்றி ஏற்றுக் கொண்டார்கள்.

ஆரவாரம், சிரிப்பு, கலகலப்பு, இடுப்புக்குக் கீழே இருக்கும் உறுப்புகளைப் பற்றிய ஆங்கில அப்பட்டப் பேச்சு.

செக்ஸ் பேசுவதில் ஆணாவது, பெண்ணாவது.

பாரதி ராஜசேகரனுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. இந்தப் பார்ட்டி அவனது நண்பன் தளவாய் பரசுராமால் அளிக்கப்படுவது. தளவாய் பரசுராம் நாகர்கோவில்காரன். கேரளாவின் ஒரு கிராமத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு ஏதோ ஒரு பிரிட்டிஷ் காலத்திலேயே குடிபெயர்ந்த அவனது பெற்றோர்களுக்குப் பிறந்தவன். (தகப்பன் - மலையாளம், தாய் - தமிழ்) தமிழ் மட்டும் அறிந்தவன். ஆனால் அதை மலையாள வாடையோடு பேசுபவன். பாரதி ராஜசேகரனுக்காக இந்த பார்ட்டி செலவை முழு மனதுடன், மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவன்.

பாரதி ராஜசேகரனுக்குச் சொந்த ஊர் திருச்சிக்குப் பக்கத்தில் இருக்கும் விராலிமலைக்குப் பக்கத்தில் இருக்கும் பெருங்களஞ்சியம் கிராமம். சினிமா ஆசையில் ஊரை விட்டு ஓடி தருமமிகு சென்னையில் கலந்தவன், கூவம், சென்னைத் தமிழ் ஆகிய சூழ்நிலைகளுக்குப் பழக்கப்பட்டு அவற்றுடனேயே பிறந்தது போன்ற ஓர் இயல்புடன் வளர்ந்தவன்.

நிறைய சினிமா கம்பெனிகள் ஏறி இறங்கியிருக்கிறான். வாட்டர் பாய், காபி பாய், விஸ்கி பாய், புரோக்கர் பாய், ஆபீஸ் பாய் போன்ற உன்னதமான வேலைகளில்



எல்லாம் இருந்து அடிபட்டு அனுபவப்பட்டுக் கடைசியில் உதவி இயக்குநராகப் பரிமளித்தவன் பத்துப் படங்களுக்கு உதவி இயக்குநராகப் பணிபுரிந்து விட்டு நிறைய அவமானங்கள், அடி உதைகள் ஆகியவற்றை அடைந்து, மரத்துப் போய் ஐந்து படங்களுக்கு இணை இயக்குநராகப் பணிபுரிந்தவன். கடைசியில் ஒரு தயாரிப்பாளரைப் பிடித்து அவரிடம் கதை சொல்லி, திரைப்படம் டைரக்ட் செய்யும் வாய்ப்பை அடைந்தவன். அந்தப் படத்திற்கான பூஜை போட வேண்டிய நாளன்று தயாரிப்பாளர் திடீர் மாரடைப்பால் காலமாகி விட ராசியற்றவன் என்று கனவுத் தொழிற்சாலையினால் ஒதுக்கப்பட்டவன்.

அந்தப் படத்தை மட்டும் அவன் வெற்றிகரமாக இயக்கியிருந்தால் அவன் சென்று அடைந்திருக்கும் இடம் சினிமா உலகின் எவரெஸ்ட்.

பாரதி ராஜசேகர் வேறு வழியின்றி ஊருக்குத் திரும்பி வயல்காட்டில் இறங்கி கூலி வேலை செய்யலாம் என்று முடிவெடுத்தபோதுதான் பாரதி ராஜசேகரை தளவாய் பரசுராமன் அழைத்தான். அவன் ஒரு புரொடக்ஷன் மேனேஜர். பாரதி ராஜசேகர் பட்ட கஷ்டங்களைக் கண்கூடாகப் பார்த்தவன். பாரதி ராஜசேகரன் தளவாய் பரசுராமனைச் சந்தித்தான்.

தளவாய் பரசுராமன் சின்னத்திரைக்கு ஒரு மெகா சீரியலை படமாக எடுத்து வெளியிடலாம் என்று யோசனை கூறினான். பாரதி ராஜசேகரன் முதல் மெகா சீரியலுக்கு கதை, வசனம், திரைக்கதை, இயக்கம்.

நல்ல லாபகரமாக வந்து விட்டால் இரண்டாவது மெகா சீரியலில் இருந்து அவனும் தளவாய் பரசுராமனும் ஐம்பது

ஐம்பது என்ற சதவிகிதத்தில் கூட்டாக இன்னொரு மெகா சீரியலை எடுக்க வேண்டியது.

ராஜசேகரன் ஒத்துக் கொண்டான். வேறு வழி?

முதல் மெகா சீரியல் சூப்பர் ஹிட். காதல், மர்மம், சாகசம், குடும்பச் சண்டை என்று எல்லாம் கலந்த விறு விறுப்பான மெகா சீரியல். முதலில் இருநூறு நாட்களுக் குத் திட்டமிட்டுப் பின்னர் ஐந்நூறு நாட்களுக்கு வளர்ந்தது. விளம்பரங்கள் தானாக வந்தன.

தளவாய் பரசுராமன் ஒரு சீரியலிலேயே மூன்று கோடி ரூபாய் லாபம் பார்த்தான். இரண்டாவது சீரியலுக்கு பாரதி ராஜசேகரன் ஐம்பது சதவீத பார்ட்னர். இதில் ஆளுக்கு இரண்டரை கோடி எதிர்பார்த்தார்கள். ஆனால் தளவாய் பரசுராமனுக்கு மூன்று கோடி கிடைத்தது. பாரதி ராஜ சேகரனுக்கு ஒரு கோடி நின்றது. தளவாய் பரசுராமன் ராஜசேகரனை ஏமாற்றவில்லை. ராஜசேகரன் பணம் போட்டது வட்டிக்குக் கடன் வாங்கி. வட்டியெல்லாம் கொடுத்தது போக முடிவில் நின்றது ஒரு கோடி. ஒன்று மில்லாமல் பெருங்களஞ்சியத்தில் இருந்து வந்தவனுக்கு ஒரு கோடி என்றால் சும்மாவா?

தளவாய் பரசுராமனின் பெயர் இண்டஸ்ட்ரியில் மெகா பரசுராமன் என்று மாறிவிட்டது. பாரதி ராஜசேகரனை மற்ற தயாரிப்பாளர்கள் அணுகப் பயந்தார்கள். மெகா பரசுராமனைப் பகைத்துக் கொள்ள விருப்பமில்லாமல்.

இரண்டாவது சீரியலின் வெற்றிவிழா நட்சத்திர ஹோட்டலின் விருந்து மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பாரதி ராஜசேகரன் ஸ்காட்சுடன் விருந்தை அனுப வித்துக் கொண்டிருந்தான். அவன் கதை, திரைக்கதை,



வசனம் எழுதி டைரக்ட் செய்த சீரியல் மலையாளத்தில் டப் செய்யப்பட்டு, தெலுங்கில் டப் செய்யப்பட்டு அந்த சானல்களிலும் பிய்த்து உதறியதால் டப்பிங் ரைட்ஸ் வாங்கியவர்கள் விருந்துக்கு வரும்போது தொட்டுக் கொள்ள இருக்கட்டுமேயென கேரளப் பெண்களை பாவாடை, சட்டையிலும், ஆந்திரப் பெண்களை லோஹிப், ஸ்லீவ்லெஸ்ஸிலும் அழைத்து வந்திருந்தார்கள். அவர் களும் ஆண், பெண் பாகுபாடு இன்றி அமர்க்களமாகத் 'தண்ணி' அடித்துவிட்டு முத்தமிட்டுக் கொண்டிருந் தார்கள்.

அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. வாழ்க்கை பிளாட்பாரத்தில் கழியப் போகிறது என நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு அத்தாணி மண்ட பத்தின் முன் வரிசையில், முதல் இருக்கை கிடைத்தாற் போல் இருந்தது.

அந்தப் பெண்களை அவன் ரசித்தான். ஒரு பெண் ஸ்லீப்வெல் ரப்பர் படுக்கையை நினைவு படுத்தினாள். ஒருத்தி ஸாண்ட்ரோ காரை நினைவு படுத்தினாள். இன்னொருத்தி ஐஸ்வர்யாராயை. இன்னொருத்தி அவன் படித்த ஒரு 'ஏ' ஜோக்கை ஞாபகப்படுத்தினாள். அவர் களுக்கெல்லாம் பொதுவான ஒரு அம்சம் இருந்தது. எக்ஸிபிஷனிஸத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தார்கள். தங்களின் உடல் அமைப்பைப் பற்றி யாரும் எந்தவிதச் சந்தேகமும் கொண்டு விடக்கூடாது என்பதில் முனைப்பாக இருந்தார்கள்.

அவர்களில் ஒருத்தி மட்டும் பாரதி ராஜசேகரனை மிகவும் கவர்ந்தாள். அவள் எளிமையாக இருந்தாள். புடவை, ரவிக்கை, லோஹிப்தான் என்றாலும் ரசிக்கத்

தக்கதாக இருந்தது. கையில் பழரசக் கோப்பை ஒன்றை வைத்திருந்தாள். நல்ல அழகி. நல்ல உடல்வாகு. அந்த புடவை அவளுக்கென்றே உருவானது போல் இருந்தது. அவள் லிப்ஸ்டிக் அணிந்திருந்தாளா என்ன? பவுடர் தீற்றியிருந்தாளா என்ன?

பாரதி ராஜசேகரன் தன்னை அறியாமல் அடிக்கடி அவள் பக்கம் திரும்பினான். அப்படித் திரும்பிய போதெல்லாம் அவளும் தற்செயலாக அவன் பக்கம் திரும்பினாள்.

கண்கள் சந்தித்தன. அவளுடைய கண்கள் அகன்று இருந்தன. குழந்தையின் கண்கள் போல் கள்ளமின்றித் தெரிந்தன. அவள் இமைகளைப் படபடக்க வைத்த விதம், அவன் பார்த்து விட்டான் என்பதை அறிந்ததால் அவள் கன்னங்களில் பாய்ந்த வெட்கச் சிவப்பு.

பாரதி ராஜசேகரனின் இதயத் துடிப்பு எகிறியது. ஷூட்டிங்கிற்காக அவன் பல பெண்களைப் பார்த்திருக்கிறான். ஸ்க்ரீன் டெஸ்டின் போது அவன் உரிமை மீற மாட்டானா என்று பல பெண்கள் கண்களிலேயே அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஏற்படாத உணர்வு இப்போது ஏற்படுகிறதென்றால் என்ன அர்த்தம்?

அவள் யார் என்று விசாரிக்க வேண்டும் போல் இருந்தது.

பரசுவைத் தேடினான்.

பரசு இரண்டு பெண்களின் தோளின் மேல் கை போட்டபடி தள்ளாடித் தள்ளாடி அந்த ஹாலின் முடிவில் இருந்த ஒரு பிரைவேட் அறையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.



ராஜசேகருக்குப் புன்னகை வந்தது. இந்தத் தருணத்தில் பரசுவைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று தோன்றியது.

பரசுவின் துணை எதற்கு? நாமே விசாரித்து விட்டால் போகிறது என்று எண்ணி அவளைத் தேடினான்.

அவள் இல்லை.

எங்கே போனாள்?

மறக்க முடியாத அந்த முகம் அவ்வளவு கூட்டத்திலும் நிலவைப் போல் தனியாகத் தெரிந்ததே! எங்கே போய் விட முடியும்?

ராஜசேகருக்கு ஏமாற்றமாக இருந்தது.

அதன் பின் விருந்து அவனுக்கு ரசிக்கவேயில்லை.



# 2

பாரதி ராஜசேகரன் தனது ஃபியட் NE 118ஐச் செலுத்திக் கொண்டிருந்தான். அவனது வெற்றிக்குப் பின் முதன் முதலாக வாங்கிய கார். அவ்வப்போது சின்னச் சின்னதாக சில்லரைத் தொந்தரவுகள் கொடுத்தாலும் அந்தக் காரை விற்றுவிட மனமின்றி இன்னும் வைத்துக் கொண்டிருந்தான்.

ஏ.ஸியை அமர்த்தி ஜன்னல் கண்ணாடியை இறக்கினான். வெளியில் இருந்து காற்று பனித்தூவலுடன்

சில்லென்று முகத்தில் வீசியது. சிலிர்த்தது.. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

ஸ்காட்ச் அருந்தியிருந்தான் என்றாலும் மிக மிதமாக. ஒன்றரை பெக்கிற்கு மேல் போகவில்லை. எனவே அவனுடைய நடவடிக்கைகளில் எந்தவிதத் தடுமாற்றமும் இல்லை. மனநிலை மிக மிக மகிழ்ச்சியாக இருந்தது.

கார் சீரான விர்ருடன் விரைந்து கொண்டிருந்த போதுதான் சாலையில் விளக்கு வெளிச்சத்தில் அந்தப் பெண்ணைப் பார்த்தான் ராஜசேகரன்.

அந்தப் பெண் ஷூட்டிங்கின் போது டைரக்டர் ஸ்டார்ட் சொன்னவுடன் பயந்த முகபாவத்துடன் ஓடி வரும் பெண்ணாகத் தெரிந்தாள். அவள் புடவைத் தலைப்பு அவளுக்குப் பின்னால் தரையில், சாலையில் தேய்ந்து கொண்டே வந்தது.

இது ஷூட்டிங் இல்லை. ஷூட்டிங் பொய். 'கட்' சொன்னவுடன் அந்தப் பெண் ஓடுவதை நிறுத்துவாள். ஆனால் இது உண்மை. நிஜம் அந்தப் பெண் உண்மையிலேயே ஏதோ ஒரு ஆபத்தில் இருந்து தப்பித்து ஓடி வருகிறாள்.

ராஜசேகரின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அவள் காரைக் கவனித்து விட்டாள். இரண்டு கைகளையும் இயேசு போல், திரௌபதி போல் விரித்தபடி ஓடி வந்தாள்.

நிறுத்து, நிறுத்து.

உதவு, உதவு.

ஆபத்து, ஆபத்து.



ராஜசேகரன் அதற்கு மேல் எதையும் யோசிக்காமல் ப்ரேக்கை அழுத்தினான். சரியான அழுத்தல் அது. மிகச் சரியான நேரத்தில் அழுத்தப்பட்ட அழுத்தல் அது.

கார் டயர்கள் கிறீச்சிட்டு நின்றன.

அவள் ஏறக்குறைய பானட் மேல் மோதிக் கொண்டாள்.

ஹெட் லாம்ப் வெளிச்சத்தில் அவள் முகத்தைப் பார்த்த ராஜசேகரன் அதிர்ந்தான்.

காரணம், அவள் அதே பெண்.

பார்ட்டியில் பார்த்து மயங்கினானே, அந்த அழகிய பெண். தலை கலைந்து, முகமெங்கும் பயம், பயம், பயம் என்ற மூன்றெழுத்துக்கள் பிரதானமாய்த் தெரிய, அவளது மூடப்படாத மார்புப் பகுதி விம்மித் தணிந்தது - விம்மித் தணிந்தது - விம்மித் தணிந்தது. அவளது ரவிக்கை வியர்வையில் நனைந்திருந்தது. கவர்ச்சியாக இருந்தது.

அவன் மனதைக் கவர்ந்த அவளது அழகிய விழிகளில் கலக்கம், கலக்கம், கலக்கம்.

அவள் டிரைவிங் சீட்டருகே வந்தாள்.

''ப்ளீஸ்... ப்ளீஸ்... ப்ளீஸ்... என்னை மூன்று பேர் துரத்துகிறார்கள். அவர்களிடம் சிக்கினால் கற்பழிக்கப்பட்டு நான் செத்துப் போவேன். என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள், ப்ளீஸ்.''

அவளுடனான இரண்டாவது சந்திப்பு இப்படி இருக்கும் என்று அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

சட்டென்று கார்க் கதவைத் திறந்தான்.

''ஏறிக் கொள் மிஸ்.''

அவள் காருக்குள் ஏறினாள். கதவைச் சாத்திக் கொண்டாள். புதரில் ஒளியும் முயல் போல் அப்படியே கார் சீட்டின் அடியில் புதைந்து உட்கார்ந்தாள்.

அவன் காரை மிக எச்சரிக்கையாக ஓட்டினான். ஹெட்லைட் வெளிச்சத்தில் யாராவது தெரிகிறார்களா என்று பார்த்தான். யாரும் இல்லை. இருட்டில், கடையோரம் ஏதாவது நிழல்கள் பதுங்கியிருக்கின்றனவா என்று பார்த்தான். ஊஹூம்.

''யாரும் இல்லை மிஸ்! சீட்டில் எழுந்து உட்கார்'' என்றான் மெல்லிய குரலில். ஜன்னல் கண்ணாடியை ஏற்றினான். ஏ.ஸி.யை ஆன் செய்தான். ஏ.ஸி.யின் ரீங்காரம் தம்பூரா சுருதி போல் காரில் இனிமையாகக் கேட்டது.

அவள் மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். ஜன்னலின் கண்ணாடியில் கண்களைப் பதித்து வெளியே பார்த்தாள். அவள் பயம் இன்னும் குறையவில்லை.

''பயப்படாதே மிஸ். கண்ணாடி கருப்பாக இருக்கிறது. நீ பார்த்தால் வெளியில் இருக்கும் நடமாட்டம் தெரியும். ஆனால் வெளியே உள்ளவர்களுக்கு காரில் இருப்பவர்களைத் தெரியாது.''

அவள் பயம் கொஞ்சம் தணிந்தது. அவள் மார்பின் விம்மல் - கொஞ்சம் அடங்கியது. அவன் காரை ஓட்டிய படி ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தான்.

அவள் ரவிக்கை நனைந்திருப்பதும், அதனால் அது கொஞ்சம் ப்ளெயின் கிளாஸ் டைப்பில் மாறி உள்ளே பாதுகாக்கப்பட்ட புதையலை வெளியே காட்டிவிட முயல்வதுமாய் தெரிந்தது. இருந்தது.

அவள் அவன் பார்வையைப் பார்த்தாள்.

தன் நிலையைப் பார்த்தாள். குப்பென்று வெட்கச் சிவப்பு.



பரபரவென புடவையை இழுத்துத் தன் மேல் படர விட்டுக் கொண்டாள். மறுபடி சட்டென்று திரும்பிக் கூர்மையாக அவன் முகம் பார்த்தாள். அவள் முகத்தில் அவனை அடையாளம் தெரிந்து கொண்டதால் ஆச்சரியம் பிரதிபலிப்பு.

''நீங்கள்... நீங்கள்?''

''யெஸ். பார்ட்டியில் சற்று முன் பார்த்த அதே கோழை தான்.''

''கோழையா?''

''ம்.''

''இருக்க முடியாது.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''என்னை எவ்வளவு பெரிய ஆபத்தில் இருந்து காப்பாற்றி இருக்கிறீர்கள்!''

''இருக்கலாம் மிஸ். ஆனால் பார்ட்டியில் முதன் முதலாக உன் முகத்தைப் பார்த்தவுடனே உன்னிடம் வந்து என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என நினைத்தேன். ஆனால் கடைசி வரை உன் அருகே வர தைரியம் வரவில்லை. அப்படி என்றால் கோழை தானே?''

''இல்லை.''

''பின்னே?''

''நீங்கள் ஒரு ஜென்டில்மேன் என்பதைச் சொல்கிறது. ஆனால் இப்போது அறிமுகப்படுத்திக் கொள்ளலாமே.''

''நான் பாரதி ராஜசேகரன்.''

''அப்படியானால்... அப்படியானால்?'' என்று பேச்சு வராமல் அவள் வாயை மிக அழகாகத் திறந்தாள்.

அவன் காத்திருந்தான்.

"நீங்கள்தான் டைரக்டர்?"

"ஆம்."

"கதை, திரைக்கதை, வசனம்?"

"ஆம். ஆம். ஆம்."

அவள் சட்டென்று குனிந்து ஸ்டியரிங்கில் பதிந்திருந்த அவனது கையை முத்தமிட்டாள்.

அவனுக்கு மேகத்தின் மேல் கொண்டு போய் உட்கார வைத்தது போல் இருந்தது.

"நான் உங்களைப் பார்க்க வேண்டும். பேச வேண்டும் என்பதற்காகத்தான் கேரளாவிலிருந்து அந்த விருந்திற்கு வந்தேன். எனக்குத் தெரிந்த பெண் ஒருத்தி இந்த பார்ட்டியில் கலந்து கொள்கிறாள் என்று தெரிந்து கொண்டு அவளோடு சேர்ந்து வந்தேன். ஆனால் பார்ட்டியில் அந்தப் பெண்கள் எல்லாம் சேர்ந்து அடித்த கூத்து எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் உங்களைப் பார்க்கா விட்டால் பரவாயில்லை என்று வெளியே வந்து விட்டேன்."

"ஏதோ ஆபத்தில் மாட்டியதாகச் சொன்னாயே?"

"ஆம்! நான் அந்தப் பெண்களுடன் ஸில்வர் ஸ்டார் ஹோட்டலில் தங்கி இருக்கிறேன். அந்த ஹோட்டலுக்குப் போக ஓர் ஆட்டோவை அழைத்தேன். ஆட்டோக்காரன் என்னை ஏற்றிப் போய்க் கொண்டு இருந்தான். உங்களைச் சந்திக்க முடியாத ஏமாற்றத்தில் மனம் தவித்தது. கண்களை மூடி சாய்ந்து உட்கார்ந்தேன். பயணக் களைப்பு தூங்கி விட்டேன் போலிருக்கிறது. யாரோ என் புடவையை உருவ முற்படுவது தெரிந்து திடீரென்று கண் விழித்துப் பார்த்தேன். பார்த்தால்..."



"பார்த்தால்?" என்று ஆர்வம் தாங்காமல் கேட்டான்.

"ஆட்டோவை ஓட்டி வந்த டிரைவர் கீழே கிடக்கிறான். யாரோ மூன்று தடியன்கள் இருட்டில் ராட்சசர்கள் போல நின்று கொண்டிருக்கிறார்கள். ஒருவன் என் புடவையை உருவிக் கொண்டிருக்கிறான். மற்ற இரண்டு பேரும் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் என்று காவலாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் திமிறி, தப்பித்து ஓடினேன். அவர்கள் துரத்தினார்கள். நான் சிக்கியிருந்தால் நிச்சயம் செத்திருப்பேன். என் அதிர்ஷ்டம் உங்களை நான் சந்தித்தது" என்று சொன்னாள்.

அவள் பேசும்போது பயம் அகன்று இருந்ததால், கையை ஆட்டி ஆட்டிப் பேசிய விதத்தில் ஒரு நளினம் இருந்தது. அவள் கண்களை அகட்டி அகட்டிப் பேசிய தோரணையில் ஒரு கதகளி அரங்கேறியது.

ஹோட்டல் வாசலை அடைந்தான். கேட்டில் நின்றவன் கதவைத் திறந்தான். பார்க்கிங் லாட்டில் வண்டியை நிறுத்தினான்.

அவள் இறங்கினாள்.

"என் அறை வரைக்கும் வந்து விட்டுப் போங்களேன்."

"அறைக்கு வந்தால் என்ன கிடைக்கும்?"

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"எதுவும் வேண்டாம். நாளைக்குப் பகலில் வருகிறேன்" என்றான்.

அவள் அவனைப் பார்த்தாள்.

"நீங்கள் ஒரு ஜென்டில்மேன் என்பதை மறுபடி மறுபடி நிரூபிக்கிறீர்கள்!" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"குட்-நைட் அண்ட் ஸ்வீட் ட்ரீம்ஸ்" என்று கையசைத்து விட்டுப் போனாள்.

குட் நைட், ஸ்வீட் ட்ரீம்ஸ்.

ராஜசேகரன் மெல்ல சிரித்துக் கொண்டான். பின் காரை ஸ்டார்ட் செய்தான். வாசலுக்கு செலுத்தி வந்தான்.

ஹோட்டல் காம்பவுண்டைத் தாண்டி ஒரு ஐம்பதடி தூரம் வந்திருப்பான். தெருவிளக்கு சீட்டில் விழுந்து ஏதோ மின்னியது. காரை நிறுத்தினான். சீட்டில் என்ன இருக்கிறது என்று பார்த்தான்.

அது ஒரு முத்து மாலை. அவள் அணிந்திருந்தது.

அது அப்படி ஒன்றும் விலை உயர்ந்ததாக இருக்காது. இருந்தாலும் அதற்கென ஏதாவது செண்டிமெண்ட்ஸ் அது இது என இருந்தால்?

உடனே அதைக் கொடுத்து விட்டு வருவது எனத் தீர்மானித்தான். எடுத்துக் கொண்டு காரில் இருந்து இறங்கினான்.

மெல்லப் பின்னோக்கி நடந்தான்.

அவள் பெயர் என்ன? தெரியாது. எந்த அறையில் தங்கி இருக்கிறாள்? தெரியாது. இந்த நேரங்கெட்ட நேரத்தில் ரிசப்ஷனிஸ்டிடம் என்ன சொல்லிக் கேட்பது என்று புரியவில்லை.

திகைத்துப் போய் நின்று விட்டான். அவள் பெயரைக் கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் ரொம்பவே ஜென்டில்மேனாக இருந்து விட்டோம் போலிருக்கிறது.

வெட்கமாக இருந்தது. அந்த முத்து மாலையை உள்ளங்கையில் ஏந்தி முகர்ந்து பார்த்தான். அதில் அவளது வாசனை இருந்தது.



எப்படியும் நாளைக் காலை பார்க்க வேண்டி இருக்கும்.

பார்ட்டியில் திடீரென்று கை நழுவ விட்டதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவளை இன்னொரு முறை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா? அதே போல் இப்போதும் அவளைப் பார்க்கும் இன்னொரு வாய்ப்பு கிடைக்கத்தான் போகிறது.

ராஜசேகரன் மறுபடி காரை நோக்கி நடந்தான்.

அந்தப் பிரதேசம் மிக அமைதியாக இருந்தது. காற்று மட்டும் லேசான சலனத்துடன் வீசிக் கொண்டிருந்தது. கடை வாசல்களில் போஸ்டர் விரித்து இந்நாட்டின் நாளைய மன்னர்களில் சிலர் அந்தப் போஸ்டர்களின் மேல் படுத்துக் கனவு கண்டு கொண்டிருந்தனர். (இருக்கலாம் அல்லவா?) மேலே வானில் நட்சத்திரங்கள் எவாக்குலேஷன் போல ஒட்டு மொத்தமாகக் குடி பெயர்ந்து கொண்டிருந்தன. ஒரு நாய் போட்டி எதுவும் இல்லாமல் இரை தேடும் பொருட்டு ஓடியது.

அவன் காரை அணுகினான். டிரைவிங் சீட் கதவில் கை வைத்த போது பின் சீட்டில் புன்னகையுடன் அமர்ந்திருந்த இருவரைப் பார்த்தான்.

"உள்ளே ஏறு" என்றான் அவர்களில் ஒருவன்.

## 3



அவர்கள் இருவரும் திடகாத்திரமாக இருந்தார்கள். டி ஷர்ட் போல என்னவோ அணிந்திருந்தார்கள். முகத்தில்

ஒரு வாரமாக ஷேவ் செய்யப்படாத சொர சொர முடி. தலைமுடி இருவருக்குமே பின்னோக்கி வாரி விடப்பட் டிருந்தது. தலை முடி வாரி விடப்பட்ட தன்மையில் முரட்டுத்தனம் கலந்திருந்தது.

அவர்களது புன்னகைகளில் நட்பு இல்லை. கிண்டல் இருந்தது. கேலி இருந்தது. ராஜசேகர் காரில் ஏறத் தயங்கி னான். அவன் தயக்கத்தைக் கவனித்து விட்டு அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு பற்கள் தெரிய இளித்துக் கொண்டார்கள். அந்த இளிப்பு விகார மாக இருந்தது.

ராஜசேகர் என்ன செய்வது என்று யோசித்தான். இவர் கள் இருவரும் யார்? ஒருவேளை அந்தப் பெண்ணைத் துரத்திய மூவரில் இருவரா? அப்படியானால் இன்னொரு வன் எங்கே?

காரின் உள்ளே ஏறினால் தன் நிலை மிகவும் வீக்காக இருக்கும் என்று தோன்றியது அவனுக்கு. பக்கத்தில்தான் ஹோட்டலின் கேட் - கீப்பர் இருக்கிறான். ஒரு குரல் கொடுத்து உதவிக்கு யாரையாவது அழைத்துக் கொண் டால் இவர்களை இன்னும் தைரியமாக எதிர்கொள்ளலாம்.

அவன் பின் வாங்கினான். திரும்பினான். ஏறக்குறைய ராஜசேகரனை மோதி விடுவது போல் இன்னொருவன் நின்றிருந்தான்.

ராஜசேகரன் முதுகில் ஏதோ ஒரு ஆயுதத்தின் முனை படிந்தது. அது கூர்மையாக இருந்தது.

''நான் என்ன செய்து விட்டேன்? நீங்கள் எல்லாம் யார்? எதற்காக இந்த மிரட்டல்?''

''ஐயோ. ஒன்றும் தெரியாத சின்னக் குழந்தை கேட் கிறான் பார். ஏறுடா காரில்.''



ராஜசேகர் கத்தலாமா என்று யோசித்தான். அவன் கத்தினாலும் யாரும் எழுந்து வருவார்கள் என்பது என்ன நிச்சயம்? உதவிக்கு வருவார்கள் என்பது என்ன நிச்சயம்?

இப்படி நடுத்தெருவில் ஒரு அராஜகம் மற்றும் அநியாயம் நடப்பதைப் பார்த்து விட்டு இன்னும் கொஞ் சம் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கி விட்டால் அவனால் என்ன செய்து விட முடியும்?

கத்திப் பார்க்கலாம் என்று யாவற்றையும் மீறித் தீர் மானித்தாலும் அவன் முதுகில் பதிந்திருக்கும் கூர்மை யான ஏதோ ஒன்று ராஜசேகரைத் தயங்க வைத்தது.

ராஜசேகர் கதவைத் திறந்தான். டிரைவிங் சீட்டில் ஏறி உட்கார்ந்தான். அவன் காலுக்குக் கீழே கதவுக்குப் பக்கத் தில் எப்போதும் ஒரு ஹாக்கி மட்டையை வைத்திருப்பது வழக்கம். ஷூட்டிங்கிற்குக் கண்ட இடங்களுக்குப் போகும்போது தொந்தரவு பண்ணும் சில குட்டி தாதாக் களைப் பயமுறுத்த அந்த ஹாக்கி மட்டையைக் கையில் எடுத்துக் கொள்வான். சரியான இடத்தில் ஹாக்கி மட் டையை உபயோகித்தால் சில பேர்களை திரும்பி இந்த உலகில் நடமாட முடியாதபடி கூடச் செய்து விடலாம்.

சட்டென்று ஹாக்கி மட்டையைக் குனிந்து கையில் எடுத்தான். கதவை ஒரேயடியாகத் தள்ளித் திறந்தான். கீழே உருண்டு விழுந்தான். காருக்கு வெளியே நின் றிருந்தவன் ஸ்டீல் டோரால் அடிபட்டான்.

அப்படியே பின்னால் சரிந்தான். அவன் சரிவதைப் பார்த்துவிட்டுக் காரில் இருந்த இருவரும் இரண்டு கதவுகளையும் வேகமாகத் தள்ளித் திறந்து கொண்டு வெளிப்பட்டார்கள்.

இருவர் கைகளிலும் கத்திகள் மின்னின.

கையில் கத்தி வைத்திருந்த தைரியத்தில் இருவரும் வெகு விகாரமாகச் சிரித்துக் கொண்டே ராஜசேகரன் மீது பாய்ந்தார்கள்.

முதலில் வந்தவன் ராஜசேகரிடம் இருந்த ஹாக்கி ஸ்டிக்கைக் கவனிக்கவில்லை. ராஜசேகர் ஏதோ அசட்டுத் துணிச்சலில் காரை விட்டு இறங்கி விட்டதாகத்தான் நினைத்திருந்தான்.

ராஜசேகர் ஹாக்கி ஸ்டிக்கை இரு கைகளாலும் மிக இறுக்கமாகப் பற்றியிருந்தான்.

மெக்ஸிகோ தேசத்து காளை போல் தன்னை நோக்கி ஆவேசமாகப் பாய்ந்து வந்த முதலாவது ஆளைக் குறி வைத்து ஹாக்கி ஸ்டிக்கைக் காற்றில் ஒரு வீசு வீசினான்.

ஹாக்கி ஸ்டிக் காற்றைக் கிழித்த 'ஹ்ர்ரம்' துல்லியமாகக் கேட்டது. அந்த ஸ்டிக் முதலாவது ஆளின் இடுப்பைத் தாக்கியது. அவன் கத்தி எகிறியது. அடுத்த அடி அவனது காலின் மணிக்கட்டில்.

மணிக்கட்டு எலும்பில் அடிபட்டால் என்ன வலி வலிக்கும் என்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். அவன் அனுபவித்தான்.

வலி உச்சத்தில் இனந் தெரியாத கூச்சல் ஒன்றை வெளிப்படுத்தினான். உருண்டான். அசைவின்றிக் கிடந்தான்.

ராஜசேகரனுக்கு இப்போது தைரியம் வந்து விட்டது.

இரண்டாவது ஆள் கண் மூடித்தனமான வேகத்தில் வந்தவன் முதல் ஆள் உருண்டதைப் பார்த்துவிட்டு அப்படியே பிரேக் அடித்து நின்றான்.

அவன் கண்களில் திகைப்பு. லேசான பயம்.



ராஜசேகர் யோசித்தான்.

சட்டென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. சினிமாக் காட்சிகளுக்குக் கதை எழுதிப் பழக்கப்பட்டவன் என்பதால் அவனுக்கு அந்த மாதிரியான ஒரு யுக்தி தோன்றியது.

"இவன் தான் இன்ஸ்பெக்டர். அரெஸ்ட் ஹிம்" என்று கத்தினான்.

பிரேக் அடித்து நின்றவன் தன்னையறியாமல், தனது ரிஃப்ளெக்ஸின் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்து தான், ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்து திரும்புமுன் ராஜசேகரன் தனது ஹாக்கி ஸ்டிக்கை இன்னொரு முறை வீசினான்.

அந்த அடி அவன் தாடையில் பட்டது. அவன் பற்களில் ஒன்று சிதைந்தது. சரியான அடி அது. தட்டென்று ஹாக்கி ஸ்டிக் எதிரியின் தாடையில் மோதியது. ராஜசேகரனுக்கே வலித்தது.

அவன் கத்தியைப் பாய்ச்சினான்.

இந்த முறை ஸ்டிக் அவன் கையில் பட்டது. கத்தி எகிறியது. அதற்குள் கீழே விழுந்தவன் எழுந்தான்.

மூவருமாய் ராஜசேகரனை நோக்கி மெல்ல மெல்ல நெருங்கினார்கள்.

மூவரில் இருவர் அடிபட்டவர்கள். அதனால் பலவீனமானவர்கள். மேலும் அடியின் வலி அவர்களுக்குள் பயத்தை ஏற்படுத்தி இருக்கும்.

ராஜசேகரின் தைரியம் அதிகமாகி இருந்தது.

கையில் பிடித்திருந்த ஹாக்கி ஸ்டிக்கை ஃபார்மில் இருக்கும் டெண்டுல்கர் போல் பற்றிக் கொண்டு சுழற்றினான்.

அவர்களை அது கொஞ்சம் தள்ளி வைத்திருந்தது.

அந்த நடுத்தெரு சண்டை இன்னும் எவ்வளவு யுகத்திற்கு நீளப் போகிறது என்று ராஜசேகரன் நினைத்தபோது, சைரன் சப்தம் கேட்டது.

அந்த இடத்தில் சட்டென்று ஒரு போலீஸ் ஜீப் உற்பத்தியாகி அவர்கள் இருந்த இடத்தை நோக்கி வந்தது.

ராஜசேகரின் கை சலித்துப் போயிருந்த தருணம் அது. போலீஸ் ஜீப்பின் ஹெட் லாம்ப் வெளிச்சம் அவர்கள் நால்வர் மீது பளிச்சென்று பட்டது.

அவ்வளவுதான்.

அவர்கள் மூன்று பேரும் சட்டென்று அந்த இடத்தை விட்டு ஓடத் தொடங்கினார்கள்.

ராஜசேகர் ஒருவன் மேல் பாய்ந்தான். அவன் சட்டைப் பை கையோடு வந்தது.

அடுத்த வினாடி அவர்கள் இல்லை.

போலீஸ் ஜீப்பில் இருந்து ஒரு இன்ஸ்பெக்டர் இறங்கினார். ராஜசேகரை அணுகினார்.

"ஏதாவது அடிகிடி பட்டு விட்டதா? ஆஸ்பத்திரிக்குப் போய் விடலாம்" என்று உண்மையான பரிவுடன் சொன்னார்.

"நோ... நோ... ஐ'ம் ஆல்ரைட்" என்றான் ராஜசேகர்.

"ஏதாவது பொருளை எடுத்துக் கொண்டு போய் இருக்கிறார்களா?"

"எதுவும் மிஸ் ஆகவில்லை. நான் இங்கே இவர்களிடம் சிக்கி இருப்பது. உங்களுக்கு எப்படித் தெரிந்தது இன்ஸ்பெக்டர்?" என்று உண்மையான ஆச்சரியத்துடன் கேட்டான் ராஜசேகர்.



"ஸில்வர் ஸ்டாரில் ரூம் நம்பர் த்ரீ நாட் த்ரீயில் தங்கி இருக்கும் ஒரு லேடி - ராகினி என்று பெயர். அவர்கள் அங்கிருந்து பார்த்துவிட்டு இங்கே சண்டை நடப்பதை உணர்ந்து உடனே அவசர போலீசை அழைத்திருக்கிறார்கள். நான் பெட்ரோல் வேனோடு இங்கே அருகில் தான் சுற்றிக் கொண்டிருந்தேன். உடனே இங்கே வந்து விட்டேன். நான் இங்கே வந்தது அப்படித்தான். வெரி சிம்பிள்" என்றார் இன்ஸ்பெக்டர்.

ராகினி! ரூம் நம்பர் த்ரீ நாட் த்ரீ!

# 4



அடுத்த நாள் ராஜசேகர் அவளைச் சந்தித்தான். அவளை என்றால் ராகினியை அவனது உயிரைக் காத்த எல்லையம்மனை அல்லது காவல் தெய்வத்தை.

"எப்படி ராகினி. எப்படிக் கண்டு பிடித்தாய்?"

"எதை?"

"நான் அவர்களிடம் சண்டை போட்டுக் கொண்டிருப்பேன் என்பதை."

"சோழி ஜோசியம் போட்டுப் பார்த்தேன்" என்றாள். சிரித்தாள். ராஜசேகரின் முகம் அவளது பதிலால் வாடியது கண்டு அவசர அவசரமாகத் தன் பேச்சைத் திருத்திக் கொண்டாள். "எனக்கென்னவோ, என்னைத் துரத்தியவர்கள் அவ்வளவு எளிதாக ஏமாந்து போய் விடுவார்கள்

என்று தோன்றவில்லை. நான் கிடைக்காத ஏமாற்றம் அவர்களுக்கு இருக்கலாம். மேலும் என்னைக் காப்பாற்றியதால் உங்கள் மேல் கோபம் இருக்கலாம். அதனால் உங்களைத் துரத்தக் கூடும். உங்களை ஒரு தட்டாவது தட்டிவிட்டுப் போனால்தான் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கும் என்று தோன்றியது. ரூமுக்குப் போனேன். தூக்கம் வரவில்லை. உங்களைத் தனியாக அனுப்பி விட்டதற்காக என்னை நானே திட்டிக் கொண்டேன். உங்களை என் அறையில் தங்கி இருந்து விட்டுக் காலையில் போகச் சொல்லி இருக்கலாம். நீங்கள் ஒரு ஜென்டில்மேன். உங்கள் கைவிரல் நகம் கூட என் மேல் பட்டிருக்காது. எனக்குத் தெரியும். ஆனால் இந்த பாழாய்ப் போன கலாச்சாரம். உலகம் இதற்கு ஆணும், பெண்ணும் ஓர் அறையில் ஓர் இரவு தனித்து இருந்தால் அதற்கு ஒரே ஒரு அர்த்தம்தான் கொடுக்கத் தெரியும். நான் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தேன். அறைக்கு இன்னும் என் கூட வந்தவர்கள் திரும்பவில்லை. இரவு அவர்கள் திரும்பி வருவார்களா இல்லையா என்றும் தெரியவில்லை. மனதில் இருந்த புழுக்கத்தைத் துரத்துவதற்காக பால்கனிக்கு வந்தேன். தற்செயல் என்றால் தற்செயல்தான். இல்லை கடவுளின் விருப்பமா? எதுவோ ஒன்று. சாலையில் உங்கள் கார் நிற்பதைப் பார்த்தேன். மூன்று பேர் உங்கள் காரைச் சூழ்ந்திருப்பதைப் பார்த்தேன். நீங்கள் ஹாக்கி ஸ்டிக்குடன் அவர்களுடன் மோதத் தயாராவதைப் பார்த்தேன். உடனே போலீசுக்குச் சொல்லி விட்டேன். நல்லவேளை, அவர்கள் சரியான நேரத்தில் வந்து விட்டார்கள்'' என்று சொல்லிச் சிரித்தாள் ராகினி.

''நான் உன்னைக் காப்பாற்றியதற்காக, நீ என்னைக் காப்பாற்றி உன் கடனை நேர் செய்து விட்டாயா?'' என்று கேட்டான் ராஜசேகரன்.



''ஐயையோ. அப்படி எல்லாம் இல்லை. இன்னொரு தடவை வேண்டுமானால் நான் ஆபத்தில் மாட்டிக் கொள்கிறேன். நீங்கள் வந்து என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று மிக சீரியஸாகப் பதில் சொன்னாள் ராகினி.

அவன் சிரித்தான்.

''யூ ஆர் நாட்டி'' என்றான்.

''எதற்காக மெட்ராஸ் வந்தாய்?''

''உங்களைப் பார்க்க.''

''பார்த்து?''

''பார்த்து? ஜஸ்ட் உங்கள் பர்சனாலிட்டியைப் பார்த்து ஆச்சரியப்பட போரில் ஜெயித்து வரும் ராஜாவைப் பார்க்கப் பெண்கள் எல்லாம் வீடுகளின் ஜன்னல் மறைவில் வந்து நிற்பதில்லையா? கிரிக்கெட்டில் செஞ்சுரி அடித்த பேட்ஸ்மேனை இளம் பெண்கள் சூழ்ந்து கொண்டு கைகுலுக்கி, ஆட்டோகிராப் வாங்கி, முத்தமிடுவதில்லையா? அதுபோல, உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.''

''உன் அப்பா, அம்மா?''

''திருவனந்தபுரத்தில் இருக்கிறார்கள். அப்பா ஸ்டேட் கவர்ன்மென்ட். ரிட்டயர்ட். பென்ஷன் வருகிறது. நான் அங்கே மாடலிங் செய்திருக்கிறேன். புடவைக் கடைகள். நகைக் கடைகள். அப்புறம் காம்பியரிங் செய்திருக்கிறேன். நடிக்கக் கூப்பிட்டார்கள் போகவில்லை.''

''ஏன்?''

''பிடிக்கவில்லை.''

''ஏன்? நிறைய காசு வரும்.''

"இருக்கும். ஆனால் என் மனசுக்குப் பிடிக்காத எதையும் செய்ய முடியாது. அது நடிப்புத் துறையில் சஜகமாக இருக்கலாம்."

"சரி. உன் மனசுக்குப் பிடித்த மாதிரி ஒன்று சொல்லட்டுமா?"

"என்ன?"

"என் அடுத்த மெகா சீரியலில் நீ ஹீரோயின் ரோல் பண்ணுகிறாயா?"

"எண்ட குருவாயூரப்பா" என்று கண்களை அகற்றி அந்த ஆச்சரிய சந்தோஷத்தைக் கொண்டாடினாள் - முதல் முதலாக மலையாள வாசனையுடன்.

அவள் பேசிய பேச்சில் மலையாள வாசனை கொஞ்சமும் இல்லை. காரணம் ராகினி தமிழ்நாட்டில் பிறந்தவள். தமிழைக் கற்றுத் தேர்ந்து அப்பா, அம்மாவுடன் அங்கே போனவள்.

அவள் முகம் புதுசாக இருந்தது. டி.வி. ஹீரோயின் பாத்திரத்தில் தோன்றினால் சட்டென்று தமிழ்நாட்டின் எல்லோருடைய வீட்டுக் கூடங்களிலும் அங்கீகரிக்கப்பட்டு விடுவாள் என்று தோன்றியது.

"என்ன ஒத்துக்கொள்கிறாயா இல்லையா?"

"ஐயோ, அது என் அதிர்ஷ்டம் பாரதி" என்றாள் ராகினி அவன் பேரை இவ்வளவு இனிமையாகச் சொல்லி அழைத்து.

அப்படித்தான் ராகினி மெகா சீரியலின் கதாநாயகியாக மாறினாள்.

ராஜசேகரன் அவளுக்கென ஒரு சிறு ப்ளாட்டை வாடகைக்கு எடுத்துக் கொடுத்தான். சமையலுக்கு என ஒரு வயதான பெண்மணியை ஏற்பாடு செய்து கொடுத்தான்.



முதல் நாள் ஷூட்டிங்கிலேயே அவள் நடித்த முதல் காட்சி முதல் டேக்கில் ஓகே ஆனது.

மெகா சீரியல் முழுக்க செய்து கொடுக்க வேண்டும் என்று அவளுடன் அவன் ஒப்பந்தம் போட்டிருந்தான். நீட்டிய இடத்தில் எல்லாம் அவள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள்.

அவனுக்குள் மெல்ல மெல்ல அவள் வளர்ந்து கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்தது.

அவன் தன் காதலை ஒரு நாள் தெரிவித்தான்.

அதிக ஆர்ப்பாட்டம் இன்றி வெகு சாதாரணமாக 'ஒரு கப் காபி போட்டுக் கொடேன்' என்பது போன்ற ஒரு தொனியில் சொன்னான்.

ராகினிக்கு மகிழ்ச்சி.

அவன் சொல்ல மாட்டானா என்றுதான் அவள் காத்திருந்தாள் என்று தோன்றியது.

முதலில் அவன் 'ஐ லவ் யூ' சொன்னவுடன் அவள் அவனைப் பார்த்து விழிகளை அகற்றிப் பரிதாபமாகப் பார்த்தாள். பேந்தப் பேந்த விழித்தாள். அவள் கண்களில் நீர் திரண்டது.

ராஜசேகர் பதறிப் போனான்.

"ஏன், ராகினி நான் சொன்னது தப்பா?"

அவள் தலையை ஆட்டினாள் மறுத்து.

"பின்னே?"

"நான் இதற்குத் தகுதியானவள்தானா?" என்று அப் பாவியாகக் கேட்டாள்.

''அடச்சே. நான் என்னவோ ஏதோ என்று மிரண்டு போனேன்.''

''என்னவோ என்ன?'' என்று அவள் குறும்பாகக் கேட்டாள்.

''உனக்கு மலையாள நாட்டில் யாராவது ஒரு முறைப் பையன் காத்திருக்கிறான் என்று சொல்லி விடப் போகிறாய் என்று நினைத்தேன். அதான் என்னவோ.''

''அப்படியானால் ஏதோ?''

''நீ எவனோ ஒருவனை இங்கு வந்து காதலிக்கத் தொடங்கி விட்டாய் போலும். அதனால் தான் நான் என் காதலைச் சொன்னவுடன் திரு திரு என விழிக்கிறாய் என்று நினைத்தேன். அததான் ஏதோ. போதுமா?''

ராகினி கலகலவெனச் சிரித்தாள். அவன் தலைமுடிக்குள் கையை விட்டுக் கோதினாள்.

''ஏய்.''

''என்ன?''

''நான் மட்டும் சொன்னால் போதுமா?''

''எதை?''

''ஐ லவ் யூவை.''

''பின்னே இன்னும் எத்தனை பேர் சொல்ல வேண்டுமாம்?'' என்று குறும்பு கலந்த சிரிப்புடன் கேட்டாள் ராகினி.

''போக்கிரி. மோகினி. பிசாசு. நான் உன்னிடம் சொன்ன மாதிரி நீ என்னிடம் சொல்ல மாட்டாயா?''

''ம்ஹூம்.''

''ஏன்?''



''எனக்கு வெட்கமாக இருக்கிறது.''

''ஷூட்டிங்கில் பிளந்து கட்டுகிறாய்?''

''அது பொய். கட்டிய தாலியை எத்தனை தடவை வேண்டுமானாலும் கழட்டலாம். இது ஷூட்டிங் இல்லை. வாழ்க்கை. இது பொய் இல்லை. உண்மை. அதனால் உண்மையான வெட்கம்.''

''இருக்கட்டும். நீ சொல்லி நான் கேட்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது. ஒரு முறை... ஒரே ஒரு முறை... எனக்கே எனக்கென்று ஐ லவ் யூ சொல்லேன்... ப்ளீஸ்... ப்ளீஸ்.''

சொன்னாள்.

''ஐ லவ் யூ பாரதி.''

ராஜசேகர் சந்தோஷத்தில் சிறகுகள் இன்றி மேகங்கள் நிறைந்த ஆகாயத்தில் பறந்தான்.

''ராகினி'' என்றான் ராஜசேகரன்.

ராகினி அவனைப் பார்த்தாள். பெருமூச்சு விட்டாள். அவளது புறாக்களைப் போன்ற மார்பகங்கள் விம்மித் தணிந்தன.

இமைகளை பட்டாம் பூச்சிகளின் சிறகுகளாய்ப் படபடத்தாள். இமை விளிம்புகளில் அவள் தீட்டியிருந்த உன்னதமான அயல்நாட்டு ஐ லைனரும் கருப்பு நிறமும் சேர்ந்து படபடத்தது.

ராஜசேகருக்குப் பிடித்த கருநீல நிற புடவை கட்டியிருந்தாள். ஷிஃபான். அது ஸீத்ரூவாக இருந்தது. ஆலிலை வயிற்றையும், மார்பின் லோகட் ரவிக்கை காரணமாக சந்தன பிளவையும் காட்டியது.

வயிற்றுப் பிரதேசம் சிறுசிறு மடிப்புகளுடன் தெரிந்தது. அவளது நாபிச் சுழி, தொப்புள் கொடி அறுபட்ட இடம் மிகக் கவர்ச்சிகரமாக இருந்தது.

ஆதாமிற்கும், ஏவாளுக்கும் அந்த நாபிச் சுழி இல்லை. ஐய்யே, என்ன கவர்ச்சி இருந்திருக்க முடியும்?

ராகினியின் மூக்கு போன்ற ஒரு மூக்கை அவன் இது வரை பார்த்ததில்லை. அவளது உதடுகளில் எப்போதும் இருக்கும் ஈரம் ஓர் உலக அதிசயம். எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் பாருங்கள். உதடுகளில் எப்போதும் ஈரம் இருக்காது. பளபளப்பு இருக்காது. மினுமினுப்பு இருக்காது. ராகினி அவர்களில் இருந்து வேறுபட்டவள். எனவே அவள் உதடுகள்... ஹூம். வரிசையாய் அமைந்த பற்கள். டூத் பேஸ்டிற்காக ராகினி மாடலிங் எதுவும் செய்ததில்லை என்று சொல்லியிருக்கிறாள். எப்படித் தவற விட்டார்கள். அவளது அழகான கழுத்து பல ஜுவல்லரி கடைக்காரர்களை அவள் கழுத்தில் செயின் மாட்டிவிட வைத்திருக்கிறது. அவளது கழுத்து மட்டும் விளம்பரங்களில் வித விதமான நகைகளுடன் போஸ் கொடுத்திருக்கிறது. அவளது மோவாயின் வளைந்த தன்மை காரணமாக முக க்ரீம் கம்பெனி ஆசாமிகள் எல்லாம் அவளை மொய்த்திருக்கிறார்கள்.

''ராகினி.''

''ம்?''

''பேச மாட்டாயா? ஏன் மவுனமாக இருக்கிறாய்? சொல்லேன். பேச மாட்டாயா?''

''ம்ஹூம்.''

''ஏன்?''



''உங்களை எனக்கே எனக்குரியவராக நினைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதே போதும் போலிருக்கிறது. அதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.''

''போதுமா?''

''ம்.''

''நிச்சயம் அவ்வளவு போதுமா?''

''வேறு என்ன வேண்டுமாம்?''

''ஒரு தழுவல், ஒரு அணைப்பு, ஒரு உரசல்?''

''ம்ஹூம்.''

''ஏன்?''

''பூ மலர்ந்தால் வாடிப்போகும். அது மொட்டாக இருக்கிற வரை தானே மதிப்பு.''

''ஏய். என் டயலாக்கையே எடுத்து என்னிடமே பேசிப் பார்க்கிறாயா? நான் சீரியஸாகக் கேட்கிறேன்.''

''என்னவென்று?''

''என்னை, என் உள்ளத்தை, இதயத்தை, உடலை ஒவ்வொரு அணுவும் எப்படி இருக்கிறதென முழுதாகப் பார்க்கும் ஆசையில்லையா ராகினி?''

''ச்சீ.''

''எனக்குத் தெரிய வேண்டும் ராகினி. உன் இதயம் தெரிய வேண்டும். உன் ஒவ்வொரு மயிர்க்காலும் எனக்குத் தெரிய வேண்டும்.''

''அதற்கு?''

''நாம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.''

''ஆம். ஆம். ஆம்.''

''உனக்கும் துடிப்பு இருக்கிறதுதானே?''

''ஆம்.''

''பின்னே கல்யாணம் செய்து கொள்வதற்கென்ன? இப்போதே செய்து கொண்டு விடலாமா?''

''வேண்டாம்.''

''ஏன் டார்லிங்?''

''ஒரு மெகா சீரியலில்தானே நடித்திருக்கிறேன். அதற்குள் நாம் கல்யாணம் பண்ணிக் கொண்டால் என் மார்க்கெட் போய் விடும். கல்யாணம் பண்ணிக் கொள்வ தற்குள் அம்மா, அப்பாவிற்குக் கொஞ்சமாவது பணம் அனுப்ப வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.''

''சொல். எத்தனை லட்சம் அனுப்ப வேண்டும் என்று சொல்! இப்போதே அனுப்பி விடுகிறேன்.''

''வேண்டாம். நீங்கள் எனக்காக இவ்வளவு செய்ததே பெரிது. அம்மா, அப்பாவிற்கு நான் சம்பாதித்த பணத்தை அனுப்பினால் அவர்களுக்கும் திருப்தி. எனக்கும் திருப்தி.''

''அதற்கு இன்னும் எத்தனை நாள் வேண்டும்?''

''இன்னும் ஒரு வருடம்.''

''ப்ராமிஸ்?''

''ப்ராமிஸ். ஆனால் அதற்குள் நான் நிறைய நடிக்கப் போகிறேன். நீங்கள் என்னை வேண்டாம் என்று சொல்லக் கூடாது.''

''ஒகே. ஆனால் தினம் தினம் எப்படியாவது எனக் கொரு முத்தம் கொடுப்பாய் என்றால், அந்த ஆசைக்குக் குறுக்கே நான் வரமாட்டேன்.''



''ஒகே கன்னத்தில்.''

''ம்ஹூம். உதட்டில்.''

''ஐயோ!''

''நான் என்ன உன்னிடம் இருந்து லட்ச ரூபாயா கேட்டு விட்டேன். தினம் ஒரு முத்தம் அவ்வளவுதானே?''

''சரி.''

''ஓகே. இன்றைய கோட்டா இப்போது ஆரம்பிக்க இருக்கிறது.''

''ஒரு முத்தம்தான்.''

''ஆம். ஒரு முத்தம்தான். ஆனால் அதைக் கொடுக்க நான் எடுத்துக் கொள்ளும் நேரம் என் இஷ்டம்.''

''பாரதி ப்ளீஸ்... ப்ளீஸ்...''

''ராகினி ப்ளீஸ்... ப்ளீஸ்...''

''சரி.''

அறுபது நிமிடங்களுக்குப் பிறகு ராஜசேகர் அவளை விடுவித்தான். அந்த ஒரு வருடம் தினம் தினம் அப்படித் தான் நிகழ்ந்தது. ஒரு வருடத்தில் தினம் தினம் ராகினி ஷூட்டிங்கில் கலந்து கொண்டாள். அவளது மார்க்கெட் ரேட் கூடிக் கொண்டே இருந்தது. ராகினி டி.வி. நடிகைகள் இடையே மிகப் பிரபலமானாள்.

சினிமாக்களுக்குப் போய்க் கொண்டிருந்தவர்கள் கூட சின்னத் திரையில் ராகினி தோன்றுகிறாள் என்று அறிந் தால் உடனே சினிமா போவதை மறந்து விட்டு, டி.வி. முன்னால் உட்காரத் தொடங்கினார்கள்.

ஒரு வருடத்திற்குப் பின் ராகினியும், பாரதி ராஜ சேகரனும் திருமணம் செய்து கொண்டபோது சின்னத்

திரை உலகம், சினிமா உலகம் திரண்டு வந்து அவர்களை வாழ்த்தி விட்டுச் சென்றது.

வாழ்க்கையில் இனி சொர்க்கத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்று பாரதி ராஜசேகரன் நினைத்தான்.

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் வாழ்க்கை எப்படி சுவாரசியமாக அமையும்?

அந்தக் கல்யாணத்திற்குப் பிறகுதான் ராஜசேகரனின் வாழ்க்கை மாறியது.

# 5



இரவு நேரம். ஊட்டியை நோக்கி விரைந்த மைசூர் - ஊட்டி சாலை வளைந்து மேலேறியது.

ஊட்டிப் பிரதேசத்தில் பொதுவாக நிலவைப் பார்ப்பது அரிது.

மேகங்களின் ஆட்சிதான் எப்போதும்...

இப்போது காற்றுடன் மழை வேறு பெய்து கொண்டிருந்தது. அதனால் வானில் சுத்தமாக நிலா இல்லை. மேகங்களின் சர்வாதிகாரத்தனத்திற்குப் பயந்து எங்கேயோ போய் ஒளிந்து கொண்டிருந்தது. காற்று முரட்டு யானையைப் போல் வீசியது. கரும்புத் தோட்டத்திற்குள் நுழைந்த மதயானை நினைத்துக் கொண்டாற் போல் திரும்பி ஒரு கொத்துக் கரும்பை பிடுங்கி காலுக்குக் கீழே போட்டு மிதிப்பது போல் காற்று திடீர் திடீர் என்று திசை



மாறி வீசியது. நூறு வருட மரங்களில் இருந்த பலவீனமான கிளைகளை முறித்துக் கொண்டு அந்தரத்தில் செலுத்தித் திடீரென்று தரையில் அடித்தது.

அந்த நேரத்தில் சாலையில் பஸ் ஏதாவது போய்க் கொண்டிருந்தால் அதன் மண்டையில் மரக் கிளையை டொம் என்று காற்று மோதும்.

பஸ்ஸின் உள்ளே இருப்பவர்கள் 'ஐயோ' என்று அலறுவார்கள். காற்று திசை மாறி விடும்.

அப்படிப்பட்ட மோசமான ஒரு நிலைமை அங்கே நிலவியது. பஸ்கள் மிக மெதுவாக ஏறக்குறைய ஊர்ந்து சென்றன. ஜன்னல்கள் யாவற்றையும் மூடி வைத்தால் காற்று பஸ்ஸை அப்படியே புரட்டி விடும் என்று ஜன்னல்கள் யாவற்றையும் திறந்து வைத்திருந்தார்கள். உள்ளே இருந்த மிகச் சொற்பமான மக்கள் காற்று வெளியே இருந்து உள்ளே பாயும் மட்டத்திற்குக் கீழே குனிந்து முழங்கால்களில் முகம் புதைத்திருந்தார்கள்.

இருட்டு நிறைந்திருந்தது. அவ்வப்போது மின்னல்.

சூரியகாந்தன் அந்த இரவில்தான் தன் காரைச் செலுத்திக் கொண்டு ஊட்டி நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

பிற்பகலிலேயே அவனுக்கு மைசூரில் வேலை முடிந்து விட்டது. அவனுடைய பாஸ் மைசூரில் இருக்கும் ஒரு நகைக் கடையில் பட்டை தீட்டப்பட்ட அமெரிக்கன் வைரங்களை டெலிவரி செய்து விட்டு வரச் சொல்லி இருந்தார். இந்த மாதிரி ஸ்பெஷல் ட்ரிப் அடித்தால் சூரிய காந்தனுக்குத் தனியாக ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

அவன் மனைவிக்குப் பிரசவ நேரம். எனவே அந்தப் பணம் நிச்சயம் பேருதவியாய் இருக்கும் என்று தோன்

றியது. காலையில் இருந்தே ஊட்டியின் க்ளைமேட் சரியில்லை. காற்று அவ்வப்போது உறுமிக் கொண்டே இருந்தது. அவன் மனைவி அவனைப் போக வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். இந்த நேரத்தில் அவன் போகவில்லையென்றால் முதலாளி வேணுவை அனுப்பி விடப் போகிறார். ஆயிரம் ரூபாய் வேணுவின் பாக்கெட்டிற்குப் போய் விடும். நாளை பிரசவ நேரத்தில் பணம் தேவைப்பட்டால் யாரிடம் போய் இளித்துக் கொண்டு நிற்பது? பெண்டாட்டி தடுத்தும் கேட்காமல் புறப்பட்டு விட்டான்.

பிற்பகல் தாசப்பிரகாஷில் ஒரு வெட்டு வெட்டினான். மைசூருக்கு வந்தால் மட்டுமே அவன் பீரும், சிகரெட்டும் அனுபவிப்பது வழக்கம். பீரைக் குடித்து விட்டுத் திருப்தியானதும் தாசப்பிரகாஷில் சாப்பிட்டு விட்டு, முழுதாக இரண்டு சிகரெட்டுகளைப் புகைத்து விட்டு, வழித்துணைக்கு மிச்சம் இருந்த சிகரெட்டுகளை பாக்கெட்டுடன் போட்டுக் கொண்டு ஊட்டியை நோக்கிக் கிளம்பினான்.

ஊட்டியை நெருங்க நெருங்க சீதோஷ்ண நிலை மோசமாகிக் கொண்டே இருந்தது. ஒவ்வொரு மின்னலின் போதும் அவன் கண்களில் பட்ட காட்சி அவன் இதயத்தைப் பிசைந்தன.

வரிசையாக மரங்கள் சரிந்திருந்தன. தான் வந்த பாதையில் ஓரிடத்தில் நிலச்சரிவு ஏற்பட்டிருந்தது.

சீக்கிரமாக ஊட்டியை அடைந்து விட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. மனைவி கையால் சுடச்சுட சாப்பிடலாம்.



அடுத்த வளைவில் காரின் ஹெட்லாம்ப் வெளிச்சம் வளைந்து திரும்பியபோது சூரியகாந்தன் சாலையோரத்தில் நின்று கைகாட்டிய அவனைப் பார்த்தான்.

அவன் குளிருக்காக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்தான். முகத்தில் தாடி இருந்தது. இருந்தும் அவன் முகத்தில் இருந்த வேதனை சூரியகாந்தனின் மனதைத் தொட்டது.

பாவம். என்ன அவசரமோ, ஏதோ.

சூரியகாந்தன் காரை நிறுத்தினான்.

''எங்கே போக வேண்டும்?''

''க்ரீன் ஃபீல்ட்ஸ்ங்க. பஸ் ஸ்டாண்டில் இறக்கி விட்டால் போதும்'' என்று அவன் முணுமுணுப்பாய்ச் சொன்னான்.

''ஏறிக்கொள்.''

கதவைத் திறந்து அவன் ஏறினான். அவனது போர்வை விலகியது. ஒரு மின்னல் வெட்டியது. அவன் சட்டை முழுக்க ரத்தம். கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. துப்பாக்கி இல்லை. அதைவிடப் பெரியது. அந்த மாதிரியான ஆயுதங்களை சூரியகாந்தன் சினிமாக்களில்தான் பார்த்திருக்கிறான்.

டுப்டுப் என்ற சத்தத்துடன் குண்டுகளைச் சரமாரியாகத் துப்பும் பயங்கரமான ஆயுதம்.

சூரியகாந்தன் பயந்து போய் 'பே' 'பே' என்று வார்த்தை எழாமல் தவித்தான்.

''காரை விட்டு இறங்கு. இல்லா விட்டால் உன்னைச் சுட்டு விட்டுப் பிணத்தைக் கீழே தள்ளி விடுவேன்.''

சூரியகாந்தன் மறு பேச்சு பேசவில்லை. கதவைத் திறந்து கொண்டு கீழே சரிந்து விழுந்தான்.

ஒரு கார் கீழே விழும் சூரியகாந்தனைத் தவிர்த்து விட்டு ஹார்னை அலறவிட்டுக் கொண்டே கடந்து சென்றது. நிற்கவில்லை.

காரை நிறுத்த அதன் டிரைவருக்கு சூரியகாந்தனைப் போல பைத்தியமா என்ன?

காரில் ஏறியவன் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து க்ளட்சை அழுத்தி, கியரைப் போட்டு ஆக்ஸிலேட்டரில் கால் வைத்து மெல்ல அழுத்தினான்.

கார் உறுமியபடி நகரத் தொடங்கியது.

சூரியகாந்தன் காரின் பின்னால் ஒளிர்ந்த சிவப்பு விளக்குகளைப் பார்த்தபடி, அழுதபடி அப்படியே சாலையின் ஓரத்திற்கு வாத்து போல் நகர்ந்து வந்து சேர்ந்தான்.

# 6



போலீஸ் ஸ்டேஷனில் மணி அடித்தது.

கொஞ்சம் தூக்கக் கலக்கமாக இருந்த ஏட்டையா போஜராஜன் ரிசீவரை எடுத்து ஸ்டேஷன் நம்பர் சொல்லி விவரம் கேட்டார்.

''அது யார் பேசுவது?'' என்று தமிழுக்கு அவ்வளவாகப் பரிச்சயமற்ற ஒரு குரல் கேட்டது.



''நீங்கள் யார் பேசுவது?'' என்று போஜராஜன் கொஞ்சம் எரிச்சலுடன் கேட்டார்.

''டி.ஐ.ஜி. பசவப்பா கர்நாடகா. ஆன்ட்டி டெர்ரரிஸ்ட் ஸ்க்வாட்.''

''யெஸ் சார். நான் ஹெட் கான்ஸ்டபிள் போஜராஜ் சார்.''

''இன்ஸ்பெக்டர் இல்லை?''

''வீட்டிற்குப் போயிருக்கிறார் சார். இதோ வந்து விடுவார் சார்.''

''ஓ.கே. நஞ்சப்பா என்றொரு டெர்ரரிஸ்ட் ஜெயிலில் இருந்து தப்பித்து விட்டான். உங்கள் ஏரியாவிற்குள் நுழைந்திருக்கலாம் என்று சந்தேகம். கொஞ்சம் கேர்ஃபுல்லாக இருக்க வேண்டும். மைசூரில் இருந்தே அவன் லிப்ட் கேட்டு, லிப்ட் கேட்டு உங்கள் ஏரியாவிற்குள் வந்திருக்கலாம். ஏதாவது லாரி, கீரி ஏறி வந்திருக்கக் கூடும். அவன் ஐடியா என்னவென்று தெரியவில்லை. எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள். அவனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்தால் உடனே இங்கே எங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணுங்கள்.''

''யெஸ் சார்'' என்றார்.

''எல்லா கார் டிரைவர்களையும் அலெர்ட்டாக இருக்கச் சொல்லுங்கள். கோயமுத்தூர் ரோடில் - ரோட் - ப்ளாக் ஏற்படுத்தி க்ராஸ் பண்ணும் ஒவ்வொரு காரையும் செக் பண்ணச் சொல்லுங்கள். செக் பண்ணப் போகிறவர்கள் கொஞ்சம் தைரியசாலிகளாக இருக்க வேண்டும். ரைபிளை ஹாண்டில் பண்ணிப் பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.''

''யெஸ் சார்.''

"உங்கள் இன்ஸ்பெக்டர் வந்தவுடன் உடனே என்னை காண்டாக்ட் பண்ணச் சொல்லுங்கள்."

"யெஸ் சார்."

"மறுபடியும் சொல்கிறேன். அந்த நஞ்சப்பா சாதாரண ஆள் இல்லை. ஏற்கனவே அவன் மேல் இருபது கொலை வழக்குகள் இருக்கின்றன. பாங்க் கொள்ளை, டிரஷரி கொள்ளை என்று நிறைய கொள்ளைகளில் அவன் பெயர் லிங்க் ஆகியிருக்கிறது. கொஞ்சம் கூட மனிதாபிமானமே இல்லாதவன். கண்ட மேனிக்கு எல்லோரையும் சுட்டுத் தள்ளுவான். அடித்து சாகடிப்பான். அதனால் கொஞ்சம் கூடுதலான எச்சரிக்கையுடன் இருங்கள். அவனைப் பிடிக்க வேண்டும். எப்படியாவது பிடித்தேயாக வேண் டும். உங்கள் ஏரியாவிலிருந்து தப்பித்துப் போக விட்டு விடாதீர்கள்."

"யெஸ் சார்."

"யெஸ் சார்."

கடைசியாக டெலிபோன் ரிஸீவரை வைத்த பின்னும் போஜராஜ் சற்று நேரத்திற்கு 'யெஸ் சார்' 'யெஸ் சார்' என்று தன்னையறியாமல் தன்னிச்சையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

பின் உளறுவது தெரிந்து நிறுத்திக் கொண்டார்.

அவருக்குக் கோபம், கோபமாக வந்தது. தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதையாக, மைசூரில் ஒரு தீவிர வாதியைத் தப்பித்துப் போக விட்டு விடுவார்களாம். அவனைத் தமிழ்நாட்டுப் போலீஸ் பிடித்துத் தர வேண்டு மாம். மைசூர்க்காரன் உயிர் என்றால் வெல்லம். தமிழ் நாட்டுப் போலீஸ்காரன் உயிர் என்றால் மட்டும் பாகற் காயா?



போஜராஜன் ஊட்டியை அடுத்த ஒரு மலை கிரா மத்தைச் சேர்ந்தவர். வீட்டில் மாடு, கன்று, ஆடு, கோழி எல்லாம் வளர்த்துக் கொண்டிருக்கிறவர். விவசாயம் பார்க்கச் சொல்லியிருந்தால் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டிருப்பார். யாரோ ஒன்று விட்ட மாமா ஒருவர் ராணுவத்தில் போய் சேர்ந்து தாய் நாட்டிற்காக சேவை செய்கிறாராம். மாமா மட்டும் தாய்நாடு சேவை என்று பெருமையாகச் சொல்லி மார் தட்டிக் கொள்ளும்போது, இந்த வீட்டில் அப்படி யாரும் பெருமையடித்துக் கொள்ளக் கூடாதா என்று போஜராஜனின் தந்தைக்கு உசுப்பேறி யதன் விளைவு. போஜராஜன் போலீஸ் வேலையில் கான்ஸ்டபிளாகச் சேர்ந்து விட்டார். தாய் நாட்டுச் சேவை என்றால் என்ன, தாய் மாநிலச் சேவை என்றால் என்ன? இரண்டும் ஒன்று தானே!

போஜராஜன் போலீஸ் வேலையைக் கூட ஏறக்குறைய ஆபீஸ் வேலை போலத்தான் செய்து கொண்டிருந்தார். காலையில் எழுந்தவுடன் பால் கறந்தாக வேண்டும். கோழிகளுக்குத் தீனியும் தண்ணீரும் கொடுத்தாக வேண் டும். அப்புறம் தான் போலீஸ் உத்தியோகம் நினைவுக்கு வரும். பெண்டாட்டி செய்து கொடுக்கும் இட்லி தோசையை புதினா சட்னி, கொத்தமல்லிச் சட்னி என்று வைத்துச் சாப்பிட்டு விட்டுத் திருப்தியாக ஏப்பம் வந்த பின் வெற்றிலை பாக்கு போட்டு ஒரு சிகரெட்டும் பிடித்து விட்டுத்தான் ஸ்டேஷனுக்கு வருவார்.

பிற்பகல் ஒரு முறை வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வருவார். டூட்டி காரணமாக கோயமுத்தூர் அது இது என்று எங்கேயாவது போக நேர்ந்து விட்டால் அவருக்கு வரும் எரிச்சல் சொல்லி மாளாது. மாலையில் ஆறுமணி

யானதும் ஸ்வெட்டர் ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு அதன் மேல் ஒரு கோட்டை மாட்டிக் கொண்டு, தலையில் ஒரு மங்கி காப் அணிந்து கொண்டு வீட்டைப் பார்க்கப் போய் விடுவார்.

சாயங்காலத்திற்கு மேல் வீட்டில் அவருக்காக அவ் வளவு வேலைகள் காத்துக் கொண்டிருக்கும்.

வெளியே எங்கேயாவது ரெய்ட் கிய்ட் என்று போக வேண்டி வந்தால் சாமர்த்தியமாகத் தவிர்த்து விடுவார். அந்த மாதிரி வேலைகளுக்குத்தான் துடி, துடியான சின்னப் பையன்கள் இருக்கிறார்களே, அந்த மாதிரி சமயங்களில் ஸ்டேஷனைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அவரே வலிய ஏற்றுக் கொண்டு விடுவார்.

இன்றைக்கும் அப்படித்தான்.

சப்-இன்ஸ்பெக்டர் மந்திரவேல் கொஞ்சம் தடியான ஆசாமி. கிராஜுவேட். நேரடியாக சப் - இன்ஸ்பெக்டர் வேலைக்குச் சேர்ந்தவன். கோத்தகிரியைத் தாண்டி ஒரு பள்ளத்தாக்கில் சாராயம் காய்ச்சுவதாகத் தகவல் கிடைத்து ரெய்டுக்குப் புறப்பட்டான். வழக்கம் போல் போஜராஜன் போகவில்லை. அதனால் ஸ்டேஷனில் இருக்கும் மற்ற கான்ஸ்டபிள்கள் எல்லாம் புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

இன்ஸ்பெக்டருக்கு சுல்தான் பேட்டரியில் ஒரு அரசியல் புள்ளியோடு பேச்சுத் துணைக்காகப் போக வேண்டியிருந்தது. அரசியல் புள்ளி சுல்தான் பேட்டரி யில் இருந்து என்ன எடுத்து வரவேண்டுமோ. வண்டி யில் கூட இன்ஸ்பெக்டர் ஒருவர் இருப்பதைப் பார்த்து விட்டால் க்ரீன் சானலில் வருகிற மாதிரி வந்து விடலாம். சுல்தான் பேட்டரி கேரளாவில் இருக்கிறது. கர்நாடக டி.ஐ.ஜி.யிடம் இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க



முடியாது. அதனால் வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொல்லி விட்டார்.

நல்லவேளை. அவரும் இப்போதுதான் வீட்டிற்குப் போய் சாப்பிட்டு வந்திருந்தார். ஸ்டேஷனை எதிர் டீக் கடைக்காரன் பொறுப்பில் விட்டுப் போயிருந்தார்.

அவர் பெண்டாட்டி மொச்சைக் கொட்டை போட்டு கருவாட்டுக் குழம்பும், இறால் வறுவலும் பண்ணி வைத்திருந்தாள். கல்யாணமான நாளில் இருந்தே பெண் டாட்டிக்கு அப்படி ஒரு கைமணம். அதனால் வீட்டிற்குப் போய் ஒரு குவார்ட்டர் மக் - டவலை தண்ணீர் கலந்து சாப்பிட்டு விட்டு, வயிற்றில் கபகபவென்று பசி எடுக்கத் தொடங்கியதும் ஒரு பிடி பிடித்து விட்டு வந்திருந்தாரா? அதுதான் தூக்கம் ஆளைப் போட்டுப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

அப்படி கொஞ்ச நேரம் கண்ணயரலாம் என்று எண்ணியபோது இந்த போன்.

''அட சட்.. தீவிரவாதி என்று தெரிந்த பின் எதற்கு விசாரணை அது இது என்று வீணாக நடத்த வேண்டும். சுட்டுச் சாகடித்து விட்டு 'தப்பித்து ஓடப் பார்த்தான். சுட்டு விட்டோம்' என்று ரெகார்டில் பதிவு பண்ணி விட வேண் டியதுதானே என்று எண்ணினார்.

இப்போது அவன் எத்தனை பேரை காவு வாங்கப் போகி றானோ. ஸ்டேஷனில் இருப்பவர்கள் எல்லாம், நன்றாகப் பழகி விட்டார்கள். யாருக்கும் எதுவும் ஆகி விடக் கூடாது.

என்ன பண்ணுவது? இன்ஸ்பெக்டர் எப்போது திரும்பி வரப்போகிறார் என்று தெரியவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் பையன் எப்போது திரும்புவான் என்றும் தெரியவில்லை.

இன்னொரு முறை போன் ஒலித்தது.

மறுபடியும் மைசூர் டி.ஐ.ஜி.யா?

'என்ன இழவுடா இது?' என்று சலித்துக் கொண்டு ஏட்டையா அந்த ரிசீவரை வெகு பணிவுடன் எடுத்து, "ஹலோ" என்று தொடங்கி ஸ்டேஷன் நம்பரைச் சொன்னார்.

"சார், நான் சூர்யகாந்தன் சார். இங்கே லக்ஷ்மி ஜுவல்லரியில் வேலை செய்கிறேன் சார். இன்றைக்கு மைசூரில் இருந்து முதலாளியின் மாருதி வேனில் திரும்பி வந்து கொண்டிருந்தேன். கூடலூர் தாண்டிய போது மழை. காற்று. ரோட்டில் ஒருவன் லிப்ட் கேட்டான் என்று நிறுத்தினேன் சார். தப்பாகி விட்டது. லிப்ட் கேட்டு ஏறியவன் கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. அவன் உடம்பில் அணிந்திருந்த சட்டையெல்லாம் ரத்தம். என்னைத் துப்பாக்கி முனையில் மிரட்டி வேனில் இருந்து கீழே தள்ளி விட்டான் சார். வேனை எடுத்துக் கொண்டு போய் விட்டான்" என்று எதிர்முனையில் பேசியவன் குரலில் பெரும்பாலும் அழுகை.

அழுகையினால் அவன் பேச்சு சிதைந்து வந்தது.

அவன் என்ன சொல்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளவே போஜராஜனுக்கு ஒரு முழு நிமிடம் பிடித்தது.

"பெயர் என்ன சொன்னாய்?" என்று கேட்டார் போஜராஜன்.

"சார். அவன் பெயரை எல்லாம் கேட்கிற நிலைமையில் இல்லை சார். வீட்டில் பெண்டாட்டி பிரசவ வலியோடு காத்திருக்கிறாளோ என்னவோ என்று யோசித்துக் கொண்டு வந்ததில் அவன் பெயரைக் கேட்க வேண்டும் என்றே தோன்றவில்லை சார்."

போஜராஜனுக்கு வந்த கோபத்திற்கு அந்த ரிசீவரைப் போட்டு உடைக்க வேண்டும் போல் இருந்தது.



"உன் பெயரைக் கேட்டேன்."

"சூரியகாந்தன் சார். லக்ஷ்மி ஜுவல்லரியில் வேலை செய்கிறேன். மாருதி வேன் நம்பர்..."

"இரு இரு. நான் உடனே ஸ்டேஷனை விட்டுப் படையோடு கிளம்பி விடப் போகிற மாதிரி நீ பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போனால் என்ன அர்த்தம்? ஸ்டேஷனில் தனியாக இருக்க எனக்கு ஒரு மாதிரி இருக்கிறது. இங்கே ஒருத்தரும் இல்லை. நீ ஒன்று செய். உடனே ஸ்டேஷனுக்கு ஒரு பேப்பரோடு வா. நடந்தது என்ன என்பதை அதில் எழுதி ஒரு கம்ப்ளெயிண்ட் மாதிரி கொடு. அப்புறம் ஆக்ஷன் எல்லாம் எடுக்கலாம்."

"இப்போதேவா சார்?"

"ஆமாய்யா ஆமாம்."

"சரி சார்" என்று எதிர் முனையில் போன் வைக்கப்பட்டது. அது வைக்கப்பட்டவுடன், போஜராஜன் தன் பக்க டெலிபோனில் ரிசீவரை வைத்தார்.

அந்த ரிசீவர் வைக்கப் படுவதற்காகவே காத்திருந்த மாதிரி மறுபடி டெலிபோன் ஒலிக்கத் தொடங்கியது.

சலித்துக் கொண்டார்.

எடுத்தார். "ஹலோ, போலீஸ் ஸ்டேஷன்."

"இன்ஸ்பெக்டர் சார். இங்கே ஒரே வீட்டில் நான்கு கொலை நடந்து இருக்கிறது. இன்ஸ்பெக்டர் சார், நீங்கள் உடனே வாருங்கள் இன்ஸ்பெக்டர் சார்."

"எங்கே கொலை? யார் கொலையானது?"

"எஜமானின் தோட்ட வீட்டில்தான் சார். எஜமானனும், அவர் பையனும் இரண்டு வேலைக்காரர்களும் சுடப்பட்டு செத்துக் கிடக்கிறார்கள். நாய் ஒன்று செத்துக் கிடக்

கிறது. நான் கூடப் போயிருக்க வேண்டியவன். இன்றைக்குப் பார்த்து மேட்டுப்பாளையம் வரைக்கும் போயிருந்தேன். திரும்பி வந்து பார்த்தால் இந்த மாதிரி ஒரு அநியாயம். நீங்கள் உடனே வருகிறீர்களா 'சார்?'

"கொலை எங்கே நடந்திருக்கிறது?"

"சொன்னேனே சார். தோட்டத்து பங்களா என்று."

"எந்தத் தோட்டம்? எந்த பங்களா? எங்கே இருக்கிறது அந்தத் தோட்டம்?"

"இங்கே ஃபிங்கர் போஸ்ட் தாண்டியவுடன் வலது பக்கம் ஒரு சின்னப் பாதை பிரியும். பாதையின் ஆரம்பத்தில் ஒரு போர்டு கூட இருக்கும். 'செவன் ஹில்ஸ் கெஸ்ட் ஹவுஸ்' என்று எழுதியிருக்கும். முழங்கால் உயரத்திற்குப் பிணமும் ரத்தமுமாய் இருக்கிற மாதிரி இருக்கிறது சார். பயமாக இருக்கிறது. உடனே வாருங்கள் சார்."

"சரி. போனை வை. இதோ புறப்பட்டு வருகிறோம்."

போஜராஜன் ரிசீவரை வைத்தார்.

வயிற்றைக் கலக்கியது அவருக்கு. உடனே பாத்ரூம் போயாக வேண்டும் போல் இருந்தது.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு பாத்ரூமை நோக்கி ஓடினார்.

# 7



சர்ரக் என்று மாருதி வேன் நின்றது. அதன் பின்புறத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த சிவப்பு விளக்குகள் அணைந்தன.



கிளிக்கட் என்ற சத்தத்துடன் மாருதியின் டிரைவிங் சீட் கதவு திறந்து கொண்டது. அவன் காரில் இருந்து இறங்கினான். கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு போர்வையில் மறைத்துக் கொண்டான்.

காற்று ஊசி போல் குத்தியது. மழை குறைந்திருந்தது. ஆனாலும் காற்று குறையவில்லை. அதன் வேகம் குறையவில்லை. அதன் சத்தம் குறையவில்லை.

அவன் நின்ற இடத்திற்கு நேர் எதிரே ஒரு குறுகலான பாதை வளைந்து மேலேறியது. அதன் இரு பக்கங்களிலும் புதர்கள் அடர்ந்திருந்தன.

அந்தச் சரிவில் மழை நீர் பாதையை அரித்துக் கொண்டு சளசளவென்ற சத்தத்துடன் இறங்கிக் கொண்டிருந்தது.

அவன் அந்தப் பாதையில் மேலேறினான். சற்று நேரம் சென்றவுடன் பாதை வளைந்து திரும்பியது. மேலேறியது.

திரும்பி மேலேறினான். கிட்டத்தட்ட பத்து நிமிட நடை. காற்று பின் பக்கமாகத் தள்ளாதிருந்தால் ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே அவன் மேலேறி இருப்பான்.

மேலே ஏறி வந்தவுடன் சற்று நின்றான். மூச்சு வாங்கிக் கொண்டான். அடி வயிற்றில் சின்னதாக ஒரு வலி புறப்பட்டது. அந்த வலியை உதாசீனம் செய்தான். மேலே அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு மரத்திற்குப் பின்னால் நின்று எதிரே தெரிந்த கட்டிடத்தைப் பார்த்தான். அது ஒரு தனிக் கட்டிடம். யாருடனும் கூட்டு சேர்ந்து கொள்ளாமல் சுயேட்சையாக நிற்கும் வேட்பாளரைப் போல அது தனியாக நின்றது. உள்ளே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஏதோ ஒரு சினிமாப் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. உள்ளே இருந்து சிரிப்புச் சத்தமும், ஆரவாரச் சத்தமும் கிணற்றில் இருந்து பேசுவது மாதிரி ஒலித்தன.

அவன் காத்திருக்க முடிவு செய்தான்.

காரணம் வீட்டில் முன்னால் நின்றிருந்த ஐந்தாறு கார்கள். உள்ளே ஏதோ பார்ட்டி இப்போது போனால் நம் கழுத்திற்கு நாமே தூக்கு மாட்டிக் கொள்வதைப் போல இருக்கும்.

பொறுமை. பொறுமை.

அவனது பொறுமைக்குப் பலன் இருந்தது.

ஒவ்வொரு குடும்பமாக அந்த வீட்டில் இருந்து வெளிவந்தது. அங்கே நிறுத்தி வைத்திருந்த கார்களில் ஒவ்வொன்றாகக் கிளப்பிக் கொண்டு சென்றன.

மாருதிவேன் அங்கே வந்து நிற்பது பற்றி யாரும் எந்தக் கேள்வியும் கேட்டுக் கொள்ளவில்லை.

இன்னும் ஒரே ஒரு கார்தான் மிச்சம் இருந்தது. அது அந்த வீட்டில் உள்ளவர்களின் காரா இல்லை வெளியில் இருந்து வந்தவர்களின் காரா என்று தெரியவில்லை.

சற்று நேரம் தாமதித்து விட்டுப் பின், அந்தக் கார் அந்த வீட்டில் உள்ளவர்களுடையது தான் என்று தீர்மானித்து அவன் வீட்டின் வாசல் நோக்கி நடந்தான்.

வாசலில் இருந்த காலிங் பெல்லை அழுத்தினான்.

உள்ளேயிருந்து கதவு கோடாகத் திறந்தது.

''யார் வேண்டும்?'' என்று வேலைக்காரன் போல் தெரிந்த ஒருவன் கேட்டான்.

''போலீஸ். இங்கே தீவிரவாதி ஒருவன் தப்பித்து வந்திருக்கிறான். அவனைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். போலீஸ் டிரெஸ்ஸில் இருந்தால் சந்தேகம் வரும் என்று இந்த வேஷம்.''



''அப்படி யாரும் இங்கே நுழையவில்லையே சார்.''

''கதவைத் திற. செக் பண்ண வேண்டும்.''

அவன் கதவைத் திறந்தான். இவன் உள்ளே நுழைந்தான்.

''யார் வேலு?'' என்று கேட்டுக் கொண்டே மாடிப் படிகளில் இறங்கினான் ஒருவன். இளைஞனாக இருந்தான். கழுத்தில் செயின். மணிக்கட்டில் ப்ரேஸ்லெட்.

வந்தவன் துப்பாக்கியைத் தூக்கி அவனைக் குறி பார்த்தான்.

சுட்டான். குண்டுகள் பாய்ந்தன.

மாடிப்படிகளில் இருந்து அவன் அப்படியே அறுந்த திரை போல் விழுந்தான்.

தான் கண்ட காட்சியை நம்ப முடியாமல் வேலைக்காரன் திகைத்தான். சட்டென்று அப்படியே பக்கத்து அறையில் நுழைந்து கதவைப் பூட்டிக் கொண்டான்.

வந்தவன் சர்வ சுதந்திரமாக உள்ளே நுழைந்தான்.

மாடிப்படிகளில் ஏறினான். ஒரு அறை திறந்து இருந்தது. அந்த அறையில் இரண்டு ஆண்கள் இருந்தார்கள். அவர்கள் பீரோ ஒன்றைத் திறந்து அதிலிருந்து ஆளுக்கொரு ரிவால்வரைப் பொறுக்கிக் கொண்ட நேரத்தில் அவன் அங்கே வந்து சேர்ந்தான்.

ஒரு கண நேரத்தில் அந்த அறையை வந்தவன் பார்த்தான். படுக்கை. படுக்கை மேல் விரித்து போடப் பட்டிருந்த சீட்டுகள். விஸ்கி பாட்டில். விஸ்கி நிரம்பியிருந்த கோப்பைகள். சிக்கன் துண்டுகள்.

வந்தவன் கண நேரம் கூடத் தாமதிக்கவில்லை. சுட்டான். அவர்கள் இருவரும் ரிவால்வர்களின் சேஃப்டி

காட்சிகளை ரிலீஸ் செய்து கொள்வதற்கு முன் உடல் முழுவதும் குண்டுகளால் பொத்தல் போடப்பட்டுக் கீழே விழுந்தார்கள்.

அவன் திரும்பினான். கீழே இறங்கினான். கீழே இருட்டு சூழ்ந்திருந்தது. இருந்தாலும் கதவு எது என்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

அவன் கதவைத் திறக்கும் நேரம் அவனது அடி வயிற்றில் ஒரு உருட்டுக் கட்டை இறங்கியது.

துப்பாக்கி வைத்திருந்தவன் வாயில் இருந்து ஒரு முனகல் இல்லை. சத்தம் இல்லை. அப்படியே மல்லாக்க விழுந்தான்.

இருட்டில் பதுங்கியிருந்து அவனை உருட்டுக் கட்டை யால் தாக்கிய வேலைக்காரன் விளக்கு சுவிட்சைப் போட் டான்.

கீழே விழுந்து கிடந்தவனைக் குரோதத்துடன் முறைத் தான். பின் அவனை ஒரு முறை காலால் உதைத்து விட்டு டெலிபோனைத் தேடிச் சென்றான்.

டெலிபோனில் எண்களைப் படபடவென்று தட்டி னான்.

''போலீஸ் ஸ்டேஷன்?'' என்று கேட்டு அவனுடைய எஜமானர்கள் மூன்று பேரைத் தீவிரவாதி ஒருவன் போலீஸ் எனச் சொல்லிக் கொண்டு உள்ளே வந்து சுட்டது பற்றிச் சொன்னான். அந்தத் தீவிரவாதியை உருட் டுக் கட்டையால் தாக்கி சாய்த்தது பற்றிச் சொன்னான். உடனே உதவிக்கு ஆம்புலன்ஸுடன் வருமாறு அழைத் தான். டெலிபோன் ரிஸீவரை வைத்து விட்டுத் திரும் பியவன் அதிர்ந்தான்.



காரணம் அவன் எதிரே நின்றிருந்தான்.

துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்து நின்றிருந்தான்.

வேலைக்காரன் கைகள் இரண்டையும் உயர்த்திக் கும்பிட்டான். துப்பாக்கி அவன் தலையில் தட்டென்று மோதியது.

அவ்வளவுதான், அவன் சரிந்தான்.

வந்தவன் முகத்தில் வேதனைக்கு இடையில் ஒரு சின்னப் புன்னகை.

வீட்டை விட்டு வெளியே வந்தான். அங்கே நின் றிருந்த காரின் நான்கு டயர்களிலும் பொத்தல் போட்டான்.

இழுத்து இழுத்து நடந்து மாருதி வேனில் ஏறி அதைக் கிளப்பினான்.

மாருதி வேன் சாலையில் இப்படியும், அப்படியுமாய் நெளிந்து ஓடத் தொடங்கியது.

# 8



பாரதி ராஜசேகர் தன் ஃபோர்ட் ஐகான் ஜோஷை அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் சரிவான பாதையில் அனாயாசமாகச் செலுத்தினான்...

பள்ளத் தாக்கை நோக்கிப் பாயும் அம்பு போல் கார் சரிவில் இறங்கியது. சரிவின் முடிவில் சரசரவென்று இடது பக்கம் திரும்பி, உடன் எதிரே வந்த ஒரு கான்க்ரீட் பில்லரை மிக சாமர்த்தியமாகத் தவிர்த்து காரை அந்த அண்டர் கிரவுண்ட் பார்க்கிங் ஏரியாவில் விர்ரென்று

செலுத்தி இரண்டு கார்களுக்கு இடையில் இருந்து இடைவெளியில் கத்தி செருகுவது போல் செருகி நிறுத்தி னான். இறங்கினான்.

பார்க்கிங் லாட்டைக் கவனித்துக் கொள்ளும் அட் டென்டன்ட் பாரதி ராஜசேகரை நோக்கி ஓடிவந்தான். பாரதி ராஜசேகர் அவனிடம் தன் காரின் சாவியைத் தூக்கி எறிந்தான்.

"டேக் கேர்" என்றான்.

பார்க்கிங் அட்டென்டன்ட் நீட்டிய டோக்கன் வாங்கிப் பாக்கெட்டில் செருகிக் கொண்டு டாக்-டக் என்று ஹோட்டல் லவுன்ஜை நோக்கி நடந்தான். அவனது மூச்சில் ஸ்காட்ச் வாசம் கலந்து இருந்தது.

லவுன்ஜில் சுற்று முற்றும் தேடினான். அவன் யாரைத் தேடி வந்தானோ அவன் இன்னும் வரவில்லை என்று தெரிந்தது.

நடந்தான். பார் கதவருகே நின்றிருந்தவன் ராஜசேகரைப் பார்த்து விஷ் பண்ணி விட்டுக் கதவை அகலமாகத் திறந்தான்.

ராஜசேகர் உள்ளே போனான். பார் - கவுண்டருக்கு அருகில் இருந்த உயரமான ஸ்டூலில் உட்கார்ந்தான்.

"ஸ்காட்ச். இரண்டு லார்ஜ்" என்றான்.

அது வந்ததும் மெல்ல சீப்பத் தொடங்கினான். அவன் மனம் எதையும் சிந்திக்கவில்லை. ஸ்காட்ச் ருசியில் ஆழ்ந்திருந்தது. அது அளித்த சுகமான அனுபவத்தில் திளைத்திருந்தது.

'ஒன் மோர்' என்று ராஜசேகர் இரண்டாவது முறை கோப்பையை நிரப்பிக் கொண்டபோது அவன் தோளில் ஒரு கை படர்ந்தது.



திரும்பினான்.

பரசு. தளவாய் பரசு என்று ஆரம்பத்தில் அறியப்பட்டு இப்போது மெகா பரசுவாய் மாறியிருந்த ராஜசேகரின் பழைய பரசு.

"பரசு" என்றான்.

"நான் வருவதற்குள் அவசரமா?" என்று கேட்ட பரசு.

"இல்லை பரசு. எவ்வளவு நேரம் காத்திருக்க வேண் டும் என்று தெரியவில்லை. அதனால் ஜஸ்ட் இரண்டு பெக்தான் குடித்தேன்."

"ஓ.கே. அதைக் கொடுத்து விட்டு வா."

"நாம இங்கே பேசப் போவதில்லையா?" என்று ஆச் சரியத்துடன் கேட்டான் ராஜசேகர்.

"இல்லை. இதே ஹோட்டலில் நான் ஒரு ரூம் எடுத் திருக்கிறேன். வா போகலாம்."

ராஜசேகர் எழுந்தான். நடை தள்ளாடியது.

பரசு அவனைப் பிடித்துக் கொண்டான். ராஜசேகருக் குச் சற்று வெட்கமாய்க்கூட இருந்தது.

பரசுவின் அறை.

"ஸ்காட்ச் சொல்லு" என்றான் ராஜசேகர்.

"உன்னுடன் நான் பேச வேண்டும்."

"அதற்கும் நான் குடிக்கப் போகும் ஸ்காட்சிற்கும் என்ன சம்பந்தம்?"

"நான் சொல்வதை நீ ஒழுங்காகக் கேட்டுக் கொள்ள வேண்டும்."

ராஜசேகர் பொறுமையை இழக்க ஆரம்பித்தான்.

''பரசு. நான் எவ்வளவு குடித்தாலும் நிதானம் தவற மாட்டேன் என்று உனக்குத் தெரியும் அல்லவா?''

''தெரியும். எல்லா குடிகாரர்களும் சொல்வது இதுதான். ஒரு அரை மணி நேரம் பேச விடு. கேட்டுக் கொள். அதன் பிறகு நீ என்ன வேண்டுமானாலும் செய். நான் கேட்க வில்லை.''

பரசு ஏறக்குறைய கெஞ்சுவது போல் கேட்டான்.

பாரதி ராஜசேகர் தனக்கும் பரசுவிற்கும் இடையேயான நட்பைப் பற்றி நினைத்துக் கொண்டான். என்ன தான் ராஜசேகர் கதை, வசனம், எழுதி, டைரக்ட் பண்ணினாலும் பரசு துணிந்து பணம் போட்டிருக்கா விட்டால் அவனுடைய முதல் மெகா சீரியல் சின்னத் திரையில் எட்டிப் பார்த்திருக்கவே முடியாது. ராஜசேகர் என்ன ஆகியிருப்பானோ! தோல்வியின் அவமானத்தைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடும். அல்லது எங்கிருந்து புறப்பட்டு வந்தானோ அந்த ஊருக்கே போய்ச் சித்தாள் வேலை அல்லது கல் உடைக்கும் வேலை என்று ஏதாவது கூலி வேலைக்குப் போயிருக்கக் கூடும். பரசு மட்டும் கை கொடுத்திரா விட்டால் அவன் நிலைமை என்னவாக இருக்கும் என்றே சொல்ல முடியாது. அவர்களுக்குள் நட்பு இருந்தாலும் கூட பரசு என்பவன் அவனுக்கு முதலாளி போல.

ராஜசேகரின் கண்கள் கலங்கின.

''சொல் பரசு'' என்றான்.

பரசு அவன் தோளில் தட்டிக் கொடுத்தான்.

''இப்போதுதான் நீ சிந்திக்கத் தொடங்கி இருக்கிறாய்'' என்றான். ஒரு சிகரெட்டை உருவிப் பற்ற வைத்துக் கொண்டான்.



பென்சன் அண்ட் ஹெட்ஜஸ்.

ராஜசேகருக்கும் பாக்கெட்டை நீட்டினான். ராஜசேகர் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். டைரக்டராக அவன் வெற்றி பெறுமுன் ராஜசேகர் புகைத்துக் கொண்டிருந்தது மங்களூர் கணேஷ் பீடியை இப்போது பென்சன் அண்ட் ஹெட்ஜஸ்.

புகை மார்பில் பரவியதும் ராஜசேகரிடம் இருந்த ஆல்கஹால் தாகம் அடங்கியது. பரசுவின் வேண்டுகோளில் நியாயம் இருப்பது புரிந்தது.

புகையை மெல்லியதான ஒரு கோடு போல வெளியே விட்டான். சிகரெட் புகை வெளிர் நீலமாக வெளியேறியது. காற்றின் அதன் கோடு கலைந்தது. சுருண்டது. மடங்கியது. தாழ்ந்தது. உரு கலைந்தது. மேலே ஏறியது. காற்றில் கலந்தது.

''ராஜசேகர். நீ மாறி விட்டாய்.''

''நானா?''

''ஆம். நீயேதான்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''கல்யாணத்திற்கு முன் இருந்த ராஜசேகர் வேறு. கல்யாணத்திற்குப் பிறகு நான் பார்க்கும் ராஜசேகர் வேறு. நீ ராகினி மயக்கத்தில் உன் வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறாய். பெண் என்பவள் ஆணின் வாழ்க்கையில் ஓர் அங்கம். அவ்வளவே. ஆனால் பெண்ணே வாழ்க்கை இல்லை.''

ராஜசேகர் மவுனமாக இருந்தான்.

''நான் பெண்களைப் பற்றிப் பேச வரவில்லை ராஜசேகர். ஆபீஸ் போகிறவன், சாதாரண குடும்பஸ்தன்

என்றால் அவனைப் பொறுத்தவரை பெண் என்பவள் வாழ்க்கையில் பாதி. காலையில் எழுந்து காபி போட்டுத் தர வேண்டும். பாத்திரம் தேய்க்க வேண்டும். பல்லி, பூச்சி எதுவும் அண்டாமல் வீடு பெருக்க வேண்டும். குழந்தைகளை எழுப்பி அவர்களின் குண்டிகளைக் கழுவி, குளிப்பாட்டி நாளை வேலைக்குப் போய் சம்பாதித்து சோறு போட்டுக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். சமைக்க வேண்டும். பரிமாற வேண்டும். சாயங்காலமானால் குளித்து, பவுடர் பூசி, மல்லிகைப் பூ வைத்துக் கொள்ள வேண்டும். ராத்திரி குழந்தைகளைத் தனியாக விலக்கிப் படுக்க வைத்து விட்டுக் காத்திருக்கும் கணவனிடம் சரசமாட வேண்டும். அதெல்லாம் சாதாரண ஆண்களுக்கு. வேறு வழியற்றவர் களுக்கு சமூக பயம் காரணமாக தேவாங்கு போல் எப் போதும் ஒடுங்கியேயிருக்கும் கோழையான ஆண்களுக்கு."

"பரசு, நீ என்ன சொல்ல வருகிறாய்?" என்று ராஜசேகர் கேட்டான்.

"பொறுமை. பொறுமை. நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. அழிந்தா போய் விட்டேன்? இல்லை பெண் சுகம் கிடைக்காமல் ஏங்கிப் போய் விட்டேனா? நீ கேட்கலாம். அன்பு செலுத்த ஒரு பெண் இல்லாவிட்டால் அப்புறம் என்ன வாழ்க்கை என்று? அன்பைப் பெண் ணால் மட்டும் தான் செலுத்த முடியுமா? உன்னைப் போல் ஒரு நல்ல நண்பனால் என் மேல் அன்பு செலுத்த முடியாதா? யோசித்துப் பார். கல்யாணத்திற்கு முன் நீ கொடுத்த இரண்டு மெகா சீரியல்களும் சூப்பர் ஹிட். அப்புறம் ராகினி வந்தாள். அவளை வைத்து ஒரு மெகா சீரியல். பரவாயில்லை. முந்தைய சீரியல் அடைந்த



வெற்றியிலிருந்து மாறுபட்டு பாதி வெற்றியை அடைந்தது. அதற்குப் பின் நீ என்ன செய்திருக்கிறாய்? ஒரு 52 வார சீரியலைக் கொடுத்தாய். சானல்காரர்கள் 26 வாரத்திற்கு மேல் அதை ட்ராட்காஸ்ட் பண்ண முடியாது என்று சொல்லி விட்டார்கள். உன்னால் சீரியல் பண்ண முடியவில்லை என்று ஷார்ட் ஸ்டோரீஸ் பண்ண ஆரம் பித்ததாய். அதற்கு ஸ்பான்சர்களைப் பிடிப்பதற்குள் எனக்கு நாக்குத் தள்ளிப் போகிறது. இப்போது இண் டஸ்ட்ரியில் போட்டி அதிகமாகி விட்டது. நிறைய பேர் வித்தியாசமான சப்ஜெக்ட்களோடு பீல்டில் இறங்கி இருக்கிறார்கள். முன்பெல்லாம் விளம்பர ஏஜன்ஸி எடுத்த வர்கள் என் ஆபீஸ் வாசலில் பழியாக இருப்பார்கள். எனக்கு ஸ்காட்ச் வேண்டுமென்றால் துபாயிலிருந்தும் சிங்கப்பூரில் இருந்தும் வரவழைத்துக் கொடுப்பார்கள். இப்போது ஒருவன் கூட நம் ஆபீஸ் பக்கம் வரமாட்டேன் என்கிறான். என்ன காரணம்?" என்று பரசு நிறுத்தினான்.

"என்ன காரணம்?" என்று ராஜசேகர் ப்ளாங்க்காகக் கேட்டான்.

"நீதான் காரணம்."

"நானா?" என்றான் ராஜசேகர் திகைத்துப் போய். அந்தத் திகைப்பு கூட ஒரு நடிப்புதான் என்று ராஜ சேகருக்குத் தெரிந்தே இருந்தது.

"திகைக்காதே ராஜசேகர். உனக்குத் தெரியும். சும்மா நடிக்கிறாய். நீ இப்போதெல்லாம் நல்ல கதைகளைக் கொடுப்பதே இல்லை. ஒரே ஒரு மெகா சீரியல். சூப்பர் கதை கொடுத்து விட்டால் போதும். நம் காம்பினேஷனை மறுபடி யாராலும் அசைக்க முடியாது என்ற நிலைமை வந்துவிடும். நாம் பிரிந்து விடலாம். அது பெரிய வேலை

இல்லை. ஒரு நிமிஷம் ஆகலாம். 'நான் தனியாகப் போகிறேன். நீ உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்' என்று சொல்ல. ஆனால் அப்படிச் சொல்ல மனம் வரவில்லை. இன்றைக்கு நிறைய பையன்கள் நிறைய கதைகளுடன், கனவுகளுடன் என் ஆபீஸ் வாசலில் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் எழுதித் தருவதை வைத்து ஒரு சீரியல் எடுத்து விடுவேன். ஆனால் ஆரம்ப காலத்தில் உன்னால் நான் வந்தேன். என்னால் நீ வெளிப்பட்டாய். அந்த நன்றி உணர்வு போகவில்லை. நான் நீ இல்லாமல் சீரியல் எடுக்க ஆரம்பித்தால் அந்த நன்றி உணர்வு என்னை வேலை செய்ய விடாது. கான்சன்ட்ரேஷன் போய் விடும். நீ தனியாக சீரியல் எடுக்க ஆரம்பித்தாலும் இதே நிலைதான். உனக்கு பிஸினஸ் தெரியாது. மார்க்கெட்டிங் தெரியாது. உன் கதை இப்போதெல்லாம் சொதப்பலாக இருக்கிறது. சீனெல்லாம் தெருக்கூத்து காலத்து சீனாக இருக்கிறது. அதனால் தனியாக சீரியல் எடுக்க ஆரம்பித்தால் நீ ஒன்றும் இல்லாமல் ஆகி விடுவாய். அழிந்து விடுவாய். காணாமல் போய் விடுவாய். பெரிய சைபராக ஆகி விடுவாய். இது உனக்குத் தெரியும். இதற்கெல்லாம் காரணம் என்ன?''

ராஜசேகர் மவுனமாக இருந்தான்.

''நீ சொல்ல மாட்டாய். நான் சொல்கிறேன். ராகினி உன் மனைவி. உன் பர்சனல் வாழ்க்கையில் நிறைய உரிமை எடுத்துக் கொள்கிறாள். நம் மெகா சீரியலில் நடித்த பின் அவள் வேறு எந்த சீரியலிலும் கதாநாயகியாக நடிக்க வில்லை. ஆனால் நிறைய சீரியல்களில் சின்னச் சின்ன ரோல்களைப் பண்ணுகிறாள். நிறைய சினிமாக்களில் சின்னச் சின்ன ரோல்களைப் பண்ணுகிறாள். அதில் வரும் காசு உனக்கும் பற்றாது. அவளுக்கும் பற்றாது. ஆனால் ஒவ்வொரு அவுட் - டோர் ஷூட்டிங்கிற்கும் உன்னைக் கூட்டிக் கொண்டு போய் விடுகிறாள். பேட்டிகளில் 'என் அன்புக் கணவரை நான் எப்போதும் பிரிவதே இல்லை' என்று சொல்கிறாள். அவளோடு நீ எதற்குப் போக வேண்டும். ஒரு வாரம், இரண்டு வாரம் என்று எதற்காகத் தங்க வேண்டும்? உன் மனம் கதையில் ஈடுபட மாட்டேன் என்கிறது. அதற்குப் பதில் ராகினியை வைத்து எடுக்கும் தயாரிப்பாளர்கள் ஊற்றிக் கொடுக்கும் ஸ்காட்சை நினைத்து ஏங்க ஆரம்பித்து விடுகிறது. நீ கொஞ்சம் கொஞ்சமாக குடிகாரனாக மாறிக் கொண்டு வருகிறாய். உன்னை உன் பெண்டாட்டி மாயை பிடித்து ஆட்டுகிறது. உன்னை அறியாமலேயே நீ அழிந்து கொண்டிருக்கிறாய். நான் சொல்வதை நீ ஒழுங்காக எடுத்துக் கொள்வாய் என்றால் ஒன்று சொல்கிறேன். உன் மனைவி உன்னிடம் விசுவாசமாக இல்லை. நம் துறையில் கற்பு என்னும் வார்த்தைக்கு அவ்வளவாக மதிப்பில்லை. அது எனக்குத் தெரியும். ஆனால் நான் சொல்வது இதுதான். நீ அவளைக் காதலிக்கும் அளவு அவள் உன்னைக் காதலிக்கவில்லை. அது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும். உன் கண்களைக் கட்டி விட்டு உன் எதிரிலேயே உன்னை ஏமாற்றுகிறாள்.''

பரசு எப்போது அழைப்பு மணியை அழுத்தினான் என்று தெரியவில்லை. கதவு தட்டப்பட்டது. ''யெஸ்'' என்று பரசு அனுமதித்தவுடன் பேரர் உள்ளே நுழைந்தான். அவன் கையில் ஏந்தியிருந்த ட்ரேயில் ஸ்காட்ச் பாட்டில். இரண்டு கோப்பைகள். ஐஸ் ஃப்ளாஸ்க், முந்திரி வறுவல். சீஸ் துண்டங்கள்.

ராஜசேகர் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பரசு சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்று அவனுக்குத் தெரியும். ராகினி மேல் அவனுக்கு அப்படி ஒரு சந்தேகம் இருந்தது. ஆனால் ஓர் எழுத்தாளனாக இருந்து கொண்டு மனைவியைச் சந்தேகப்படுவதைக் காட்டிலும் கேவலமான விஷயம் எதுவும் இல்லை யென்று அவன் அவ்வப்போது தன் மனதை அடக்கிக் கொண்டிருந்தான்.

பரசு ஸ்காட்ச்சை கோப்பைகளில் ஊற்றினான். கொஞ்சம் நீரை ஊற்றி டைல்யூட் செய்தான். ஐஸ் கட்டிகளைப் போட்டான்.

"எடுத்துக் கொள்."

ராஜசேகர் தயங்கினான்.

"பரவாயில்லை. எடுத்துக் கொள். இது உன் நன்மைக் காக, என் நன்மைக்காக எனக் கருதி நான் வரவழைத் திருக்கும் ஸ்காட்ச். உன்னை அழிப்பதற்காக அல்ல. எடுத்துக் கொள்."

ராஜசேகர் ஸ்காட்ச் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான். சீப்பத் தொடங்கினான்.

"பாரதி. நான் ஒன்று சொல்கிறேன். கேட்கிறாயா?"

"என்ன?"

"ஊட்டியில் எனக்கொரு பங்களா இருக்கிறதென்று உனக்குத் தெரியாது. இருக்கிறது. ஒரு ஒளிவிடம் போல் அந்த இடம் இருக்கிறது. அங்கே உனக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. ரெஃப்ரிஜிரேட்டரில் ரெடி மேட் உணவு டப்பாக்களை அடுக்கி வைத்திருக்கிறேன். முன்னூறு லிட்டர் ரெஃப்ரிஜிரேட்டர். நூடுல்ஸ், ப்ரெட், டின்ட் ஃபுட் என்று சகலமும். லெமன் டீ போட்டுக் கொள்ள வசதியாக லெமன் சாறு இருக்கிறது. டீத் தூள் இருக்கிறது. உயர் தரமான லீஃப் டீ. பால் பவுடர் இருக்கிறது. போய் செட்டில் ஆகி விடு. இரண்டு மூன்று நாட்கள் இருந்து பார். தனியாகச் சமாளிக்க முடியாவிட் டால் ஒரு பெண்ணை சமைத்து எடுத்து வர ஏற்பாடு செய்து கொள். பக்கத்து மலை கிராமத்தில் இந்த வேலை செய்வதற்காக நிறைய பேர் இருக்கிறார்கள். அங்கே போ. தனிமையில் இரு யோசி. ஒரு மெகா சீரியல் தயார் பண்ணு. டயலாக்கை இங்கே ஷூட் பண்ணும்போதே எழுதிக் கொள்ளலாம். ஒன் லைன் ரெடி பண்ணிக் கொண்டு வா. சூப்பர் கதையாக இருக்க வேண்டும். நான் புரொட்யூஸ் பண்ணுகிறேன். நீ ஒரு பைசா போட வேண்டாம். லாபத்தில் பிஃப்டி பர்சன்ட் உனக்கு. என்ன சொல்கிறாய்? ஒரு வேளை உனக்கு இந்த ஏற்பாட்டில் சம்மதம் இல்லையென்றால் சொல். நாம் நண்பர்களாகப் பிரிந்து விடுவோம்."



"சம்மதம்" என்றான் ராஜசேகர்.

"குட். இப்போதுதான் நீ திருந்திக் கொண்டிருக்கிறாய். எப்போது புறப்படுகிறாய்? நீ சம்மதிப்பாய் என்று எனக்குத் தெரியும். அதனால் உன்னைக் கேட்காமல் நாளை ஷதாப்தியில் ஒரு டிக்கெட் எடுத்து வைத்திருக் கிறேன். கோயமுத்தூர் ஸ்டேஷனில் மாருதி வேன் ஒன்றை கொண்டு வந்து கொடுக்கச் சொல்லியிருக்கிறேன்."

"ஸூட்ஸ் மீ."

"பெஸ்ட் ஆஃப் லக்" என்றான் பரசு.

ராஜசேகர் எழுந்து கொண்டான்.

ஊட்டியில் அவனுக்காக என்னென்ன அனுபவங்கள் காத்திருக்கின்றன என்று அவனுக்கு அப்போது தெரியவில்லை.

அறையை விட்டு வெளியேறினான். இப்போது அவன் நடையில் ஒரு தன்னம்பிக்கை தெரிந்தது.

## 9



ராஜசேகர் புறப்பட்டுப் போன பின்பு பரசுராமன் சற்று நேரம் யோசனையில் அமர்ந்திருந்தான்.

பின் போனை எடுத்து நம்பர்களைத் தட்டினான். முப்பது நிமிடங்கள் கழித்து அவன் அறைக்கதவு தட்டப்பட்டது.

''யெஸ்'' என்றான் பரசு.

உள்ளே நுழைந்தவனுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். வசீகரமான முன் வழுக்கை. பஞ்சாப் கோதுமை நிறத்தில் இருந்தான். ஜீன்ஸ் பேண்ட் பார்க் அவென்யூ சட்டை. ஒரு குளிர்க் கண்ணாடி. மீசை இல்லை. காலில் அணிந்திருந்த ஷூவில் முகம் பார்க்கலாம்.

உள்ளே வந்தவுடன் சிரித்தான். சிரிப்பில் பணிவு இருந்தது.

''வா லக்ஷ்மண்'' என்று பரசு அவனிடம் ஸ்காட்சைக் கை காட்டினான். பென்சன் அண்ட் ஹெட்ஜஸ் சிகரெட்டை அப்படியே பெட்டியுடன் கொடுத்தான்.



லக்ஷ்மண் ஸ்காட்சை ஊற்றிக் கொண்டு ஒரு ஸிப் குடித்தான்.

''யெஸ் பாஸ்'' என்றான்.

''நாளை ராஜசேகர் ஊருக்குப் போகிறான். அனேகமாக ஒரு மாதம் வரமாட்டான். இந்த ஒரு மாதமும் நீ ஏறக்குறைய ராகினியின் நிழலாகவே இருக்க வேண்டும். அவள் எங்கே போகிறாள். யாரைச் சந்திக்கிறாள். யாருடன் பேசுகிறாள். எல்லாவற்றையும் வாட்ச் பண்ண வேண்டும். ராகினி இருந்தால் ராஜசேகர் உருப்பட மாட்டான். அது நிச்சயம். ராகினியை ராஜசேகரிடம் இருந்து கழற்றி விட வேண்டும். அதற்கு ஒரு ஸாலிட் ப்ரூஃப் வேண்டும். அதைக் கொண்டு வருவது உன் கையில் இருக்கிறது. என்ன?''

''தெரியும் பாஸ். ராகினியை நான் க்ளோஸாக வாட்ச் பண்ணிக் கொண்டு இருக்கிறேன். ராகினி ஏதாவது ஒரு தப்பாட்டம் ஆடினாலும் நான் உங்களிடம் ரிப்போர்ட் பண்ணி விடுகிறேன்'' என்றான் லக்ஷ்மண் முகத்தில் இருக்கும் சிரிப்பு மாறாமல்.

''ரைட் நீ போகலாம். விஷயத்தை ரகசியமாக வைத்துக் கொள்.''

''சொல்ல வேண்டுமா என்ன?'' என்று லக்ஷ்மண் சொன்னான். அந்த அறையை விட்டு வெளியேறினான்.

லக்ஷ்மணின் முழுப் பெயர் லக்ஷ்மண் பிரகாஷ். அவனுக்கு ஒரு அண்ணன் இருக்கிறான். ராம் பிரகாஷ். ராம்பிரகாஷின், லக்ஷ்மண் பிரகாஷின் மூதாதையர்கள் பனாரஸில் இருந்து சென்னைக்கு வந்து செட்டில் ஆனவர்கள். அப்பா இங்கே பிஸ்வநாத் பான்ஷாப் என்று ஒன்று தொடங்கி நிறைய சம்பாதித்தார். பையன்கள்

இருவரையும் படிக்க வைத்தார். பையன்கள் பட்டம் வாங்கினார்கள். ஆனால் இருவருமே அவர் எதிர்பார்த்தபடி அரசாங்க வேலைக்குச் செல்லவில்லை. ராம்பிரகாஷ் ஸ்டாக் மார்க்கெட்டில் நுழைந்தான். ஒரு ஸ்டாக் புரோக்கரின் கம்பெனியில் அஸிஸ்டென்டாகச் சேர்ந்து, ஹர்ஷத் மேத்தாவிற்கு முன்பு, ஹர்ஷத் மேத்தாவிற்கு பின்பு என்ற ஸ்டாக் மார்க்கெட்டின் இரு காலகட்டங் களில், ஹர்ஷத் மேத்தாவிற்கு முன்பு என்ற காலகட் டத்தில் சில லட்சங்கள் சம்பாதித்தான் ஸப்-புரோக்கராக இருந்து.

ஸ்டாக் மார்க்கெட் அதல பாதாளத்தை நோக்கி சரியப் போகிறது என்பதை ஓரளவு எதிர்பார்த்தான். அந்தத் தொழிலில் இருந்து விலகி விட்டான். இன்றைக்கு வேலையில்லாப் பட்டதாரி. டீக்காக டிரஸ் பண்ணுவான். ஷூ அணிவான். காலை முதல் சுற்றத் தொடங்குவான்.

லக்ஷ்மண் பிரகாஷிற்கு, ராம் பிரகாஷின் மேல் ஒருவித வெறுப்பு. எந்த வேலையிலும் நிலைக்காமல் சுற்றிச் சுற்றி வருகிறானே என்று. ஆனால் ஒரு நாளும் லக்ஷ்மணிடம் அவன் செலவுக்குப் பணம் கேட்ட தில்லை. அதனால் ராம் பிரகாஷை அவ்வளவாக ஒதுக்கு வதும் இல்லை. இருவரும் ஒரே ப்ளாட்டில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்யாணத்தைப் பற்றி இருவருமே யோசித்தது இல்லை. இந்த மாதிரி மகன் களிடம் இருந்து குப்பை கொட்டுவதை விட சந்தியா வந்தனம், ராமநாம சங்கீர்த்தனம் என்று தனது காசி கிராமத்திலேயே குப்பை கொட்டுவது மேல் என்று அவர்களுடைய தந்தை, தனது பெண்டாட்டியையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்.



எப்போதாவது ஒரு முறை 'நலம், நலமறிய ஆவல்' என்று கடிதம் போட்டுக் கொள்வதோடு சரி.

லக்ஷ்மண் பிரகாஷ் உத்தரப்பிரதேசத்து தாபா ஒன்றின் உட்புறம் இருந்த தனியான அறையில் உட் கார்ந்திருந்தான். அது அவனுக்கென்று கடைக்காரனால் அளிக்கப்படும் தனி அந்தஸ்து, அங்கீகாரம். அவன் முன்னால் இரண்டு ப்ளேட்கள். ஒன்றில் ஃபுல்கா. இன்னொன்றில் சப்ஜி.

ஃபுல்காவை இரு கைகளாலும் எடுத்துப் பாதியாகக் கிழித்து, ஒரு பாதியை மடித்து ஓரத்தில் காகித மடிப்பு மாதிரி மடித்து சப்ஜியை அதில் மண் வெட்டியால் மண் வாருவது போல் வாரி வாயில் போட்டுக் கொண்டான். ஃபுல்காவும் சப்ஜியும் வாயில் உப்பும், புளிப்பும் காரமு மாய்க் கரைந்தது. ஆஹா! இந்த கங்காதருக்குத்தான் எப்படிப்பட்ட கைப்பக்குவம்!

மனம் தந்தையைப் பற்றியும், தாயைப் பற்றியும், உருப்படாத அண்ணனைப் பற்றியும் சிந்திப்பதில் இருந்து விலகி வந்து ஃபுல்கா ரொட்டியையும், சப்ஜியை யும் ரசிக்க ஆரம்பித்தது.

லக்ஷ்மண் அப்படித்தான். தேவையற்ற விஷயங் களைப் போட்டு அவ்வளவாகக் குழப்பிக் கொள்ள மாட்டான். ராம்பிரகாஷ் எப்படியோ போகட்டும். உலகில் இருக்கும் அத்தனை பேரும் முன்னேறவில்லையே என்று நாம் கவலைப்பட்டு அதனால் ஆகப்போவது ஒன்றும் இல்லை. ராம்பிரகாஷ் முன்னேறினால் அவன் வாழ்க்கை சிறக்கப் போகிறது. லக்ஷ்மணுக்கு அதில் ஒரு காசு ஆதாயமாகப் போவதில்லை. பின் எதற்கு அண் ணனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்? ஒதுக்கு.

லக்ஷ்மண் கொஞ்சம் ரத்த வேகம் அதிகம் கொண்டவன். இளமைத் துடிப்பு மிகுந்தவன். சாகசங்களில் விருப்பம் உள்ளவன். பணம். நிறையப் பணம். நிறைய நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற குறிக்கோள் உடையவன். சாகசத்திற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான். சென்னையில் சில டிடெக்டிவ் ஏஜன்ஸிகள் தோன்றிய நேரம் அது. அவன் விரும்பும் சாகசங்களை, விதவிதமான அனுபவங்களை அடைய டிடெக்டிவ் தொழில் ஒரு சரியான வாய்ப்பு என்று அவனுக்குத் தோன்றியது. ஒரு டிடெக்டிவ் ஏஜன்ஸியில் வேலைக்குச் சேர்ந்தான். மாப்பிள்ளை வீட்டுக்காரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் குறிப்பிட்ட பெண்களைத் தொடர்ந்து சென்று அவளைப் பற்றிய தகவல்களைக் கொடுத்தான். சில கம்பெனி ரகசியங்கள் யார் மூலமாக வெளியேறுகிறது என்று கண்டு பிடித்துச் சொன்னான். வேலை கற்றுக் கொண்டவுடன் டிடெக்டிவ் ஏஜென்ஸியில் இருந்து வெளியே வந்து தனிப்பட்ட முறையில் அதே தொழிலைச் செய்யத் தொடங்கினான். ஏஜன்ஸியில் இருந்தபோது கிடைத்த கஸ்டமர் தொடர்புகளை உபயோகித்துக் கொண்டான்.

பெண்களைத் தொடர்ந்தான். பையன்களைத் தொடர்ந்தான். வேலை ஒப்படைத்த பார்ட்டி பெரிய பார்ட்டியாக இருந்தால் ஐம்பதாயிரம், ஒரு லட்சம் என்று சன்மானம். பார்ட்டி கொஞ்சம் சுமாரான பார்ட்டி என்றால் முப்பதாயிரம். காசுக்குப் பஞ்சமே இல்லை. அதனால் ஒரு மாருதி கார். ஒரு யமஹா பைக் என்று சகல சௌபாக்கியங்களும் அவனுக்கு இருந்தன.

இப்போது அவன் ஈடுபட்டிருப்பது ராகினியின் கேஸில். பரசுராமன் முன்பே அவனை அழைத்து ராகினியின் நடவடிக்கைகள் பற்றிக் கண்காணித்துச் சொல்லச் சொல்லி விட்டார். ஒரு லட்ச ரூபாய் சம்பளம்.



ஏற்கனவே ராகினியிடம் அவன் தன்னை அவளுடைய ரசிகனாக அடையாளம் காட்டிக் கொண்டு நெருங்கியிருந்தான். அவ்வப்போது லக்ஷமண் அவளிடம் கொடுத்த சின்னச் சின்ன பரிசுப் பொருட்களை ராகினி ஆவலுடன் பெற்றுக் கொண்டிருந்தாள். ராகினி அறியாத விஷயம், அந்தப் பரிசுப் பொருட்களில் அவன் மிகவும் பவர்ஃபுல்லான மைக்குகளைப் பொருத்தி இருந்ததுதான். ரிமோட்டில் இயங்குபவை. ராகினியின் வீட்டில் நடக்கும் அத்தனை உரையாடல்களும் இங்கே பிளாட்டில் ரெகார்ட் ஆகிக் கொண்டே இருக்கும். லக்ஷமண் அந்த உரையாடல்களை நிறைய முறை கேட்டிருக்கிறான். எதுவும் சுவாரசியமாக இல்லை. வேலைக்காரிக்கும் அவளுக்கும் நடக்கும் உரையாடல்களில் என்ன சுவாரசியத்தை எதிர்பார்க்க முடியும்? அவன் கொடுத்த பரிசுப் பொருட்கள் ராகினியின் வீட்டில் ஒவ்வொரு மூலையிலும் வைக்கிற மாதிரியான பரிசுப் பொருட்கள். எனவே ராகினி வேறு எங்கோ ரகசியமாக தன் வேலைகளை நடத்திக் கொள்கிறாள் என்றும் சொல்ல முடியாது. என்ன செய்கிறாள். எதற்கு பரசுராமன் அவளைக் கண்காணிக்கச் சொல்லியிருக்கிறார்?

தெரியவில்லை. அவள் ப்ளாட்டில் இருக்கும் சமயம் நேரடியாகக் கவனிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் தான் எதுவும் சரியாக விளங்கும் என்று நினைத்துக் கொண்டான்.

ராகினி வீட்டை விட்டு வெளியேறினால் அவளைக் கவனிக்க என்று ஒரு சின்னப் பையனை வேலைக்கு

வைத்துக் கொண்டிருந்தான் லக்ஷ்மண். ராகினியின் நடவடிக்கைகளில் வித்தியாசமாக ஏதாவது தெரிந்தால் தனக்கு உடனே தகவல் தெரிவிக்கும்படி சொல்லி யிருந்தான். அவனிடம் இருந்தும் லக்ஷ்மணுக்கு எந்த விதமான சுவாரசியமான தகவல்களும் வருவதில்லை. ஆயினும் லக்ஷ்மண் பொறுமையை இழக்கவில்லை. காத்திருந்தான். துப்பறியும் தொழிலில் மிக அவசியமாகத் தேவைப்படுவது இந்தப் பொறுமை. காத்திருத்தல் - ஏதாவது ஒரு மைக்ரோ செகண்டில் மிகப் பூதாகரமான ஒரு விஷயம் மாட்டும். அதுவே ஒரு துருப்புச் சீட்டாக அமைந்து விடும்.

லக்ஷ்மண் தட்டில் மிச்சமிருந்த ஃபுல்காவை சப்ஜி யில் தோய்த்து வாயில் அடக்கிக் கொண்டபோது அவன் இடுப்பில் செருகியிருந்த செல்போன் அதிர்ந்து கிச்சுகிச்சு மூட்டியது.

அவசரம் அவசரமாக எடுத்து நம்பர் பார்த்தான்.

அவனுடைய அஸிஸ்டென்டின் செல்போன் அழைப்பு.

ஏதோ முக்கியத் தகவல். லக்ஷ்மண் ஆவலுடன் செல்போனின் நம்பரைத் தட்டி 'ஹலோ' என்றான்.

# 10



ராகினிக்குப் புதிதாய் இருந்தது. ராஜசேகரின் போக்கு கொஞ்சம் கொஞ்சமாய் மாறிக் கொண்டு வருவது தெரிந் தது. எதனால் அப்படி மாறுகிறான் என்று புரியவில்லை.



அவள் மேல் சந்தேகம் வந்துவிட்டதா? சந்தேகம் வருகிற மாதிரி எப்போதாவது நடந்து கொண்டிருக்கிறோமா என்று நினைத்துப் பார்த்தாள்.

இல்லை. இல்லவே இல்லை.

எவ்வளவு நாள் காத்திருந்து, ஆராய்ந்து, ஆராய்ந்து, இவன் சரிப்பட்டு வருவானா, அவன் சரிப்பட்டு வரு வானா என்றெல்லாம் கணித்துப் பார்த்து கடைசியில் ராஜசேகர்தான் சரியான ஆள் என்று தீர்மானிக்கப்பட்டான்.

ராஜசேகர்தான் சரியான ஆள் என்று தீர்மானிக் கப்பட்டது. எடுத்தவுடனேயே சரியான முடிவு என்று புரிந்து போனதே.

ராஜசேகரின் கண்களில் பட வேண்டும் என்பதற் காகத்தான் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் பார்ட்டியில் மறைந்தும், தெரிந்தும், திரிந்தது.

ராஜசேகரின் கண்கள் அவளைத் தேடுவதை அறிந்து கொண்டவுடனேயே ராஜசேகர் அவளுடைய மாய வலையில் விழுந்து விட்டான் என்பது புரிந்து போயிற்று. அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

திட்டம் நம்பர் இரண்டு.

ராகினியை முரடர்கள் துரத்துவது, ராஜசேகரின் கார் முன்பாக அவள் வந்து விழுவது. அந்தத் திட்டமும் மிகச் சரியாகச் செயல்பட்டது.

திட்டம் நம்பர் மூன்று. ராஜசேகரை முரடர்கள் தாக்கு வது. பின் போலீஸ்காரர்கள் வந்தவுடன் ஓடுவது. அதுவும் மிகச் சரியாக செயல்பட்டு விட்டது. இவ்வளவு சிந்தித்து, சிந்தித்து, காய்களை நகர்த்தித்தானே இவ்வளவு தூரம் கடந்து வரமுடிந்திருக்கிறது.

ராஜசேகர் தன் வாயாலேயே 'ஐ லவ் யூ ராகினி' என்று சொல்ல வைக்க வேண்டும் என அவள் நடந்து கொண்டது. ராஜசேகர் 'ஐ லவ் யூ' சொன்னது. கல்யாணத்திற்கு அலைக்கழித்தது. அதுவரை அவனுக்குத் தன்னைத் தராமல் இருந்து அவனுள் மோகப்பித்தைத் தலைக்கேறச் செய்தது. அவன் அவளுக்குப் பூரண அடிமையாக மாறுவான் என்று தெரிந்த பின் கல்யாணம் செய்தது.

எல்லாமே திட்டமிட்டபடிதான் நடந்தது.

பின் இப்போது மட்டும் எப்படி ராஜசேகருக்குச் சந்தேகம் கிளைத்தது. இத்தனைக்கும் ராஜசேகர் இருக்கும்போது அவள் தன்னை ஒவ்வொரு முறையும் குறைவில்லாமல் கொடுத்து வந்திருக்கிறாள். அவள் ராஜசேகரின் தாசி என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படுகிற மாதிரி நடந்து கொண்டிருக்கிறாள்.

ராஜசேகரின் மனதை வேறு யாராவது கலைத்து விட்டார்களா?

நேற்றிரவு என்ன நடந்தது?

ராஜசேகர் எங்கேயோ தனியாகப் போய்த் திரும்பி வந்தான். அவன் தனியாகப் போனால் வேறு எங்கேயும் போக மாட்டான். பாருக்குத்தான் போவான். அவன் பாருக்குப் போனால் அதன் பின் அவனைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை என்று அவள் பிரகதியிடம் சொல்லியிருந்தாள்.

பிரகதி, ராகினியின் தோழி. தோழி என்பதை விட வேலைக்காரி என்பது சற்று சரியாக இருக்கும். ஐந்து நட்சத்திர ஹோட்டல் பார்ட்டியில் பாவாடையும், சட்டையும் அணிந்து திரிந்த பெண்களில் ஒருத்தி.



ராகினியின் சொல்படி அவள் அங்கே வந்து கலந்து கொண்டிருக்கிறாள் என்பது யாருக்கும் தெரியாது. பிரகதியின் வேலை ராஜசேகரின் நிழலாக இருப்பது. அவன் எங்கே போகிறான். வருகிறான் என்பதையெல்லாம் சொல்வது.

பிரகதி அவள் வேலையை ஒழுங்காகச் செய்து வருகிறாள்.

ராஜசேகர் பரசுவைச் சந்தித்தால் கூட இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைச் சேகரித்துத் தரும் பொறுப்பையும் சேர்த்து எடுத்துக் கொண்டு எல்லா விஷயங்களையும் உடனுக்குடன் ராகினியிடம் ஹெல்த் சென்டரில் தெரிவித்து விடுகிறாள். அல்லது போனில் தகவல் சொல்கிறாள். ராகினியின் செல்போன் பெரும்பாலும் பிரகதியிடம் இருந்து தகவல் பெறுவதற்கு மட்டுமே உபயோகப்படுகிறது.

நேற்று அவன் ஓஷியானிக் ஹோட்டல் பாருக்குச் சென்றான். பாருக்குள் நுழைந்து விட்டால் அவ்வளவு தான். ராஜசேகர் ஃபுல்லாக குடித்து விட்டு வீட்டுக்கு வந்து படுத்து விடுவான். யாரிடமும் எதுவும் பேச மாட்டான்.

நேற்றும் அப்படித்தான். ஓஷியானிக் பாருக்குள் நுழைந்தான் என்ற செய்தி தெரிந்தவுடன் அவள் பிரகதியைப் போகச் சொல்லி விட்டாள்.

ஆனால் ராஜசேகர் திரும்பி வந்தபோது சற்றுத் தெளிவாக இருந்தான். நேற்று இரவு அவன் அவளைப் பார்த்த பார்வையில் லேசான விரோதம் இருந்தது. இத்தனை நாள் காணப்பட்ட கோழைத்தனமும், அடிமைத்தனமும் இல்லை.

குடித்துவிட்டு வந்தாலும் அவளை ஒரு முறை கட்டிப் பிடித்து முத்தமிடுவான். அதன் பின் படுக்கைக்கு அழைத் துப் போவான். ஆனால் நேற்று அவன் தன்னுடைய அறைக்குப் போய் விட்டான்.

இரவு முழுக்க என்னவோ செய்து கொண்டிருந்தான்.

இரண்டு முறை அவளாக வலியச் சென்று மோகினி ஆட்டம் ஆடிக் காண்பித்தாள். அவனைப் படுக்கைக்கு அழைத்தாள்.

ம்ஹூம். மசியவில்லை.

''எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது ராகினி. நீ போய்ப் படு. அடுத்த கதை பற்றி யோசிக்கிறேன்'' என்று சொல்லி விட்டான்.

என்ன ஆயிற்று? பாருக்குள் அவன் யாரையாவது சந்தித்தானா?

மறுநாள் காலை எழுந்து புத்தகங்களை எல்லாம் விரித்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

ராகினிக்கு காலை எட்டு மணிக்கு ஷூட்டிங்கிற்கு அழைத்துப் போக வண்டி வந்து விட்டது. ஷிவா கிரியேஷன்ஸின் சீரியலில் அவளுக்கு ஒரு சின்ன ரோல். ஒரு நாள் கால்ஷீட்.

அவள் ஷூட்டிங்கிற்குப் புறப்பட்டால் அவனும் வருவது வழக்கம். முன்பெல்லாம் அவுட் - டோர் ஷூட்டிங்கிற்கு தவறாமல் அவனை அழைத்துப் போய் விடுவாள். இப்போதெல்லாம் சென்னைக்குள் ஷூட்டிங் என்றாலும் அவன் வரத் தொடங்கி விட்டான். அங்கே ஷூட்டிங்கில் கிரீன் ரூமில் அவன் பாட்டிற்கு உட்கார்ந்து குடித்துக் கொண்டிருப்பான். அவளும் கவலைப்படாமல் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பாள்.



இன்றைக்கு ஷூட்டிங்கிற்கு வரவில்லை என்று சொல்லி விட்டான். அவள் கெஞ்சி அழைத்துப் பார்த்தும் மறுத்து விட்டான்.

ராகினி காரணம் புரியாமல் தான் ஷூட்டிங்கிற்குப் புறப்பட்டுப் போனாள். பிரகதியிடம் ராஜசேகரைக் கொஞ்சம் கவனி என்று சொல்லியிருந்தாள்.

ராஜசேகர் பிற்பகல் ஒரு மணிக்குப் பெட்டியுடன் வீட்டை விட்டு வெளியே வந்திருக்கிறான். அவன் வாசல் கேட்டைத் தாண்டி வெளியே வந்தவுடன் ஒரு டூரிஸ்ட் கார் அவனருகில் வந்து நின்றிருக்கிறது. அதில் அவன் ஏறியிருக்கிறான். சென்ட்ரலில் இறங்கிக் கொண்டு உள்ளே போய் கோயமுத்தூர் போகும் ஷதாப்தி எக்ஸ் பிரஸில் ஏறியிருக்கிறான். ரயில் புறப்பட்டிருக்கிறது. அவன் எங்கே போகிறான் என்பது பிரகதிக்குத் தெரிய வில்லை. வழியில் எங்கே வேண்டுமானாலும் இறங்கக் கூடும்.

அவளிடம் சொல்லாமல் போகிற அளவிற்கு என்ன நேர்ந்தது? எங்கே புறப்பட்டுப் போகிறான்? எங்கே இறங்கப் போகிறான்? எங்கே தங்கப் போகிறான்? எவ்வளவு நாட்கள் தங்கப் போகிறான்?

**ஒருவேளை ராகினியைப் பற்றிய உண்மையெல்லாம் அவனுக்குத் தெரிந்து விட்டதா?**

நினைத்துப் பார்க்கவே ராகினிக்குப் பயமாக இருந்தது. ஒருவேளை அவனுக்குத் தெரிந்திருந்தால்?

அடுத்து என்ன ஆகும்?

ராகினி ராஜசேகரின் அறையை ஆராய்ந்தாள். ஏதாவது கடிதம் கிடிதம் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறானா என்று தேடினாள். எதுவும் இல்லை.

வீடு முழுக்கத் தேடினாள். எதுவும் கிடைக்கவில்லை.

அவளுக்குப் பயமாக இருந்தது. அவளுக்கு ராஜசேகர் வேண்டும். அவனுடைய நிழலில் தான் அவளால் தனது செயல்களை எல்லாம் நிறைவேற்ற முடியும். ராஜ சேகருக்கு அவள் மேல் என்னவோ சந்தேகம்! அதனால் தான் அவளிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் போயிருக்கிறான்.

அவள் வாழ்க்கையில் இருந்து அவன் ஒரேயடியாக விலகத் தீர்மானித்து விட்டானா? ராகினிக்கு ஒன்றும் புரியவில்லை.

உடனடியாக அவள் ஜோவைச் சந்தித்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்தாள்.

தனது செல்போனை எடுத்தாள். பேஜர் நம்பர் ஒன்றை டயலில் தட்டினாள்.

'நான் உன்னைச் சந்திக்க வேண்டும் அவசரம்' என்று தகவல் கொடுத்தாள்.

காத்திருந்தாள்.

இரண்டு நிமிடங்கள் கழித்து அவள் செல்போன் ஒலித்தது. அவளுடைய செல்போனில் வந்த நம்பரைப் பார்த்தாள். ஜோவின் நம்பர்.

எடுத்துக் காதில் வைத்து 'ஹலோ' என்று ரகசியக் குரலில் பேசினாள்.

''பிஸ்ஸா ஹட் - ஸிக்ஸ் ஓ க்ளாக்'' என்று ஒரு குரல் அவள் பேசியதை விடவும் ரகசியமாக ஒலித்தது.

மறுகணம் போனில் வந்த குரல் தொடர்பைத் துண்டித்துக் கொண்டது.



# 11



சரியாக ஐந்து முப்பதிற்கு ராகினி தன் வீட்டில் இருந்து வெளிப்பட்டாள். பெசன்ட் நகர் கடற்கரைச் சாலையில் அமைந்திருந்த அந்த வீடு ராஜசேகரால் முதல் சீரியலுக்குப் பின் வந்த பணத்தில் வாங்கப்பட்டது.

ஒரு சின்னத் தோட்டம். போர்டிகோ. கீழே, மேலே என்று இரு பிரிவுகளாகக் கட்டப்பட்ட வீடு. பரசுதான் அந்த வீட்டின் ரெஜிஸ்ட்ரேஷனையெல்லாம் உடன் இருந்து கவனித்துக் கொண்டான்.

வீட்டிற்கு நேர் எதிரே கடற்கரை என்பதால் எந்நேரமும் அங்கே ஆட்கள் இருந்து கொண்டே இருப்பார்கள்.

ராகினி மாருதியில் வெளிப்பட்டு கேட்டைச் சாத்தி விட்டு வந்து மறுபடியும் காரில் ஏறி அமர்ந்து காரைக் கிளப்பினாள்.

லக்ஷ்மண் பிரகாஷின் அஸிஸ்டெண்ட் ராம்கி ராகினி வெளிப்படுவதைப் பார்த்தவுடன் கொஞ்சம் விறைத்துக் கொண்டான். அவன் லக்ஷ்மண் பிரகாஷ் இருக்கும் ப்ளாட்டிற்கு அடுத்த ப்ளாட்டில் இருப்பவன். டிகிரியை முடித்தவன். லக்ஷ்மண் ஒரு டிடெக்டிவ் என்பது தெரியும். பல ஜேம்ஸ்பாண்ட் படங்களையும், பல இங்கிலீஷ் கதைகளையும், பல துப்பறியும் தமிழ்க் கதைகளையும் படித்து விட்டு அவற்றில் வரும் டிடெக்டிவ்களினால் அந்தத் தொழிலில் ஒரு கவர்ச்சி ஏற்பட்டு

லக்ஷமணிடம் அஸிஸ்டென்டாக சேர்ந்து கொண்டான்.

டிடெக்டிவ்களில் ராம்கிக்குப் பிடித்த டிடெக்டிவ், அவனுடைய ஆதர்சன ஹீரோ செல்வா. மற்ற டிடெக்டிவ்கள் எல்லாம் பூமிக்கு ஒரு அடி உயரத்திலேயே இருப்பது போல் தோன்றும் எல்லா மனிதர்களைக் காட்டிலும் சற்று உயர்ந்தவர்களாக, புத்திசாலிகளாக, சாகசக்காரர்களாக, யாவற்றிலும் வல்லவர்களாக இருப்பார்கள்.

செல்வா மட்டும் விதிவிலக்கு. ரோட்டில், சினிமாத் தியேட்டரில், ஹோட்டலில் என்று தினம் தினம் சந்திக்கும் எத்தனையோ சாதாரண முகங்களில் ஒன்றைப் பொருத்திக் கொண்டு, ஒரு கால் சற்றே ஊனமாக இருந்தாலும், முருகேசன் என்னும் சேம்சைட் கோல் போடும் அஸிஸ்டென்டை வைத்துக் கொண்டு செல்வா ஒவ்வொரு கேஸிலும் தடுக்கி விழுந்து, தடுமாறி வெற்றி பெறுவது அவனுடைய மனதில் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

செல்வாவைத் தன் மானசீகக் குருவாக ஏற்றுக் கொண்டு விட்டான். சாதாரணமான தனது நடையை லேசாக விந்தி விந்தி நடப்பது போல் அமைத்துக் கொண்டான். அப்படி இருப்பது ஒரு சவுகரியமான விஷயம். ஒரு கால் ஊனம் என்று பார்ப்பவர்கள் நினைப்பார்கள். அடையாளம் வைத்துக் கொள்வார்கள். அப்படி அடையாளம் வைத்துக் கொள்பவர்கள் எதிரிகளாக இருந்தால் அவன் ஊனமில்லாமல் இருப்பது கண்டு ஏமாந்து விடக்கூடும் என்பது அவன் கணிப்பு.

அப்பேர்ப்பட்ட ராம்கி, ராகினியைப் பார்த்ததும் லேசாகப் பரபரப்படைந்தான்.



தனது அருகில் நிறுத்தியிருந்த ஊனமுற்றோர்கள் ஓட்டும் மூன்று சக்கர கைனடிக் ஹோண்டாவில் ஏறி அமர்ந்தான். அந்த கைனடிக் ஹோண்டாவை லக்ஷமண் தான் அவனுக்கு வாங்கிக் கொடுத்திருந்தான்.

அதில் அமர்ந்து அவன் மாருதியைத் தொடர்ந்தான். ராகினிக்கு அந்த கைனடிக் ஹோண்டாவின் மேல் சந்தேகமே வரவில்லை.

அவள் மாருதியைச் செலுத்திக் கொண்டு போய் ராதா கிருஷ்ணன் சாலையில் இருந்த பிஸ்ஸா - ஹட்டில் நுழைந்தாள். இறங்கினாள். காரைப் பூட்டினாள். நிதானமாக நடந்து பிஸ்ஸா - ஹட்டில் நுழைந்தாள்.

ராம்கி தனது கைனடிக் ஹோண்டாவை பிளாட்பார்ரத்தை ஒட்டி நிறுத்தினான். செல்போனை எடுத்தான்.

மறுமுனையில் லக்ஷமண் பிரகாஷ்.

''நம்பர் ஒன். நீங்கள் குறிப்பிட்ட ஆள் இப்போது பிஸ்ஸா ஹட்டிற்குள் நுழைந்திருக்கிறது. காரைப் பூட்டி விட்டுப் போவதைப் பார்த்தால் திரும்பி வர நேரமாகும் போலிருக்கிறது. நான் உள்ளே போகவா? இல்லை நீங்கள் வருகிறீர்களா?''

லக்ஷமண் பிரகாஷ் ஃபுல்கா தட்டில் கையைக் கழுவினான். தோளுக்கும், காதுக்கும் இடையில் பொருத்தியிருந்த செல்லில் பேசினான்.

''வேண்டாம் ராம்கி. நான் வரவில்லை. என்னை அடையாளம் தெரியும். நீ உள்ளே போ. கவனி. பார்ட்டி தனியாக இருக்கிறதா? இல்லை. யாரையாவது சந்திக்கிறதா? சந்தித்தால் எதிர்பார்ட்டி ஆணா, பெண்ணா? என்ன

பேசிக் கொள்கிறார்கள்? ஏதாவது கொடுக்கல், வாங்கல் நிகழ்கிறதா? எல்லாம் கவனி. அப்பறம் என்னிடம் ரிப் போர்ட் பண்ணு.''

''யெஸ் நம்பர் ஒன்'' என்றான் ராம்கி உற்சாகமாக.

லக்ஷ்மண் பிரகாஷ் போனை கட் பண்ணினான். யோசித்தான்.

ராகினி இப்போது வீட்டில் இல்லை. வெளியே பிஸ்ஸா ஹட்டில் அவள் இருக்கிறாள். ராஜசேகரும் வீட்டில் இருக்க மாட்டான். இந்த நேரம்தான் அவள் வீட்டை சோதனை போட சரியான நேரம்.

லக்ஷ்மண் பிரகாஷ் உடனே அந்த இடத்தில் இருந்து புறப்பட்டான்.

பிஸ்ஸா ஹட்டிற்குள் நுழைந்தாள் ராகி. உள்ளே ஒரே காட்டுக் கூச்சலாய் இருந்தது. நிறைய விளக்குகள். டைனிங் ஹால் நைட் மேட்ச் ஆடப்படும் கிரிக்கெட் மைதானம் போல் பிரகாசமாய் இருந்தது. பெரும்பாலும் கல்லூரி மாணவர்கள், மாணவிகள். நீள நீளமாகப் போடப்பட்டிருந்த டேபிள்களுக்குப் பின்னால் இருந்த நாற்காலிகளில் சிரிப்பும், கத்தலுமாய் அவர்கள். அவர் களுக்குள் அவ்வளவாக இன்ஹிபிஷன் இல்லை. யூனி ஃபார்ம் அணிந்த பேரர்கள் அவர்களுக்கிடையில் பெப்ஸி, கோக், பிஸ்ஸா ஆகியவை கொண்ட ட்ராலிகளைத் தள்ளியபடி செயற்கைப் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு அலைந்தார்கள்.

ராகினி சுற்றிலும் பார்த்தாள். ஜோ இன்னும் வர வில்லை.

பேரரை விரல் சொடுக்கில் அழைத்தாள். வந்தான்.



''எனக்கு ஒரு மூலை டேபிள் வேண்டும். இரண்டே இரண்டு நாற்காலிகளுடன்'' என்றாள். நூறு ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டினாள்.

என்னதான் யூனிஃபார்ம் அணிந்து, மிக நாகரீகமாகத் தெரிந்தாலும் பணத்திற்கு மயங்காதவர்கள் யார்? பேரர் விசுவாசமாகச் சிரித்தான்.

''இதோ மேடம்'' என்று சற்று இருட்டான மூலையில் ஒரு டேபிளும் இரண்டு நாற்காலிகளும் அமைத்துக் கொடுத் தான். ராகினி உட்கார்ந்தாள். ஜோ வந்து விட்டான்.

ஜோ நல்ல உயரம். உயரத்திற்கேற்ற பருமன். காலர் இல்லாத பனியன் அணிந்திருந்தான். ஜீன்ஸ் பேண்ட். ஷூ. அவனது புஜங்களை பனியனின் கைகள் கவ்வி யிருந்த தினுசில் பார்த்தால் அவன் உடலை வளர்க்க நிறைய அக்கறை எடுத்துக் கொண்டிருப்பவன் என்பது புரியும். புஜங்கள் உருண்டு திரண்டு இருந்தன. பைல் பவுண்டேஷனில் பூமியில் நடப்பட்டிருக்கும் கான்க்ரீட் பில்லரை வந்து மோதும் மெகா ஹாமரை அந்த புஜங்கள் நினைவு படுத்தின. புருவங்கள் அடர்த்தியாக இருந்தன. உதடுகள் நீக்ரோக்களுடையது போல கொஞ்சம் தடிமனாக இருந்தன. இடது புருவத்தின் ஓரத்தில் இருந்து கன்னமேடு வரை இறங்கியிருந்த ஒரு தழும்பு அவனுக்கு அழகாகவும் இருந்தது. ஆண்மை நிரம்பியவனாகவும் அறிவித்தது. அவனைப் பார்த்தால் கொஞ்சம் விலகியே இருக்க வேண்டும் என அறிவுறுத்தவும் செய்தது.

ராகினிக்கு எதிரே வந்து அமர்ந்தான்.

அவனைப் பார்த்தவுடன் ராகினியின் முகத்தில் பல்பு போட்ட மாதிரி ஒரு வெளிச்சம். முகத்தில் இருந்த கவலைக் கோடுகள் மறைந்தன.

ஜோ அவளைக் கவனித்தது போல் காட்டிக் கொள்ளா மல் மெனு கார்டை எடுத்துப் பார்த்தான். பேரர் அருகில் வந்து சர்வாங்கமும் பணிய நின்றான்.

ஜோ ஹவானா சுருட்டு போல் இருந்த தனது விரலால் மெனு கார்டில் அங்கங்கே தொட்டுக் காட்டினான்.

பேரர் தலையசைத்து விட்டு நகர்ந்தான்.

அவர்களுக்கு அடுத்த நாற்காலியில் ராம்கி உட் கார்ந்திருந்தான். தனியாக இருந்தான். ராகினியையும், ஜோவையும் அவர்கள் அறியாது கவனித்துக் கொண் டிருந்தான்.

பேரர் அவர்களிடம் இருந்து நகர்ந்து வந்தவுடன் அவனுடைய வழியை மறித்தான்.

''என்ன?'' என்றான் பேரர்.

ராம்கி இருநூறு ரூபாய்களை பேரரிடம் நீட்டினான். பேரர் புரியாமல் நோட்டுகளைப் பார்த்தான்.

இன்று ஏதாவது நரி முகத்தில் விழித்திருக்கிறோமா?

ரூபாய் நோட்டுகளைப் பார்த்த பேராசை அவன் கண்களில் மின்னியது. அந்த நோட்டுகளை வாங்கப் பார்த்தான்.

ராம்கி நோட்டுகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண் டான்.

''எனக்கு ஒரு சின்ன உதவி பண்ணு. பண்ணி விட் டால் இந்த ரூபாய் உனக்கு.''

''என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் பேரர்.

ராம்கி தனது சட்டைப் பையில் இருந்து பட்டன் போன்றதொரு பொருளை எடுத்தான். அது ஒரு சக்தி வாய்ந்த மைக்ரோ போன்.



''இந்தா'' என்று நீட்டினான்.

பேரரின் உடம்பு ராம்கியின் கையில் இருந்த பொருளை ஜோவோ, ராகினியோ பார்க்க விடாமல் மறைத்தது.

பேரர் அந்த மைக்ரோபோனை கையில் வாங்காமல் பார்த்தான். அது அணுகுண்டுவோ என்னவோ என்ற அச்சம் அவன் முகத்தில் இருந்தது.

''என்ன செய்ய வேண்டும், இதை நான் சாப்பிட வேண்டுமா?''

''தேவையில்லை. உன் பின்னால் அடுத்த டேபிளில் உட்கார்ந்திருக்கிறார்களே?''

''ஆம்.''

''அங்கே மேஜையில் ஒரு ஃப்ளவர் வாஸ் இருக்கிற தல்லவா?''

''ஆம்.''

''அதில் இந்த பட்டனை அவர்களுக்குத் தெரியாமல் போட வேண்டும்.''

''போட்டால்?''

''உனக்கு இருநூறு ரூபாய்.''

''இது என்ன செய்யும்?''

''முட்டாளே. இது ஒன்றும் வெடிக்காது. விஷப் புகை கக்காது. சும்மா விளையாட்டிற்கு. அவர்கள் காதலர்களாகத் தெரிகிறார்கள். அவர்கள் பேசுவதைக் கேட்க வேடிக்கை யாக இருக்கும். எனக்குக் கேட்க வேண்டும் போல் இருக்கிறது.''

பேரர் சட்டென நிமிர்ந்து ராம்கியின் முகம் பார்த்தான். பேரரின் முகத்தில் ஒரு குறும்புப் புன்னகை விளையாடி யதை ராம்கி கவனிக்கவில்லை.

''சரி'' என்ற அந்த மைக்ரோ போனைக் கவர்ந்து கொண்டான் பேரர்.

அவன் உள்ளே சென்று மறைந்ததும் ராம்கி வாக்மேன் போல் தெரிந்த ஒரு பிளாஸ்டிக் டப்பியை எடுத்து சட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். அதில் செருகப் பட்டிருந்த இயர்போன்களை எடுத்துக் காதுகளில் செருகிக் கொண்டான்.

பேரர் வெளியே வந்தான். ட்ரேயில் மினரல் வாட்டர் பாட்டில்கள். நேராக ராகினி இருந்த டேபிளில் கொண்டு போய் வைத்தான். ராகினி ஜோவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஜோ சிகரெட் பற்ற வைத்துக் கொண் டிருந்தான்.

பேரர் ட்ரேக்கு அடியில் தாங்கிப் பிடித்த கையில் இருந்து மைக்ரோ போனை ப்ளவர் வாஸில் நழுவ விடு வதை ராம்கி பார்த்தான்.

அவன் காதுகளில் இடி இடித்த மாதிரி இருந்தது. மைக்ரோ போன் ப்ளவர் வாஸில் செட்டில் ஆன சத்தம் அது.

ஜோவும், ராகினியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஜோ சிகரெட்டை உதட்டில் இருந்து எடுத்துவிட்டு ராகினியைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தினான்.

ராகினி அவனிடம் சைகை பாஷையில் கடகட வென்று சைகைகளைக் காட்டத் தொடங்கினாள்.

ராம்கி அறியாத ஒரு உண்மை அது. ஜோவிற்குக் காது கேட்காது. வாய் பேச வராது. எனவே சைகை பாஷை மூலம்தான் அவன் பேசுவான். அந்தப் பாஷையில் பேசினால்தான் அவனுக்குப் புரியும்.



ராகினி தன் உள்ளங்கையில் விரல் பதித்தாள். ஆட்காட்டி விரலை வட்டமாக்கினாள். உதட்டில் விரல் பொருத்திக் காட்டினாள். இரு கைகளையும் தாமரை மொட்டுகள் விரிவது போல் விரித்துக் காட்டினாள். கண்களை விரித்தாள். மார்பில் ஐந்து விரல் பதித்தாள்.

ராகினியின் சைகைகளுக்குப் பொருளாவது:

"ஜோ, ராஜசேகர் சந்தேகப்படுகிறான். இன்று பிற்பகல் ஷதாப்தி எக்ஸ்பிரஸில் ஏறிப் போனான். எங்கே போகி றான் என்று சொல்லவில்லை. டிக்கெட் புக் பண்ணிய தற்கான விவரம் எதுவும் இல்லை. எனக்குப் பயமாக இருக்கிறது. என்ன செய்வதெனப் புரியவில்லை.''

ஜோ சிரித்தான். சைகை பாஷையில் அவன் மறு மொழி சொன்னான்.

சைகை மொழியில் ஜோவும், ராகினியும் பேசிக் கொண்ட விபரம் இதோ:

''மை டியர் ராஜசேகர் ஊரில் இல்லை என்று சொல் கிறாயா?''

"ஆம். ஆம். ஆம்.''

"ஏன் பயப்படுகிறாய்? ராஜசேகர் ஒரு பூச்சி. அவனை நாம் ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டிருக் கிறோம். அவ்வளவுதான். ராஜசேகரால் உனக்கு ஒரு தொந்தரவும் வராது. வரப்போவதில்லை.''

''ராஜசேகர் சந்தேகப்படுகிறான் ஜோ.''

''என்னவென்று?''

''சொல்லத் தெரியவில்லை.''

''உன்னிடம் வெளிப்படையாக ஏதாவது சொன்னானா?''

''இல்லை.''

''உன் மேல் ஏதாவது குற்றம் சாட்டினானா?''

"இல்லை ஜோ. ஆனால்..."

"வெயிட் பேபி. ராஜசேகருக்கு நீ அலுத்துப் போயிருக்கலாம். அதனால் கொஞ்சம் விலகி இருக்கலாம்."

"எங்கேயும் சொல்லாமல் போனது கிடையாது ஜோ."

'பயப்படாதே. ராஜசேகர் எங்கே போயிருந்தாலும் எனக்குத் தகவல் தெரிய வரும். அவன் இருக்குமிடம் தெரிந்தவுடன் அவன் ஐடியா என்ன என்பதைத் தெரிந்து சொல்கிறேன். அதுவரை நீ வழக்கம் போல பேசு, சிரி, சாப்பிடு. குடி, படு."

"யாருடன் ஜோ?"

"கம்-அகய்ன். நீ சொல்வது எனக்குப் புரியவில்லை."

"படு என்று சொன்னாயே. யாருடன் என்று கேட்டேன்."

"ஏன், என்னுடன் படேன்."

"வீட்டுக்கு வா."

"எப்போது?"

"இப்போது."

"ஓ.கே. கம் ஆன் லெட் அஸ் கோ."

அவர்கள் இருவரும் பேரருக்கு தாராளமாக டிப் பண்ணிவிட்டுப் புறப்பட்டார்கள்.

ராம்கி அடுத்த டேபிளில் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருந்தான். மைக்ரோ போன் ஒரு வார்த்தையைக் கூட ஒலிபரப்பவில்லை. என்ன இது? ஏதாவது டெக்னிகல் கோளாறா? மெல்லத் திரும்பிப் பார்த்தான். ஜோவும், ராகினியும் சைகை மொழியில் பேசுவது

மைக்ரோ போன் வைத்ததே வேஸ்ட்.



ராம்கியின் தவிப்பைப் பார்த்துவிட்டு அவனிடம் இருநூறு ரூபாய் லஞ்சம் வாங்கிய பேரர் விழுந்து விழுந்து சிரித்தான் - ராம்கி அறியாமல்.

ராம்கி ராகினியும் இன்னொருவனும் எழுந்து கொள்வதைப் பார்த்தான். வெளியேறுவதைக் கவனித்தான்.

அவசர அவசரமாகத் தானும் பில்லை செட்டில் பண்ணினான். ராகினி அமர்ந்திருந்த டேபிள் மேல் இருந்த ப்ளவர் வாஸைக் கவிழ்த்து மைக்ரோ போனைப் பொறுக்கிக் கொண்டு வெளியேறினான்.

ராகினியின் மாருதியைப் பார்க்கிங் லாட்டில் இருந்த காவல்காரன் விசிலடித்து வெளியே எடுக்க உதவி கொண்டிருக்க, ராம்கி தனது கைனடிக் ஹோண்டாவை நோக்கி நடந்தான்.

மாருதி வெளிப்பட்டது. ராம்கி அதைப் பின் தொடர்ந்தான்.

மாருதி ராகினியின் வீட்டுக் காம்பவுண்ட் வாசலில் நின்றது. ராகினி இறங்கிச் சென்று கேட்டைத் திறந்தாள்.

ராம்கி கடற்கரை அருகே கைனடிக் ஹோண்டாவை நிறுத்தினான். செல்போனை எடுத்து அதன் நம்பர்களைத் தட்டினான்.

## 12



லக்ஷ்மண் பிரகாஷ் அதிர்ந்து போனான்.

காரணம் மிக எதிர்பாராத தருணத்தில் அவனுடைய செல்போன் கீக், கீக், கீக் என்று அலறியதுதான்.

அவன் உடல் ஒரு முறை தூக்கி வாரிப்போட்டது. மறுகணம் சமாளித்துக் கொண்டான். செல்போனில் யாருடைய அழைப்பு என்று பார்த்தான்.

ராம்கி.

''யெஸ்'' என்றான்.

''நம்பர் ஒன்'' என்று ராம்கி உற்சாகமாகத் தொடங்கினான். ராகினி யாரோ ஒரு ஆளைச் சந்தித்ததைச் சொன்னான். அந்த ஆள் ஊமை என்பதைத் தெரிவித்தான். இல்லை ஊமை போல் நடிக்கிறானோ என்னவோ என்ற தனது சந்தேகத்தையும் தெரிவித்தான். அவர்கள் இருவரும் இப்போது ராகினியின் வீட்டுக்குள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்தான்.

அந்தச் செய்தியை அவன் சொல்லி முடிக்கும்போது, கதவு க்ளிக்டக் என்ற ஒலியுடன் திறந்து கொள்வது கேட்டது.

''என்னை இப்போது தொந்தரவு செய்யாதே. நான் அப்புறம் உன்னுடன் தொடர்பு கொள்கிறேன்'' என்று கிசுகிசுப்பாகக் கூறிவிட்டு செல்போனை ஆப் பண்ணினான்.

அந்த வினாடியில் அவன் ராகினியின் படுக்கையறையில் இருந்தான். ராகினி வெளியே போயிருக்கும் நேரம்தான் அவள் வீட்டை ஆராய்வதற்கு சரியான நேரம் என்று முடிவெடுத்து அவன் ராகினியின் வீட்டிற்கு வந்தான். ராகினி, ராஜசேகர் டூப்ளே - அபார்ட்மென்டின் டூப்ளிகேட் சாவி அவனிடம் இருந்தது. அந்த வீட்டைக் கீழிருந்து ஒவ்வொரு இடமாக ஆராய்ந்தான். கலைத்தது தெரியாமல் முன்பிருந்தபடியே எல்லாவற்றையும் பழைய படி வைத்துவிட்டு அவன் மாடியில் இருந்த படுக்கை



அறையை நோக்கிச் சென்றான். படுக்கை அறையை அவன் முழுவதுமாக ஆராய்ந்திருந்தால், படுக்கை அறையில் இருந்த வார்ட்ரோபின் சுவர்ப்பக்கம் இருந்த பலகை ஒன்றை வெளியே இழுத்து சுவரில் பதிக்கப்பட்டிருந்த லாக்கர் ஒன்றினை அவன் திறந்து பார்த்திருந்தால் அவன் அந்த வீட்டில் நுழைந்ததன் பலன் அவனுக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அதற்குள் ராகினியின் வருகையை ராம்கி அறிவித்து விட்டான்.

கீழே கதவு திறக்கும் ஓசை கேட்டது. லக்ஷ்மண் பிரகாஷின் இதயம் தாறுமாறாகத் துடிக்கத் தொடங்கியது. என்ன செய்வது? என்ன செய்வது? எங்கே மறைவது?

சுற்றும் முற்றும் பார்த்தான்.

ஆளுயரத்திற்கு ஒரு மரக்கதவு இருந்தது. அதில் பெப்ஸி பாட்டில் மூடி அளவிற்கு அங்கங்கே துளைகள் இருந்தன. அட்லீஸ்ட் உள்ளேபோனால் மூச்சு திணறாது. அந்த மரக்கதவைத் திறந்தான். அந்த இடம் உடுத்திக் களைந்த ஆடைகளைப் போடும் துணிக்கூடை என்று புரிந்தது. ராகினியின் பாவாடை, பிரா, ரவிக்கை, புடவை, ராஜசேகரின் பேண்ட், ஜட்டி என்று ஒரு குவியல் இருந்தது. லக்ஷ்மண் பிரகாஷ் அதனுள் நுழைந்தான். கதவை இழுத்து மூடிக் கொண்டான். உள்ளே இருந்த மாக்னெடிக் காட்ச்சில் கதவு கச்சிதமாகப் பொருந்தியது.

லக்ஷ்மண் பிரகாஷ் பெருமூச்சு விட்டான். உள்ளிருந்த ஓட்டை வழியாக படுக்கை அறை முழுவதும் தெரிந்தது.

கையில் இருந்த மினி காமிராவைத் தோளில் தொங்க விட்டுக் கொண்டான். ஏதாவது டாக்குமென்டுகள் அது இது என்று ஏதாவது இருந்தால் போட்டோ எடுப்பதற்கென அவன் அந்த மினி காமிராவைப் பயன்படுத்துவது வழக்கம்.

பெருமூச்சு விட்டான். இனி பயமில்லை. ஒரு தற்காலிக நிம்மதித் தீவு.

அவன் இருந்த படுக்கையறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. லக்ஷ்மண் பிரகாஷ் அப்படியே ஒடுங்கினான். ராகினியும், இன்னொருவனும் நேராகப் படுக்கை அறைக்கே வருகிறார்களா என்ன?

லக்ஷ்மண் பிரகாஷ் காலால் துழாவி கீழேயிருந்த பாவாடையையும் புடவையையும் எடுத்தான். தன் மேல் போர்த்திக் கொண்டான்.

வெளியில் இருந்து ஒரு வேளை யாராவது பார்த்தாலும் சந்தேகம் வரக்கூடாது. வராதல்லவா?

ராகினி உள்ளே நுழைந்தாள்.

பின்னாலேயே ஜோ நுழைந்தான்.

கதவைத் தன் காலால் தள்ளினான். கதவு லாட்சில் பொருந்திப் பூட்டிக் கொண்டது.

இப்போது ஜோவின் பார்வையில் காமம் மிக வழிந்தது.

ஒரே பாய்ச்சலாக ராகினியின் மீது பாய்ந்தான். அவளைக் கட்டியணைத்தான். ராகினியின் மோவாயில் தன் மோவாயைப் பதிய வைத்து அவள் பின் கழுத்தில் கை கொடுத்து நிமிர்த்தினான். தானும் முன்னால் முகத்தை வளைத்தான்.

ஹே ராம்! ஹேராம்! ஹே ராம்!

லக்ஷ்மண் பிரகாஷின் சர்வ நரம்புகளும் முறுக்கேறின.

எப்படிப்பட்ட ஒரு காட்சி தனக்கு முன்னால் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சும்மா ஒரு செப்பு நாணயம் இல்லாவிட்டால் ஒரு வெள்ளி நாணயம் என ஏதாவது



கிடைக்கும் என்று தேடிக் கொண்டு வந்தவனுக்குத் தங்கப் புதையலே கிடைத்த மாதிரி...

கண்களை அகல விரித்துப் பார்த்தான்.

அந்த இளைஞன் ராகினியை இறுக்கமாக அணைத்திருக்க, ராகினி அவனிடம் இருந்த தன்னை விடுவித்துக் கொண்டாள். படுக்கையில் இருந்த ஒரு ஷெல்ஃபைத் திறந்தாள். அது சாராய சூப்பர் மார்க்கெட். இரண்டு கண்ணாடி கோப்பைகளில் விஸ்கியையோ, பிராந்தியையோ நிரப்பிக் கொண்டு வந்தாள். அவனிடம் ஒன்று நீட்டினாள்.

ணிங். ணிங்.

இரு கோப்பைகளும் மோதிக் கொண்டன.

அவர்கள் இருவரும் குடித்தார்கள். அந்த இளைஞன் கோப்பையை ஒரு மடக்கில் காலி செய்தான். இன்னொரு முறை கோப்பையை நிரப்பிக் கொண்டான். இன்னொரு மடக்.

இப்போது இளைஞனின் கண்கள் சிவந்திருந்தன. அவன் கண்களில் காமத்துடன் வெறியும் கலந்திருந்தது.

அவன் ராகினி மேல் பாய்ந்தான். அவளது ஆடைகளைக் கிழித்தான். ராகினி அவனது செயல்களுக்கு ஆர்வமாக மகிழ்ச்சி பொங்க சம்மதித்தாள்.

லக்ஷ்மண் பிரகாஷிற்கு அப்போதுதான் தோளில் தொங்கும் காமிரா நினைவிற்கு வந்தது. சே. என்ன ஒரு மடையன் நான்!

காமிராவின் லென்ஸை அந்த மரப்பெட்டியின் ஒரு ஓட்டையில் பதித்தான். பிம்பத்தை உன்னதமாகத் தீட்டினான்.

வாஹ்ரேவாஹ்! என்ன ஒரு உன்னதமான போஸ்.

கஜுராஹோ தோற்றது. காமசூத்ராவின் விளம்பர ஜோடி டெபாஸிட் இழந்தது.

ராகினியின் முகமும், அந்த இளைஞனின் முகமும் ஆனந்தத்தின் சிகரத்தில் இருந்தன. வெகு தெளிவான அடையாளம்.

க்ளிக்.

'டிர்ர்ர்டரக்' என்று மைக்ரோ காமிராவின் பிலிம் சுருண்டு அடுத்த காட்சியைப் பதிவு செய்து கொள்ளத் தயாரானது.

க்ளிக்.

'டிர்ர்ர்டக்.'

க்ளிக்.

'டிர்ர்ர்டக்.'

வேறு வேறு கோணங்களில், வேறு வேறு போஸ்களில் அந்த படப்பிடிப்பு காமிராவின் பிலிம் சுருள் சுழலுமட்டும் நடந்தது.

லக்ஷ்மண் பிரகாஷ் திருப்தியுடன் காமிராவை தோளில் தொங்க விட்டுக் கொண்டபோது அவனது செல்போன் கீக், கீக், கீக், கீக் என்று எலக்ட்ரானிக் அலறல் அலறியது.

ராகினி அந்த இளைஞனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அதீத கோபம், அதீத பயம் துலங்க சுற்று முற்றும் பார்த்தாள்.

செல்போன் மணியடித்தவுடனே அதை அணைத்து விட்டாலும் ராகினி சந்தேகப்பட்டதைப் பார்த்துவிட்டு லக்ஷ்மண் பிரகாஷ் உறைந்து போனான்.



# 13



ஷதாப்தி எக்ஸ்பிரஸ் கோயமுத்தூர் ரயில் நிலையத்தில் நுழைந்து நின்றது. ரயிலில் இருந்து இறங்கியவர்கள் எல்லாம் பிளாஸ்டிக் பேப்பரில் இருந்து உருவப்பட்ட பூங்கொத்துக்களைப் போல மிகப் புதிதாக இருந்தார்கள். முழுக்க, முழுக்க குளிர் வசதி செய்யப்பட்ட ரயில் அல்லவா? அப்படித்தான் இருக்கும்.

போர்ட்டர்கள் இரை தேடும் பல்லிகளைப் போல் கடகடவென ரயில் பெட்டிகளை நோக்கி ஓடி நின்றார்கள். இறங்கும் பயணிகளில் யார் போர்ட்டர் வைத்துக் கொள்வார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. தத்தம் இரைகளைக் கவ்விக் கொண்டு அவர்கள் கொங்குத் தமிழ் புழங்கும் கோவைச் சாலையை நோக்கிப் படிகளில் இறங்கி தடதடவென ஓடினார்கள்.

இரவு பத்து மணி. கோவை ஸ்டேஷனில் கூட்டம் அலைமோதியது. சிறுவாணி மினரல் வாட்டர் பாட்டில்கள் குளிரக் குளிர காலியாகிக் கொண்டிருந்தன.

ஏதோ ஒரு பிளாட்பாரத்தில் கார்டு ஊதும் விசில் சத்தம் கேட்டது. ஏதோ ஒரு ரயில் 'பாங்க்' என்று அலறியது. ஜக, ஜக என்று டீஸல் சத்தமிட்டுக் கொண்டே நகரத் தொடங்கியது.

ராஜசேகர் அவசரப்படாமல் நிதானமாக நடந்தான். கையில் ஒரே ஒரு பெட்டி இருந்தது. அதைத் தூக்கிக்

கொண்டு நடப்பதில் அவனுக்கு அப்படி ஒன்றும் சிரமமாக இல்லை.

படிகளில் இறங்கி, வெளிச்சம் நிறைந்த சுரங்கப்பாதையில் மக்களோடு மக்களாக நடந்து வாசலை அடைந்தான்.

இரவு பத்து மணிக்கு கோயமுத்தூர் பட்டப்பகலாகத் தெரிந்தது. பார்க்கிங் ஏரியாவில் பரசு சொன்ன மாருதி வேன் நின்றிருந்தது.

கருநீல நிறம். பரசு சொன்ன எண்.

ராஜசேகர் மாருதியை நெருங்கினான்.

அதன் டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்தவனை ராஜசேகருக்குத் தெரியும் ஊட்டி. கோவை ஆகிய இடங்களில் ஷூட்டிங் நடந்தால் கார்களை வாடகைக்கு விடுபவன்.

ஏதோ ஒரு புத்தகத்தில் மூழ்கியிருந்தவன் ராஜசேகர் மாருதியின் விண்ட் ஷீல்டில் விரல் முட்டியால் இரண்டு முறை தட்டியவுடன் கலைந்து நிமிர்ந்து பார்த்து, திடுக்கிட்டு, சிரித்து, வேனில் இருந்து அவசர அவசரமாகக் குதித்தான்.

''வாங்கண்ணே.''

''சவுக்கியமா?''

''ரொம்ப சவுக்கியம்ணே. இந்தாங்க சாவி. புது வேனுங்க. எடுத்து ரெண்டு மாசங்கூட ஆகலைங்க. சும்மா வெண்ணெய் மாதிரி ரோட்ல சறுக்கிட்டுப் போவும்ங்க இந்தாங்க.''

''இது என்ன?'' என்று ராஜசேகர் அவன் நீட்டிய, துண்டுக் காகிதத்தில் இருந்த விபூதி, குங்குமத்தைப் பார்த்தபடி கேட்டான்.



''இது மருதமலை கோயில் பிரசாதங்க. இது மாரியம்மன் கோயில் பிரசாதங்க. உங்களுக்காக பூசை போடச் சொல்லி போன்ல புரட்யூசர் சொல்லிவிட்டாருங்க. அதானுங்க. ரொம்ப சக்தி வாய்ஞ்ச தெய்வமுங்க.''

ராஜசேகர் சிரித்தபடி விபூதியையும், குங்குமத்தையும் நெற்றியில் இட்டுக் கொண்டான்.

''திருப்தியா?''

''திருப்திங்க'' என்று டிரைவர் சிரித்தான்.

''உன் பேரு? மறந்து விட்டேன்'' என்றான் ராஜசேகர் கொஞ்சம் குற்ற உணர்வுடன்.

''பழனிச்சாமிங்க.''

''யெஸ். யெஸ். பழனிச்சாமி. நான் மறந்து விட்டேன். எனக்கு நல்ல பசி பழனிச்சாமி. ரயிலில் சாப்பிடவில்லை. ஒரே ஒரு காரணம்தான். இங்கே இருக்கும் அங்கண்ணன் கடை பிரியாணியை டேஸ்ட் பண்ண வேண்டுமென்ற ஆசைதான்! போவோமா?''

''போலாங்க.''

பழனிச்சாமியே ராஜசேகரிடம் இருந்து சாவியைப் பெற்று வேனை ஓட்டினான். வேனில் இருந்த டெக்கில் 'ரகசிய ஸ்நேகிதனே' ரகசியமாக ஒலித்தது.

அங்கண்ணன் கடையில் பிரியாணி சாப்பிட்டு பழனிச்சாமி மேட்டுப்பாளையம் சாலையில் இறங்கிக் கொண்டான்.

ராஜசேகர் ஊட்டியை நோக்கி வேனைச் செலுத்தினான். முப்பது நிமிடத்தில் மேட்டுப்பாளையம். அதன் பின் மலைப் பாதையில் வேன் ஏறியது. மேலே நிலா. காற்றில் குளிர். மூலிகை வாசம். அருவிகளின் சோ. சிறு

சிறு நீரோடைகளின் சல சல. சுறுசுறுப்பான ஆந்தை களின் கழ்க், கழ்க், கழ்க் என்று அந்த மலைப் பாதைப் பயணம் வசீகரமாகவும் கொஞ்சம் த்ரில்லாகவும் இருந்தது.

இரவு ஒரு மணிக்கு ஊட்டியை அடைந்தான்.

பரசுவின் வீடு தொட்டபெட்டா போகும் பாதையில் ஒரு இடது சரிவில் இருக்கிறது.

கிரீன் வாலி ஸ்கூல் என்று போர்டுடன் கூடிய ஒரு பெரிய பள்ளிக் கட்டிடத்தைத் தாண்டியவுடன் வரும் முதல் இடதுபக்கச் சரிவு.

ராஜசேகர் கிரீன் வாலி ஸ்கூலைத் தேடியபடி வேனைச் செலுத்தினான்.

வந்தது. போர்டில் விளக்கு, வெளிச்சத்தை வழிய விட்டிருந்தது. அந்த சாலையில் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரம் போனவுடன் இடது பக்கம் ஒரு பாதை பிரிந்தது. மிகத் திடீரென்று அந்தத் திருப்பம் வந்து விட் டது. என்னவோ சாலையில் இருந்து ஒளித்து வைத்தது போல் இருந்தது அந்தத் திருப்பம். சரிவில் இறங்கி வளைந்து மறைந்தது.

அந்தச் சரிவில் இறங்கினான். அந்தச் சாலையில் இரண்டு மூன்று கெஸ்ட் ஹவுஸ்கள் இருந்தன. ஒவ் வொரு கெஸ்ட் ஹவுஸிற்கும் ஒரு புல்வெளி. புல்வெளி யின் வேலியாக குரோட்டன்கள். கெஸ்ட் ஹவுஸை ஒட்டி வேலைக்காரர்கள் தங்குவதற்கான சிறு விடுதி.

அது ஒரு மலைக்கிராமம். கெஸ்ட் ஹவுஸ்களைத் தவிர அங்கே மக்கள் வசித்துக் கொண்டிருந்தார்கள். சின்னச் சின்ன சதுர வயல்கள் வைத்து காலிப்ளவரையும், முட்டைகோஸையும் வளர்த்தார்கள். ஆடு மேய்த்தார்கள்.



பால் விற்றார்கள். காய்கறி விற்றார்கள். இந்த கெஸ்ட் ஹவுஸ்களுக்குக் காவல் வேலை செய்தார்கள்.

ராஜசேகரன் அந்த கெஸ்ட் ஹவுஸ்களில் மூன்றாவதாக இருந்த கெஸ்ட் ஹவுஸை அணுகினான். முதல் இரண்டு கெஸ்ட் ஹவுஸ்களும் பூட்டியிருந்தன.

மூன்றாவது கெஸ்ட் ஹவுஸின் வாசலில் வேனை நிறுத்தினான். கெஸ்ட் ஹவுஸின் முன்பாக ஒரு போர்டிகோ இருந்தது. வேனை நிறுத்துவதற்கு வசதியாக அதன் கேட் பூட்டியிருந்தது.

ராஜசேகர் கேட்டின் பூட்டைத் திறந்தான். கேட்டைத் தள்ளித் திறந்தான். சத்தமின்றி அது பின் வாங்கியது. அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இவ்வளவு நாட்களாக உபயோகத்தில் இல்லாததால் கேட் சத்தம் போடும் என்று எதிர்பார்த்தான்.

வேனை உள்ளே செலுத்தி போர்டிகோவில் நிறுத் தினான்.

இறங்கினான். போர்டிகோவில் இருந்து அகலமான படிகள் வீட்டை நோக்கி ஏறின. ஏறினான். கதவிலேயே பூட்டு பொருத்தப்பட்டு இருந்தது. சாவியை நுழைத்துக் கதவைத் திறந்தான்.

உள்ளே நுழைந்தான். விளக்குகளைப் போட்டான்.

அது ஒரு சிறு பங்களா. தரையில் கார்ப்பெட் சோபா. ஜன்னல்களுக்குத் திரை. அங்கங்கே அலங்கார பூ ஜாடிகள். குளிர் காய்வதற்காக கணப்பு. சுவர்களில் ரோமா னிய பொதுக்குளியல் காட்சிகள் நிறைந்த சித்திரங்கள் தொங்கின.

ஒவ்வொரு சித்திரத்திலும் பலப்பல பெண்கள் பலப் பல போஸ்களில் நிர்வாணமாக குளித்துக் கொண்டிருந்

தார்கள். அந்தப் பெண்கள் அத்தனை பேரும் செழிப்பாக இருந்தார்கள்.

மேஜை, நாற்காலி குஷன். எழுதுவதற்கான சகல ஆயத்தங்களுடன் கெஸ்ட் ஹவுஸ் இருந்தது. கிச்சனில் நுழைந்தான்.

பிரிட்ஜ். அது நிறைய மலைதேசப் பழங்கள். ப்ளம், ஸ்ட்ராபெர்ரி, செர்ரி. மங்குஸ்தான். ரொட்டி அடைக்கப் பட்ட டின் உணவுகள். எல்லாம் இருந்தன. எலக்ட்ரிக் ஸ்டவ். காஸ் ஸ்டவ். குக்கிங் ரேஞ்ச்.

பரசு ஒன்றுகூட விடாமல் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறான். ராஜசேகருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இந்த முறை நிச்சயம் ஒரு டாப் - டக்கர் மெகா சீரிய லோடுதான் சென்னைக்குப் போவது என்று தீர்மானித் தான்.

ராகினி எப்படியோ போகட்டும். அவள் விரித்த மாய வலையில் இத்தனை நாள் மயங்கிக் கிடந்தது போதும்.

ராஜசேகர் உற்சாகமாக உணர்ந்தான்.

போன் மணி அடித்தது. தூக்கி வாரிப் போட்டது.

அந்த நேரத்தில் அவன் போனை எதிர்பார்க்கவில்லை. எதற்கு போன் மணி அடிக்கிறது. யார் அழைக்கிறார்கள்?

ராஜசேகர் ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ.''

''ஹலோ. இது போலீஸ் டிபார்ட்மென்ட். இன்ஸ் பெக்டர் நட்ராஜ்.''

''சொல்லுங்கள்'' என்றான் ராஜசேகர்.

''உங்களை ஐடென்டிஃபை செய்யுங்கள் சார்.''



''நான் ராஜசேகர். டீ.வி. மெகா சீரியல்களை எழுது பவன். டைரக்டர் இந்த கெஸ்ட் ஹவுஸ் பரசுவிற்கு சொந்த மானது. மெகா பரசு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அவருடையது. நான் இங்கே தனிமையில் கதை எழுத வந்திருக்கிறேன். இப்போதுதான் வீட்டில் நுழைந்தேன். நான் தனிமையில் எழுத வந்திருப்பதால் எந்த இடை யூறுகளையும் விரும்பவில்லை. நான் இங்கே இருப்பது பற்றி யாருக்கும் தகவல் சொல்லி விடாதீர்கள் இன்ஸ் பெக்டர்.''

எதிர் முனையில் இருந்து இன்ஸ்பெக்டர் நட்ராஜின் குரல் உற்சாகமாக ஒலித்தது.

''நீங்கள் மிஸ்டர் ராஜசேகரா? உங்களைச் சந்திக்க முடிந்தால் மகிழ்ச்சி அடைவேன். உங்கள் சீரியல்களை அவ்வப்போது பார்த்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு போன் செய்ததற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. இந்த ஏரியாவில் ஒரு தீவிரவாதி சுற்றிக் கொண்டிருக் கிறான். கர்நாடகாவிலிருந்து தப்பி வந்தவன். அவன் பெயர் நஞ்சப்பா. இதுவரை ஆறு பேரைக் கொன்றிருக் கிறான் - காரணமேயில்லாமல். இதுவரை ஊட்டியை விட்டு வெளியேறவில்லை. இங்கேதான் எங்கேயோ மறைந்திருக்கிறான். எங்கள் யூகம் என்னவென்றால் அவன் பூட்டிக் கிடக்கும் ஏதாவது ஒரு கெஸ்ட் ஹவுஸில் நுழைந்திருக்கக் கூடும் என்பது. மற்ற இடங்களில் எல்லாம் அவன் இல்லை. எனவே ஜாக்கிரதையாக இருங்கள். நாங்கள் ஒவ்வொரு வீடாகத் தேடிக் கொண்டு வருகிறோம். கிடைத்து விட்டால் வெல் - மற்றவர் களுக்கு ஆபத்து இல்லை. கிடைக்காவிட்டால் இன்னும் எத்தனை பேரைக் கொல்வானோ தெரியாது. அவனிடம்

ஒரு லைட் மெஷின் கண் இருக்கிறது. எனவே பீ கேர்ஃபுல்'' என்றார் இன்ஸ்பெக்டர் நட்ராஜ்.

''ஓகே இன்ஸ்பெக்டர்'' என்றான் ராஜசேகர்.

''ஹாவ் எ குட் டைம் அட் ஊட்டி.''

''தாங்க்யூ'' என்று சொல்லிவிட்டு ரிசீவரை வைத்தான். திரும்பினான்.

அவனுக்குப் பத்தடி தூரத்தில் அவன் நின்றிருந்தான். விகாரமாகச் சிரித்துக் கொண்டு. அவன் கையில் இருந்த லைட் மெஷின் கன்னின் வாய் ராஜசேகரைக் குறி வைத்து 'ஆ'வெனப் பிளந்திருந்தது.

இன்ஸ்பெக்டர் நட்ராஜ் போனை வைத்தார். நெற்றியில் வியர்த்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார். ஆயாசமாக இருந்தது. ஒவ்வொரு பிரதேசத்தையும் சீப்பு வாருகிற மாதிரி வாரியாகி விட்டது. அந்த நஞ்சப்பா இல்லை. கெஸ்ட் ஹவுஸ்கள் இருந்த இடங்கள் மட்டும்தான் மிச்சம். நாளைக் காலையில் அந்த வேலையும் ஆரம்பமாகி விடும். இரண்டு மூன்று நாட்களாக அவருக்குத் தூக்கம் போய்விட்டது. இன்றைக்கு இரவாவது சற்று நேரம் கண்ணயர வேண்டும்.

ஸ்டேஷன் வாசலில் ஜீப் ஒன்று வந்து நின்றது.

கோயமுத்தூர் சென்றிருந்த போஜராஜன் ஜீப்பில் இருந்து இறங்கினார்.

ஃபிங்கர் போஸ்ட் பக்கத்தில் ஒரு தனி பங்களாவில் நுழைந்து மூன்று பேரை அந்தத் தீவிரவாதி சுட்டுக் கொன்றிருந்தான். அடுத்தபடி தொட்டபெட்டா போகும் வழியில் ஒரு தனி வீட்டில் நுழைந்து மூன்று பேரைச் சுட்டுக் கொன்றிருந்தான். அந்த வீட்டு வேலைக்காரன் வேலு என்பவனைப் படுகாயப் படுத்தியிருந்தான். வேலுவின் மண்டையில் பலத்த அடி. அவன் மூளைக்கு எந்தவித பாதிப்பும் நேராதது அவன் அதிர்ஷ்டம்.



ஃபிங்கர் போஸ்ட் அருகே மூன்று பேர். இங்கே தொட்டபெட்டா அருகே மூன்று பேர் என்று எந்தக் கணக்கில் அவன் சாகடித்தான் என்று தெரியவில்லை. அந்தத் தீவிரவாதி நஞ்சப்பாவிற்கும் அவர்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. அப்படியிருக்க ஆறு பேர் உயிரைப் பலி வாங்கியதற்கு என்ன காரணம்? இன்னும் எத்தனை பேர் உயிரைக் காவு வாங்கப் போகிறான்?

தொட்டபெட்டா அருகில் உள்ள வீட்டில் கொலை செய்ய நஞ்சப்பா முயன்ற போதுதான் அந்த வீட்டு வேலைக்காரன் நஞ்சப்பாவை அவனுடைய அடி வயிற்றில் அடித்திருக்கிறான். சர்வ நிச்சயமாக ரத்தக் காயம். குடல் வெளியே வந்து விட்டதோ என்னவோ, நஞ்சப்பாவின் ரத்தம் அந்த இடத்தில் சிந்தி இருந்தது. அவ்வளவு ரத்தக் களறியாக ஆன பின் நஞ்சப்பா நிச்சயம் ஆஸ்பத்திரி, டாக்டர் என்றுதான் தேடிப் போக வேண்டும். எனவே டாக்டர்கள், நர்ஸ்கள், செவிலிகள் என்று எல்லோருக்கும் எச்சரிக்கை அனுப்பியாகி விட்டது. மருந்துக் கடைகளுக்கும் நஞ்சப்பாவின் போட்டோவை இரவோடு இரவாக நூற்றுக் கணக்கில் பிரிண்ட் போட்டு அனுப்பியாகி விட்டது. நஞ்சப்பாவை யார் பார்த்தாலும் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனடியாகத் தகவல் வந்து விடும்.

இதற்கிடையில் கீழே இருந்த ரத்தத்தைச் சேகரித்து கோயமுத்தூரில் டெஸ்டிற்கு அனுப்பியிருந்தார் இன்ஸ்பெக்டர் நட்ராஜ். ரத்தம் என்ன குரூப் என்பதில் இருந்து

அதைப் பற்றி சகல விவரங்களையும் ஆராய்ந்து விட்டால் இன்னும் உபயோகமாக இருக்கும். ஒருவேளை ரத்தம் ஏறிக் கொள்ள நஞ்சப்பா யாரையாவது அணுகினாலும் அதை வைத்து அவனைப் பிடிக்கலாம். நஞ்சப்பா மாறு வேஷத்தில் போய் இன்ன வகை ரத்தம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டால் கூட. அவன் ரத்தத்தின் குரூப் இன்னது என்று தெரிந்திருந்தாலோ சந்தேகத்தின் பேரில் கைது செய்து உள்ளே வைத்து விடலாமே.

''யெஸ் போஜராஜன்'' என்று இன்ஸ்பெக்டர் போஜராஜனை வரவேற்றார்.

போஜராஜனின் முகத்தில் அசாத்திய பிரமிப்பு இருந்தது. திகில் இருந்தது. மிகப் படபடப்பாகத் தெரிந்தார். ஸ்டேஷனுக்குள் அவர் நடந்து வந்த பரபரப்பிலேயே என்னவோ நம்ப முடியாத விவரம் ஒன்று அவரிடம் சிக்கியிருப்பது போல் இருந்தது.

''என்ன போஜராஜன். ஒரே எக்ஸைடட் ஆக இருக்கிறீர்கள்? என்ன மேட்டர்? நஞ்சப்பாவை வேறு யாராவது பிடித்து விட்டதாக நியூஸ் வந்து விட்டதா? இல்லை அவன் எங்கேயாவது விழுந்து செத்துப் போய் விட்டதாகத் தகவல் வந்ததா? இல்லை நஞ்சப்பாவை ஒரு வேளை நேரிலேயே பார்த்து விட்டீர்களா?''

''சார்... சார்... அதெல்லாம் இல்லை சார். இது வேறு ஒரு முக்கியமான விஷயம் சார். முதலில் எனக்கு சூடாக ஒரு கப் டீ வேண்டும் சார்.''

போஜராஜனின் பரபரப்பில் அவர் கேட்ட தேநீரைக் கொடுக்கா விட்டால் எங்கே அவருக்கு மாரடைப்பு வந்து விடுமோ என்று தோன்றியது.



இன்ஸ்பெக்டர் தேநீர் வரவழைத்தார்.

''குடியுங்கள்.''

போஜராஜன் கொதிக்கும் தேநீரை ஒரே மடக்கில் குடித்தார். வாயில் இருந்து ஆவி பறந்தது. இன்ஸ்பெக்டர் நட்ராஜிற்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. சிரிக்கக் கூடாது. சிரித்தால் தப்பாகிப் போகும் என சும்மா இருந்தார்.

''சார்.''

''சொல்லுங்கள் போஜராஜன்.''

''நஞ்சப்பாவின் ரத்தத்தை டெஸ்ட் பண்ண லாபிற்கு அனுப்பினோம் இல்லையா சார்?''

''ஆம்.''

''அது நஞ்சப்பாவின் ரத்தம் தானே?''

''யெஸ். வேலு அப்படித்தான் சொன்னான். ஒரு ஆள். பரட்டைத் தலை. முகத்தில் தாடி கையில் எல்.எம்.ஜி. யுடன் வந்தான். அவனுடைய எஜமானர்கள் மூன்று பேரையும் சுட்டதையும் வேலு கண்ணால் பார்த்தான். அவன் கொஞ்சம் கூட எதிர்பாராத நேரத்தில் அந்த நஞ்சப்பாவை வேலு அடி வயிற்றில் அடித்தான். நஞ்சப்பா கீழே விழுந்து விட்டான். அவன் மயங்கி விட்டதாக நினைத்து வேலு போன் பண்ணத் தொடங்கினான். போன் பண்ணிவிட்டுத் திரும்பும் போது நஞ்சப்பா எழுந்து வந்து துப்பாக்கியின் கட்டையால் வேலுவைத் தாக்கி விட்டான். இதுதான் வேலுவின் ஸ்டேட்மெண்ட்.''

''வேலு சொல்வது நூற்றுக்கு நூறு பொய் சார். வேலுவே தான் ஏதோ விளையாடுகிறான் என்று தோன்றுகிறது. அவனைத் தீர விசாரிக்க வேண்டும்.''

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் போஜராஜன்?" என்று இன்ஸ்பெக்டர் பொறுமையுடன் கேட்டார்.

"இந்த டெஸ்ட் ரிசல்ட்டைப் பாருங்கள் சார்" என்று போஜராஜன் ஒரு கவரை இன்ஸ்பெக்டரிடம் நீட்டினார்.

அந்தக் கவரில் இருந்த லாப் ரிப்போர்ட்டைப் படிக்கத் தொடங்கிய இன்ஸ்பெக்டர் நட்ராஜின் விழிகள் திகிலுடன் விரியத் தொடங்கின.

போஜராஜனிடம் இருந்த படபடப்பும், எக்ஸைட்மெண்ட்டும் இப்போது அவரைத் தொற்றிக் கொண்டன.

"போஜராஜ்... இந்த ரிப்போர்ட்... இந்த ரிப்போர்ட்..." என்று அவரது வாய் குழறலாக சொற்களை வெளிப்படுத்தியது.



## 14

ராஜசேகர் கெஸ்ட் ஹவுஸில் இருந்து மெல்ல வெளிப்பட்டான். இரவு முழுக்க உறக்கம் இல்லை. வெளியில் சூரியன் இன்னும் தூக்கக் கலக்கத்துடன் இருந்தான். காலை ஒன்பது மணி என்று புரியவே புரியாத அளவு சூழ்நிலையில் குறை வெளிச்சம்.

மாருதியின் டிரைவிங் சீட்டில் ஏறினான். அவன் உடல் தன்னிச்சையாக நடுங்கியது. வேனை மெதுவாக வெளியே கொண்டு வந்தான்.

சாலையில் வேன் தன் முன்னிரு சக்கரங்களைப் பதித்ததும் அது வேகமாகப் பாய்ந்தது. சேரிங் கிராஸை



நெருங்கினான். அவன் மனம் நடுங்கிக் கொண்டிருந்தது. பாம்புக்குப் பயந்து நெருப்பிலும், நெருப்புக்குப் பயந்து வெள்ளத்திலும் குதித்தவன் நிலையில் இருந்தான் அவன்.

காரை நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு விடலாமா என்று நினைத்தான். பின் விளைவுகளை யோசித்தான். போலீஸ் ஸ்டேஷன் வேண்டாம் என்று தீர்மானித்தான். வாழ்க்கையில் அவன் இன்னும் எவ்வளவோ தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. இந்நிலையில் போய் போலீஸ் ஸ்டேஷனில் நின்றால் அப்புறம் வாழ்நாள் எவ்வளவு என்பதே கேள்விக்குறியாகி விடும்.

ஒரு மருந்துக் கடை வாசலில் வேனை நிறுத்தினான். இறங்கினான். லிஸ்ட் போட்டு வந்திருந்த சீட்டை மருந்துக் கடைக்காரனிடம் நீட்டினான். மருந்துக்கடைப் பையன் அவன் அளித்த லிஸ்டில் இருந்த பொருட்களை எடுத்துக் கொண்டிருக்க, மருந்து கடைக்காரன் ஒவ்வொரு ஐட்டமாய் எடுத்து பில் போட்டுக் கொண்டிருக்க, கடை வாசலில் ஒரு ஜீப் ப்ரேக் அடித்து நின்றது.

இன்ஸ்பெக்டர் நட்ராஜ் ஜீப்பிலிருந்து இறங்கினார். ராஜசேகரனை நோக்கி வந்தார். கையசைத்தார்.

"ஹலோ சார்" என்றார். கை குலுக்கினார்.

"கிரீன் வாலி ஸ்கூலுக்குப் பக்கத்தில் இருக்கும் கட்டிங்கில்தானே பரசு கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறது?" என்று கேட்டார்.

"யெஸ் இன்ஸ்பெக்டர்."

"ரொம்பத் தனிமையான இடம்."

"ஆம்."

"நேற்று இரவு நிம்மதியாகத் தூங்கினீர்களா?"

ராஜசேகரின் கணகள் இன்ஸ்பெக்டரின் கண்களைச் சந்திக்க மறுத்தன. "யெஸ் இன்ஸ்பெக்டர்" என்றான் ஒரு பாட்டிலை எடுத்து அதன் லேபிளைப் பார்ப்பது போல் நடித்தபடி.

"நான் சொன்ன மாதிரி உங்கள் கெஸ்ட் ஹவுஸில் எந்தவித நடமாட்டமும் இல்லையே?"

"இல்லை."

இன்ஸ்பெக்டர் அவன் அருகில் வந்தார்.

"தீவிரவாதி யாரும் உங்கள் கெஸ்ட் ஹவுஸில் இல்லையே?"

"நோ, நோ."

"தட்ஸ் குட். அந்தத் தீவிரவாதி பற்றி எனக்கு இன்னொரு முக்கியமான தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவல் உண்மைதானா என்று தெரிய வேண்டும். அதுதான் இங்கே உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு பங்களாவிற்குப் போய்க் கொண்டிருக் கிறேன். அங்கே வேலு என்று ஒரு வேலைக்காரனைக் கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்கிறது. வாருங்களேன். டிராப் பண்ணி விடுகிறேன்."

"நோ, நோ. தாங்க்ஸ் எ லாட் நான் வேன் கொண்டு வந்து இருக்கிறேன்."

"இப்போது திரும்பிப் போய் விடுவீர்கள் இல்லையா?"

"ஆம்."

"ஓகே தென். என் விசாரணை முடிந்தவுடன் உங்கள் கெஸ்ட் ஹவுஸிற்கு வருகிறேன். ஜஸ்ட் ஒரு ரொடீன் செக்அப். ஒரு நல்ல டீ தரமாட்டீர்கள்?"



"ஓயெஸ்... ஓயெஸ்" என்று திணறிப் பதில் சொன்னான் ராஜசேகர்.

"நான் வருவதில் உங்களுக்கு ஏதாவது இடைஞ் சலா?"

"நோ... நோ..."

"உங்கள் எழுத்து வேலையைக் கெடுக்க மாட்டேன். ஜஸ்ட் என் கடமை. உங்களைப் போன்ற வி.ஐ.பி.க்கள் எங்கள் ஏரியாவிற்கு வந்து சேஃபாகத் திரும்பிப் போகா விட்டால் நாளை டிபார்ட்மென்டில் என்னைக் காய்ச்சு, காய்ச்சு என்று காய்ச்சி விடுவார்கள். எனிஹௌ. உங்களை நேரில் பார்க்க முடிந்ததில் எனக்கு மிக மகிழ்ச்சி. என் ஒய்ஃப் இருந்திருந்தால் இன்னேரம் எகிறிக் குதித் திருப்பாள். வரட்டுமா?"

இன்ஸ்பெக்டர் புறப்பட்டுப் போனார். ஜீப்பில் உட் கார்ந்திருந்த இன்னொரு காக்கிச் சட்டை தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த மாதிரி தோன்றியது ராஜசேகருக்கு. அது தன் பிரமையாக இருக்கக் கூடும் என்று நினைத்தான் ராஜசேகர்.

திரும்பினான். தன்னுடைய லிஸ்ட் பிரகாரம் பேக் பண்ணி வைத்திருந்த மெடிசன் பேக்கை எடுத்துக் கொண் டான். பர்ஸ் எடுத்துப் பணத்தை எண்ணிக் கொடுத்தான்.

"சார். நான் ஒன்று கேட்டால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே" என்றான் மருந்து கடைக்காரன்.

"என்ன?"

"நீங்கள் டி.வி. சீரியல் டைரக்டர் பாரதி ராஜசேகர் தானே சார்?"

"யெஸ்" என்றான் ராஜசேகர் வேறு வழியின்றி.

''மைகாட் வாட் எ சர்ப்ரைஸ். உங்களை மீட் பண்ணியதில் ரொம்ப சந்தோஷம் சார். ஒரு கோக் சாப்பிடுங்கள். இல்லை பெப்ஸி? இல்லை ஃபான்டா?''

''எனக்கு எதுவும் வேண்டாம். தாங்க்யூ வெரிமச்.''

''ம்ஹூம். நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. ஒரு ஃபான்டாவாவது குடித்துத்தான் ஆக வேண்டும். நாகு, சாருக்கு ஒரு ஃபான்டா எடுத்துக் கொடு. ஃப்ரீஸரில் இருக்கிறது பார். சார். சார். இன்னொரு சின்ன ஆப்ளிகேஷன் சார். நான் இங்கே தினச்சங்கு பத்திரிகையின் ரிப்போர்ட்டர் சார். ஒரு சின்ன பேட்டி கொடுத்தால் எனக்கு மிக மிக உதவியாக இருக்கும் சார். உங்களைப் போன்ற வி.ஐ.பி.களை எல்லாம் மெட்ராஸ் வந்து பார்த்துதான் பேட்டி எடுக்க முடியும். இங்கேயே பேட்டி எடுத்து அனுப்பினால் எனக்கு ஒரு பெருமை. என் பெயர் கதிரவன். இதோ சார் விசிட்டிங் கார்டு.''

ராஜசேகர் கையமர்த்தினான்.

''பேட்டி எல்லாம் இப்போது வேண்டாமே.''

''உங்களுக்குத் தொந்தரவே கொடுக்க மாட்டேன் சார். ஜஸ்ட் பைவ் டு டென் மினிட்ஸ். பரசு கெஸ்ட் ஹவுஸ் எனக்குத் தெரியும். டயம் கொடுத்தால் வந்து விடுகிறேன்.''

ராஜசேகர் திடுக்கிட்டான்.

ஏற்கனவே இன்ஸ்பெக்டர் வரப்போவதாகச் சொல்லியிருக்கும் வேளையில் இது வேறா?

''மிஸ்டர் கதிரவன். ஒரு வேண்டுகோள்.''

''என்ன சார்?''

''நான் ஒரு மெகா சீரியல் எழுதுவதற்காக இங்கு வந்திருக்கிறேன். எனக்குத் தனிமை வேண்டும் என்பதற்காகத்தான் யாருக்கும் தெரியாமல் இங்கே வந்து ஒளிந்து கொண்டு எழுதுகிறேன். நான் இங்கே இருப்பது தெரிந்தால் அவ்வளவுதான். வந்த வேலை கெட்டு விடும். பேட்டி தானே? கொடுக்கிறேன். ஆனால் ஒரு மாதம் கழித்து. ஒரு மாதம் வரை நான் இங்கேதான் இருக்கப் போகிறேன். எழுத்து வேலை முடிந்தவுடன் உங்களை வீட்டுக்கு அழைத்து ஒரு ஹாட் பார்ட்டி வைத்து கூடவே பேட்டி கொடுக்கிறேன். அதுவரை நான் இங்கே இருப்பதையே நீங்கள் நியூஸாகக் கூட உங்கள் தினச்சங்கில் எழுதி விடாதீர்கள். ப்ளீஸ்...''



''பேட்டி கொடுக்காமல் சென்னைக்குப் போகக் கூடாது?''

''ஷ்யூர்.''

''ப்ராமிஸ்?''

''ப்ராமிஸ்'' அவனிடம் இருந்து தப்பித்தால் போதும் போல் இருந்தது ராஜசேகருக்கு.

அந்தக் கதிரவன் ராஜசேகரிடம் ஒரு ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டுதான் ராஜசேகரைப் போக விட்டான்.

ராஜசேகர் வேனை நோக்கி ஓடினான்.

கதிரவனும் ராஜசேகரும் பேசிக் கொண்டிருந்ததைப் பக்கத்தில் நின்று இன்னொருவனும் கேட்டுக் கொண்டிருந்தான். மருந்துக் கடைக்கு ஒரு நிரோத் பாக்கெட் வாங்க வந்த அவன் பெயர் மோகன்குமார்.

மோகன்குமார் ஜோவின் கைத்தடி. வலது கைகளில் ஒருவன் ராஜசேகர் பரசுவின் கெஸ்ட் ஹவுஸில் தங்கியிருக்கும் செய்தி ஜோவிற்கு நிச்சயம் உபயோகமாக இருக்கும் என்று தோன்றியது அவனுக்கு.

ஜோ, ராஜசேகர் பற்றி என்ன செய்திகள் கிடைத்தாலும் உடனுக்குடன் அவனுக்குத் தெரிவிக்குமாறு சொல்லியிருந்தான்.

மோகன்குமார் தனது நிரோத் தேவையை மறந்தான்.

கடை வாசலில் இருந்து இறங்கி ஒரு தனியிடத்தை நாடி தன் பாக்கெட்டில் இருந்து ஒரு செல்போனை எடுத்து அதன் எண்களைத் தட்டத் தொடங்கினான்.



# 15

லக்ஷ்மண் பிரகாஷ் தனது வீட்டில் இருந்த டார்க் ரூமில் கழுவி எடுத்த அந்த போட்டோ பிரிண்ட்களை மங்கலான சிவப்பு விளக்கு வெளிச்சத்தில் உயர்த்திப் பிடித்துப் பார்த்தான்.

ராகினியும் அந்த இன்னொருவனும் உடலில் ஒரு குண்டூசி அளவு கூட ஆடையின்றி வித விதமான போஸ்களில் ஆனந்த அனுபவத்தில் திளைத்திருந்தார்கள்.

வாஹ்ரே வாஹ்! த்ரீ ஏஸஸ். இதுதான் பரிசு பெற்ற லாட்டரிச் சீட்டு. வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த போட்டோ பிரிண்டைக் கொண்டு போய் பரசுவிடம் கொடுத்தால் அடுத்த செகண்ட் அவன் கையில் ஒரு லட்சம் இருக்கும். ஜாலியாக ஷாம்பேய்னோ, ஸ்காட்சோ வாங்கித் தொட்டியில் ஊற்றி அதில் மிதந்து விட்டு அடுத்த வேலை பற்றிக் கவலையில்லாமல் கொஞ்ச நாள் ஜாலியாக இருக்கலாம். ராம்கி கையில் ஒரு ஐந்தாயிரம்.



லக்ஷ்மண் பிரகாஷ் ஒரு பெருமூச்சு விட்டான்.

அந்தப் படுக்கையறையில் ராகினியும், ஜோவும் அவ்வளவு கே.எஸ். நெருக்கத்தில் இருந்ததைப் படம் எடுத்துக் கொண்டிருந்ததும், அந்த நேரம் பார்த்துத் தன் செல்போன் கீக், கீக், கீக் என்று அலறியதும், ராகினி சட்டென்று உஷாராகி தான் ஒளிந்திருந்த இடத்தை நோக்கித் திரும்பியதும் -

அந்தத் தருணத்தை இப்போது நினைத்தால் கூட அவன் உடல் தன்னிச்சையாக ரின்ஸ் ப்ரோக்ராமில் இருக்கும் வாஷிங்மெஷின் போல் நடுங்கியது.

அவ்வளவுதான். தன் வாழ்க்கை முற்றும் என்ற தீர்மானத்திற்கு அவன் வந்து விட்டான். அந்த இடத்தில் இருந்து தப்பிப்பது எப்படி என்று அவன் மனம் குரங்குத் தனமாக யோசனை செய்தது.

அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது.

மிகச் சரியாக அதே நேரம் பார்த்து படுக்கையில் இருந்த இளைஞனின் கையில் இருந்த வாட்சின் அலாரம் கீக், கீக் என்றது.

ஜோ அந்த ஒலியால் பாதிக்கப்படவில்லை.

ஆனால் ராகினியின் காதுகளில் அந்த அலாரம் ஒலி விழுந்தது. மறுபடி, மறுபடி அந்த கீக், கீக் ஒலி.

ராகினி அவன் கையைப் பற்றி அலாரம் ஒலிப்பதை நிறுத்தினாள். லக்ஷ்மண் பிரகாஷ் பெருமூச்சு விட்டான்.

ராகினியும் அவனும் எழுந்து பாத்ரூமிற்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டார்கள். ஷவரின் ஷொர்ர்ர் கேட்கத் தொடங்கியது.

படுக்கை விளையாட்டு முடிந்து நீர் விளையாட்டு.

அந்த ஜலக்ரீடையையும் தன் காமிராவின் கண்களால் பார்த்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும் போல் தோன்றினாலும், தன் உயிரை நினைத்து லக்ஷ்மண் பிரகாஷ் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

தான் ஒளிந்திருந்த இடத்தில் இருந்து பூனை போல் வெளிப்பட்டான். கட்டிலில் பாதியும், தரையில் பாதியு மாய்க் கிடந்த ஆடைகளை எல்லாம் வெகு எச்சரிக்கை யுடன் தவிர்த்தான்.

அந்த அறையை விட்டு, அந்த வீட்டை விட்டு, அந்தப் பிரதேசத்தை விட்டு வெகு வேகமாக காலி செய்தான். வீட்டு வாசல் வழியாக வெளியேறும் வரை ராம்கியை அவன் பார்த்து விட்டான். ராம்கி வாய் பிளந்தான்.

அவன் ராம்கியை அணுகி, அவன் வண்டியில் ஏறி வேறு ஒரு ஏரியாவில் இருந்த ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து மூன்று டம்ளர் ஐஸ் வாட்டர் குடித்த பின்பு தான் அவன் படபடப்பு குறைந்தது.

தன் காமிராவில் பதிவானதை ராம்கியிடம் சொல்ல வில்லை. அது வேறு வம்பு. ஓணானைத் தூக்கி மடியில் விட்டுக் கொண்ட கதை.

ராம்கி பற்றி இப்போது பிரச்னையில்லை. ஐந்தாயிரம் கொடுத்து 'இந்த அசைன்மெண்ட் ஓவர்' என்று சொன் னால் அவன் சந்தோஷமாக 'அடுத்த அசைன்மெண்ட் என்ன சார்?' என்பான்.

லக்ஷமண் பிரகாஷ் நெகடிவ்களை டார்க் ரூமில் அவனுக்கு மட்டும் தெரிகிற மாதிரி மற்ற நெகடிவ்களின் நடுவே ஒளித்து வைத்தான்.



போட்டோ பிரிண்ட்களை ஒரு கவரில் போட்டுக் கொண்டான்.

பரசுவை நோக்கிப் புறப்பட்ட போதுதான் அவன் வாழ்க்கையில் விதி கெட்ட எண்ணம் என்ற போர்வை யில் விளையாடத் தொடங்கியது.

இந்த போட்டோக்களைப் பரசுவிடம் கொடுத்தால் ஒரு லட்சம் அவனுக்குக் கிடைத்து விடும். ஓ.கே. அதற்கு மேல் கெஞ்சினால் பரசு ஒரு பத்தாயிரமோ, பதினைந் தாயிரமோ, தரக்கூடும். ஆனால் இதே படங்களை ராகினியிடம் காட்டி பேரம் பேசினால் ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று கேட்க முடியாது?

அட, ஆமாம்! இந்தக் கோணத்தை நான் எப்படி மறந்தேன்? லக்ஷமண் பிரகாஷ் தன் கையில் இருக்கும் துருப்புச் சீட்டின் மதிப்பு எவ்வளவு என்பதை சோதித்துப் பார்த்துவிட முடிவு செய்தான்.

"ஹலோ!"

"ஹலோ!"

"மிஸஸ் ராகினி ராஜசேகரன்?"

"யெஸ்."

"வெல். என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை எனக்கு நன்றாகத் தெரியும். இன்ஃபாக்ட் மிக நன்றாகத் தெரியும். நீங்கள் பிஸ்ஸா ஹட்டிற்குப் போனது. துணையுடன் திரும்பி வந்தது. அப்புறம் உங்கள் பெட்ரூமில்..."

"உனக்கு என்ன வேண்டும்?"

"உங்களை நான் நேரில் பார்க்க வேண்டும் மிஸஸ் ராகினி. என்னை நேரில் பார்த்தால் அடையாளம் தெரிந்து

கொள்வீர்கள். உங்களிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொள்ளும் ரசிகர்களில் ஒருவன். உங்களுக்குச் சின்னச் சின்னப் பரிசுப் பொருட்களை அளித்தவன்."

"ஓகே கம்."

"எப்போது?"

"இப்போதே."

"தாங்க்ஸ் எ லாட் மிஸஸ் ராகினி."

அடுத்த முப்பதாவது நிமிடம் லக்ஷ்மண் பிரகாஷ் ராகினியின் வீட்டில் இருந்தான். அவள்தான் கதவைத் திறந்தாள். லக்ஷ்மண் பிரகாஷைப் பார்த்தவுடன் அவள் விழிகள் விரிந்தன.

"நீயா? நீ... என் ரசிகன் என்று சொல்லிக் கொண்டு..."

"ஆம் மிஸஸ் ராகினி. நான் உங்கள் ரசிகன். அடிமை. என் பெயர் லல்லு" என்றான் லக்ஷமண் பிரகாஷ் நாடகத்தனமாக.

"போனில் பிளாக்மெயில் பண்ணினாய்?"

"ஐயோ கெட்ட வார்த்தை. கெட்ட வார்த்தை. என்னிடம் ஒரு செட் புகைப்படங்கள் இருக்கின்றன. அந்த புகைப்படங்களை நெகடிவ்வோடு நான் உங்களுக்குத் தரத் தயாராக இருக்கிறேன். உங்களுக்கு வேண்டுமென்றால் பேரம் படிய வேண்டும். நீங்கள் அவற்றை வாங்கிக் கொள்ள மிக விரும்புவீர்கள். ஒருவேளை உங்களுக்கு வேண்டாம் என்றால் அவற்றை வாங்கிக் கொள்ள வேறு பலர் தயாராக இருப்பார்கள். நிறைய நிறைய விலை கொடுத்து, பார்க்கிறீர்களா?" என்று லக்ஷ்மண் பிரகாஷ் தன் கையிலிருந்த புகைப்படங்கள் அடங்கிய கவரை நீட்டினான்.



ராகினி அதை, முதலை இரையைப் பற்றுவது போல் பற்றிப் பிடுங்கினாள். பரபரவென்று பிரித்துப் பார்த்தாள்.

அந்தப் படங்களைப் பார்க்கப் பார்க்க அவள் விழிகள் விரிந்தன. உதடுகள் துடித்தன. அவள் மார்பகங்கள் எழுந்து அடங்கின.

"யூ... யூ... யூ..." என்று லக்ஷ்மண் பிரகாஷைப் பார்த்து வார்த்தை கிடைக்காமல் தவித்தாள்.

"ஈஸி மேடம் ஈஸி உங்களுக்கு மிக அழகான உடல் வாகு. எவ்வளவு அட்டகாசமான வளைவுகள், சரிவுகள், குழைவுகள்... நான் உள்ளே வந்து உட்கார்ந்து பேசலாமா? உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் வேறு வழியில்லை. ஒரு இரண்டு நிமிஷம்..?"

ராகினி அருகில் இருக்கும் சூரியனைப் போல் ஆயிரம் டிகிரி செல்ஷியஸின் சூட்டுடன் முறைத்தாள். விலகி அவனுக்கு வழி விட்டாள். லக்ஷ்மண் பிரகாஷ் சுவாதீனமாக உள்ளே நுழைந்தான். அமர்ந்தான்.

"ஒரு லார்ஜ் விஸ்கி இருந்தால் ஜோராக இருக்கும்" என்றான்.

"நான் என்ன ஒயின் ஷாப்பா வைத்திருக்கிறேன்?"

"மை டியர் ராகினி. உன் வீட்டில் ஒரு கப் - போர்ட் நிறைய ஸ்காட்சும், ஒயினும், ரம்மும், ஜின்னுமாக இருப்பது எனக்குத் தெரியும். ஒரு லார்ஜ் ஸ்காட்ச் ப்ளீஸ்."

ஸ்காட்ச் வந்தது. லக்ஷ்மண் சீப்பினான். ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். பின் நிதானமாகப் புகை வழிய வழியப் பேசினான்.

"ராகினி. நான் உனக்காகப் பரிதாபப்படுகிறேன். திடீரென்று மரியாதையை விட்டு விட்டேன் என்று

பார்க்கிறாயா? நீ சின்னப் பெண். முட்டாள்தனமாக நடந்து கொள்பவள். அதனால் வா, போ சொல்லலாம். தப்பில்லை. ராஜசேகர் பெரும் புள்ளி. அவனை எப்படியோ கல்யாணம் செய்து கொண்டாய். ஒன்றும் இல்லாத நீ இப்போது ராஜயோகம் அனுபவிக்கிறாய். எத்தனை பேருக்கு இந்த சான்ஸ் கிடைத்து விடும்? ம்? யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிற மாதிரி இப்போது நீ இதோ இந்த பொலிகாளையுடன் சேர்ந்து உருண்டு கொண்டிருக்கிறாய். பரசுதான் என்னை உன்னுடைய வாட்ச்மேனாக வைத்திருக்கிறார். நீ ஒழுங்காக இருக்கிறாயா என்று வேவு பார்க்கச் சொல்லியிருக்கிறார். நீ ராஜசேகரைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாய். ராஜசேகர் உன் மயக்கத்தில் தனது வேலையை ஒழுங்காகச் செய்வதில்லை. உன்னை விலக்கி விட்டால் ராஜசேகர் சரியாகி விடுவான் என்பது பரசுவின் ஐடியா. உன்னைத் துரத்துவதற்கு ஒரு வலுவான காரணம் வேண்டும் இல்லையா? இதோ இதுதான் வலுவான காரணம். இந்த போட்டோக்களை நான் பரசுவிடம் கொடுத்தால் உன் ஆட்டம் க்ளோஸ். நீ தெருவிற்குப் போக வேண்டியது தான். கேரளாவில் ரெகார்ட் டான்ஸ் ஆடினாயோ அல்லது வேறு எந்த விதமாகப் பிழைத்தாயோ... அந்தத் தொழிலுக்குப் போக வேண்டியதுதான். பரசு எனக்குப் பேசிய பணத்தைக் கொடுத்து விடுவார். உனக்கு ஒரு சான்ஸ். பத்து லட்சம் ரூபாய் கொடு. இந்த போட்டோக்கள், நெகடிவ்கள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு, பரசுவிடம் உன்னை விட ஒரு நல்ல பத்தினியைப் பார்க்கவே முடியாது என்று ஒரு சர்ட்டிபிகேட் தந்து விடுகிறேன். பத்து லட்ச ரூபாய் வியாபாரம் பிடிக்கவில்லையென்றால் சொல். இப்போதே போய் விடுகிறேன். உன் விதியை நீயே தீர்மானித்துக் கொள்."



ராகினி தன் கோபத்தையெல்லாம் தொலைத்திருந்தாள். மெல்லப் புன்முறுவல் செய்தாள்.

"தாங்க்ஸ் லல்லு. என் மேல் அக்கறை வைத்து இப்படி நேரடியாக என்னிடம் வந்து பேசியதற்கு தாங்க்ஸ். உண்மைதான். ராஜசேகரை விட்டு நான் பிரிந்தால் கேரளாவில் என் பழைய தொழிலுக்குத் தான் போக முடியும். அது எனக்கு விருப்பமில்லை. ஆனால் பத்து லட்சம் என்பது கொஞ்சம் அதிகம். என்னால் அவ்வளவு புரட்ட முடியாது."

"ஓ.கே. எவ்வளவு முடியும்?"

"ஐந்து லட்சம்."

"பாதிக்குப் பாதியாகக் குறைத்து விட்டாயே. அவ்வளவு குறைக்க முடியாது. பரசுவிடம் போனால்..."

"சரி ஏழு லட்சம்."

"டன்" என்றான் லக்ஷ்மண். உள்ளுக்குள் மிக மகிழ்ந்தான்.

லக்ஷ்மண் பிரகாஷின் கணக்கு எப்போதுமே தப்புவதில்லை.

"ஆனால் லல்லு. என்னிடம் இப்போது அவ்வளவு பணம் இல்லை. நாளைக் காலை இதே நேரத்திற்கு வந்தால் ரெடி பண்ணி வைத்து விடுகிறேன். நெகடிவ்களைக் கொடுத்து விட்டு எடுத்துப் போய் விடலாம். என்ன லல்லு?"

அந்தக் கடைசி இரண்டு வார்த்தைகளும் மகா கொஞ்சலாக வெளிப்பட்டன.

லக்ஷ்மண் பிரகாஷ் கையில் இருந்த கோப்பையை ஒரே மூச்சில் காலி செய்து விட்டு அங்கிருந்து விசிலடித்துக் கொண்டே புறப்பட்டான்.

# 16



பரசுவின் கெஸ்ட் ஹவுஸில் இருந்து இன்ஸ்பெக்டர் நட்ராஜும், போஜராஜனும் டீ குடித்து விட்டு, முந்திரி வறுவலைச் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தார்கள்.

போலீஸ் டிரைவர் ஜீப்பைக் கிளப்பினான்.

''அந்த வீட்டில் ராஜசேகர் மட்டும் தனியாக இல்லை சார்'' என்றார் போஜராஜன், ஜீப் கிளம்பியதும்.

''எப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''ராஜசேகர் ரொம்ப ரெஸ்ட்லெஸ்ஸாக இருந்தார். அது மட்டுமில்லை. அந்த வீட்டில் ரத்த வாசனை இருந்தது.''

''என்னது?''

''யெஸ் சார். எனக்குக் கொஞ்சம் சென்சிடிவான மூக்கு. எந்த வாசனையையும் என்னால் இனம் கண்டு கொள்ள முடியும். நான் நிச்சயமாகச் சொல்கிறேன். எனக்கு ரத்த வாசனை தெரிந்தது.''

இன்ஸ்பெக்டர் நட்ராஜ் யோசனையில் ஆழ்ந்தார். திடீரென்று அவர் முகத்தில் ஒரு பிரகாசம்.



''போஜராஜன். நாம் ராஜசேகரை மெடிக்கல் ஸ்டோரில்தானே பார்த்தோம்?''

''யெஸ் சார்.''

''அங்கே என்னென்ன வாங்கியிருக்கிறார் என்று பார்த்து விடுவோம். நாம் தேடிக் கொண்டிருக்கும் தீவிரவாதி ராஜசேகரின் வீட்டில் இருப்பதும், இல்லாததும் அந்தக் கடையில் என்ன மருந்து வாங்கியிருக்கிறார் என்று பார்த்தால் தெரிந்து விடும்.''

''ஜீப்பை மருந்துக் கடைக்கு விடுப்பா'' என்றார் போஜராஜன் டிரைவரின் தோளைத் தட்டி.

''எவ்வளவு மிரட்டினாலும் வேலு தான் சொன்னதில் உறுதியாக இருக்கிறான். போஜராஜன். அவன் பொய் சொல்லவில்லை என்பது அவன் கண்களைப் பார்த்தாலே தெரிகிறது. ஸோ, வேலு சொல்வதையும், நமக்கு கோயமுத்தூரில் இருந்து வந்திருக்கும் லாப் ரிப்போர்ட்டையும் வைத்துப் பார்த்தால் இந்தத் தீவிரவாதி...''

''வேண்டாம் சார். தடாலடியாக எந்த முடிவிற்கும் வரவேண்டாம். ஸ்டெப். ஸ்டெப்பாகவே நாம் முன்னேறுவோம்.''

''ஓகே'' என்றார் இன்ஸ்பெக்டர் நட்ராஜ்.

லக்ஷ்மண் பிரகாஷ் அந்த விவகாரத்தை இப்படிக் கையாண்டு இராவிட்டால் இந்தக் கதையின் முடிவே வேறு மாதிரி ஆகியிருக்கும்.

தான் எடுத்த படங்களைப் பரசுவிடம் கொடுத்து இருந்தால் பரசு ராஜசேகர் வரும் வரை காத்திருந்து அந்தப் படங்களை அவனிடம் காட்டி ராகினியை அவன் வாழ்க்கையில் இருந்து சுமுகமாக விலக்கியிருப்பான்.

ராஜசேகரும் அந்த படங்களைப் பார்த்து விட்டு ராகினியை ஒதுக்கி வைத்திருந்தால் சில குற்றங்கள் இன்னும் பூமி மட்டத்திற்கு வராமலேயே தொடர்ந்து கொண்டிருக்கும். ஆனால் எதற்கும் ஒரு முடிவு வேண்டும் அல்லவா? அது இப்படி ஆரம்பித்தது.

அடுத்த நாள். லக்ஷ்மண் பிரகாஷ் நெகடிவ்கள் சகிதம் ராகினியின் கடற்கரை வீட்டிற்குப் போனான். ராகினி சிரித்து வரவேற்றாள். உட்கார வைத்து விஸ்கி கொடுத்தாள். விஸ்கியில் அவள் கலந்திருந்த ஒரு மயக்க மருந்து அவனிடம் இருந்து உணர்வுகளை மெல்ல மெல்லப் பறித்தது.

அவன் கண் முன்னாலேயே ராகினி அவனைப் புரட்டியெடுத்து நெகடிவ்களைக் கண்டெடுத்தாள். நெகடிவ்களை எடுத்து வந்தால் இப்படி ஒரு விபரீதம் ஏற்படும் என்று லக்ஷ்மண் பிரகாஷ் யோசிக்கவில்லை. அவன் யோசித்து நெகடிவ்களை வேறு எங்கு பத்திரப்படுத்தி விட்டு வந்திருந்தாலும் அவனிடம் இருந்து ராகினி விஷயத்தை வாங்கியிருப்பாள்.

லக்ஷ்மண் பிரகாஷ் ஒன்றும் செய்ய இயலாமல் நடப்பதை அறிந்து திடுக்கிட்டு வாய் குழறினான். அமெச்சூர் துப்பறிவாளன் நடந்துகொள்கிற மாதிரி நடந்து கொண்டதற்கு வருந்தினான். ஆனால் காலதாமதமாகி விட்டது. அவனுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்க இயலாத அளவுக்கு மிக மதிப்பு வாய்ந்த தவறைப் பண்ணி விட்டான். அவனுடைய தவறுக்கு விலை அவன் உயிர்.

ராகினி நெகடிவ்களை எடுத்துப் பார்த்து வெற்றிப் பெருமிதத்துடன் புன்னகைத்ததும், மறைவில் ஒளிந்திருந்த ஜோ வெளியே வந்தான். லக்ஷ்மணைப் பார்த்துப்



புன்னகைத்தான். நெகடிவ்களை ராகினியிடம் இருந்து பெற்று எரித்தான்.

"இவனை என்ன செய்வது?" என்று ராகினி சைகையில் வினவினாள்.

"சுட்டுக் கொல். இவன் காலொடிந்த குதிரை. இந்த மாதிரி ரேஸில் எல்லாம் கலந்து கொண்டிருக்கக் கூடாது" என்று ஜோ சைகையில் பதில் அளித்தான்.

ராகினி தன் கைப்பையில் இருந்து ஒரு சின்ன ரிவால்வரை எடுத்தாள். அதன் ஸேஃப்டி காட்சை விடுவித்தாள். லக்ஷ்மண் பிரகாஷின் மார்புக்கு நேரே குறி வைத்தாள்.

அவன் பலவீனமாகக் கையசைத்தான்.

வேண்டாம். வேண்டாம்.

விட்டு விடு. விட்டு விடு.

ராகினி சிரித்தாள்.

"மார்பில் சுடக்கூடாதா? ஓ.கே. உயிர் உடனே போகாமல் இழுத்துக் கொண்டிருந்தால் என்ன ஆவது என்று பயப்படுகிறாயா லல்லு?" என்று கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டபடி அவனை மெல்ல நெருங்கினாள்.

அவன் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியைப் பதித்தாள்.

லக்ஷ்மண் இறைஞ்சினான். இனிமேல் அவன் இருக்கும் திசையில் கூட தலை வைத்துப் படுக்க மாட்டேன் என்று சத்தியம் பண்ணினான்.

சிரித்துக் கொண்டே ராகினி சுட்டாள்.

அவ்வளவுதான். அவன் கதை முற்றும்.

ஜோ, ராகினியின் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

"நான் இவன் உடலை எப்படி டிஸ்போஸ் செய்வது என்று பார்த்துக் கொள்கிறேன். நீ இங்கே இருக்காதே

ராஜசேகரிடம் போய் விடு. ராஜசேகர் ஊட்டியில் பரசுவின் கெஸ்ட் ஹவுஸில் இருக்கிறான் என்று எனக்கு நேற்றே தகவல் வந்து விட்டது. நேற்று இரவு நீலகிரி எக்ஸ் பிரஸில் பர்ஸ்ட் கிளாஸ். ஏ.ஸியில் ராகினி என்ற பெயரில் ஒரு குட்டியை அனுப்பி வைத்திருக்கிறேன். நீ இப்போது ப்ளேனில் வேறு பெயரில் கோயமுத்தூர் போய் ஊட்டி போய் விடு. உன்னோடு சோமு வருவான். கோயமுத் தூரில் கதிரவன் காத்திருப்பான். நேற்று இரவு நீலகிரியில் கிளம்பிப் போன குட்டி கோயமுத்தூரில் ஒரு ஹோட் டலில் உன் பெயரில் ரூம் எடுத்திருக்கிறாள். எனவே அந்த ஹோட்டலுக்குப் போய் நீ ரூமைக் காலி பண்ணு. அங்கே ரிசப்ஷன் ஆள் மாறியிருப்பான். சந்தேகமே வராது. காரில் ஊட்டி போய்ச் சேர்ந்து விடு. இந்தப் பக்கம் நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஓ.கே?''

ராகினி அவன் சைகையில் விளக்க விளக்க அவன் மூளை செயல்பட்ட விதம் கண்டு பிரமித்தாள். முத்தமிட் டாள். வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

ராகினி ஓடி வந்த டாட்டா சுமோ பரசுவின் கெஸ்ட் ஹவுஸ் வாசலில் நின்றிருந்த மாருதி வேனைக் கிட்டத் தட்ட முத்தமிட்டு வந்து நின்றது.

ராகினி இறங்கினாள். அவள் கதவைத் தட்டியதும் திறக்கப் போகும் ராஜசேகரின் முகம் எப்படி மாறப் போகிறது என்பதைக் கற்பனையில் கண்டு ஒரு புன்முறு வலை வெளிப்படுத்தினாள்.

படிகளில் ஏறிக் கதவைத் தட்டினாள்.

கதவு திறக்கச் சற்று தாமதமானது. ராகினி மறுபடி கதவைத் தட்டினாள்.



கதவு திறந்தது.

கதவைத் திறந்த ராஜசேகரின் முகம் வாசலில் நின்ற ராகினியைப் பார்த்து விட்டு ரத்தம் இழந்து வெளிறியது.

கிட்டத்தட்ட ஒரு நூறடி தூரத்தில் அந்த கெஸ்ட் ஹவுஸிற்கும் மேலான ஒரு மட்டத்தில் இருந்த ஒரு வீட்டின் ஜன்னலில் இருந்து பைனாகுலர்களின் மூலம் ராஜசேகரின் வீட்டையே கண்காணித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நட்ராஜும், போஜராஜனும் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள்.

## 17



ராகினி உள்ளே நுழைந்தாள்.

''ஹலோ ராஜ். என்னை எதிர்பார்க்கவில்லை. இல்லை?'' என்று கேட்டாள். அவள் மூக்கைச் சுழித்தாள். அந்த வீட்டில் ஒரு மாதிரி ரத்த வாடை வீசியது.

ராஜசேகர் வார்த்தை வராமல் தவித்தான்.

''நீ... நீ... நீ... எதற்காக இங்கே வந்தாய்?''

''ஏன், வரக்கூடாதா? நான் உங்கள் மனைவி, என்னிடம் சொல்லாமல் வந்து விட்டால் நீங்கள் எங்கே போயிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாமல் போய் விடுமா?''

''அதற்கில்லை ராகினி. நான் கொஞ்சம் தனிமையில் ஒரு சீரியல் உருவாக்க வந்தேன். முடிக்கும் வரை வெளி

உலகத்தோடு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்வ தில்லை என்று முடிவு செய்தேன்...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன் ராகினியின் பார்வை போன பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான்.

அவன் முகம் மேலும் வெளிறியது.

காரணம், ராகினியின் பார்வை பதிந்திருந்த இடத்தில் ஒரு குப்பைக் கூடை இருந்தது. அந்தக் குப்பைக் கூடையில் பெண்கள் அணியும் ஜட்டி ஒன்று ரத்தக் கறையுடன் இருந்தது.

ராகினி விடுவிடென்று நடந்து கொண்டாள் வார்ட் ரோப் ஹாங்கர் ஒன்றை எடுத்து அந்த ஜட்டியைத் தூக்கினாள்.

''இது என்ன?''

''ராகினி. ப்ளீஸ். அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்து விடாதே.''

''யூ டர்ட்டி ஸ்கவுண்ட்ரல். இதுதான் நீங்கள் தனிமை யில் எழுதும் லட்சணமா? இது லேடீஸ் அணியும் பான்டீஸ். இது ஒரு பெண்ணின் அந்தரங்கமான இடத்தில் இருந்து வெளிப்பட்டிருக்கும் ரத்தம். இது எப்படி இங்கே வந்தது? யாரோ ஒருத்தி இங்கே இருக்கிறாள். உள்ளே நுழைந்த உடனேயே எனக்கு இந்த ரத்த நாற்றம் காட்டிக் கொடுத்து விட்டது. இங்கே என்ன கூத்து நடக்கிறது? நீங் கள் தனிமையில் எழுதும் லட்சணத்தை இப்போதே நான்கு பேரை அழைத்துச் சொல்லாவிட்டால் என் பெயர் ராகினி இல்லை'' என்று வாசலைப் பார்த்துத் திரும்பினாள் ராகினி.

வாசல் கதவை மூடி அதன் மேல் சாய்ந்தபடி அந்தப் பெண் நின்றிருந்தாள். அவள் கையில் ஒரு லைட்



மெஷின் கன் இருந்தது. அது ராகினியைப் பார்த்துப் பயங்கரமாக முறைத்தது.

''ஹாண்ட்ஸ் அப்'' என்றாள் அவள்.

ராகினி உடனே கைகளை உயர்த்தினாள்.

''ஏய், ராகினி. இந்த மாதிரி ஒரு நிகழக்கூடாத சந்திப்பு நிகழும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என் பெயர் மஞ்சு. மஞ்சுளா கோபால். நான் ஆறு கொலைகளைப் பண்ணி யிருக்கிறேன். ஏழாவதாக உன்னை சாகடிக்கத் தூண் டாதே. உன் கணவன் அப்பாவி. அவன் இங்கே வருவ தற்கு முன்பே இந்த வீட்டில் நான் சர்வன்ட்ஸ் குவார்ட் டர்ஸ் வழியாக நுழைந்து விட்டேன். அடைக்கலமாக இரண்டு நாள் இங்கே இருந்து விட்டுப் போயிருப்பேன். உன் கணவன் உள்ளே நுழைந்து என்னிடம் மாட்டிக் கொண்டு விட்டான். போலீஸ் என்னைத் தேடிக் கொண டிருக்கிறது. என் மேல் தீவிரவாதி என்ற முத்திரை குத்தி இருக்கிறது. என் பெயர் நஞ்சப்பா என நினைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஏரியாவில் இருக்கும் ஒவ்வொரு வீட்டையும் போலீஸ் செக் பண்ணிக் கொண்டிருக்கிறது. போலீஸ் வருவதற்குள் நான் வெளியேற வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தேன். எப்படிப் போவது என்றுதான் புரியவில்லை. ராஜசேகருடன் கிளம்பிப் போயிருந்தால் போலீஸ் நிறுத்தி சோதனை போடும். மேலும் நான் ஒரு ஐந்தாறு போலீஸ்காரர்களைச் சுட வேண்டியிருந்திருக்கும். இப்போது எனக்கு வழி கிடைத்து விட்டது. நீ டாடா சுமோவில் வந்திருக்கிறாய் என்று அதன் இன்ஜின் சத்தத்தை வைத்தே கண்டு பிடித்து விட்டேன். எனவே அதில்தான் நான் தப்பிக்கப் போகிறேன். தனியாக இல்லை. உன்னையும் கூட்டிக்

கொண்டு போகப் போகிறேன். நானும் நீயும் ஒரு பயணம் போகும் நேரத்தில் ராஜசேகர் யாரிடமும் எதுவும் சொல்லிவிடக் கூடாதல்லவா? அப்படிச் சொல்லி நான் மாட்டினால் முதல் குண்டு உன் மேல் பாயும். ராஜசேகர் தன் உயிருக்குயிரான மனைவி வீணாக உயிர் விடுவதை விரும்ப மாட்டான் என்று நினைக்கிறேன். இங்கே பரலியாறு அருகே என்னை இறக்கி விட்டு நீ திரும்ப வரலாம். அதன் பின் போலீசிடமோ யாரிடமோ எது வேண்டுமானாலும் சொல்லலாம். கம்மான். முதலில் உன் டிரஸ்ஸைக் கழற்று.''

''எதற்கு?'' என்று கேட்டாள் ராகினி.

''இந்த டிரஸ்ஸில் நீ இந்த வீட்டில் நுழைந்ததை யாராவது பார்த்திருக்கக் கூடும். எனவே அந்த டிரஸ்ஸில் நான் இருந்ததால் நீதான் திரும்பிப் போகிறாய் என்று அப்படிப் பார்த்தவர்களை ஏமாற்றலாம். கமான். டிரஸ்ஸைக் கழற்று. அவன் உன் கணவன்தானே? கழற்று. கழற்றுடி என்றால்...'' என்று மஞ்சு டிரிக்கரில் கை வைத்து அழுத்தப் பார்த்தாள்.

ராகினி உடன் கீழ்ப்படிந்தாள்.

மஞ்சு தன் ஆடைகளை அவிழ்த்துத் தூக்கி எறிந்தாள். மஞ்சு அணிந்திருந்ததும் பரசுவின் வார்ட்ரோபில் இருந்த ஒரு பாண்ட் ஷர்ட்தான். ராகினியின் சல்வார் கமீஸ் மஞ்சு விடம் வந்து சேர்ந்தது.

ராகினி மஞ்சு அணிந்திருந்த பாண்ட் ஷர்ட்டை அணிந்து கொள்ளுமுன் மஞ்சு சல்வார் கமீஸை அணிந்து கொண்டு விட்டாள்.

''ராஜசேகர், போகுமுன் ஒன்று சொல்கிறேன். தாங்க்ஸ் ஃபார் யுவர் ஹெல்ப். இந்தப் பெண் ராகினியைப் பற்றி,



'என் மனைவி ராகினி, ராகினி' என்று அவ்வளவு உருகினீர்களே.. அது வேஸ்ட். இவள் ஒரு போனி. போலி. இவளைப் பார்த்த உடனேயே எனக்குத் தெரிந்து விட்டது. உங்கள் காதலுக்கு இவள் அருகதை அற்றவள். டேக் இட் ஃப்ரம் மீ. இவள் உங்கள் பெயரை உபயோகப்படுத்தி வேறு ஏதோ திருட்டுத் தனம் செய்கிறாள். வெல். அது என் தலைவலி இல்லை. உங்கள் தலைவலி. உங்களின் இறுதி யாத்திரை. குட் - பை. ஏய். வா. நான் முதுகு காட்டியபடி வெளியேறி டாடா சுமோவில் ஏறுவேன். என்னைப் பார்த்தபடி நீ நடந்து வரவேண்டும். சுமோவில் நீ கீழே உட்கார்ந்திருக்க வேண்டும். நான் மட்டும் டிரைவிங் சீட்டில் இருப்பேன். என் மெஷின்கன்னின் முனை உன்னையே பார்த்துக் கொண்டிருக்கும். நீ ஏதாவது தப் பாக நடந்து கொண்டாலோ, ஒரு தீவிரவாதியைக் காட்டிக் கொடுக்கிறேன் என்று வீரமாக ஏதாவது செய்ய நினைத் தாலோ, அவ்வளவுதான். ஏழாவது கொலையை நான் செய்ய வேண்டி இருக்கும். ஜாக்கிரதை'' என்றாள் மஞ்சு.

அப்படியே பின்பக்கமாக நடந்து அந்த வீட்டை விட்டு வெளியேறினாள். ராகினி அவளது துப்பாக்கி முனைக்குக் கட்டுப்பட்டுத் தன் கைப்பையை மார்பில் அணைத்தபடி மஞ்சுவின் சொல்படி வெளியில் இருக்கும் யாருக்கும் தெரியாதபடி வெளியேறினாள்.

வாசலுக்கு வந்ததும் மஞ்சு ராகினியைத் தவழ்ந்து வரச் சொன்னாள். ராகினி தவழ்ந்து சென்று டாடா சுமோவின் மறைப்பில் நகர்ந்து அதன் கதவைத் திறந்தாள். மஞ்சு ஏறி அமர்ந்தாள். டிரைவிங் சீட்டிற்கு நகர்ந்தாள். ராகினி தவழ்ந்தபடியே டாடா சுமோவில் ஏறி சீட்டுக்கு அடியில் அமர்ந்தாள். கதவைச் சாத்தினாள்.

மஞ்சு சுமோவை ஸ்டார்ட் செய்தாள். அவளது ஒரு கை லைட் மெஷின் கன்னின் விசையில் பதிந்திருந்தது. இன்னொரு கை ஸ்டியரிங்கைப் பிடித்தது. சாலையில் ஒர பார்வையும், ராகினியின் மேல் ஒரு பார்வையுமாய் அவள் சரசரவென்று சரிவில் வெகு லாவகமாக இறங்கிய நேர்த்தியைக் கண்டு ராகினி பிரமித்தாள்.

''சார்...'' என்றார் போஜராஜன் பைனாகுலரில் இருந்து கண்களை அகற்றாமல்.

''என்ன?''

''அந்தப் பெண் ராஜசேகரின் மனைவி ராகினி. அவளை நான் நிறைய சீரியல்களில் பார்த்திருக்கிறேன். வீட்டுக்குள் நுழைந்து இப்போது வெளியே வந்து வேனைக் கிளப்பி இருக்கிறாள். என்ன செய்யலாம்?''

''போஜராஜ்.''

''சார்?''

''உள்ளே நுழையும் போது அவள் முகம் நமக்குத் தெரிந்தது அல்லவா?''

''ஆம்.''

''இப்போ வெளியே வரும்போது அவள் முகம் தெரிந் ததா?''

''இல்லை சார். முதுகுதான் தெரிந்தது. ஆனால் ராஜ சேகருக்கு கையசைத்துக் காட்டிக் கொண்டே வந்திருக் கலாம் இல்லையா?''

''அது சாதாரண தருணங்களில். இப்போது அப்படி இல்லை. ராஜசேகர் வீட்டில் தீவிரவாதி நஞ்சப்பா என்னும் போர்வையில் யாரோ ஒரு பெண் தங்கி இருக்கிறாள் என்று நாம் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.



ராஜசேகர் மெடிக்கல் ஸ்டோர்ஸில் ஸானிடரி நாப்கின் எல்லாம் வாங்கி இருக்கிறார். ஸம்திங் ஸ்ட்ரேஞ்ஜ். ஸம்திங் ஸினிஸ்டர். ஸம்திங் பிஷ்ஷி. உடனே அந்த டாடா சுமோவை பாலோ பண்ணச் சொல்லி வயர் லெஸில் மெசேஜ் கொடுங்கள்.''

''யெஸ் சார்'' என்று போஜராஜ் வயர்லெஸ்ஸின் ஸ்விட்சைத் தட்டினார்.

டாடா சுமோவின் சீட்டுக்குக் கீழே விரிக்கப்பட்டிருந்த கார்ப்பெட்டில் இறுகிப் போய் உட்கார்ந்திருந்த ராகினி யின் மனம் ஓர் எரிமலையைப் போல் கொதித்துக் கொண் டிருந்தது.

ராகினி யார், என்ன என்று தெரியாமல் நெருப்போடு விளையாடுவது போல் இந்த மஞ்சு விளையாடி விட்டாள். அவளிடம் இருக்கும் ஒரு ஆயுதத்தால் இப்போது கட்டிப் போடப்பட்ட நாயின் நிலை தனக்கு வந்து நேர்ந்தது என அவள் குமுறிக் கொண்டிருந்தாள்.

மஞ்சு ராட்சசியைப் போல் டாட்டா சுமோவை ஓட்டி னாள். ஒவ்வொரு திருப்பத்திலும் ராகினியின் உடம்பு கதவிலும், சீட்டின் இரும்புக் கம்பியிலும் இடித்துக் கொண்டது. அங்கங்கே புண்ணான மாதிரி வலித்தது.

ராகினி தன்னைச் சுற்றிலும் பார்த்தாள். என்ன செய்ய லாம்? என்ன செய்யலாம்? பாம்பின் வாலைத் தெரியாத் தனமாக பிடித்து விட்டதை அறியாமல் கவலையில்லா மல் சுமோவை ஓட்டிக் கொண்டிருக்கும் இந்த மஞ்சுவை என்ன செய்யலாம்?

திடீரென்றுதான் அவளுக்குக் கைப்பையில் இருக்கும் துப்பாக்கியின் ஞாபகம் வந்தது. லல்லுவைத் தீர்த்துக்

கட்டிய துப்பாக்கி. இதை எப்படி இவ்வளவு நேரம் மறந்தேன்?

ராகினி கைப்பையை மார்போடு அணைத்திருந்தாள். அதன் ஜிப்பை பல், பல்லாக மெல்ல நீக்கினாள். கைப் பையை ஒரு கவசமாக வைத்துக் கொண்டு ராகினி அதனுள் தன் கையைச் செலுத்தினாள். துப்பாக்கியின் உலோகம் பனிக்கட்டி போல் அவள் கையை ஜில்லென்று ஸ்பரிசித்தது.

ராகினி துப்பாக்கியைப் பற்றினாள். அதன் முனையை மஞ்சுவை நோக்கி மெல்லத் திருப்பினாள்.

மஞ்சு ஒரு தீவிரவாதி. அவளைக் கொல்வதால் தன்னை யாரும் எதுவும் செய்துவிடப் போவதில்லை. ஒருவேளை அரசாங்கத்திடம் இருந்து விருது கிடைத் தாலும் கிடைக்கும். ஆறு பேரைக் கொன்ற தீவிரவாதி மஞ்சுவை ஒழித்துக் கட்டிய ராகினி என்று அவள் புகைப் படம் எல்லா பத்திரிகைகளிலும் வெளியாகும்.

ராகினி தீர்மானித்தாள். சுட்டாள்.

டுமீல்.

குண்டு கைப்பையைத் துளைத்துக் கொண்டு வெளிப் பட்டு மஞ்சுவின் மேல் பாய்ந்தது.

மஞ்சு குண்டு பாய்ந்ததில் வெகு திடீரென்று ஸ்டியரிங் கைத் திருப்ப, டாடா சுமோ தொண்ணூறு டிகிரி திரும்பி ஒரு சரிவின் சோகையான சுவர் வேலியை உடைத்துச் சரிவில் பாய்ந்து ஒரு குட்டிக்கரணம், இன்னொரு குட்டிக் கரணம், மூன்றாவது குட்டிக்கரணம் என்று அடித்து, சரிவில் நெடுநெடுவென வளர்ந்திருந்த ஒரு மரத்தின் மேல் 'டமார்' என்று மோதி நின்றது.



அமைதி! பேரமைதி!

ஐந்து நிமிடங்களுக்குப் பின் டாடா சுமோ சுவரை உடைத்த இடத்தில் ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. ஜீப்பில் இருந்து போலீஸ்காரர்கள் உதிர்ந்தார்கள்.

சரிவில் தடதடவென்று இறங்கினார்கள்.

அவர்கள் டாடா சுமோவை நெருங்கியபோது வெகு ஆச்சரியமாக மஞ்சு உயிரோடு இருந்தாள். அவள் இடுப்பின் கீழ் இருந்த திரட்சியான சதை பாகத்தில் ராகினியின் துப்பாக்கியில் இருந்து வெளிப்பட்ட குண்டு பாய்ந்திருந்தது.

ராகினி சந்தேகத்திற்கு இடமின்றி செத்துப் போயிருந் தாள்.

பக்கத்தில் சத்தம் கேட்டு மஞ்சள் கண் விழித்தாள். போலீஸ்காரர்களைப் பார்த்தாள். சிரித்தாள். அதாவது சிரிக்க முயன்றாள். கை கூப்பினாள்.

''என் வாக்குமூலத்தை அளிக்க விரும்புகிறேன்'' என்றாள் மிகத் தெளிவான, சன்னமான குரலில்.

**மஞ்சுவின் வாக்குமூலம்**

என் பெயர் மஞ்சுளா கோபால். கோபால் என்னைச் செல்லமாக 'மஞ்சு' 'மஞ்சு' என்று அழைப்பது வழக்கம். கோபால் ஒரு ஃபாரஸ்ட் ஆபீஸர். ஐ.எஃப்.எஸ். படித் தவர். காட்டிலாகா அதிகாரி. நானும் அவரும் இங்கே இருக் கும் காட்டில் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்ததில் இருந்து வெகு மகிழ்ச்சியான உன்னதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தோம்.

எங்களுடைய எல்லா நாட்களும் தேனிலவு நாட்களாக நகர்ந்து கொண்டிருந்தன. அப்போது தான் என் வாழ்வில்

அந்தப் புயல் வீசியது. மாயார் பள்ளத்தாக்கில் ஒரு மதயானை அட்டகாசம் செய்து கொண்டிருந்தது. இரண்டு மூன்று பேரை மிதித்து விட்டது. என் கணவர் கோபால் அந்த யானையைச் சுடுவதற்கு அனுமதி வாங்கியிருந்தார். ஒரு நாள் இரவு மாயார் பள்ளத்தாக்கில் யானை புகுந்து அட்டகாசம் செய்வதாக போன் வந்தது. என் கணவர் துப்பாக்கியுடன் போனார்.

அப்போதுதான் நான் கருவுற்ற செய்தியை அவரிடம் சொல்லியிருந்தேன். இரவு முழுக்க என்னுடன் இருக்கு மாறு கேட்டுக் கொண்டிருந்தேன். யானையைக் கொன்று விட்டு வருவதாகப் போனவர் திரும்பி வரவில்லை.

நேரம் ஆக ஆக எனக்குப் பயமாக இருந்தது. நான் மாயார் பள்ளத்தாக்கை நோக்கிப் புறப்பட்டேன். கோபா லுடன் காட்டை முழுக்கச் சுற்றியிருப்பதால் காடு பயம் என்னிடம் இல்லை. எனக்கு கோபால் துப்பாக்கி சுடக் கற்றுத் தந்திருந்தார். ஜீப் ஓட்டக் கற்றுக் கொடுத்திருந் தார். இரவில் காட்டுக்குள் எப்படிப் போவது என்ற பயிற் சியை அளித்திருந்தார். அதனால் தைரியமாகப் போனேன்.

பள்ளத்தாக்கில் நான் பார்த்த காட்சியை என்னால் மறக்க முடியாது. ஜீப் தலைகீழாகக் கவிழ்ந்து கிடந்தது. கோபால் ஒரு மரத்தின் கீழ் குடல் வெளியே வந்து செத்துப் போயிருந்தார். யானை மிதித்து சாகடித்து விட்டது என்று நினைத்தேன். நிலவு வெளிச்சத்தில் சற்று தூரத் தில் இன்னொரு பெண்ணும் கீழே விழுந்து கிடந்தாள். நான் அவளை அணுகினேன். அவள் உடம்பில் துணியே இல்லை. உடம்பெங்கும் முள் கீறல்களால் ரத்தம். மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் அழுதாள். கை கூப்பினாள்.



''அம்மா. இந்தத் துரோகியை மன்னிச்சு விடுங்கள். இங்கே யானையும் வரவில்லை. பூனையும் வரவில்லை. செஞ்சேரி மலையடிபாளத்துப் பங்காளிகள் இரண்டு பேர். வீரண்ணன், சோமசுந்தரம், ஆளுக்கு இரண்டு தம்பிகள். அந்த ஆறு பேரும் காட்டில் இருக்கும் கருங்காலி மரங்களை வெட்டி எடுத்துப் போக வந்திருக்கிறார்கள். உன் புருஷன் அதற்கு வழி விடவில்லை. உன் புருஷனை வரவழைத்தால் ஐயாயிரம் ரூபாய் தருவதாக எனக்கு ஆசை காட்டினார்கள். நானும் ஆசைப்பட்டு 'யானை வந்து அட்டகாசம் செய்வதாக' கோபால் சாரிடம் பொய்த் தகவலைக் கொடுத்தேன். கோபால் சார் வந்தார். அவரை இந்த பங்காளிகள் ஆறு பேரும் யானைக்கால் ஒன்றில் கட்டையோ, சிமெண்டோ அடைத்துப் பதம் பண்ணி வைத்திருந்ததை எடுத்து மறைவாக நின்று தாக்கினார்கள். அந்த காலால் மிதிபட்டுத்தான் குடல் வெளியே வந்து உன் புருஷன் செத்துப் போனான். ஐயாயிரத்திற்கு ஆசைப்பட்ட என்னையும் தீர்த்துக் கட்ட நினைத்துத் துரத்தினார்கள். ஓடினேன். முள்ளில் சிக்கி புடவை கிழிந்து கடைசியில் அவர்களிடம் மாட்டினேன். என்னையும் அந்த யானைக்காலால் அடித்து சாய்த்து விட்டு கருங்காலிக் கட்டைகளை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். நான் செத்து விட்டதாக நினைத்தார்கள். சாகவில்லை போலும். உன் உடம்புத் துணியை என் மேல் போர்த்தி விட்டுப் போ. சாகும் போது இப்படி அவமானப்பட்டு சாக எனக்கு விருப்பமில்லை'' என்று சொன்னாள். நான் என் சேலையை அவளுக்குச் சுற்றி விட்டு நிமிர்ந்தேன். உண்மையிலேயே மத யானை அங்கே வந்து விட்டது. என்னையும் அது சாகடித்தால் நன்றாக இருக்கும் என நினைத்தேன். அது அப்படிச்

செய்யவில்லை. ஓடி வந்து அந்தப் பெண்ணின் முகத்தில் காலை வைத்து ஒரே நசுக்கு நசுக்கியது. அவள் முகமே உருத் தெரியாமல் போய் விட்டது. அந்த யானை நான் இருப்பதையே லட்சியம் செய்யாமல் அங்கிருந்து ஓடி விட்டது. அழுகை, ஆத்திரம், கையாலாகாத்தனம். எல்லாம் சேர்ந்து கொள்ள வீட்டுக்கு வந்தேன். வயிற்றுக் குழந்தையுடன் வாழ விரும்பாமல் சாப்பாட்டில் வயல் எலிக்கான விஷத்தைக் கலந்து சாப்பிடலாம் என்று சாப்பாட்டைப் பிசைந்த நேரத்தில் என் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு அந்த நஞ்சப்பா உள்ளே வந்தான். அவன் தாடியும், மீசையும் கையில் இருந்த துப்பாக்கியும் என்னைப் பயமுறுத்தவில்லை. சாகத் துணிந்து விட்ட பின் எது நடந்தால் என்ன?

ஆனால் அவன் ஜெயிலில் இருந்து தப்பித்து வந்திருக்கிறான். சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்றோ தெரியவில்லை. என் கையைப் பிடித்து இழுத்துப் போட்டு விட்டு அவன் அந்த சாப்பாட்டைச் சாப்பிடத் தொடங்கினான்.

''சாப்பிடாதே. சாப்பாட்டில் விஷம்'' என்று கத்தினேன். நான் சொன்னதும் அவனுக்குப் புரியவில்லை. அவனுக்குத் தமிழ் தெரியவில்லை. நான் அவன் கையைப் பற்றித் தடுத்தேன். என்னை ஒரே உதறு உதறினான். நான் கீழே விழுந்து மயங்கிப் போனேன். மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தால் நஞ்சப்பா செத்துக் கிடந்தான். பக்கத்தில் அவன் துப்பாக்கி.

எனக்கு அப்போதுதான் யோசனை வந்தது. என் கணவனைக் கொன்ற ஆறு பேரையும் கொன்றால் என்ன?

துப்பாக்கியை எடுத்துக் கொண்டேன். அவனிடம் இருந்த பையில் போலி தாடி, மீசை. தலையில் வைக்கும்



விக். நான் நஞ்சப்பாவின் தாடியை இழுத்தேன். அதுவும் போலி. சிரிப்பு வந்தது என் கூந்தலை வெட்டிக் கொண்டேன். தாடி மீசை வைத்து அவனுடைய ஆடையை மாட்டிக் கொண்டேன். நஞ்சப்பாவாக மாறி விட்டேன்.

அதற்குள் வெளியே ஓநாய்ச் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து வைத்து விட்டு துப்பாக்கியுடன் வந்து விட்டேன். நஞ்சப்பாவின் உடம்பை இரவோடு இரவாக ஓநாய்களும், கழுதைப் புலிகளும் காலி செய்து விடும் என்று எனக்குத் தெரியும்.

நான் ஆறு பங்காளிகளைத் தேடிப் போனேன். பாரஸ்ட் ஆபீசர் கோபாலும், அவர் மனைவியும் யானை மிதித்து செத்து விட்டதாக ஊரில் பேசிக் கொண்டார்கள். நான் செத்துப் போனதாக நினைத்து விட்டார்கள். ஆடையை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்ததால். அதுவும் நல்லதிற்குத்தான். மைசூரில் இருந்து ஊட்டிக்கு வந்து கொண்டிருந்த ஒரு மாருதி வேனை நிறுத்தி, அதன் டிரைவரை இறக்கி அந்த வேனை ஓட்டிப் போய் பங்காளிகள் ஆறு பேரையும் சுட்டுக் கொன்றேன். இரண்டாவது வீட்டில் நான் சுட்டு விட்டு வந்தபோது அந்த வீட்டு வேலைக்காரன் என் அடிவயிற்றில் தாக்கி அதே இடத்தில் என் கரு கலைந்து விட்டது. என் உடம்பு ரத்தம் இழந்தது. மிகப் பலவீனமாகி விட்டேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. பரலியாறில் என் அம்மா, அப்பா, அண்ணன் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களிடம் போய்ச் சேர்ந்தால் என்னை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். ஆனால் தற்காலிகமாக வலியை நிறுத்த வேண்டும். என்ன செய்வது என்று தெரியாமல் பரசுவின் கெஸ்ட் ஹவுஸில் நுழைந்தேன். ஒரு நாள் முழுக்கப்

படுத்துக் கிடந்தேன். மறுநாள். ராஜசேகர் வந்து சேர்ந்தார். அவரிடம் என் கதையைச் சொன்னேன். போலீசில் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்றேன். என் வைத்தியத்திற்காக சானிடரி நாப்கின், அயர்ன் டாப்லெட், வைட்டமின் டாப்லெட் எல்லாம் வாங்கிக் கொடுக்கச் சொன்னேன். வாங்கி வந்து கொடுத்தார். என்னை ஓரளவு தேற்றிக் கொண்டேன். அங்கிருந்து புறப்படத் தீர்மானித்த நேரம், ராகினி வந்து சேர்ந்தாள். அவள் ஒரு பேய். கணவனைச் சந்தேகப்பட்டவள். கொடூரமானவள். ஆனால் அவள் உதவியால் தான் தப்பிக்க முடியும் என்று அவளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு வந்த நேரத்தில்தான் ராகினி என்னைச் சுட்டாள். இந்த விபத்து நடந்தது. யெஸ். நஞ்சப்பாவின் பெயரில் ஆறு பாவிகளைக் கொன்ற கொலைகாரி நான்தான். என் கணவனின் மரணத்திற்காகப் பழி வாங்கியவள் நான்தான். இப்போது உங்கள் கைகளில் சரண் அடைந்திருக்கிறேன். என்னைத் தூக்கில் போட்டாலும் சரி, ஜெயிலில் போட்டாலும் சரி. எல்லாம் ஒன்று தான்.''

## முடிவுரை

'க்ளிக் - டக் என்று டேப்ரிகார்டர் ஆப் ஆனது.

ராஜசேகர் கண்களைத் துடைத்துக் கொண்டான். பரசு பெருமூச்சு விட்டான்.

''உனக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி காத்திருக்கிறது ராஜசேகர். உன்னைச் சுற்றிக் குற்றம் அலை அலையாய் நிகழ்ந்திருக்கிறது. நீ புரியாமல் இங்கே இருந்திருக்கிறாய்.

உன் மனைவி ராகினி ஒரு பெரிய சதிக்கும்பலைச் சேர்ந்தவள். உண்மையான தீவிரவாதி. அவளது வேலை என்ன தெரியுமா? டூப்ளிகேட் இந்திய கரன்ஸியை



இந்தியாவில் புழங்க விடுவதுதான். ஜோ என்பவன் அவளுடைய பாஸ். சூட்கேஸ் சூட்கேஸாக கரன்ஸி கொண்டு வந்து கொடுத்தவன். அத்தனையும் கள்ள நோட்டு. சினிமாத் துறையில்தான் பணம் அதிகமாகப் புழங்கும். அதுவும் டி.வி. ஃபீல்டில் தினம் ஒரு ஷூட்டிங். தினம் அறுபதாயிரம் செலவாகும். ராகினி உன்னிடம் ஜோவால் விதைக்கப்பட்டிருக்கிறாள். நீ ஏமாந்து காதலித்து கல்யாணம் செய்தாய். அவள் உன்னைக் கவசமாகப் பயன்படுத்தி தயாரிப்பாளர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு முப்பதாயிரம் ரூபாய்க்கு அறுபதாயிரம் ரூபாய் கள்ள நோட்டுகளை வினியோகித் திருக்கிறாள். தினம், தினம் அறுபதாயிரம் ஒரு கம்பெனி, இரண்டு கம்பெனி என நிறைய பேரிடம் கொடுத்திருக் கிறாள். நான் லக்ஷ்மண் பிரகாஷை அனுப்பி உன் மனை வியை கண்காணிக்கச் சொன்னேன். அவன் ராகினியும், ஜோவும் நெருக்கமாக இருந்ததை போட்டோ எடுத்துக் காட்டிப் பணம் கேட்க ராகினி அவனைச் சுட்டுச் சாகடித்து விட்டு உன்னைத் தேடி வந்து விட்டாள். ஆனால் லக்ஷ்மண் பிரகாஷின் அண்ணன் ராம் பிரகாஷ் ஒரு சி.ஐ.ஏ. ஏஜண்ட். லக்ஷ்மண் வைத்திருந்த ஜோவின் படத்தைப் பார்த்தான். ஜோவை அவன் வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தான். லக்ஷ்மண் பிரகாஷின் உடலை ஆசிட் பற்றி அழித்து எரிக்கும் நேரத்தில் ஜோ கைது செய்யப்பட்டான். அவன் ஆட்கள் அத்தனை பேரும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? இந்தக் கள்ள நோட்டுகள் அவனிடம் வந்து சேர்ந்திருப்பது வேறொரு நாட்டில் இருந்தது. எந்த நாடு என்று நாம் ஆராய வேண்டாம். நமக்கு அப்பாற்பட்ட விஷயம். சி.ஐ.ஏ. உன்னைச் சில கேள்விகள் கேட்கக்

கூடும். உண்மையைச் சொல். உன் உண்மை உன்னைக் காக்கும். உன்னைப் பீடித்திருந்த சனி விலகியது என்று சந்தோஷப்படு. ராகினியின் சாவுக்கு வருந்தாதே.''

ராஜசேகர் தன் கண்களில் துளிர்த்த நீரைச் சுண்டி னான்.

''ஒரு மெகா சீரியலுக்கான சப்ஜெக்ட் இது. குற்ற அலை கள் என்று பெயர் வைக்கப் போகிறேன்' என்றான்.

''ஜமாய். மஞ்சுளாவிற்கு கோர்ட் என்ன தீர்ப்பு கொடுக்கப் போகிறதோ தெரியவில்லை. ஆனால் உன் கதையில் அவளை விடுதலை செய். அவளைச் சந்தோஷமாக வாழ விடு'' என்றான் பரசு.

''அதுதான் ஐடியா?'' என்றான் ராஜசேகர்.

''அப்படி என்றால்?

''அவள் விடுதலை ஆவதற்கு உண்மையிலேயே முயற்சி செய்யப் போகிறேன். விடுதலை ஆன பின் மஞ்சு சம்மதித்தால் அவளையே நான் கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கிறேன்'' என்றான் ராஜசேகர் மெல்ல ஒரு புன்முறுவலை சிந்தியபடி.

பரசு நிம்மதியான ஒரு சிரிப்பைச் சிரித்தான்.

''சியர்ஸ்'' என்று ஸ்காட்ச் கோப்பைகளை இடித்து விட்டு ஒன்றை பாரதி ராஜசேகரனிடம் நீட்டினான்.

''மஞ்சுவின் விடுதலைக்காக'' என்றான் பரசு.

''மஞ்சுவின் விடுதலைக்காக'' என்றான் ராஜசேகர்.